நவமணி





நவமணி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி
ஸ்வாமிகள் குறித்த

ஒன்பது பிரபந்தங்களின் தொகுப்பு

தொகுப்பாசிரியர் :

பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன், *திருச்சிராப்பள்ளி*

வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய
ஸ்வாமிகள், ஜெயந்திவிழாக் கமிட்டி, *இராமேச்வரம்.*

அச்சகத்தார் :

...மினி அச்சகம், கும்பகோணம்.

'நவமணி'

இந்நூல் வெளியாதற்குக் காரணமாகிய குழுவினர்

காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்
ஜயந்தி விழாக் கமிட்டி,
இராமேச்வரம்.

தலைவர் :

ஸ்ரீ P. S. லக்ஷ்மணராவ், திவான், இராமநாதபுரம் சமஸ்தானம்.

துணைத் தலைவர் :

கோடூர் ஸ்ரீ ராஜகோபால சாஸ்திரிகள், இராமேச்வரம்.

இணைச் செயலாளர்கள் :

ஸ்ரீ S. திருமலைசடகோபன், வழக்கறிஞர், இராமநாதபுரம்.
ஸ்ரீ M. ஆதிநாராயணன், தினமணி நிருபர், இராமநாதபுரம்.

பொருளாளர் :

ஸ்ரீ V. விச்வநாதன், மானேஜர்,
ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கர மடம், இராமேச்வரம்

உறுப்பினர்கள் :

ஸ்ரீ K. நீலகண்ட ஐயர், B. G. பால் & கம்பெனி, சென்னை,
பேராசிரியர் ஸ்ரீ R. ராதாகிருஷ்ணன், திருச்சிராப்பள்ளி.
கூடலூர் ஸ்ரீ இராமச்சந்திர சாஸ்திரிகள், இராமேச்வரம்.
ஸ்ரீ S. குப்புஸ்வாமி ஐயர், F. C. A., காரைக்குடி.
ஸ்ரீ P. S ஜயராம ஐயர், ஆசிரியர், இராமநாதபுரம்.
ஸ்ரீ ஹரிஹரன், கனரா பாங்கு, பரமக்குடி.
ஸ்ரீ T. நரசிம்மன், தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன்,
திருநெல்வேலி.

முன்னுரை

இரத்தினங்கள் ஒன்பது வகை என்பர். அவற்றை 'நவமணி' என்றழைப்பர். அவை விலை மதிப்பற்றவை. ஆயினும் மணிகள் தனித்தனியே இருப்பதைக் காட்டிலும், ஒருசேரப் பசும்பொன்னில் பதிக்கப்பெறும்போது அவற்றின் ஒளி பெருகுவதோடு மதிப்பும் உயர்கிறது.

இங்குப் படைக்கப்பெறும் நவமணிகளும் விலைமதிக்க இயலாதன. இவைகள் ஆசார்ய ஸ்வாமிகளின் அருட்புகழ் என்னும் ஆடகப் பொன்னில் பதிக்கப்பெற்றுள்ளன. மிக்க சிறப்பும் ஒளியும் எய்தித் திகழ்கின்றன.

புண்ணியப் பாரத பூமியைத் தம் பொன்னடியால் அளந்து புனிதம் பெறச் செய்யும் பொற்சுடர்ச் சோதியாம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழாவின்போது, இராமேச்வரம், ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஜயந்தி விழாக்குழுவினர், குருவருளுக்குப் பாத்திரமாக ஒன்று செய்ய நினைந்தனர்.

பூவோ, பொன்னோ, மணியோ காணிக்கை ஆகலாம். ஆயினும் அவற்றின் மேலாக ஜகத்குருவின் கருணைக்குப் பாத்திரமாதற்கு உரித்தாக ஏதாவது படைத்தல் வேண்டும் என்ற நினைவின் விளைவே இந்த நவமணி.

நாடெல்லாம் நன்கு அறிமுகமான நாவலர் ஒன்பதின்மர் இந்நவமணியை நல்கியுள்ளனர். போஜன் அவையைப் புகழ்பெறச் செய்த வித்தகப் புலவர்களைப் போன்ற நுண்மாண் நுழைபுலம்கொண்ட நவமணிகள் இவர்கள்.

செவ்விய மதுரம் சேர்ந்த நற்பொருளின் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய புலவராம் இவர்களின் புலமைச் செறிவை இந்நவமணிகள் வீசும் ஒவ்வொரு சுடரிலும் காணலாம்.

வாகீச கலாநிதி, உயர்திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் முதன் மணியை நல்கியுள்ளார்கள். "திருத் தசாங்கமாலை" என்னும் அழகிய மணி, ஜகத்குருவின் நாமம் முதலிய பத்து அங்கங்கள் ஆகிய சுடரினால் நம் மனத்திருளை வாங்குகிறது.

"செஞ்சொல் மடக்கிள்ளாய்! தேசார் உலககுரு
நெஞ்சினிக்கும் நாமம் நிகழ்த்துவாய்! — எஞ்சல்இலா
மந்திர நான்மறையை நாளும் வளர்ப்பவன்பேர்
சந்திர சேகரனும் சாற்று"

என்ற முதற்பாடலில் "உலககுரு நாமம்சொல்" என்று மடக்கிளியை உசாவி, சந்திரசேகரன் என்ற திருப்பெயரைக் கூறுவதற்குக் கற்றுத் தருகின்றார்.

கிளி, கற்பித்தவை பலவும் பேசலாம்; திருத்தமாகவும் சொல்லலாம். அதன் சொற்கள் செஞ்சொல் எனவும் படலாம். ஆயினும், கண்டவரையெல்லாம் "திருடன், கயவன்" என்று வைதற்குப் பயின்றிருக்குமாயின், அதன் சொல்லை யார் விரும்புவர்? பயன்தரும் சொல்லை, — பிறர் மனம் விரும்பும் சொல்லைக் கூறினன்றோ யாரும் அதை விரும்புவர்!

சந்திரசேகரன் என்பது நெஞ்சினிக்கும் நாமம். மந்திர நான்மறையை வளர்ப்பவன் நாமம். அத்திருநாமத்தைக் கேட்டால் தூய்மை வளரும்; வாய்மை பெருகும்; தீமை விலகும். அதுவன்றோ பயன்தரும் சொல்! கிளிக்குக் கூறும் வியாஜத்தால் உலகுக்கு அறிவுறுத்துகின்றார் கி. வா. ஜ. அவர்கள்.

வாகீச கலாநிதி தந்த மணியின் ஒவ்வொரு சுடரும் உள்ளொளி பெருக்குவது ; நவில்தொறும் நலமும் இன்பமும் பயப்பது.

அடுத்த மணியை நல்கியவர் கவிஞர்திலகம் கலைவாணன் அவர்கள். ஜகத்குருவைக் குழந்தையாக்கித் தாலாட்டிப் பாராட்டி, அம்புலி காட்டி, தம் ஆழ்ந்த அன்பினைப் புலப்படுத்தியுள்ளார். அவர்தம் உள்ளத்தின் உண்மையொளி உருவெடுத்து வெளியாகியுள்ள ஒளிக் கதிர்கள் நம் (மனக்) கண்ணை விரியச் செய்கின்றன; குதூகலம் தருகின்றன.

"விண்டுரைக்கும் எம்மொழிக்கும் அண்டையில் நிமிர்ந்ததோர்
வெள்ளிவெற்பை விட்டுவந்து கம்பைவெண் மணல்மிசை
விண்ணளாவி நிற்கும்ஒற்றை மாமரத் தடியிலே
வீற்றிருக்கும் ஆவலால்தன் வேடமே கலைந்திடக்
கொண்டிருந்த கங்கையோடு கொன்றையும் மதியமும்
கூடிவாழ் அரவினோடு முடிவைத்து மார்பிலே
குலவிடும் கபாலமாலை அக்கமாய்த் திரும்பிடக்
கும்பிடும் கணங்கள்பக்தர் கூட்டமாய்த் தொடர்ந்திட
முண்டிதத் துடன்எடுத்த தண்டபாணி யாய்விழி
மூன்றில்ஒன்றை மூடிமேனி முழுவதும் விபூதியில்
மூழ்கியொற்றை ஆடையோடு முன்எழுந் தருள்செயும்
மூந்தைமா மறைப்பொருள் மூளரிவாய் விளங்கிடச்
சண்டதாண்ட வேசனும் சபாபதி ஜகத்குரு!
சக்தியைத் தனக்குள்வைத்த வித்தகத் துருவமே!
சந்த்ரசேக ரேந்திர சரஸ்வதிமுத் தம்கொடு!
சத்தியஸ்வ ரூபியான வித்தகாமுத் தம்கொடு!"

என்ற முத்தப் பருவப் பாடலின் வித்தகச் சந்தம் நம் சித்தத்தை அள்ளுகின்றது. அப்பாடலின் கருத்து, நம் கருத்தைத் திருத்தி, களிப்பில் இருத்தி, கருணையைப் பொருத்துகின்றது. பிள்ளைத்தமிழ் நவமணியில் ஒருமணி

என்றால், அதன் ஐம்பது பாடல்களும் அம்மாமணியின் தீட்டிய பட்டைகள் என்னத் தடையுண்டோ?

மூன்ருவது மணியைக் காணிக்கை யாக்குபவர் பழனி இளங்கம்பன் அவர்கள்.

"நான்எனது என்னும் நவைச்செருக்குக்கு ஓர்பகையே!
ஞானச் சுடரான நற்றவமே! - தேனின்
இனிமை பழுத்த எழிற்காஞ்சித் தேவே!
கனியாத என்நெஞ்சோ காய்."

என்ற பாடலில் பக்திச்சுவை தத்தித்தத்திப் பாய்வதைக் காண்கின்ருேம்.

அற்புதம் பல செய்யும் அருட்காஞ்சி முனிவர், நெஞ்சமாகிய காயைக் கனியாக்குவது அரிதோ எனக்கருதி, தம் நெஞ்சைக் காணிக்கையாக்கும் கவித்திறம் நம் நெஞ்சையள்ளுகின்றது.

"காராரும் மேனிக் கருணை கரமூர்த்திக்கு
ஆரா தனைஎன் அறியாமை ஒன்றுமே"

என்று ஆண்டவனுக்குத் தம் அறியாமையையே காணிக்கையாக்கினர் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

பொன்னே பொருளோ காணிக்கையாகத் தரலாம். ஆனல் அவை ஆண்டவன் தந்தவைதாமே! அவன் தந்தவற்றையே அவனுக்குத் தருவது சிறப்பா? அவன் தராதது—அவனிடம் அறவே இல்லாதது – நம்மிடம் மட்டுமே உள்ளது அறியாமை ஒன்றுதானே! ஆதலால் அதைத் தருவது சாலும் எனக் கருதினர் கம்பர் பெருமான்.

திரு. ம. வே. பசுபதி அவர்களும் ஆசார்யனிடம் இல்லாத ஒன்றை அவனுக்குப் படைக்க விரும்பினர்

போலும்! ஆசார்யன் ஆண்டவன் வடிவம். ஆண்டவனுக்கு அந்தம் ஆதி உண்டா? ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி அன்றோ அவன்! அவனுக்கு அந்தஆதி (அந்தாதி) யைத் தருவது தகும் என்று, அந்தாதி என்ற அருமணியை உவப்புடன் நல்கியுள்ளார்.

"ஏத்துவார்க்கு இன்னமுதம்; யாவர்க்கும் நல்வைப்பு;
தீர்த்தம்போல் தீங்ககற்றும் தெய்வதம்; – ஆத்திகத்துச்
சிங்கம்; திருக்காஞ்சித் தேசிகனும் சங்கரனே
அங்கண் விழிப்பாவை யாம்"

என்று குரவனைப் பலவாறு உருவகப்படுத்தி உணர்வினைத் தூண்டுகின்றார்.

முப்பது பட்டைகள் தீட்டப்பெற்ற அம் முழுமணிக்கு விலை, நம் உள்ளமல்லால் வேறுண்டோ?

பழைய மரபில் புதுமை மலரச் செய்துள்ளார் கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள். வணிகவியலில் முதுகலைப் பட்டம் பெற்ற அவர், தம் தணியாத அருட்காதலைச் சுடர்மணியாக்கி யளித்துள்ளார்.

ஆசார்யன் அள்ளிப்பூசும் அருள் திருநீற்றையே தூதுக்குரிய பொருளாக்கி, அத்திருநீற்றின் பெருமையை விளக்கி, அதன்மூலம் ஜகத்குருவின் கருணைவெள்ளம் காட்டும் அற்புதம் வியத்தற்குரியது.

பண்டைய மரபுப்படி கிளி முதலியவற்றைத் தூதாக்காமைக்குரிய காரணங்களை நயமாக அடுக்குகின்றார்.

ஜகத்குரு சந்நிதியில் ஆயிரமாய்ப் பூசையுண்டாம். பூசை என்பது பூனைக்கும் பெயர். பூனையுள்ள இடத்திற்குக் கிளி போகுமா? கிளியை அனுப்பினால் பூசை (பூனை) க்குப் பயந்து சந்நிதிக்கண் போகாதே என்ற கற்பனை வெளியீடு அட்சர லட்சம் பெறும்.

"ஆசைக் கிளியை அனுப்பினால், ஆயிரமாய்ப்
பூசையுள்ள சந்நிதிக்கண் போகாதே"

இத்தகைய கற்பனை ஒளிச்சிதறல்கள் நிறைந்த இம்மணி நம் கவலையிருளைக் கடிந்தொதுக்குகிறது.

வித்துவான் வி. துரைசாமி அவர்களைத் தமிழுலகு நன்கறியும். மதுரைக் கல்லூரியில் தமிழ்த்துறைத் துணைப் பேராசிரியராகிய அவர், பன்னெடுநாள் முன்பே, ஜகத்குருவுக்குத் தம் நெஞ்சினைத் தூதுவிட்டவர்.

அவர் வழங்கிய உலாமணி உளந்தோறும் உலாவரும் மணியாக ஒளிர்கின்றது.

புதுப்புதுக் கற்பனைகளும் உவமைகளும் விரவிவர மதுப்பொதியும் வாக்கினால் காஞ்சிமுனிவர்தம் அருட் புகழமுதினை அள்ளி அள்ளித் தருகின்றார்.

இராமன் வாளியால் இலங்கையர்கோன் முடித்தலைகள் அற்று வீழ்ந்தும் மீண்டும் முளைத்தன என்பது இராமகாதை. பேதைப் பருவத்துப் பெண்ணை அறிமுகம் செய்யும் கவிஞர், அப்போது விழுந்து முளைத்த அவள் பற்களுக்கு இராவணன் முடித்தலைகளையே உவமையாக்கி, நமக்கு உவகையாக்கி விடுகின்றார்.

"முன்விழுந்து பின்எழுந்த மூர்க்கன் முடித்தலைபோல்
முன்விழுந்து பின்முளைத்த மூரலாள்"

என்னும்போது நம்மை மறந்து, கவிஞர்தம் கற்பனை வளத்துக்குக் கருத்தைத் திறையாக்குகின்றோம்.

இத்தகைய பலப்பல நயங்களை இவர் எங்கிருந்துதான் கொட்டினரோ? ஆசார்யன் அருளிருந்தால் ஆகாததும் உண்டோ?

திருமங்கை மன்னனுக்குப்பின், இதுகாறும் மடலூர நினைந்தார் அரியர் என்னும் குறையைத் தீர்த்துவைக்கின்றார் கவிஞர் சக்திசரணன் அவர்கள்.

திரு. சதாசிவ பண்டாரத்தாரின் மாணவராகிய கவிஞர் படைத்த ஜகத்குரு திருமடல் ஒரு கற்பனைக் கடல்; கவிச் சுவைக்கு உடல்.

"சென்னை நகரில் மயிலைத் திருப்பதியில்
மன்னும் அடியார் பெருங்கூட்ட மத்தியிலே"

காஞ்சி முனிவர் சொன்ன உரை அத்தனையும் துய்க்கச் சுவை நல்கும் அன்னநூல் கற்றாளாம் ஒரு கன்னி. அவர் என்னதான் சொன்னர்?

"தொன்னெறிகள் காட்டும் சுருதிக் கடலுக்குள்
இன்னமுதம் ஆக இறைவன்உள அற்புதமும்
முன்னை முனிவர் மொழிந்த நெறிமுறையுள்
பின்னிக் கிடக்கின்ற விஞ்ஞானப் பெற்றிகளும்
மன்னும் உலகெங்கும் மாண்பார் சனதனமே

துன்னும் உருமாறித் தோன்றும் அதிசயமும்
இன்னும் புராணம் இதிகாசந் தம்முளே
மின்னி ஒளிரும் அறங்களது மேட்டிமையும்
பின்னும் இவைபோற் பிறபலவாம் செய்தியெலாம்
என்னை நிகர்த்தே இருக்கும் எளியவரும்
உன்னி உணர்வுற்றே உய்யும் படியாகக்
கன்னங் கறுத்தபுயல் பெய்கின்ற காட்சியென
மன்னும்உயர் காஞ்சிநகர் மாமுனிவர் தண்ணருளால்
சொன்னவுரை ''

என்று அதற்கு விளக்கம் நீளுகின்றது. நூல் முழுதும் மரபு கருதி ஒரே எதுகையில் அமைத்த அருஞ்செயலை எண்ணி எண்ணி வியக்காமல் இருக்க இயலுமா?

கம்பன் கவியில் கருத்தினை ஊறவைத்தமையால் கம்பராமன் என்னும் சிறப்புப்பெற்ற கவிஞர் இராமராசன் அவர்கள் கலம்பகம் என்னும் கதிர்மணி நல்கியுள்ளார்.

கயிலையங்கிரி வாழும் கண்ணுதற்கடவுள் காஞ்சி முனிவராகக் காசினிக்கு வந்தமைக்குக் காரணங்கள் பல கற்பனை பண்ணுகின்றார்.

''வெண்மைவளர் கயிலாய வெற்புவிடுத்து இவண்உற்றாய்!
வெண்மையுளம் உடையேம்யாம் மெய்ம்மையினை உணர்தற்கோ?

நஞ்சுண்டு பழகினை நீ. நானிலத்தில் அவதரித்து
நஞ்சனையேந் தமைஆண்டு நன்னெறியைக் காட்டுதற்கோ?

பிறைமதியை விடுத்துஇந்தப் பேருலகில் அவதரித்தாய்!
குறைமதியேம் மதிபோக்கிக் குவலயத்தைக் காப்பதற்கோ?

என்பணியை விடுத்துற்ருய்! எம்பெருமான்! உலகத்தே
"என்பணிகொள்" எனும்அடியார் இடர்மலையைத்
தகர்த்தற்கோ?

தழல்வடிவை மறைத்திங்குத் தமிழ்வடிவாய்ப் போந்திட்டாய்!
கழலடையும் மெய்யடியார் கண்மலர்கள் உருகுதற்கோ?

ஆலடியிற் கைகாட்டி அருமறைகள் போற்றிசெயக்
காலடியில் அமுதளித்தாய்! கடலுலகம் செழிப்பதற்கோ?"

என வரும் தாழிசைகள் நம் நெஞ்சில் வாழ்இசைகளாக மன்னுகின்றன.

சிவபெருமான் காஞ்சி முனிவராக வந்ததுபோல், முருகப்பெருமான் ஜயேந்திர முனிவராக வந்துள்ளாராம்.

"மயேந்திரத்தைத் தொலைத்தபிரான் மகிழ்வுறுசெங் கோல்ஏந்தச்
சயேந்திரராய் வந்ததுநல் தவக்கனலை வளர்ப்பதற்கோ?"

என்ற அடிகள் நம் இதயங்களின் அடியைத் தொட்டு, காஞ்சி அடிகளின் கஞ்ச அடிகளுக்கு நம்மை ஆட்படுத்துகின்றன.

வியத்தகு புலமை விளங்க ஆக்கிய இந்தக் கலம்பகம் நவமணியில் ஒரு மணியாய் அமைந்தது நாம் பெற்ற பெரும் பேறாகும்.

முடிமணியாக அமைந்தது கச்சிக்கோவை. அருட்கவி அரங்க சீனிவாசன் படைத்த இக்கோவை அகப்பொருள் துறைகளை விளக்கினாலும், ஜகத்குருவின் அரும்பெருஞ் சிறப்பினைப் பாடல்தோறும் பலபடப் புனைந்து பாராட்டுகின்றது.

"வழி எனக்காகிய சங்கரர்" என முதற்பாடலில் காட்டும் கவிஞர்,

"செம்புர நியகளிம் பாம்எனும் ஆணவம் சிந்திடவே
நம்பேறு எனவரும் சங்கரர்"

என்றும்,

"மாணிலன் ஆக்கும்என் ஐம்பொறி என்வசம் ஆகிஉய்யச்
சேணில வாதவன் போல்வந்த காஞ்சிஎம் தெய்வம்"

என்றும்,

"ஆராத காதல் அடியவர் நெஞ்செனும் ஆலயத்தே
வாராது வந்து வரம்தரும் சங்கரர்"

என்றும்,

"காலால் நடந்தே தலம்தொறும் சென்று கருணையினல்
மேலாம் அருள்விதை தூவிடும் சங்கரர்"

என்றும்,

"ஏகம் பரம்; புவி மாயையின் தோற்றம் எனஅறிவுத்
தாகந் தனைஎழுப் பும்உலகாரியன்"

என்றும்,

"சாவாத விண்ணமுதோ கற்பகத்தருவோ வலவன்
ஏவாத ஊர்திகொலோ.........இனி ஈகுவெனல்
தாவாத சீர்க்கச்சிச் சந்திர சேகரன் தாள்மலரில்
ஓவாத அன்பினர்க்கு ஆகாதது ஏது"

என்றும், கூறும்போது அவர்தம் ஆசார்ய பக்தி நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது.

தூது, உலா, மடல் ஆகியவற்றின் இறுதியில் அமைந்த வெண்பாக்களைப் பாடியவரும் அரங்க. சீனிவாசன் அவர்களேயாவர்.

துறவு நெறியில் உயர்ந்து, தவத்தால் ஒளிர்ந்து, திருவருளால் கனிந்து, அநுபூதியில் கரைந்து நிற்கும் ஸ்ரீ சந்திர சேகரேந்த்ர ஸ்வாமிகளைக் குறித்தெழுந்த ஒன்பது பிரபந்தங்களும் நவமணிகள். அவற்றை நல்கிய கவிஞர் களும் நவமணிகள். அவர்கள் புண்ணியம் சேர்த்துக் கொண்டார்கள். அஃது என் நன்றிக்கும் மேலே!

என்னை இப் பிரபந்தங்களைத் தொகுக்கும் நற்பணியில் ஈடுபடுத்திய திருவருளுக்கும் குருவருளுக்கும் தலை வணங்கு கின்றேன். வண்ணப் பணித்த வான்கருணை என்னலாமோ?

1974-ஆம் ஆண்டு இராமேச்வரத்தில், சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி ஸ்ரீ. N. கிருஷ்ணஸ்வாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் இந்நூல் வெளியாகியது. அன்பர்கள், அடியார்கள் கையிலும், கருத்திலும் அணியாக இப்போதே மலர்ந்து, மணம் வீசுகின்றது.

இந்நூல் வெளியாதற்குரியன யாவும் செய்துதவிய **இராமேச்வரம், ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸ்வாமிகள் ஜயந்தி விழாக் கமிட்டியினர்க்கு** நன்றி சொல்வதா அன்றி அவர்கள் சேகரித்துக் கொண்ட அருள்மிகு பெருமைக்குப் பாராட்டு வழங்குவதா? அங்கமாகிய நான் முதற்பொருளை எவ்வாறு, யாது கூறி வாழ்த்துவேன்?

இந்நூலைத் திருத்தமாகப் படியெடுத்து உதவிய திருச்சிராப்பள்ளி, E. R. உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் **திரு. திருவேங்கடாசாரிக்கு** நல்வாழ்த்து. நூல் அச்சாகுங்கால் உடனிருந்து உதவிய **பண்டித, வித்துவான் ஸ்ரீ தி. வே. கோபாலையர், கவிஞர் திரு. ம. வே. பசுபதி** ஆகியோர்க்கு உள்ளார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

தமிழகத்தில் அச்சகத் தொழிலைத் திறமுடன் நிறைவுற நிகழ்த்தும், **கும்பகோணம் ஜெமினி அச்சகத்தார்** இந்நூலை அச்சியற்றினர். அவர்களுக்குக் குருவருள் என்றென்றும் நிலைக்கவேண்டுவென்.

அட்டைப் பட ஓவியம் தீட்டி உதவிய திருமுறைச் செல்வர் **திரு. மு. கணபதி** அவர்களுக்கு எல்லா நலன் களும் பெருகப் பரமனைப் பணிகின்றேன்.

திருச்சிராப்பள்ளி,
1—3—1977.

இரா. இராதாகிருஷ்ணன்.

பொருளடக்கம்.

பக்கம்

1. ஜகத்குரு திருத்தசாங்க மாலே ... 3
வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன்.

2. ஜகத்குரு பிள்ளேத்தமிழ் ... 11
கவிஞர் திலகம் கலேவாணன்

3. ஜகத்குரு நான்மணி மாலே ... 41
இன்னிசைக் கவிமணி இளங்கம்பன்.

4. ஜகத்குரு வெண்பா அந்தாதி ... 53
கவிஞர் ம. வே. பசுபதி.

5. சந்திரசேகரர் திருநீறுவிடுதூது ... 65
சொல்லோவியர் சொ. சொ. மீ. சுந்தரம்.

6. ஸ்ரீ சந்திர சேகரேந்திரர் உலா ... 83
வித்துவான் வி. துரைசாமி, எம். ஏ.

7. ஜகத்குரு திருமடல் ... 116
கு. க. நரசிம்மன் (சக்திசரணன்).

8. ஜகத்குரு சங்கரர் கலம்பகம் ... 127
எஸ். கே. இராமராசன் (கம்பராமன்).

9. கச்சிக் கோவை ... 155
அருட்கவி அரங்க சீனிவாசன்.

ஜகத்குரு திருத்தசாங்க மாலே

முன்னுரை

நாடு, நகர், மலே முதலியன பத்தும் ஒரு தலேவனுக்குரிய தலேயாய உறுப்புக்கள் எனப்படும். இவ்வுறுப்புக்களேச் சிறப்பித்துச் சுவைபடக் கூறுவது தசாங்கம் என்னும் நூல்வகை ஆகும்.

திருவாசகத்துள் தசாங்கம் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. மற்றும் உலா, தூது, காதல் முதலிய பிரபந்தங்களிலும் பாட்டுடைத் தலேவன் பெருமையைக் குறிப்பிடுகையில் இந்தப் பத்து அங்கங்களேயும் கூறுவது மரபு.

பசுங்கிளியை விளித்து, தலேவன் பெயர் முதலியவற்றைக் கூறுமாறு வேண்டுவதாக, வெண்பாவால் பாடப்பெறுவது தசாங்கம். இது உறுப்புக்கு ஒரு பாடல் வீதம் பத்துப் பாடல்களேக் கொண்டதாகும். உறுப்பு ஒன்றுக்குப் பத்துப் பாடல் வீதம் நூறு பாடல்களான் இயன்ற நூல் தத்துவராய சுவாமிகள் பாடிய திருத்தசாங்க மாலேயாகும்.

ஒவ்வோர் உறுப்புக்கும் மூன்று பாடல் வீதம் முப்பது பாடல்களேக் கொண்டுள்ளமையால் இந்நூலுக்குத் தசாங்கமாலே எனப்பெயர் தரப்பட்டுள்ளது.

ஆசாரிய சுவாமிகள் அருட்பெருங் கருணே துணேயாக இந்நூலேப் பாடும் பேறு பெற்றமைக்கு மகிழ்கின்றேன்.

சென்னே,
18—5—73

கி. வா. ஜகந்நாதன்.

ஆசிரியரைப்பற்றி . . .

கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜ. அவர்களை அறியாதார் தமிழறிந்த பகுதிகளில் எவருமிலர்.

இவர் 1906 ஆம் ஆண்டு கிருஷ்ணராஜபுரம் வாசுதேவ ஐயரவர்களின் திருமகனுகப் பிறந்து, டாக்டர் உ. வே. சா. அவர்களின் முதல் மாணுக்கராக விளங்கி, 200க்கு மேற்பட்ட பல்வேறு வகை நூல்களை இயற்றி வெளியிட்டுத் தமிழுள்ளங்களுக்கு இன்பத் தேனூட்டி வருபவர்கள்.

காஞ்சி ஜகத்குரு அவர்கள் இவருக்கு "வாகீசகலாநிதி" "திருமுருகாற்றுப்படை அரசு" என்ற பட்டங்களைக் கொடுத்துச் சிறப்பித்துள்ளார்கள். மற்றும் பல்வேறு மடாதிபதிகள் இவருக்கு, தமிழ்க்கவி பூஷணம், உபன்யாச கேசரி, செந்தமிழ்ச் செல்வர், திருநெறித் தவமணி என்ற பட்டங்கள் அளித்துள்ளனர்.

கட்டுரைகள் வரைதல், கவிபுனைதல், சொற்பெருக்காற்றுதல், கதைகள் இயற்றுதல், நூல்கள் பதிப்பித்தல், உரைகாணுதல், இவ்வாருன எல்லா வகைகளிலும் கணிசமான அளவு தமிழ்த் தொண்டாற்றிவரும் அறிஞரிவர்.

ஜகத்குரு திருத்தசாங்க மாலை

வாகீச கலாநிதி **கி. வா. ஜகந்நாதன்**

---

1. பேர்

செஞ்சொல் மடக்கிள்ளாய்! தேசார் உலககுரு
நெஞ்சினிக்கும் நாமம் நிகழ்த்துவாய் – எஞ்சல்இலா
மந்திர நான்மறையை நாளும் வளர்ப்பவன்பேர்
சந்திர சேகரனும் சாற்று! 1

பாலும் பழமும் தருவேன் பசுங்கிளியே!
ஞாலத்துக் காசிரியன் நல்நாமம் – ஏலஉரை
இந்திர னேனும் இறைஞ்சும் பெருஞானச்
சந்திர சேகரனும் சாற்று! 2

வண்ணக் கிளியே! மனம்அடக்கி, மாசாந்திப்
பெண்ணினை வேட்டவன் பேர்உரையாய் – விண்ணளவும்
சுந்தரக் கைலை துறந்து புவிவந்த
சந்திர சேகரனும் சாற்று! 3

2. நாடு

ஒற்றைத் தவக்கோல் உயர்த்தும் உலககுரு ;
நல்தவமன் வாழுகின்ற நாடுரையாய் ! — பொற்கிளியே !
எல்லாரும் போற்றி இசைக்கும் வளம்சான்ற
நல்லார்சேர் தொண்டைவள நாடு. 4

தன்னந் தமிழ்இசைக்கும் தத்தாய் ! உலககுரு
நண்ணும் திருநாட்டின் நாமம்என்னே ! — விண்ணவரும்
கண்டுஇதுபோல் ஞானம் கதிக்கும்இடம் இல்லைஎனும்
தொண்டைவள நாடெனவே சொல். 5

பச்சைக் கிளியே ! பரமகுரு சங்கரன்தான்
நச்சிஉறை நாட்டை நவிலுவாய் ! — இச்சையிலாப்
பண்ணவரும் பாவலரும் பக்தர்களும் எஞ்ஞான்றும்
நண்ணவரும் தொண்டைவள நாடு. 6

3. ஊர்

தன்னை அறியும்வகை சாற்றும் குருநாதன்
உன்னதமாம் ஊரை உரைகிளியே ! — அன்னை,உயிர்
வாடுவதைப் போக்கி, அருள் வாழ்வு வழங்குதற்கே
நாடுகின்ற கச்சி நகர். 7

தத்தாய் ! மகாவாக் கியப்பொருளின் சாரமெலாம்
ஒத்துஆள் நிலையுடையான் ஊர்உரையாய் — சித்ததனைத்
தோல்வியுறச் செய்ம்முனிவர் துன்னித் தவம்புரிந்து
பால்வளரும் கச்சிப் பதி. 8

செங்கனிவாய்ப் பைங்கிள்ளாய் ! தேசுகண்டா ரைமயக்கும்
சங்கரனார் வாழும் தனிப்பதிஎன் ? — மங்கலமார்
காமகோ டிப்பீடம் காசினியோர் போற்றவளர்
நாமம்உயர் கச்சி நகர். 9

4. ஆறு

அஞ்சொல் மடக்கிளியே! அன்பே வடிவாகி
அஞ்சலஎனும் ஆசான்தன் ஆறுரையாய் – விஞ்சுமலம்
தாழ, அருள்நிலையே சார, உயிர்கள்எல்லாம்
வாழவரு வேக நதி. 10

கிஞ்சுகவாய் அஞ்சுகமே! கேழிலாச் சங்கரன்; எம்
வஞ்சப் பிறப்பறுப்பான் மாண்நதிஎன்? – சஞ்சலமே
தான்நந்த என்றும் தமைஉணர்வார்க்கு உட்பெருகும்
ஆனந்த மேஅவன்தன் ஆறு. 11

சொல்லினிமை கொண்ட சுகமே! சுகவடிவாம்
நல்லகுரு நாதன் நதிஉரையாய்! – எல்லையெனும்
தேசமொடு காலம்இன்றிச், செய்யும் செயல்ஒழிந்தே
ஆசகன்ற ஆனந்த ஆறு. 12

5. மலை

இறைவன் பெயரே இயம்பும் கிளியே!
மறைதந்த நாவன் மலைஎன்? – நிறைஅன்பர்
கோலம்கண்டு ஆனந்தக் கூத்தாடச் செய்தருளும்
சீலம்கொள் பண்பே சிலம்பு. 13

பச்சைப் பசுங்கிளியே! பாரெல்லாம் தூய்மையுற
வச்ச அடியான் மலைஉரையாய்! – இச்சகத்தில்
பாலர் முதியர்முதல் யாவரையும் பண்படுத்தும்
சீலமெனும் பண்பே சிலம்பு. 14

சிறையார் மடக்கிள்ளாய்! சேர்பிறவி போக்கி
மறைபகரும் வாயான் மலைஎன்? – அறைகுவன்கேள்!
பூதலத்தில் யாரும் புகல்புகுந்து சாந்திபெறும்
தீதில்லாப் பண்பே சிலம்பு. 15

6. ஊர்தி

வண்ணப் பசுங்கிள்ளாய்! மால்அறுக்கும் சங்கரனர்
நண்ணுகின்ற ஊர்தி நவின்றிடுவாய் – அண்ணுகின்றோர்
நாளும் வியந்து நலம்பெறவே செய்துஅவரை
ஆளும் கருணை அருள். 16

சிறையார் மடக்கிளியே! தேகம்எனும் வெய்ய
சிறைபோக்கி ஆள்வான் திறல்மா – அறைகுவாய்!
ஏதும் அறியார் எனினும்அவர் தமைஆண்டு
ஆதரவு செய்யும் அருள். 17

மாவில் உறைகிள்ளாய்! மாப்புலியா டைதுறந்து
காவியுடை ஏற்ருன் கவின்பரிஎன்? – பூவிலுளார்
வெள்ளம்என வந்து விழுந்து பணிந்துளத்தே
அள்ளும் கருணை அருள். 18

7. கொடி

எங்கும் பறக்கும் எழிற்கிள்ளாய்! – மெய்ஞ்ஞானச்
சங்கரன் ஏந்தும் தனிக்கொடிஎன்? – பங்கம்இன்றி
மாட்சியுற்றே எவ்உயிரும் மாநிலத்தி லேவளர
ஆட்சி புரியும் அறம். 19

பசியநிறக் கிள்ளாய்! பரம்பரனும் ஆசான்
இசைய எடுத்தகொடி என்னே? – அசைவின்றி
எவ்உயிரும் காத்திங் கினிதிருக்கச் செய்கின்ற
செவ்வி அறம்என்று தேர். 20

எல்லாரும் கால்பிடிக்கும் ஏற்ற முடையகிள்ளாய்
தொல்பேரா சான்தன் துவசம்என்கொல்? – நல்உலகில்
தோற்றும் உயிர்கள்எலாம் துன்னுவினைப் போகம்அற
ஆற்றுகின்ற தாய அறம். 21

8. முரசு

நல்லவர்க்குத் தூது நடக்கும் கிளிப்பிள்ளாய்!
வல்லகுரு நாதன் மணிமுரசுஎன்? — எல்லையிலாச்
சாகை பலவாத் தழைத்தென்று மேநிலவி
வாகை பெறுநான் மறை. 22

தூது நடக்கும் தொழிற்கிளியே! சங்கரனும்
நாதன் முரசுஎன்? நவிலுவாய்! — ஆதியிலாது
எண்ணரிய சாகை விரிந்திங் கெழுதாத
வண்ணமுள தாய மறை. 23

மன்மதனுர் ஏறும் மணித்தேர்க்கு வாம்பரியே!
தன்மநெறி காட்டும் சங்கரனுர் — நன்முரசுஎன்?
தூய்மை தவம்ஒழுக்கம் தொண்டுகளைப் போற்றுகின்ற
வாய்மையுள தாய மறை. 24

9. படை

பாங்கார்இன் சொல்லே பயில்கிளியே! நம்குருவாம்
ஓங்கார வாச்சியனுக் குற்றபடை — ஈங்குரையாய்:
மண்பால் அனைத்துயிர்க்கும் மாயாத வாழ்வளிக்கும்
பண்பான ஞானப் படை. 25

பச்சைக் கிளியே! பரமகுரு வாய்வந்த
கச்சித் திருமுனிவன் கைப்படைஎன்? — நச்சித்
தொடர்கின்ற அன்பர் துணையாகித் தூய்மை
படர்கின்ற ஞானப் படை. 26

செந்தார்ப் பசுங்கிளியே! சீர்ச்சந்த்ர சேகரனும்
எந்தை பெருமான் எழிற்படைஎன்? — பந்தமெனச்
சுற்றுகின்ற மாயை தொடராமல் அன்பரெலாம்
பற்றுகின்ற ஞானப் படை. 27

10. தார்

காவிற் பழச்சுவைதேர் காமர் பசுங்கிளியே!
தாவில் அருட்கடலின் தார்உரையாய்! – பூவுலகில்
கண்ணீர் பெருக்கிக் கவினார் அளிவளர்க்கும்
வண்ணச் செழுந்தா மரை. 28

செங்கனிவாய்த் தத்தாய்! திரவியமாய் ஞானத்தை
எங்கட்கு அளிப்பான்தார் ஏதுஉரையாய்? – இங்குலகில்
பாசத் தளையவிழப் பைந்தடத்தே வாயவிழும்
வாசச் செழுந்தா மரை.

பைங்கிளியே! ஓர்முறையே பார்த்தாலும் நெஞ்சினிலே
தங்கும் முனிவேந்தன் தார்உரையாய்! – எங்களது
ஆவிக் குறுதுணையாய் அஞ்சலென ஆளும்அருள்
வாவிச் செழுந்தா மரை. 30

—o—

ஜகத்குரு பிள்ளைத்தமிழ்

முன்னுரை

ஆண்டவனைத் தாயாகவும், தந்தையாகவும், ஆசானாகவும் தோழனாகவும், நாயகனாகவும் கருதி அவன் பண்புகளில் ஈடுபடுவது நம் நாட்டில் தொன்றுதொட்டு வரும் மரபு. முதன்முதலாகப் பெரியாழ்வார், கண்ணனைக் குழந்தையாக்கி, அவன் குழந்தைவிளையாட்டுக்களில் ஈடுபட்டு அவற்றைக் கவிதையாக வடித்தார், குலசேகராழ்வார் ஆண்டவனுக்குத் தாயாகித் தந்தையாகிக் கனிந்தழுதார்; இராமனைக் குழந்தையாக்கித் தாலாட்டினார்.

இவ்வாழ்வாருடைய பக்திச்சுவை ஊறிய கவிதைகளில் திளைத்த புலவர்கள், அவர்கள் வழியிலேயே பல பாடல்கள் பாடினர்; பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தவகை மலர்ந்தது. தமிழிலக்கியங்களில் மிகுதியாகக் கிடைக்கும் பிரபந்தம் பிள்ளைத்தமிழே.

பல்வகைச் சுவைகளையும் பெய்து, தலைவனுடைய பண்புகளை விளக்குவதற்குரிய அமைப்பு இப் பிள்ளைத் தமிழுக்கு உரியது. கண்கண்ட தெய்வமாகக் காசினியை உய்விக்க நம்மிடையே நடமாடும் ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பீடத்தலைவர் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்மேற் பிள்ளைத்தமிழ் பாடும் பேறு கிட்டியமைக்குப் பெரிதும் மகிழ்கின்றேன்.

— கலைவாணன்.

ஆசிரியரைப்பற்றி . . .

கவிஞர் திலகம் கலைவாணன் அவர்கள் பிறந்தது 30—10—1917; கவிதை எழுதத் தொடங்கிய ஆண்டு 1936. கவிதையுலகில் தமக்கென ஒரு வழியை வகுத்துக்கொண்டவர் இவர். பண்டைய இலக்கணமரபு குன்ருது, புதுமைப் பொலிவோடு பொதுமைக் கருத்தோடும் கவிதை ஆக்க வல்லவர். பலநாட்டு இலக்கியங்களிலும் ஆழ்ந்த பற்றும் தெளிந்த புலமையும் கொண்டவர். எனவே, இவர்தம் கவிதைகள் புதுமைக்கும் பழமைக்கும் பயனுள்ள பாலமாக விளங்குகின்றன. எளிய தோற்றம், இனிய பேச்சு, தெளிந்த சிந்தனை – இவை இவர்தம் சிறப்பியல்புகள்.

மனச்சிமிழ், ஜீவானந்தம், நிவேதனம், விட்டில், அழியா அழகி, காவிரி, பித்தன், காவை முருகன் பிள்ளைத் தமிழ், உதயம் முதலியன இவர்தம் பிற படைப்புக்கள். 1963ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற பன்மொழிக்கவியரங்கில், தமிழ்மொழிக் கவிஞராகப் பங்கு கொண்டார். தமிழகத்தில் பல கவியரங்கங்களில் தலைமை தாங்கியும், பங்கேற்றும் தமிழுக்குத் தொண்டாற்றி வருகின்ருர். பயிர்த்தொழிலோடு கவித்தொழிலும் இணைந்த இவர் வாழ்க்கை பெருமைக்குரியதாகும்

ஜகத்குரு பிள்ளைத்தமிழ்

கவிஞர்திலகம் கலைவாணன்

நூன்முகம்

காப்பு

செந்தமிழ்ப் பிள்ளையாய்ச் செனித்த சற்குரு
சந்திர சேகர சங்க ரன்பத
வந்தனைக் கெனச்சிவ வார ணத்தின்முன்
எம்தலை தாழ்த்திநின் றிருகை கூப்புவாம்.

1. காப்பு

பரம்பொருள்

வானக மாய்ப்,பெரு வட்ட மதன்நடு வாய்உள செங்கதிராய்,
வாழ அதைப்பல வண்ண முடன்வலம் வந்திடு
கோள்களிலே
தானக மாகிய தாரணி யாய்,அதில் தாம்பல கோடிவகைத்
தாக மலர்ந்திடு சீவர்க ளாய்,அவை தம்முளும்
இம்மைபெறும்
நான்அது வாகியும் உள்ள பரம்பொருள் நல்வழி காட்டும்என
நம்பி முயன்றிடும் என்பணி யாம்,இது நன்கு
முடிந்திடவே,
மோனம தேஉரு வாகிய சங்கரர் மூத்த மரபினில்எம்
முன்னுள சந்திர சேகர னுங்குரு மூர்த்தி
தனைத்தொழுவேன். 1

பதவந்தனைக்கென – பாதங்களை வணங்கும்பொருட்டு
சிவ வாரணம் – யானைமுகப் பெருமான்

1 கோள்கள் – கிரகங்கள் ; வகைத்தாக – வகையுடையதாக

சிவபெருமான்

காளம் எடுத்தொரு கோடி பயங்கர பூதம் ஒலித்துவரக்
காளி யுடன்பல கூளிகள் சுற்றிலும் கைத்தா ளம்போடத்
தாள மிடும்திரு மாலவன் பூங்கரம் தாளா மல்நோக
தாங்கிய யாழொடுதேங்கிய நாமகள் தமிழில் இசைகூட்ட
மேளம் ஒலித்திடு மாமறை யோன்தலை நாலும் அசைந்தாட
மேவிஓர் ஐந்தொழில் நாட்டியம் ஆடிடும் மேலோன் அருள்புரிக
நாளொரு மேனிய னாக வளர்ந்தெமை யாளுடை மாவடியின்
நம்பியதீந்திர சந்திர சேகரன் நற்றமிழ் பாடிடவே. 2

காமாட்சி

தொன்னிலை யின்முது தொன்னிலை யாகிய தோற்றத் தெல்லையிலே
தூய விபூதி துதைந்த சிதம்பரம் ஆகிய மேடையிலே
முன்ன தெதற்கும்ஓர் முன்னவள் ஆகிய மூத்தவளே! சவமாய்
முப்பாழ் தாண்டிய மூலையி னுள்உறு மூத்தவனைக்கூடிக்
கன்னிகை யாயினும் இந்நிலம் ஈன்றதைக் காத்தருளும்தாய்மைக்
கனிவு மிகும்தமிழ்க் காஞ்சியின் மாவடிக் காமாட்சி! அருள்க
என்னையும் ஏற்றருள் சந்திர சேகரன் என்னும் பேருடைய
யதிரா ஜன்புகழ்ப் பிள்ளைக் கவிசெயும் ஏற்றம் எனக்குறவே! 3

---

2 காளம் – ஒருவகை இசைக்கருவி; கூளிகள் – பேய்கள்; மறையோன் – பிரமன்; மாவடி – காஞ்சி ஏகாம்பரநாதர் திருக்கோயில் தலவிருட்சம் – மாமரம்; அங்கு இறைவன் மாவடியான் எனப்பெயர் பெற்றான்.

3 தொன்னிலை – பழமையாகிய நிலை.

திருமால்

புண்ணிய மேஉரு வாய்க்குரு கூரினில்
பொலிவுறு கின்றஒரு
புளியடி யுற்றுள மூங்கையின் வாய்வழிப்
பூந்தமிழ் மாலைபெற
எண்ணி,வை குந்தமுன் ஏற்ற சிறப்பினை
எம்தமிழ் மண்ணடைய
இருதய மேவிய திருமக ளொடுபிற
இமையவ ரும்தொடர
நண்ணி வரும்திரு நாரண மூர்த்தியின்
நளின மலர்ப்பாதம்
நற்றுணை யாய்இவண் உற்ற மகிழ்ச்சியில்
நாயேன் பாடுகிறேன்—
உள்நினை வுச்சியில் உள்ள பரம்பொருள்
ஒருசிறு சேயுருவில்
உள்ள யதீந்திரன் சந்திர சேகரன்
ஓதரு மெய்ப்புகழே! 4

விநாயகன்

உள்ளத் தறியினுள் உள்கிடு வார்பிணிப்
புட்பட்டு உள்ளதனை
ஓம்என் னும்அது தாமல் லாதுமற்
றென்றும் இலாததனைக்
குள்ள மனத்தவர் கொள்கைகள் முற்றிலும்
குலையப் புரிவதனைக்
கோமள மேஉரு வாகிய வன்தலைக்
குமரனு மாயதனைப்

---

4 புளியடியுற்றுள மூங்கை – திருப்புளியாழ்வான் நிழலில் அமர்ந்திருக்கும் நம்மாழ்வார்.

பிள்ளை யெனப்பரம் ஏற்ற விநாயகப்
பெம்மான் அடிபணிவேன்—
பேதைய னேன்கவி யாதோ ரிலக்கணப்
பிழையும் இல்லாமல்அருள்
வள்ளல்சர் வஞ்ஞபீ டத்தை வளர்த்திட
வந்த யதீந்திரனை
வானொளி ரும்பிறைச் சந்திர சேகர
வாழ்வினைத் தீட்டிடவே! 5

2. செங்கீரை

உடன்விளை யாடற் குற்றதோர் நண்பர்
ஒருவரும் இல்லையே என்று
உளம்கவன் றிருக்கும் உன்நிலை கண்ட
வுடன்எழுந் துதவிடும் கருத்தாற்,
கடவுளின் அழகுக் கரிமுகச் சிறுவன்
கரத்தினில் மோதகத் துடனே
கயிலைவிட் டிறங்கி வையகத் திடைஓர்
கையினில் ஞானவேல் ஏந்தி
நடமிடுந் தோகை மயிலின்மீ தேறி
நற்றமிழ்ச் சேய்அவன் தொடர
நண்பராய்க் கூடி அருள்விளை யாட்டு
நானிலத் தெருவில்நின் றூடப்
படபடப் போடுஉன் பக்கல்வந் துற்ற
பரிவினைப் பார்இதோ ஐயா!
பாரெலாம் நமது பாரதப் பண்பு
பரவநீ ஆடுசெங் கீரை! 6

---

5 உள்ளத்தறி – மனமாகிய தூண்.
6 கவன்று – வருந்தி; சேய் – முருகன்.

சோதியாய்ச் சுடராய்ச் சூழ்ஒளி விளக்காய்ச்
சொக்கெழில் விக்கஹ்ர் பக்கம்
சொந்தமாய்ப் போந்து பந்தமோ டிணைந்து
சொல்லிடைப் பொருள்எனக் கலந்த
மாதிடம் கொண்ட மாட்சிமைக் கப்பால்
மாமுனி வோர்ஒரு நால்வர்
மாணவக் கேண்மை பூண்டுஉசா விடவே,
மாலிடச் சாதிதன் நாவால்
ஓதிடற் கரிய மறையின்உட் பொருளை
ஒப்பில்சின் முத்திரை காட்டி
உணர்த்திடக் கல்லால் அடியில்வந் தமர்ந்தே
உபாத்திமைத் தொழில்செயற் குவந்த
ஆதிசற் குருவே! குழவிஅன் றென்றே
அறிந்தழைத் தோம்உனை ஐயா!
அழகுடல் ஒசிய ஆடுசெங் கீரை!
ஐயனே! ஆடுசெங் கீரை! 7

காழியின் பொய்கைக் கரையினில் ஆதிக்
கண்ணுதற் பரமனே நெஞ்சக்
கருணையோ டூட்டும் பாலினைச் சுவைத்த
களிப்பினால், செந்தமிழ்ப் புலமைக்கு
ஆழிஎன் றுலகே அஞ்சலித் திடுமாறு
அற்புதம் பற்பல விளைத்திட்டு
அருட்பெருஞ் சோதி ஆட்கொளப் பெற்ற
அருந்தமிழ்க் குழவியே, மீண்டும்
கீழிருந் தேங்கும் எங்களைத் தேற்றிக்
கேவல ஞானம்ஈ தென்று

---

7 கல்லால் – கல்லால மரம்; ஒசிய – துவளும்படி.

கிட்டிவந்து ஓர்ஓர் பட்டிதொட் டியிலும்
கேட்குமாறு அருட்குரல் கொடுத்துச்
சூழ்இருள் போக்க விழுப்புரத் துதித்த
சுவாமிநா தன்என உணர்ந்தோம்.
சுத்தவே தாந்தத் தத்துவத் துருவே!
ஜோதியே! ஆடுசெங் கீரை. 8

வேதம்ஓர் நான்காய் மேதினிக்கு அந்நாள்
விளம்பவந் துற்றமா முனிவன்
வியாசனே அதனை விளக்கிஉள் ளுறையை
விரித்துஅதன் கருத்தையும் கூறும்
போதகா சிரியப் பொறுப்பினை ஏற்கப்
பூந்தமிழ் விழுப்புரம் புரிந்த
புண்ணியத் துருவாய்ச் சாமிநா தப்பேர்
பூண்டுமீண் டாதிசங் கரனின்
பாததா மரையின் பழவழி நடக்கும்
பரசிவ குருபரன் நீஎன்
பதனைஇன் றுணர்ந்தோம்; பழந்தமிழ் மண்ணே
பவித்திரம் ஆனதும் கண்டோம்
ஆதலாற் பணிந்திங் கவசமாய் நிற்கும்
அன்பர்கட் கருளிடும் ஐயா!
அடியரேம் காணற் காகமீண் டொருகால்
ஐயனே! ஆடுசெங் கீரை! 9

---

8 காழி – சீகாழி; புலமைக்த ஆழி – அறிவுக்கடல்; தமிழ்க்குழவி – திருஞானசம்பந்தர்.
கேவலஞானம் – வீட்டுலக அறிவு; மெய்ஞ்ஞானம்.

நாயகக் கேண்மை மேயபொன் நாட்டின்
நாகணைத் துயில்விழித் தெழுந்து
நானிலத் திடைஇந் நாவலந் தீவில்
நந்தகோ பன்சுதன் ஆக

ஆயர்தம் குடியில் ஆனிரை மேய்க்கும்
ஆவலின் அடைந்திருந்து அழகாய்
ஆன்மஞா னத்தை வேய்ங்குழல் ஒலியால்
அகிலமே கேட்குமா றிசைக்க

மேயமா தவனே மீண்டும்இம் மண்ணின்
மீதினிற் காஞ்சிமா முனியாய்
மிடுக்குடன் கலியைத் தடுக்கவந் திருக்கும்
மேன்மையுன் பான்மையிற் கண்டோம்.

தூயனே! தமிழால் தோத்திரித்து உனது
தொட்டில்முன் நிற்கின்றோம் ஐயா!
துறவியர்க் கரசே! ஆடுசெங் கீரை!
ஜோதியே! ஆடுசெங் கீரை! 10

3. தாலம்

கிறங்கிப் புதுமைப் பகட்டின்அடிக்
கீழே விழுந்து, தன்பெருமை
கெட்டுப் பாழ்க்க விட்டு,மிகக்
கீழ்மை யான நிலைமையிலே

உறங்கிக் கிடக்கும் பாரதத்தின்
ஒப்பற் றுயர்ந்த சமயநெறி,
உலகத் திடையே பண்டையதன்
உயர்வை மீண்டும் அடைந்து,பகை

---

10. ஆன்நிரை–பசுக்கூட்டம்; வேய்ங்குழல் ஒலி–வேணுகானம்.

புறங்கண் டிடவே, போந்துதவி
புரியக் கரத்தை நீட்டிவரும்
புனிதா! நின்தாள் பூப்படலால்
புவிமாது அடைந்த பூரிப்பில்

சுருங்கிக் கிடந்த நிலைமாறிச்
சுடரத் தொடங்கி விட்டனள்காண்!
சுத்தாத் விதனே! தாலேலோ!
சுடரே! தாலோ தாலேலோ! 11

நாகா பரண நளினமுடன்
நறும்பூங் கொன்றைத் தாரசைய
நாழி விதையும் நன்செயிலே
நல்லேர் பிடித்துஇந் நாட்டினது

ஆகா ரத்துக்கு உழைத்திடஓர்
ஆனே றும்கொண்டு அருட்கம்பை
ஆற்றங் கரைவந் தமர்ந்துள்ள
ஆதி முதல்விக் கிடமான

ஏகாம் பரத்து நிழலினிலே
இருந்துஎம் மவர்தம் அவத்தைநிலைக்கு
இரங்கித் தனியே இருவிழிநீர்
இழிய அழுதுஇன் அருள்செய்மழை

மேகா! புவனப் பூந்தொட்டில்
மேவும் குழந்தாய் தாலேலோ!
விரிநீர் உலகம் உய்யவரும்
மேலோய்! தாலோ தாலேலோ! 12

---

11. பாழ்க்க – பாழாய்ப் போக.
12. கம்பைஆறு – காஞ்சியில் ஓடும் நதி; ஏகாம்பரத்து நிழல்– ஒற்றை மாமரத்து நிழல்.

மாயை அளிக்கும் மதுமுழுதும்
மாந்திக் கிடக்கும் மயக்கத்தில்
மண்ணில் மயங்கும் மானுடர்தம்
மதியைத் தெளிவித்து அறிவூட்டிச்

"சாயை அதுகாண்! சத்தியமாய்ச்
சாரக் கிடக்கும் சிவம்ஒன்றே
சகஜ மாய்இங் குள" தென்ற
சத்ய வாக்கைச் சாற்றியதால்

பாயைச் சுருட்டிப் பழந்துயிலிற்
பட்டுக் கிடந்த நாங்களெலாம்
பரமா னந்தப் பெருங்கடலுட்
படிய எழுந்து விரைகின்றோம்!

தாயை அனையாய்! இங்கெமைநீ
தட்டி எழுப்பிக் களைத்தனையால்!
தலைவா! அயர்ந்து தாலேலோ!
தமிழா! தாலோ தாலேலோ! 13

இழுத்தஞ் ஞானப் போர்வையினால்
எல்லாம் மறைக்கப் போர்த்துஉறக்கத்து
என்றும் ஆழ்ந்து கிடக்கின்ற
எம்மோர் விழித்துஉள் இன்பமுற

விழுப்ப முடைய மறைமொழியை
விளக்கிக் காட்டி விரிவுரைகள்
விரும்பிப் புரிந்தும் திரும்பாமல்
வீழ்ந்து கிடக்கும் மானுடருள்

அழுக்கைத் துடைக்கும் ஆவலுடன்
அருளாய் ஒழுகும் இருவிழிநீர்
அதுவாம் கங்கைப் புனல்பாய்ச்சி
அன்போடு அழுத்தித் தேய்த்துஇருளில்

---

13. சாயை – நிழல்; சகஜம் – இயற்கை; படிய – மூழ்க.

எழுப்பி எழுப்பிப் பார்த்ததனால்
இளைக்கும் தலைவா ! தாலேலோ !
எங்கட் கிரங்கும் சிவகுருவே !
எம்மான் ! தாலோ தாலேலோ ! 14

மாயைக் கரங்கள் மானுடர்கண்
மறைத்தற் கிடுமா மருள்திரையை
மலர்க்கை நீட்டி மறித்து,எதிரே
மருட்டிப் பிடிக்க எழுந்தகலிப்
பேயை விரட்டி, அஞ்ஞானப்
பிணிக்கென் றறிவு மருந்தூட்டிப்
பின்னிப் பிணைக்கும் இன்னல்களைப்
பிரித்துப் பொசுக்கி, நாத்திகத்தின்
வாயை அடக்கி, அருள்நெறியே
வானின் றிறங்கி வலியமுனம்
வையத் தெங்கும் பரந்துலவ
வந்திங் குலவும் சிவகுருவே !
பாயைச் சுருட்டிப் பாரதம்உன்
பரிவால் விழித்துக் கொண்டமையால்,
படுக்கத் தருணம் தாலேலோ !
பரமா ! தாலோ தாலேலோ ! 15

4. சப்பாணி

தேடிப் பிடித்ததை நாடிப் பயின்றும்
தெளிவற்று பிரமசூத் திரம்ஓது கின்ற
திவ்வியப் பொருளினைச் செவ்வையாய்க் காணத்
தியங்கிடும் நாளிலே தெம்பூட்ட வென்றே

---

14. விழுப்பம் – சிறப்பு ; இளைக்கும் – களைப்படைகின்ற.
15. பிணிக்கென்று-நோய்தீரும் பொருட்டு; இன்னல்–துன்பம்.

ஈடிலாச் சங்கரன் எழுதிவைத் துள்ள
இணையற்ற தத்துவப் பொக்கிஷந் தன்னை
எளிதாக்கி மிகமிகத் தெளிவாக – ஏங்கும்
எங்கட்கு—எடுத்துரைத் திடவந் திருக்கும்

பாடியப் புலவனே ! பாரதப் போரில்
பார்த்தனுக் கச்சுதன் தேர்த்தட்டில் நின்று
பரிவோ டுணர்த்திய பரம ஞானத்தைப்
பண்புள்ள உபநிடதம் பத்தோடு காம

கோடிபீ டத்தினிற் குருவாய் அமர்ந்தே
கொஞ்சிடும் பாஷையிற் கூறிடும் தமிழா !
கும்பிட்டு நிற்கிறோம் எங்களுக் கின்னும்
கொட்டு ! செங் கையினாற் கொட்டுசப் பாணி ! 16

ஏய்க்கும் கருத்துடன் ஏதேதோ பேசி
இளைஞர்தம் நெஞ்சினுள் விடவித்தை ஊன்றி
இந்துதர் மத்தையே இல்லா தொழிக்க
எண்ணிவிட் டவர்செயல் மண்ணாகும் என்றும்,

பேய்த்தேரை ஒப்பவீண் பேச்சோடு நிற்கும்
பேதையர் புதுமையின் போதைக் கிறுக்கைப்
பித்தென் றுணர்ந்திடப் பெற்றதால் ஞானப்
பெருவாழ்வு மாநிலத் துருவான தென்றும்,

தீய்த்தற் கெழுந்துநம் தேசத்து ஞான
தீட்சண்ய மூற்றிலும் தெரியாது போகத்
தேடிவந் தாடிடும் நாத்திகம் வீடத்
தெய்விக வாழ்விதோ தெளிகின்ற தென்றும்,

---

16. தியங்கிடும் – பின்னடைகின்ற ; பாடியம் – உரை.

சேய்க்குட் சிறந்தநீ செங்கரம் கொட்டிச்
செப்பவும் கேட்டெம தப்பனே டம்மை
செந்தமிழ்க் காஞ்சியுட் குந்தினர் ஐயா !
தெய்விகக் குரவனே ! கொட்டுசப் பாணி. 17

காப்பிட்டு வைத்தவை கைவிட்ட தாகக்
கட்டோ டிருந்தமெய் கெட்டுநோய் மூளக்
காதலித் தோர்மனம் நோதலுற் றேகக்
காற்றும் ஒடுங்கிடக் கடைசியில் யாவும்

தீப்பட்டு ஒருபிடிச் சாம்பலாய் ஏதும்
தெரியாது போகுமுன் புரியாது வீணில்
தீம்பினைச் சுகமென்று தெருநாயை ஒப்பத்
தேடித் திரிந்தபின் தேய்வுற்ற மேனி

மூப்புற் றழிந்திடும் மூடத் தனத்தை
முடியுங்கள் பரமனின் அடியைப் பணிந்து
மூவாத சாவாத முழுவாழ்வு காண
முன்னேறி வாருங்கள் மனிதர்காள் என்று

கூப்பிட் டுணர்ந்திடும் குதலைவாய்ச் சொற்கள்
குவலயத் தோர்துயில் அவலத்தை நீக்கக்
குழவியாய் வரும்உளத் தழகுடைக் குரவா !
கோமளக் கைகளாற் கொட்டுசப் பாணி 18

"வருகிறான் ; எமன் இதோ வருகிறான் ; உன் தன்
வாழ்வைச் சுவைத்திடப் பேழ்வாய் திறந்து
வருகிறான் ; மானுடா ! வருகிறான் காணாய் !
வாஞ்சைகொண் டுள்ளநின் உடைமைகள் என்னும்

---

17. விடவித்தை – நச்சு விதையை ; விட – அழியும்படி.
18. மெய் – உடல்.

சருவத்தை யும்இந்தச் சகமீதில் விட்டுச்
சவமாகி நின்னுடல் மண்ணிற் கலக்கச்
சஞ்சலித் துள்ளவர் நெஞ்சும் மறக்கச்
சதிசெய்து வருகின்ற விதியென்ற உருவில்

வருகின்ற தைஇதோ வந்துபார்! தூங்கி
வாழ்வைக் கழிப்பதற் கேதிங்குப் போது?
வந்தநீ போகுமுன் சிந்தையிற் சற்றே
வாக்கோடு மனநிலைக் கெட்டாத மேட்டில்

அருவமாய் ஐந்தொழில் ஆட்டம் நிகழ்த்தும்
அம்பலக் கூத்தனின் செம்பொற் பதத்தை
அஞ்சலித் திடுக!" என்று அமுதவாய் கூற
அம்புயக் கைகளாற் கொட்டுசப் பாணி! 19

"அத்வைதம் ஒன்றுதான் சத்தியம் காணீர்!
அறுவகைச் சமயமும் அன்னதன் கிளைதான்
அமுதலிங் கத்தைவிட் டகலாத சக்தி
அகிலாண்ட வல்லிநம் அன்னைகாண்!" என்ற

வித்தக விளக்கம்என் புத்தியாற் காண
வேதாந்த சித்தாந்த நடுநிலை உரைத்து
விதிமுறைப் படிவாழ மதிகூறி, மண்ணில்
வீணாகும் மானுடத்து ஏக்கம் தவிர்க்கப்

புத்துரு வெடுத்திட்ட நித்தியா! இற்றைப்
புதுமையிற் பழமையின் புனிதத்தை யூட்டி
புவனத்து வாழ்க்கைஓர் பூரணம் பெற்றுப்
பூரிக்க ஒருவழி புகல்கின்ற சித்தா!

சிந்தாந்த மேட்டிலே சிவமாக நின்று
செந்தமிழ் நிலம்முனம் செய்த மாதவமாய்
செங்காவி யுடையுடுத்து எங்கள்முன் உற்ற
செல்வமே! கைகளாற் கொட்டுசப் பாணி! 20

5. முத்தம்

அறுவகை மதங்கள்கண்டு அவரவர் விரும்பிடும்
ஆறுசெல்ல லாம்அவை அனைத்தினுக்கும் ஏற்றதாய்
ஆதிமூல மானபிர்மம் ஆன்றெழுந் தருள்செயும்
ஆதலாற் பிணங்கிடாமல் ஆன்மஞான ஜோதிவந்து
உறுவதற்கு உழைமின்!" என்று ஓதவந்த சீலனே!
ஓய்விலாம லேநடந்து பாரதத்தில் எங்கணும்
உண்மையாம் சனாதனத்தின் உட்பொருள் விளங்கிட
உத்தமத் தனிக்குரல் ஒலிக்கவந்த வித்தகா!
மறுமலர்ச்சி பெற்றஇந்து மதப்பெருந் தலைவனே!
மாசடைந்த எங்கள்பூமி தேசுறச் செய்யும்படி
மாற்றிவைத்த சித்தனே! மகரிஷிக்குள் மன்னனே!
மாநிலத் திடையில்எங்கள் பாரதத் தவர்க்குறும்
சிறுமையைச் சிதைக்கவந்த செம்மலே! அறிஞர்தம்
சிந்தையில் அமர்ந்திடும் சிவப்ரகாச மூர்த்தமே!
தெய்வமாக வந்தசந்த்ர சேகராமுத் தம்கொடு!
சிவனருட்சொ ரூபியான தேசிகாமுத் தம்கொடு. **21**

பார்வையைக் கடந்தபிர்மம் பாருளோர் விழிப்படப்
பண்பினிற் சிறந்தஎங்கள் பாரதப்பொன் மண்ணிலே
பரமஹம்ஸ னாய்எழுந்து,– துறவிகட் கரசனே!–
பழையகா லடிச்சுவட்டைப் பற்றிவந்தோர் மானுடப்
போர்வையில் வெளிப்படும் புதுமைஇன்று காண்கிறோம்
புண்ணியா! நின் இன்னருளின் பூரணத்தை ஓர்கிறோம்
பொய்ம்மையின் கலப்பிலாத மெய்த்தவம்எம் நேரிலே
புனிதமான மனிதமேனி பூண்டிருத்தல் ஓர்கிறோம்

---

21. பிணங்கிடாமல் – மாறுபாடு கொள்ளாமல்;
சனாதனம் – பழம் பண்பாடு.

பேர்கடந்த ஊர்கடந்த பேதமற்ற பின்னமாய்ப்
பேசுகின்ற தத்துவப் பிணிப்பெலாம் கடந்ததாய்ப்
பிரமன்பால் உருத்திரப் பிரிவினைக்கு முன்னதாய்
பிறங்கும்ஆதி மூலமான சின்மயஸ்வ ரூபனே!

சார்பவர்க் கருள்வழங்கும் சற்குரு சதாசிவா!
சாத்திரங்கள் பேசுகின்ற சத்யஞான ஜோதியே!
சந்த்ரசேக ரேந்திர சரஸ்வதிமுத் தம்கொடு
சத்தியஸ்வ ரூபியான வித்தகா!முத் தம்கொடு. 22

விண்டுரைக்கும் எம்மொழிக்கும் அண்டையில் நிமிர்ந்ததோர்
வெள்ளிவெற்பை விட்டுவந்து கம்பைவெண் மணல்மிசை
விண்அளாவி நிற்கும்ஒற்றை மாமரத் தடியிலே
வீற்றிருக்கும் ஆவலால்,தன் வேடமே கலைந்திடக்

கொண்டிருந்த கங்கையோடு கொன்றையும் மதியமும்
கூடிவாழ் அரவினோடு மூடிவைத்து, மார்பிலே
குலவிடும் கபாலமாலை அக்கமாய்த் திரும்பிடக்
கும்பிடும் கணங்கள்பக்தர் கூட்டமாய்த் தொடர்ந்திட,

முண்டிதத் துடன்எடுத்த தண்டபாணி யாய்,விழி
மூன்றில்ஒன்றை மூடி.மேனி முழுவதும் விபூதியில்
மூழ்கியொற்றை ஆடையோடு முன்எழுந் தருள்செயும்
மூந்தைமா மறைப்பொருள் முளரிவாய் விளங்கிடச்

சண்டதாண்ட வேசன்ஆம் சபாபதி! ஜகத்குரு!
சக்தியைத் தனக்குள்வைத்த வித்தகத் துருவமே!
சந்த்ரசேக ரேந்திர சரஸ்வதி!முத் தம்கொடு!
சத்தியஸ்வ ரூபியான வித்தகா!முத் தம்கொடு! 23

---

23. கபால மாலை – எலும்பு மாலை ; அக்கம் – உருத்திராக்கம்.

முந்தைநாள் எழுந்தநூல்கள் மொய்ம்புடன் விளக்கிடும்
முனிவர்யாரை யும்விழிக்கு முன்நிலத்தில் ஓர்ந்திலா
மூடராய்க் குழம்புகின்ற எம்மவர்க் கெதிரிலே
முறைமையான துறவுவாழ்வின் முழுஉரு இதோ !என

இந்தநாள் நிமிர்ந்துநின்று இந்தியப் பெருநிலத்து
'ஈடிலாப் பெருநெறிக்கிங் கீதுபாதை' என்றுதன்
இட்டதெய்வ மானசந்த்ர மௌளிபூசை யின்வழி
எங்களுக் கெடுத்துரைக்கும் இருடிகட் கரசனே !

சிந்தையிற் சிவம்பழுத்த சுந்தராங்கன் ஆகியே,
சீவகோடி கள்மிகுந்த ஆவலாய்ப் பணிந்திடச்
செங்கரம் உயர்த்திளங்கும் மங்களம் நிலாவிடச்
செய்தருள் புரிந்துநிற்கும் தெய்வமான மனிதனே !

சந்த்ரகுப்த வின்சபைக்கோர் சதுரனைக் கொடுத்ததாற்
சகமெலாம் தொழும்படிக் குயர்ந்தகாஞ்சி மாநகர்ச்
சந்த்ரசேக ரேந்திர சரஸ்வதி !முத் தம்கொடு !
சத்தியஸ்வ ரூபியான வித்தகா !முத் தம்கொடு ! 24

அகநிலை திறம்பிஞாயம் அப்புறத்தில் ஓடவும்,
அக்ரமத்தை ஏற்றவாழ்வு அவலமாகி விட்டதால்,
ஆதிதொட் டிருந்துவந்த ஆன்மநேய முற்றுமே
அற்றதாற், பயந்துபோன ஆன்றதர்ம தேவதை

உகநிலைக் குகந்தபோக்கில் உண்மைகண் டுரைக்கவோர்
ஊகமிக்க ஞானிவந்து உதிக்கவேண்டி, பக்தியால்
உள்ளமே குழைந்துபோற்ற; வெள்ளிவெற்பை நீங்கியே
ஒப்பிலாத வித்தகத் துருவமாய், அறத்தினை

---

24. இருடிகள் – முனிவர், பெருநெறி – முக்தி வழி. சுந்தராங்கன் – அழகுத் திருமேனியுடையான்.

இகபரம் இரண்டினுக்கும் ஏற்றபெற்றி கண்டுதம்
இல்லறத்து மனிதர்வாழ்வின் இன்பிணைச் சுவைக்கவும்,
இறுதியிற் பரத்துடன் இரண்டறக் கலக்கவும்,
எளிதிலே விளங்குமாறு இருதயக் கனிவுடன்
சகமிதற் கெடுத்துரைத்து அவநிலைக்குள் வீழுமுன்,
சனசமூகம் உய்யஎன்றோர் மனிதனாக வந்துறும்
சந்த்ரசேக ரேந்திர சரஸ்வதிமுத் தம்மொடு!
சத்தியஸ்வ ரூபியான வித்தகா!முத் தம்கொடு! 25

6. வருகை

"கருமுகில்கள் ஊற்றிடும் பருவமழை வெள்ளமாய்க்
கான்றெழுந்து ஆறு களின்வாய்க்
கட்டற் றெழுந்துலகில் எட்டும்வரை யிற்புனல்
கைகளால் துழவி யோடி
வருமெனினும், அவைகள்தாம் ஒருமைபெற வாரியில்
வடிவிழந்து இணையும் அதுபார்!
வாதங்கள் ஒருகோடி பேதங்க ளிற்செயும்
வகையினில் மூண்ட தெனினும்,
திருவுடைய ஞானியர்தம் அரியதவ முடிவிலே
தெய்விகம தாய்க்கண்டதன்
திரிபே மதங்கள்!ஏன் அறியாமை?" என்றுணர்வு
தெளிவுறும் படிவிளக்கிச்
சருவமத சமரசச் சன்மார்க்க நெறிகண்ட
சங்கரா! இனிவருகவே!
சந்த்ரமௌ ளீசனைச் சிந்தைமிசை யேகொண்ட
சதுரமா தவவருகவே! 26

---

25. அகநிலை - மனப்போக்கு; திறம்பி - மாறுபட்டு.
26. திரிபு - வேறுபாடு.

"பூவையீர்! காலேஒளி புலருமுன் னேநறும்
புனலில்நீ ராடி வந்து
புவிமீதி லேவாழ்வில் அழியாத இன்பங்கள்
பூத்துக் குலுங்க வேண்டிப்,

பாவைநோன் பேற்றிடப் பரிவினுடன் எழுகெ"னப்
பண்டழைத் திட்ட தமிழன்
பாடலொலி நாடெலாம் பரவிடச் செய்திட்ட
பண்பாள! நின்னருளினற்

சேவையுணர் வுடன்இச் செழுந்தமிழர் நாட்டிலே
சிவநெறி தழைத்திட்டதால்
சீவித மதிற்புனிதம் மேவியதொர் வீறுடன்
சேவிக்க முன்வந்துளோம்

கோவைஅகி லம்மையின் காதினில் தோடுஇடும்
கடவுள்மா முனி! வருகவே!
கல்லாடை பூண்டுலகில் எல்லாரும் வாழவழி
காட்டுமா தவ!வருகவே! 27

"எத்துறைபி லாயினும் ஈசனடி போற்றுமின்!
இன்னல்களே மாற்றிவிடலாம்
இன்பத்தை எய்திடற்கு அன்புவழி அன்றிமற்
றேதேனும் ஆகா"தெனும்

தத்துவ விளக்கம்நீ தந்தருள வில்லேயேல்
தாரணியி லேமனிதர்தாம்
தாழ்வற்ற ஒருபுதிய வாழ்விற் புகுந்திடத்
தக்கவர்க ளாகிவிடவோ?

27. தோடு – காதிலணியும் குழை.

வித்தகம் எழுப்பிடும் சக்திஒரு வாலைவாய்
வீற்றிருக் கின்ற அழகால்
விண்ணளவு புகழ்பெற்ற புண்ணியக் காஞ்சியில்
வேதாந்த மாக உள்ள

அத்துவித ஞானமே ஆனகுரு மூர்த்தியே!
அருள்புரிய நீவருகவே!
அருள்நெறி விளக்கிடும் சிவஞான சம்பந்த
அமலமா முனிவருகவே! 28

ஓதிடும் பழையநம் உபநிடத மெய்ப் பொருளை
உணரஅறி வின்மையாலே,
ஒன்றுநா ளுயிரம் என்றபல தத்துவத்து
உள்ளம் குழம்பிவிடவே,

நாதியற்று ஏங்கிடும் நானிலத் தோர்க்கன்று
நல்லாறு காட்டவென்றே
நண்ணிமுன் வந்ததால், கண்ணியமெ லாம்பெறும்
நமதாதி குருமூர்த்தியாம்

ஆதிசங் கரமுனிவன் அந்நாள் அமைத்திட்ட
ஆன்றசர் வஞ்ஞபீடத்து
அறுபத்து நான்காவ தாகவந்து ஆள்கின்ற
அத்துவித சிவசரபமே!

யாதினும் நிறைந்துள்ள ஏகாம் பரத்தடியின்
ஏந்திழை வளர்த்தமகவே!
இந்நிலம்உன் இன்னருட்கு ஏங்கிக் கிடப்பதால்
எங்கள்மா முனி!வருகவே! 29

---

29. ஏகாம்பரம் - ஒற்றை மாமரம் (ஏக ஆம்பரம்); ஆம்பரம் — மாமரம்.

ஈமவெஞ் சுடலையிற் சோமசூர் யாதிகள்
எல்லாம் பொசுங்கி வீழ
எஞ்சிக் கிடக்கின்ற வெம்பாழின் மத்தியில்
எக்களிப போடு தனியே
நாமரூ பங்களாய்த் தாம்ஏதும் அற்றுஆதி
நாதாந்த மேட்டில் ஏறி
நாட்டியம் புரிகின்ற நடராஜ மூர்த்திதனை
நாடிப் பிணைந்து கூடி
வாமபா கந்தன்னில் வந்தொன்றி அகிலாண்ட
வாழ்வைப் புதுக்கி வைக்கும்
வாஞ்சையுடன் ஒருசிறிய வாலையங் குமரியாய்
வலுவிற் புகுந்து பண்டே
காமகோட் டத்துற்ற கோமளத் தடியிணைகள்
கருதுமா தவ !வருகவே !
கல்லாடை பூண்டுலகில் நல்லாறு உணர்த்தவரு
கடவுள்மா முனி ! வருகவே ! 30

7. அம்புலி

ஒளியென அழகென ஒன்றும் இன்றியே
உருளும்மண் உண்டைஉன் உருவம் என்பதை
தெளிவுடன் ஆய்ந்துடன் தெளிந்த பின்னரும்,
தெய்விகப் பழமையில் திளைக்க எண்ணமோ ?
நளினம தேஉளம் ஆன நாயகன்
நானிலத் தொருதுணை நச்சி, வந்துளம்
களிஎன அழைப்பதைக் கண்டு, வாவிடைக்
கலங்கிடும் அம்புலி ! காஞ்சிக் கோடிவா ! 31

30. சோமசூர்யாதிகள் – சந்திரசூரியர்கள். எஞ்சி – மிகுதிப்பட்டு. வாமபாகம் – இடப்பாகம்.

ஈனம்உன் தன்குரு இல்லிற் செய்ததால்,
இருள்இர விடைப்பிறர் ஏச்சுக் கஞ்சியே
ஊனமுற் றுளையும்நீ உன்னைக் கூப்பிடும்
ஒருவனைச் சிறுவன்என் றெதுக்கி டாது,மெய்

வானவன் எனஉணர் வாய்எனில் இவண்
வந்தவன் பதமலர் வணங்கு வாய்எனில்
ஞானமும் மோனமும் நண்ணும் வீணில்ஏன்
நாணினை அம்புலி! நகர்ந்திங் கோடிவா! 32

அரவினைத் தலைக்கணி யாகக் கொண்டவன்
அத்திரு வுருவைஉள் வைத்திங் கேஒரு
நரன்உரு வொடுநிலம் நாடி வந்துனை
நச்சிடத், தனதுளத் தச்சம் மிக்கதால்,

வரமறுத் தோடிவெண் முகிற்பொந் துட்புகும்
வான்மதி! அச்சம்ஏன்? வாழ்வ ளித்துனைச்
சிரமிசைத் தாங்கிய சிவன டாஇவன்!
சிவகுரு வுடன்விளை யாட ஓடிவா! 33

தக்கனின் வேள்வியில் தகரின் ஊன்மிகத்
தான்உணக் கிடைக்கும்என்று ஈன ஆசையால்
புக்கு,அரன் திருவடி போற்றும் வாழ்க்கையின்
போக்கினை மாற்றலால், ஆக்கி னைப்படி

உக்கிர வீரன்கால் உதைபட்டு ஓங்கொளி
உருவழி வுற்றதுன் உளம் மறந்ததோ?
அக்கரை யோடிவன் அரன்என்று ஓர்குவாய்
ஆணைகண்டு அம்புலி! அருகில் ஓடிவா! 34

---

33. அரவு – பாம்பு; நரன் – மானுடன்; நச்சிட – விரும்ப.
34. தகர் – ஆட்டுக்கடா. புக்கு – சென்று.

கல்லொடு மண்ணினைக் கையில் ஏந்தியும்,
காலடி வைத்தும்பின் ஊர்தி ஓட்டியும்,
துல்லிய மானநின் பெருமை சாம்பிடத்
தோன்றிடும் எம்மவர் ஆன்ற மேதைமுன்
வல்லமை குலைந்திட வாழ்த்தி ஏத்தும்நீ,
வையகம் முழுவதும் வணங்க நிற்கும்ஓர்
நல்லவன் அழைக்கையில் நகர்ந்து போவதோ?
நாடி இங் கப்புலி! கூடி யாடவா! 35

8. சிற்றில்

இச்சையின் உச்சத்தேறி இன்னெழிற் பரத மாடும்
என்மனப் பேதை, கட்டி இறுதியில் ரசிக்கும்போது
துச்சமாய் இடது காலைத் தூக்கியங் கதனை முற்றும்
தூள்பட உதைத்துப் போட்டுத் துள்ளிஎட் டத்தில்ஓட
இச்சிறு மணல்வீ டெங்கள் இதயமா ளிகை அன்று. ஐயா!
எந்தையும் தாயும் வாழும் இனியமா வடிமண் கொண்டு
சிற்சிறு மணல்வீ டிங்குச் செய்திடும் போது, பாய்ந்துஎம்
சிந்தையில் துயரம்சூழச் சிற்றிலைச் சிதைத்தி டேலே! 36
ஆட்டிடும் விருப்பில்நெஞ்சை அலகையாய்ப்பிடித்துக்கொண்ட
ஆசையுட் பட்டுத் தேம்பும்அற்பர்தம் அகத்தை நாடி,
நீட்டிய பணத்தைக் காட்டி நேர்மையைக் காட்டிவேசை
நிலையினின் றுரிமை யாக நிலைத்துள ஒன்றே யான
ஓட்டையும் போட்டுப்போக ஊரைஏய்த் துயர்ந்தோர் ஆட்சிக்
குட்படத் தாழ்ந்து தியும் ஒருகுடி யரசி தன்று,உன்
சேட்டையும் படஏ கம்பச் சிறுவனே! விளையாட் டாகச்
சிறுமியர் மணலாற்கட்டும்சிற்றிலைச் சிதைத்திடேலே. 37

---

37. அலகை – பேய்; அகம் – வீடு.

அந்தியிற் கூடி இல்லத்து அருகுறு மணலைத் தங்கை
அளைந்ததாற் சிவந்து போக ஆர்வமோ டமுகுச் சிற்றில்
சிந்தையின் போக்கிற்கட்டிச் சிறப்புற முடிக்கும் போது, இச்
செயலெலாம் நோக்கி எள்ளிச்சிறுநகை புரிந்து, காலால்
உந்தி இங் குள்ள தெல்லாம் ஒருகணத் தழித்துப் போட்டே
உவப்புடன் இருகைகொட்டி ஓட்டமாய் ஓடப் பார்க்கும்
செந்தமிழ்க் காஞ்சிமண்ணின் சிறப்பினை உயர்த்தப் போந்த
சிவகுரு! வேண்டி னேம்.எம் சிற்றிலைச் சிதைத்திடேலே!
38

மெய்த்திரு வதனைக் கூடி மேட்டிமைக் குரிய ராக
மேவிடும் வழியைத்தேக்கி, மேதிபோல் எதிர்த்து முட்டி
மொய்த்துயிர் வாழ்வைத்தள்ளி முறைதிறம் பிடச்செய்கின்ற
மும்மலத் துருவாய் நீண்ட முப்புரச் சுவர்ஈ தன்றே!
கைத்திற லதனாற் பேதைக் கன்னியர் சிலர்ஒன் றாகக்
கற்பனை உளத்தோ டொன்றாய்க் கட்டிய மணல்வீ டீது.
சித்தமிங் குவகை பொங்கத் திருவருள் புரிந்தி டாமற்
சிதைப்பதோ ? சிவையின் பிள்ளாய் ! சிற்றிலைச்
சிதைத்தி டேலே ! 39

சிதைத்திட விரும்பில் எம்முட் செழித்துயர்ந் தோங்கி நிற்கும்
சினம்முதலாய கோடிச் சிறுமையுண்டுஅவற்றைஎல்லாம்
உதைத்தழித்தொழிப்பாய்என்னின் உதவியாய்இருக்கும்ஐய!
ஒருசிலர் சிறுமி யேங்கள் ஊர்ப்பொதுத் திடலிற் கூடி

---

38. காலால் உந்தி - காலாலே எற்றி.

39. மேதி - எருமை; சிவை - உமாதேவி.

இதைப்,பழ மணலாற் கட்டி எழிலுற முடிக்கும் போதில்
எற்றிவிட் டோடிப் போக எத்தனிக் கின்ற ஐயா !
பதைப்புறும் செயலி தேனோ? பாததா மரைகள் நோவப்
பாய்ந்தெழிற்சிற்றில்வீழ்ந்து பாழ்படச்சிதைத்திடேலே! 40

9. சிறுபறை

பேயினும் கொடியஆசை பிடர்பிடித்துவெம்
பித்தினுட் படுத்தியாட நித்தம்ஆட்டவும்,
பிழைகளே புரிந்துமண்ணில் உழலும்எம்மனப்
பிணியகன்று இனியவாழ்வு பெற்றுயர்ந்திடத்
தாயினும் சிறந்தஅன்பு தாங்கிவந்து,இவண்
தலைசுழன்று நிலைகுலைந்து தர்மம்முற்றிலும்
தாழ்ந்து வீழ்ந்து போகுமுன்னர் தாங்கும்ஆசையால்,
தண்தமிழ் வளம்கொழித்த தொண்டைமாவடிக்
கோயிலுள் இருந்துகை கொடுப்பதற்கெனக்
குடுகுடென்ன ஓடிவந்துஎம் எதிரில்நிற்கும் – ஏ ! –
குதலைவாய ! புனிதகாம கோட்டமேயவன்
குவலயம் புரக்கவென்று கொண்டுவந்துள
சேயினிற் சிறந்தஎங்கள் செந்தமிழ்முனீ !
சிந்தையுட் சிவம்விளங்கும் சுந்தராங்கனே !
சிவனருள் பிறக்கும்என்று சிறுபறையடி !
சீவியம் சிறக்கும்என்று சிறுபறையடி ! 41

போதரூபி யானஆதி நாதனேமனப்
புல்லரிப்பி லேஎழுந்து மெல்லஆடிடும்
போது,அவன் கரத்திருந்த தோர்உடுக்கையில்
பூத்தெழப் பதஞ்சலிக்குச் சூத்திரம்தரும்

---

41. சீவியம் – வாழ்வு.

நாதமாய் எழுந்தசுத்த ஞானமே,ஒரு
நான்மறைக்கும் மூலமாகி மேன்மையுற்றதால்,
நானிலம் அதைப்பயின்று நலம்அடைந்திட
நாளும்இங் குழைத்ததால்,தன் ஆளுகைக்குளே

வேதபாட சாலைநூறு கோடிகண்டநின்
வித்தகம் விளங்கிடாமல், வேற்றவர்தமை
வீழ்த்தவே விரித்துவைத்த வலையினுள்விழ
வேண்டிஓடு வோர்திரும்பத் தூண்டி,அன்னதால்

சேதம்ஏது மேயிலாது செய்ய வந்தவா!
செந்தமிழ் விளங்குகாஞ்சி வந்தமாதவா!
சிவனருள் பிறக்கும்என்று சிறுபறையடி!
சீவியம் சிறக்கும்என்று சிறுபறையடி! 42

"இந்தியப் பெருநிலத்தில் என்றும்உள்ளதாம்
ஈடிலாச் சனாதனத்தை ஏன்வெறுக்கிறீர்?
இன்பவாழ்வு காணநெஞ்சில் தெம்பையூட்டிடும்
ஏற்றமிக்க நம்மதத்தின் ஊற்றம் ஓர்ந்திடீர்!

புந்தியில் தெளிவடைந்த சிந்தையாளராய்ப்
பொய்ம்மையை எதிர்க்கும்வீரப் போர்க்கெழுந்தி [டீர்!
புதுமைஎன்ற பெயரில்வந்து புக்கதீமையைப்
பொன்றிடப் பிடித்தடித்து வென்றிகாணலாம்.

மந்தம்ஏன்? எழுங்கள்!" என்று மாழ்கிடும்தமிழ்
மாதுமைந்தர் காதில்வீழ ஓதிடும்ஒலி
மாநிலத் திசைகள்எட்டும் முட்டிமோதிட,
மலர்க்கரம் சிவந்துபோகு மட்டும்அன்புடன்—

---

42. சூத்திரம்—பதஞ்சலி யோக சூத்திரம்.

செந்தமிழ் பரந்துகம்பை வெள்ளமாய்வரச்
செழுமையுற் றிருக்கும்ஒற்றை மாவடியனே!
சிவனருள் பிறக்கும்என்று சிறுபறையடி!
சீவியம் சிறக்கும்என்று சிறுபறையடி! 43

ஒத்திருக்கும் இச்சையற்று யுத்தமாயிரம் –
ஓய்ச்சலற்று இடும்குணத்த ராய்உலேந்திடும்
ஊகமற்ற நெஞ்சினர்க்குஉள் வேகமூட்டியே,
ஊக்கிவிட் டிருக்கும்இந்த நாட்டுமேதையர்
தத்துவங்க ளாய்ப்பரந்த வித்தகத்திலே
தலைசுழன்று நிலைகுலைந்து மலைவுடன்எதைத்
தாங்கிநிற்ப தென்றுநெஞ்சம் ஏங்கிநிற்கையல்
தான்எழுந்த ஞானியான சங்கரன்தரும்
அத்துவைத மேசிறந்த தாகும்என்றிடும்
ஆத்மஞானம் எங்களுக்கின்று அன்புடன்தரும்
ஆர்வமோடு, காமகோடி அரியணைமிசை
ஆதிசக்தி வந்தமர்ந்த ஆளும்மாதவா!
சித்தமுற்றி லும்தெளிந்த வித்தகத்திலே
செந்தமிழ் நிலம்பணிந்து சேவகம்செயச்,
சிவனருள் பிறக்கும்என்று சிறுபறையடி!
சீவியம் சிறக்கும்என்று சிறுபறையடி! 44

"உண்ணுதற் குணவெடுத்து ஊட்டிவிட்டவள்
உள்ளமட்டி லும்இருக்க இடம்அளித்தவள்
ஊக்கமோடும் ஆக்கம்எய்த இளமைதந்தவள்
உலகசக்தி யாய்நிமிர்ந்த உமைபராபரி
திண்ணிய உடல்கொடுத்துள் தேவைகாணவும்
தேடிவந்து மிக்கவாஞ்சை யோடெலாம்தரும்
தெய்வமாய் இருக்கும்அந்தத் தேவியின்பதம்
தீம்பினை விரட்டிமேலும் ஓம்பும்ஆகையால்

---

43 மந்தம் – தாமதம்; புந்தி – மனம்.

எண்ணம்என்ற பூச்சரத்தை இட்டுவாழ்த்தினல்
ஏதுமே குறைவிலாது போதுபோக்கலாம்
இல்லையாகில் நன்றியற்ற ஈனர்ஆகுவோம்!"
என்றெடுத் துரைப்பதற்கு இங்குவந்தவா!

செண்பகம் மலர்ந்தகொம்பர் சேண்அளாவியே
சிவம்மணக்க மலர்விரித்த புனிதகாஞ்சியாய்!
சிவனருள் பிறக்கும்என்று சிறுபறையடி!
சீவியம் சிறக்கும்என்று சிறுபறையடி! 45

10. சிறுதேர்

யாதினும் மனத்தெளிவை எய்தமுடி யாத
ஏக்கமொடு தன்னடியில் ஆக்கமுற வீழும்
ஆதிமறை வேதியர்ஓர் நால்வர்வழி யாக
ஆருயிர்கள் தம்அறிவின் அக்கரையில் அன்பால்
தீதினை விலக்கியதோர் தெய்விக மனைக்குள்
தித்தித் திருக்கின்ற புதுவாழ்வு காண,
ஓதிடஓர் ஆலடியை உற்றகுரு மூர்த்தி!
உருட்டுசிறு தேர்! இனி துருட்டுசிறு தேரே! 46

கடமையுடை யோம்எனும்முற் காலநிலை கெட்டுக்
காழ்ப்புடைய ஓர்சிலர்சொல் காதில்விழ நம்பி,
வடவர்மொழி எனும்அரிய மடமையை அழித்து,
வையகம்எல் லாம்அந்தத் தெய்வமொழி கொண்ட
தொடர்பினில் உயர்ந்திடஓர் தூயவழி கண்ட
துறவியர்கள் தலைவ!உயர் தொண்டையர்நல் நாட்டின்
உடைமையெனும் கச்சிநகர் ஒளிர்தீப ஜோதி!
உருட்டுசிறு தேர்!இனி துருட்டுசிறு தேரே! 47

---

45. கொம்பர் – மரக்கிளை.
47. தொடர்பு – உறவு.

"நாதாந்த மேட்டில்எழில் நடமாடு கின்ற
நடராஜ மூர்த்திஅருள் வடிவாய் எடுத்த
பாதார விந்தத்தை ஆதாரம்" என்று
பண்ணோடு செந்தமிழின் வண்ணங்கள் பாடும்
மேதாவி யாம்அப்பர் மீண்டும்வந் திங்கே
மேன்மைபெறும் அருளுரைகள் தாம்கூறல் ஒப்ப,
ஓதா திருந்தமறை உட்பொருள் விரித்தோய்!
உருட்டுசிறு தேர்! இனி துருட்டுசிறு தேரே! . 48

எண்திசை யினும்தமிழை, இன்னிசை வளத்தால்
ஈடரிய பேரழகோ டீசன்அடி சூடும்
முண்டகம தாக்கிவிடும் மூவரில் இரண்டு
முதலிகளை யும்தனது புதல்வரென ஈன்ற
தொண்டைநிலம் மேலும்ஒரு தூயவனை ஞானச்
சோதியைத் தரும்பெருமை தன்னிடம்எந் நாளும்
உண்டென விழுப்புரம் உணர்த்திட உதித்தோய்!
உருட்டுசிறு தேர்! இனி துருட்டுசிறு தேரே! 49

செவியார இனியதமிழ்க் கவிகேட்க வந்த
செங்கண்மா லேசொக்கித் தங்கியிட, முன்றில்
அவியாத சொல்விளக்கு ஆறைம்ப தேற்றும்
ஆழ்வார்கள் ஒருமூவர் வாழ்கின்ற மண்ணிற்,
புவிபெற்ற பேருக ஜெயஆண்டு தன்னிற்,
பொற்புற்ற வைகாசி அனுஷத்து உதித்த
உவமான மேஅற்ற தொண்டையர்தம் மதலாய்
உருட்டுசிறு தேர்! இனி துருட்டுசிறு தேரே. 50

—o—

ஜகத்குரு நான்மணிமாலை

முன்னுரை

நால்வகை மணிகளை விரவித்தொடுத்து மாலையாக்குவது போல், நால்வகைப் பாடல்களைத் தொடைபடத் தொடுப்பது நான்மணிமாலை என்னும் பிரபந்தமாம். வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம், அகவற்பா என்னும் நால்வகைப் பாடல்கள் முறையே அந்தாதியாகவந்து மண்டலித்து முடிதல் வேண்டும் என்பது இதற்கு உரிய விதி. இந்நூல் நாற்பது பாடல்களைக் கொண்டது.

சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய நால்வர் நான்மணிமாலை இவ்வகைப் பிரபந்தத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

திசை தவறிச் செல்லும் உலகிற்குத் திருநெறி காட்டவந்த ஒளிவிளக்கு, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் ஆவர். அவர்களின் மாண்பினை இசைக்கும் வாய்ப்பினைப் பெற்றமையால் அந்தம் ஒன்றில்லாத ஆனந்தம் அடைந்தேன் என்று கூறவும் வேண்டுமோ ?

ஆசாரிய சுவாமிகளின் அடிமலர்களில் இப்பனுவல் மாலையைக் காணிக்கையாக்குகின்றேன்.

வள்ளுவரகம்,
பழனி

இளங்கம்பன்

ஆசிரியரைப் பற்றி......

பழனித் திருத்தலத்தினர் இளங்கம்பன். அருள்மாலை, பாமலர்கள், பூச்சரம், கீதாஞ்சலி கீர்த்தனைகள், சிந்தனை மலர்கள் முதலிய நூல்கள் இவர் இயற்றியன. இவருடைய இசைப்பாடல்கள் தமிழகத்தின் முன்னணி இசைவாணர்கள் பலராலும் பாடப்பெற்று வருவதுடன் இசைத்தட்டுக்களாகவும் வந்துள்ளன.

கவியரங்கங்கள் பலவற்றிற்குத் தலைமை தாங்கியுள்ளார். பட்டிமண்டப வாதம், இலக்கிய, சமயச் சொற்பொழிவு இவைகளில் ஈடுபாடு மிகக்கொண்டவர்.

பாரத முழக்கம், கௌமாரம், புதுக் குரல் போன்ற இதழ்களுக்குப் பதிப்பாசிரியராய் இருந்தவர். அண்மையில் சென்னை ஆரோக்கிய ஆச்சிரமத்தாரால் 'வித்வரத்தினம்' என்ற சிறப்புப் பட்டமும், கோவிலூரில் 'இன்னிசைக் கவிமணி' என்ற பட்டமும் பெற்றவர்.

இவர் 17—8—1933 இல் பிறந்தவர்.

ஜகத்குரு நான்மணி மாலை

இன்னிசைக் கவிமணி. இளங்கம்பன்

காப்பு

வான்மணியாம் சங்கரரின் வற்ரு அருள்வேண்டி
நான்மணியாம் மாலை நவிலவே — ஆனைமுகன்
தும்பிக்கை தூக்கித் துணைபுரிவான் என்னுமொரு
நம்பிக்கை கொண்டேன் நயந்து.

நூல்

வான்மீகி போன்ருேர் வழிவந்த மாமுனிவ!
ஆன்மீகத் தால்ஆளும் அண்ணலே! — நான்மறைதேர்
நற்காஞ்சி வேதா! நலம்வேண்டும் என்தனக்குன்
பொற்பார்ந்த ஞானம் பொழி. 1

பொழியும் கருணைக் கடலே! நற் காஞ்சியிற் புங்கவ! நீ
மொழியும் வழியில் உவந்தே ஒழுகும்மெய் யன்பினர்க்கே
இழியும் நிலையில்லை; நாடொறும் நின்னிரு தாள்பணிந்தால்
அழியும் சிறுமைகள்; ஆகும் பெருமைகள் யாவையுமே. 2

வான்மணி ஆம் - சூரியனுக்கு ஒப்பாகின்ற; நயந்து - விரும்பி.

1. பொற்பு ஆர்ந்த – அழகு நிறைந்த.

யாவையுமே திருவருளின் செயல்என் றெண்ணி
யாவருக்கும் பேரருளே பொழியும் உன்தன்
தேவையுமே மிகச்சிறிதாம் எளிமை என்னும்
தேசார்ந்த நலம்ஏந்தித் திகழும் நீயோ
நாவையுமே வென்றதனல், மெய்ஞ்ஞா னத்தின்
நலத்தையெலாம் நன்குணர்ந்தாய்! எந்தாய்! உந்தன்
சேவையுமே, இற்றையநாள் மாந்தர் கட்குச்
சேர்ப்பிக்கும் பெருநலத்தைச் செப்ப லாமோ? 3

செப்புதற் கியலாத் திருவருள் பூண்டே
உயிரினை ஓம்பும் ஒண்மையைக் காட்டி
அருளின் வடிவாய் ஆட்கொளும் காஞ்சிப்
பெரியோய்! உன்தன் பெருமை
இயம்புதல் என்பது எம்மனோர்க் கெளிதே? 4

எளிய தவவாழ்வால் ஏதங்கள் போக்கி
ஒளியை உவந்தெமக் கூட்டி — அளியதனல்
ஏன்என்று கேட்டருள எம்காஞ்சி மாதவ! நீ
தான்என்று வந்தாய் தரைக்கு. 5

தரையில் தெளிவை இழந்து தவிக்கும் தகவிலர்தாம்
குறையில் நலத்தில் குலவும் விருப்பிற் குவலயத்தே
பொறையில் அடையும் புகழை விளக்கிப் புகல்அருளும்
நிறையில் ஒளிரும் நினதருள் மாண்பு நெடியதுவே! 6

நெடியதெனும் ஆன்மிக வரலாற் றிற்கு
நிகரிலாப் புகழ்தந்த முன்னோர் போலக்
கொடியதெனும் இக்கலிகா லத்தில் நீயோ
குளிர்மொழியால் அறப்பயிரை வளர வைப்பாய்!

---

3. சேவை – தரிசனம்; தேசு – ஒளி. 5. அளி – கருணை.

"முடியொளிரும் இமயம்போல் உயர்ந்து நின்று,
மூவாசை போய்மறைய வேண்டும் இன்றேல்
படியதனில் அமைதியிலே பாரீர்!" என்று
பாங்குடனே சொல்கின்றாய் பரம! நீயே! 7

நீயே எங்கள் நெஞ்சிற் கொளியை
நித்தம் ஏற்றும் நீள்கதிர் ஆனாய்!
அரிய தவத்தின் அரும்பய னாகப்
பெரியோய்! நின்னைப் பெரும்புவி காணக்
கருணை முகத்துக் கனிவால்
கலக்கம் நீக்கிக் களிப்பருள் வாயே! 8

வாயே அடங்க வளங்கள் பெருகும்எனத்
தாயே அனைய தகவினால், — நீயே
அரிய முறையில் அகத்திற் கொளியே
உரியதென் றீவாய் உவந்து. 9

உவகையின் ஆண்டவன் சீரிசைத் துள்ளம் உருகிநிற்கும்
தவவடி வாகிய சற்குரு வே! அன்பர் தம்இதயம்
கவரும்இன் சொல்லமு தூற்றெழும் செவ்வாய்க்
கனகவெற்பே!
அவனியின் மாதவப் பேறே! எனையிங் கணைத்தருளே! 10

அணைத்தடிமை எனைஆண்ட அன்பின் ஊற்றே!
அடக்கத்தின் திருவுருவே! அயர்வு கொண்டு
பணைத்தமரம் போல்வாழும் அடியேன் கூடப்
பரிவுடன்நின் புகழ்பாடி அகம்களிக்கும் —
இணைத்துரைக்க முடியாத — வாய்ப்பைப் பெற்றேன்
இவ்வின்பம் எவ்விதம்நான் எடுத்துச் சொல்வேன்!
புணையாகித் துணையாகி எம்மை யாளும்
புண்ணியத்தின் வடிவே! நீ வாழி! வாழி! 11

---

7. படி – பூமி; 8. கதிர் – ஞாயிறு,

11. பணைத்த – பருத்த; அயர்வு – மறதி; புணை – தெப்பம்.

வாழிய பெரும! வாழிய நீயே!
ஆழிய புலமையில் அறிவொளி நல்கும்
வள்ளலே! வாழிபல் லாண்டு! வாழ்வில்
தள்ளருந் தருமத் தனியுரு வே! எம்
காஞ்சியின் மாதவக் கடலே!
வாஞ்சையின் வடிவே! வாழிய நெடிதே! 12

நெடிதூழி வந்த நிலைத்தபண் பாடு
படியிற் பரவும் படியே– நெடிதுழைக்கும்
தண்டலைசூழ் காஞ்சித் தவக்குன்றே! நின்முகத்தைக்
கண்டளவே தோன்றும் களிப்பு. 13

களிதங்கு தூய கருணைத் திறத்தால் கனிந்துநெஞ்சத்
தளிதங்கும் உன்தன் உளத்தை அறிந்து சரணம்என்றே
அளிதங்கும் உன்தன் அடிதொழ வந்திடும் அன்புடையோர்
ஒளிதங்கு நெஞ்சின் உவகையிங் காரே உரைப்பவரே? 14

உரைகடந்த மாண்புநலம் கொண்டு நிற்கும்
ஒப்பற்ற உன்பெருமை உரைக்கல் ஆமோ?
கரைகடந்த ஆனந்தம் இறைவன் மீதில்
காட்டும்பே ரன்பாலே முகிழ்க்கும் என்றாய்!
விரைகமழும் பொழில்சூழும் காஞ்சி யின்கண்
வெங்கலியின் இருள்விலக மிளிர்வி ளக்கே!
குரைகழலே தஞ்சமெனத் திருமுன் வந்து
கூடியமெய் யடியார்க்குக் குறைகள் உண்டோ? 15

---

12. வாஞ்சை – அன்பு.

14. நெஞ்சத்தளி – மனக்கோயில்; அளி – கருணை.

உண்டோ? இலேயோ? உருவோ? அருவோ?
கண்டோர் உளரோ? காட்டுவ ரோ? எனும்
ஐயம் அதனில் அனுதினம் உழலும்
வையத் தோரின் வாழ்வொளி பெருக —
அத்து விதத்தின் அருளுரை நல்கினை!
தத்துவம் அதன்வழிச் சார்வெனே நானே! 16

நானே அனைத்துமென நாட்டுகின்ற அத்துவிதம்
தானேபே ரின்பம் தரும்என்று — மாநிலத்தே
வாழும் வழியுணர்த்தும் மாண்குரவன் தாளிணையைத்
தாழும் தவமே தனம். 17

தனத்தை மதித்தே தரையில் உழலும் தவறதனல்
சினத்தை வளர்க்கும் சிறியோர் இனத்திற் செறிந்துநின்றே
மனத்தை அழிக்கும் மறுவாம் அகந்தை வழங்குகின்ற
கனத்தை இறக்கும் கருணை உருவே! கதியருளே! 18

கதியளிக்கும் கவினுருவே! காஞ்சித் தேவே!
கண் திறக்கும் ஞானஒளி விளக்கே! அன்பாம்
நிதியளிக்கும் நிறைகடலே! நெஞ்சை யள்ளும்
நேயத்தின் தனிவடிவே! நித்தம் நித்தம்
மதியளிக்கும் மாமுகிலே! அளக்க வொண்ணு
மாதவக்குன் றே! எங்கள் வாழ்வே! கங்கை
நதியளிக்கும் வெள்ளம்போல் அருளே நல்கி,
நலிவகற்றி நலம்சேர்க்கும் ஞானத் தேவே! 19

ஞானச் சுடராய் நல்வழி காட்டிப்
புவனம் புரக்கும் புண்ணிய! உன்தன்
பொன்னடி போற்றும் புனிதம் அதனல்,
நீந்திக் கடக்க நினைக்கவொண் ணுத

18. மறு – குற்றம்; கனம் – சுமை.
19. கவின் – அழகு.

மாந்தர்தம் பிறப்பெனும் மாக்கடல் கடக்கச்
சாந்திப் புணைநீ தானென
நம்பி வந்தனென் நாயேன் நானே! 20

நானென தென்னும் நவைச்செருக்குக் கோர்பகையே
ஞானச் சுடரான நற்றவமே! — தேனின்
இனிமை பழுத்த எழிற்காஞ்சித் தேவே!
கனியாத என்நெஞ்சோ காய். 21

காயைக் கனியாய்க் கனிவிக்கும் உன்தன் கனிமொழிகள்;
தாயைத் தயையில் வெலும்உன் திருவருள்; தாவிவரும்
சேயை வெலும்நின் சிரிப்பு;அச் சிரிப்பால் சிறுமைதரும்
மாயை அழியும்நற் காஞ்சி வரும்அருள் மன்னவனே! 22

மன்னுகவே! மன்னுகவே! எங்கள் தேவே!
மகிமையுடை இமயம்போல் மகித லத்தே
இன்னும்எங்கள் வாழ்நாட்கள் அனைத்தும் பெற்றே
இன்பொழுகும் திருவாயோய்! வாழி நீயே!
பொன்னும்நா ணுறுவண்ணம் பொலியும் மேனிப்
புண்ணியனே! அன்புடையார் சிந்தையுள்ளும்
சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தி கொண்டாய்!
திருநெறிய தமிழ்போல்நீ வாழ்க நன்றே! 23

நன்றல வற்றை நாளும் செய்யும்
நலிவில் மெலியும் ஞாலத் தோர்க்கே
ஒன்றிய நிலையில் உயர்வழி காட்டும்
உத்தம! அடியேன் உனையே
மெய்த்துணை யாக வேண்டிநின் றேனே! 24

வேண்டும் பொழுது வெளிவந்து நல்லடியார்
காண்டற் கெளிதாகிக் கண்முன்னே — ஆண்டவனே!
பாரக் கலிகெடுக்கும் பண்ணவனே! நாயேன்நின்
சீரைப் புகல்வேன் தெளிந்து. 25

தெளியும் வகையே தெளியாப் புலமைத் திகைப்பிடையே
நெளியும் மனிதர் நிலத்தில் உயரும் நிலையதுதான்
துளியும் பெறுவதுண் டோ? அடி யேங்கள் துயரழிய
ஒளியும் உணர்வும் உயர்வும் எமக்கே உவந்தருளே! 26

உவந்தேதான் வித்வசபை எங்கும் கூட்டி
உயர்புலமை வாய்ந்தொளிரும் புலவோர்க் கீந்தே
சிவந்தேதான் நின்கரங்கள் விளங்கக் கண்டோம்;
சினந்தேதான் அறியாநின் முகத்தைக் கண்டால்,
தவழ்ந்தேதான் வருகின்ற சேயுங் கூடத்
தாயினையும் மறக்குமெனில் வியப்போ? — பாரைக்
கவர்ந்தேதான் ஆன்மீகச் சுடரைப் பாய்ச்சும்
கற்பகமே! நற்கதியே! கச்சித் தேவே! 27

தேவ தேவன் திருப்புகழ் ஒன்றே
தேனும் என்று தினமும் இயம்பி,
வைதிகம் என்னும் வழியது சிறக்கச்
செம்மை மனத்தின் சீர்மையைக் காத்தே,
கடுமையைக் கடந்த காட்சியைக் காட்டி,
என்பெழுந் தொளிரும் யாக்கை நலத்தில்
இயற்றும் நினதாம் இன்தவப் பெருமையை
எம்மொழி யாலே எளியேன்
பாடுவன் அந்தப் பக்குவம் இலனே! 28

இவன்உளன் ஈசன் எனப்பேசி மெய்ம்மை
நலனறியா வாழ்வில் நலியும் — உலகோர்
சிறந்துஆர் அருள்பெறவே சித்தம் இரங்கிப்
பிறந்தாய் கயிலை பெயர்ந்து. 29

பெயரும் பிணிகள் பெருமயல் தீரும் பிறக்கும்இன்பம்;
உயரும் கிருத யுகம்புவி யின்கண் உதிக்கும்; என்றும்
துயரும் பிறவி தொலையும்; திருவருள் தோன்றும்-நெஞ்சம்
அயரும் பொழுதருள் சங்கரன் நாமம் அறைந்திடினே. 30

அறம்பொருளும் இன்பமும்நல் வீடும் நல்கும்
ஆரணங்கள் உபநிடங்கள் அனைத்தும் வாழத்
திறம்பலிலா முன்னையபண் பாடு முற்றும்
தேசத்தில் மறுமலர்ச்சி கொள்ள இங்கே
பிறந்தபெருங் குணக்குன்றே! ஞான ஊற்றே!
பெருஞானப் பெருவாழ்வே! பிரானே! அன்பு
சிறந்தொளிரும் மாதவமே! சிறியேன் உன்தன்
சீரிசைக்கும் பேரிசைக்கும் திறம்வல் லேனே? 31

வல்வினை யேன்என் வாழ்வு சிறக்க
வந்துன் திருவடி வனசம் அடைந்தேன்
நலமிகும் உன்தன் நற்றவ வாழ்வைக்
கண்டவர் அனைவரும் கருத்துரு கிடுவார்!
நம்தொல் சமயம் நம்பண் பாடு
பாரகம் எங்கும் பரவிட வேண்டிப்
பலப்பல வாகப் பயனுடைப் பணிசெய்
பெரியோய் நின்புகழ் பேசும்
பெருமை யதனுற் பேறுபெற் றேனே! 32

பேறுகளில் நற்பேறு பேரருள்செய் சங்கரரின்
நீறணிந்த மாண்பில் நெகிழ்வதுவே — வேறுரையேன்
காஞ்சி சுவாமிகளைக் கண்டால்நம் வாழ்வுக்கு
வஞ்சையுடன் தோன்றும் வழி. 33

வழிக்கே துணையாய் வருவ ததனை வழுத்திடுவாய்!
மொழிக்கே துணையாய் முகிழ்த்த அறத்தைமொழிந்திடுவாய்!
விழிக்கே துணையாய் விளங்கும் அருளை விளம்பிடுவாய்!
பழிக்கே விரையும் எனக்கே இரங்கிப் பதமருளே! 34

‘பதமருள்வாய்’ எனநின்னை வேண்டு கின்றேன்
பகர்நான்கு மறையறமே ஊன்ற, வாழ்வில்
இதமருளும் நெறியாளர் குலம் சிறக்க,
இனியதெனும் அருள்மொழிகள் நாங்கள் கேட்க,
நிதமருளும் குருமணியே! எங்கள் நெஞ்சில்
நின்றொளிரும் மாமணியே! அன்பே ஓங்கும்
விதமருளும் நின்னுடைய வாய்மை யாலே
வியப்பூட்டி எம்நெஞ்சம் கவர்கின் றாயே! 35

கவரெழிற் பொழில்சூழ் காஞ்சியில் உறைவோய்!
காசினி உய்யக் கருணை பொழிவோய்!
தொண்டில் சிறந்த தொண்டாய் இன்றைய
சிறுவர்கள் ஓதும் சீர்சால் பாவைப்
பாசுரத் தின்பம் பாரெலாம் பரவி
ஈசுரன் திருவருள் இதயம் பெருகக்
கலைநலம் காட்டும் கதிரே!
மலையொளிர் விளக்கே வாழிபல் லாண்டே! 36

வாழி! பன் னாள்வாழி! வாஞ்சை பொழிமுகிலே!
வாழியநீ வாழி! வளரறங்கள் — வாழியவே!
பேரொளியே! எங்கள் பெருவாழ்வே! உண்மையதன்
வாரொளியே! மாதவவாழ் வே! 37

மாதவக் குன்றே! மருந்தே மறுவறு வான்சுடரே!
கோதவம் நீத்த குளிர்பொழிற் காஞ்சிக் குருபரனே!
போதம் விளக்கிய பொன்விளக்கே எங்கள் புண்ணியமே!
பேதமில் லாதெம்மை ஆழ்த்தினை அன்புப் பெருக்கினிலே! 38

பெருகியநல் அருளதனைப் பெருஞா லத்தைப்
பெருமைபெற ஆண்டருளும் தேவே! பண்ணில்
உருகியநல் உளங்கொண்டே நாளும் மக்கள்
உள்ளொளியைப் பெருக்குகின்ற சுடரே! காஞ்சிக்
குருமணியே! அன்புடையார் உள்ளம் என்னும்
கோயிலிலே குடிகொண்ட தேவே! கோவே!
கருணைநெடு மழைபொழியும் முகிலே! உன்பொற்
கழலிணைஎம் சென்னிக்குக் கமலப் பூவே! 39

கமலமும் கடலும் கயிலையும் துறந்து
கச்சியில் உறைந்தருள் கடவுளே! வாழி!
வள்ளலே! வாழி! வாழிபல் லாண்டே!
சாந்தம் கனிவு சமநிலை அனைத்தும்
வாய்ந்த எங்கள் வாழ்வே! வாழி!
காஞ்சி யளித்த கதியே! வாழி!
வாஞ்சை படைத்த வடிவே! வாழி!
சந்திர சேகர சரஸ்வதி என்னும்
பரம குருவே! பன்னாள் வாழி!
வாழி! வாழி! வாழிவா ழியவே! 40

ஜகத்குரு வெண்பா அந்தாதி

முன்னுரை

தெய்வம், ஆசாரியன், வள்ளல் முதலியோரைப் பற்றிப் பாடப்பெறுவது அந்தாதி; இது சிறுகாப்பிய வகையைச் சேர்ந்தது. முதற்பாடலின் இறுதி அடியிலுள்ள சீரோ, அசையோ, எழுத்தோ அடுத்த பாடலின் முதலில் வரப் பாடுவது அந்தாதி (அந்தம்+ஆதி) எனப்பெறும். நூலின் இறுதிப் பாடலினிறுதி முதற்பாடலின் முதலில் வந்து மண்டலிக்கவேண்டும் என்பதும் விதி.

கலித்துறை அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, வெண்பா அந்தாதி என அந்தாதிகள் பலவகைப்படும். இந்நூல் வெண்பா அந்தாதி ஆகும்.

பெரும்பாலான அந்தாதிகள் நூறு பாடல்களைக் கொண்டிருப்பினும், கம்பர் பாடியதாகக் கருதப்பெறும் சரசுவதியந்தாதி முப்பது பாடல்களைப் பெற்றுள்ளது.

ஆசாரிய சுவாமிகளின் அருள் முன்நின்று செலுத்தும் என நம்புகிறேன்; இப்பணியில் ஈடுபடுத்திய திருவருளுக்கு நன்றி.

இந்நூலின் தொகுப்பாசிரியர் பேராசிரியர் திரு. இரா. இராதாகிருஷ்ணன், M. A. அவர்கட்கும் என் இனிய நன்றி உரியது.

ஒவ்வொரு பாடலின் தொடக்கத்திலும் அப்பாடலின் கருத்துச் சுருக்கம் கொளுவாக அமைக்கப்பெற்றுள்ளது.

— ம. வே. பசுபதி

ஆசிரியரைப் பற்றி . . .

கல்வெட்டு ஆராய்ச்சிப் புலவர், சிவநெறிச்செல்வர் திரு. கா. ம. வேங்கடராமையா, எம். ஏ., பி. ஓ. எல். அவர்களின் புதல்வர் திரு. பசுபதி. இவரின் அன்னையார் பெயர் திருமதி அன்னபூரணி.

திரு பசுபதி அவர்கள் தமிழகத்திற் பல கவியரங்குகளிலும் பங்குகொண்டு, தமிழ்ப்பணி செய்து வருகின்றார். ஜகத்குரு இரட்டை மணிமாலை நூலின் ஆசிரியர்; அந்நூல் ஆசாரிய சுவாமிகளால் பாராயண நூலாக அங்கீகரிக்கப் பெற்றுள்ளது.

போர்ப்பரணி, இதுதான் உலகம் என்னும் கவிதை நூல்களும், மதங்கள், எண்கள், ஆறுகள், வள்ளுவர் உலகம் ஆகிய தொகுப்பு நூல்களும், பாவேந்தரின் பாநயம், நீதித் தெளிவு முதலிய உரைநடை நூல்களும் இவர் படைப்புக்கள் இவர் யாப்பருங்கலக் காரிகைக்குப் புத்துரை கண்டுள்ளார்.

ஜகத்குரு வெண்பா அந்தாதி

ம. வே. பசுபதி

காப்பு

குருபரன் பனுவல் குறைவின்றி முடியக்
கரிமுகன் கழலிணை கருதித் தொழுதது

ஞானப் பெருவைப்பே! நற்கனே சப்பரனே!
யான்இறுக்க வந்தே இசைவோனே! – தேன்எனும்அப்
பாரதத்தை மேருமலைப் பாங்கெழுதி னை! இந்தப்
பா, ரதத்தை நீகடவப் பார்!

அவையடக்கம்

சான்றோர் பொறுத்திடத் தன்இழி புரைத்தது

ஞானி பலர்உறையும் நாட்டில் அலைந்தாலும்
ஞானம் உணராத நாயினேன் – ஆனபாற்
சட்டித் துரும்புஇதுதான் சங்கரனைத் தன்இதயத்து
இட்டத்தால் ஏதுரைக்கு மோ?

காப்பு: பாரத மாக் கதையை வியாசர் கூறி வர, விநாயகர் இமயத்தில் எழுதினர். இங்குப் பாட்டாகிய தேரை (பா ரதத்தை) அவ்விநாயகனே கொண்டு செலுத்த வேண்டியது.

அவையடக்கம்: ஞானிகள் பலர் வாழும் நாட்டில் சஞ்சரித்தாலும், நான் ஞானம் உணராதவன். பாற்சட்டியிற் கிடந்தாலும், பாலின் சுவையுணராத துரும்பை நான் ஒப்பேன். சங்கரர் சீரை ஏதேனும் கூற என்னல் இயலுமோ? இயலாது என்பதாம்.

நூல்

இறைவன் ஒளிநிழல் எம்குரு என்றது

ஓங்கு பரப்பிரமம் ஒன்றேஇப் பூவுலகப்
பாங்கு நிழலாப் படர்ந்தாலும் – ஏங்கலிலா
நிற்சலன மேநிழலை நிற்கவைக்கும் மற்றதுவே
நற்குரவ னாக நவில்! 1

குருவருள் ஞானம் கூட்டும் என்றது

நவில்பூர ணத்தையே நாடும்வை ராக்யம்
செவியார ஞாலத்திற் செப்பக் – கவியமுதத்
தேனைப்போல் வந்துதித்த தெய்வதத்தை நெஞ்சிருத்தின்
ஞானம்வந் தெய்தும் நவி. 2

வாதம் செய்தலின் மனத்துணர்(வு) உயர்வென் றோதும் குருபதம் உறுதுணை என்றது

நவிவாதம் செய்தலினும் நன்குணர்தல் நன்று;
தவிவாதம் தீது தரும்என்று – இனிதாக
அத்துவிதம் போதித்த ஐயன் கழல்துணையாம்
பெத்தமற வீடு பெறற்கு. 3

---

1. பரப்பிரமமே நிழலாகப் பூமியெங்கும் நிறைந்திருப்பினும், சலனமற்ற நெஞ்சே அதை உணர இயலும். அச்சலனமற்ற நிலையே சங்கரர் என்பதாம். நிற்சலனம் — சலனமற்றது.

2. பூரணத்தை நாடும் வைராக்யத்தை உபதேசிக்க அவதாரம் செய்த சங்கரரை நினைக்கின், ஞானம் வரும் என்பதாம்.

3. தர்க்கம் இடுவதினும் உணர்ந்து ஒழுகுதல் நன்றாம்; பேத உணர்வு தீமை பயக்கும் என்று அத்து வைதத்தை உபதேசித்த சங்கரர் கழலே வீடுபெறத் துணையாகும் என்பதாம். தவி வாதம் — பேத உணர்வு.

சங்கரன் கழலே தண்தேன் என்றது

பெறலரிதாய் ஞானத்தின் பேருய் எவர்க்கும்
உறலரிதாய் உள்ளத்து ஒளியாய் – அறவுருவாய்
ஓங்குகுரு சங்கரன்தாள் ஒன்றேயாம் என்உயிர்செய்
தீங்குகெட யான்சுவைக்கும் தேன். 4

குருபதம் பணிந்தால் பயம்இலை என்றது

தேனனைய தீஞ்சொல்லால் தீவினையாம் நோய்எவர்க்கும்
தானகலத் தீர்க்கும்; தவத்தலைவன் – வானத்து
இரவியென இங்குதித்த எம்மான்பொற் பாதம்
பரவுவார்க் கேது பயம்? 5

படையாத் தேகம் படைத்தவன் என்றது

பயன்தருசொற் காமாட்சி பாரில்ஒரு மார்க்கம்
நயந்துரைத்தல் கேட்க நயந்து – அயனும்
அவனே படையாமல் ஆகம் எடுக்கும்
அவனே அருட்கச்சி யான். 6

அவன்அரு ளாற்பற் றகலும் என்றது

யான்எனது என்னும் அகப்புறப் பற்றுகும்
தீனம் அகலத் தெளிகின்ற – ஞானங்கள்

---

4. பெறல் அரிதாய், பேருய், அடைதற்கரிதாய், ஒளியாய்' அறவுருவாய் ஓங்கிய சங்கரர் தாளே யான் சுவைக்கின்ற தேனகும் என்பதாம்.

5. தீவினை தீர்க்கும் தலைவன், எம்மான் பாதம் பணிவார்க்குப் பயம் இல்லை என்பதாம்.

6. காமாட்சியன்னை கூறும் மார்க்கம் கேட்க விரும்பி, அயனல் படைக்கப் பெருமல், தம் விருப்பால் அவதரித்தவர் சங்கரர் என்பதாம்.

அயனல் படைக்கப் பெருமை — உலகினரைப்போல் வினைவயத்தாற் பிறவாமை.

சங்கரா சார்யன் தரலால் வரும்அன்றி
இங்கெவருக் கெய்தும் இவை! 7

அனைத்தும் வாய்ப்பது அவனால் என்றது

வைத்த சிறப்பு, வரவிருக்கும் நல்லுகர்ச்சி,
அத்தனையும் வாய்த்திடுவ தாராலே? — உத்தமமாம்
சத்தியத்தின் ஓர்உருவாம் சங்கரா சாரியனால்
இத்தரையில் வாய்த்திடும்என் றேத்து. 8

குரவனைப் பலவாறு உருவகப் படுத்தது

ஏத்துவோர்க் கின்னமுதம்; யாவர்க்கும் நல்வைப்பு;
தீர்த்தம்போல் தீங்ககற்றும் தெய்வதம்; — ஆத்திகத்துச்
சிங்கம்; திருக்காஞ்சித் தேசிகனும் சங்கரனே
அங்கண் விழிப்பாவை யாம். 9

உருவகப் படுத்துப் பரவுக என்றது

யாமத்துப் பூரணிமை; இன்னல் இருள்புலர்த்தும்
காமர்விடி வெள்ளி; கதிர்,பகற்கே; — ஓம்என்
பிரணவத்தின் சாரம்; பெருங்காஞ்சி எம்மான்
வரதமணி யாம்அவனை வாழ்த்து. 10

---

7. அகப்பற்றும் புறப்பற்றும் ஆகிய சிறுமை தீரத் தெளிகின்ற அறிவெல்லாம் சங்கரர் அருளின்றி வாரா என்பதாம்.

8. சிறப்பும் நுகர்ச்சியும் ஆகிய அனைத்தும் யாரால் வாய்க்கும் என வினவி, ஆசாரியனால் என விடை கூறி, அவனை வாழ்த்துக என ஏவுவது இப்பாடல்.

9. அமுதம், வைப்பு, தெய்வம், சிங்கம் ஆகிய சங்கரர் கண்மணி யாவர் என்பதாம்.

10. பூரணிமை, விடிவெள்ளி, கதிர், சாரம், வரதமணி யாகிய சங்கரரை வாழ்த்து என்பதாம்.

வாழ்த்தி வணங்கி வளம்அருள் கென்றது

வாழ்த்துவதும் எங்கள் வளத்திற்கே; எம்சென்னி
தாழ்த்துவதும் உன்இன் தயவினுக்கே — ஊழ்த்தவினை
போக்கும்நற் காஞ்சி புரத்துறையும் ஞானகுரு!
ஆக்கம் அடியேற்கு அளி. 11

கவிதை வெள்ளத்திற் கலந்திடு என்றது

அளிமுரலும் கொன்றை அடவியாய்! மெய்ம்மைத்
தெளிவுதரும் காஞ்சிபுரத் தேவே! — வெளியிலுறக்
காட்டாற்று வாழ்வு கலந்து களிப்பவனே!
பாட்டாற்றில் வந்திருந்து பார்! 12

பக்திவேர் தந்தவன் பற்றினை விழைந்தது

பார்வெளிகால் நீர்அனலாம் பஞ்சபூ தத்தியல்பைப்
பார்! தெளி! என்றேஎம் பக்திக்கு — வேர்தந்த
சீலமே! காஞ்சிச் செழுஞ்சுடரே! சாத்துவிகப்
பாலமே! வந்தேன்உன் பால். 13

கங்கையைக் குரவன் கைதொழு வதற்கே இங்கொரு குறிப்பினை ஏற்றிச் சொன்னது

பாலாறுஉன் பாதம் பலகாலும் தைவந்து
ஞாலத்து உயர்ந்தநதி நான்என்னின் — ஏலாது

---

11. வாழ்த்துவது வளத்திற்கு; தாழ்த்துவது தயவினுக்கு; ஆதலால் ஆக்கம் அருள்க என்பதாம்.

12. அடவியாய்! தேவே! களிப்பவனே! என் பாட்டு நதியில் இருந்து கண்பார் என்பதாம்.

13. பார் என்று பக்திக்கு வேர் தந்த சீலமே! சுடரே; பாலமே! உன்பால் வந்தேன் என்பதாம்.

கங்கை பொருள்எனவோ கச்சியெம்மான்! நீஅவனைச்
செங்கை குவிக்கின்ற சீர். 14

விரதம், மாதவம் மிக்க பண்பு என்
இருதயம் பதிக்க இயலுமோ என்றது

சீரன வில்லாச் செழுவிரதம்; மிக்கதவம்;
பாரன வில்லாத பண்புஇவற்றைக் — காருளத்தே
கட்டி யமைக்கக் கடவேனோ? என்னைநீ
எட்டியென நீக்கல் எதற்கு? 15

தகுதியின் றேனும் தயைபுரி என்றது

எதற்கும் பயனில்லேன்; எய்துகின்ற காமம்
அதற்கடிமை யாகி அயர்வேன் — கதித்தமயல்
ஆதியற ஆட்கொள்ள லாகாதா? சங்கரனும்
சோதி! வினை தீர்ப்பாய் தொடர்ந்து. 16

"என்குறை தீர்த்து அருள் ஈக" என் றிரந்தது

தொடர்புடைமை யன்மையிலாத் தொல்சீர் உறவே!
திடராக நெஞ்சகத்துத் தீமை — படராமல்
நோக்கும் மறைவிளக்க நுண்மையே! என்குறைகள்
போக்கி அருளைப் புரி. 17

---

14. உன் பாதத்தைப் பலகாலும் தீண்டுவதால், உயர்ந்த நதி நானே என்று பாலாறு கூறினல், அதைக் கேட்டுக் கங்கைநதி பொறுத்துக்கொள்ள மாட்டாள் என்று அவளை மகிழ்விக்கவே போலும் நீ அவளை வணங்குவது என்பதாம்.

15. விரதம் முதலியவற்றை உளத்தே அமைக்க என்னல் இயலுமோ? என்னை நீக்கலாமோ என்பதாம்.

16. சோதி! அயர்வேனுடைய மயல் முதலியன தீரும்படி ஆட்கொள்ள லாகாதா? என் வினை தொடர்ந்து தீர் என்பதாம்.

17. உறவே! நுண்மையே! என்குறை போக்கி அருள்புரி என்பதாம்.

ஈவன யாவை எனக்கென விஞயது

புரிவனஉன் தொண்டே; புகழ்வதுமுன் சீரே;
உருகுவது நெஞ்சம் உனக்கே — பரிவுருவே!
உத்தமனே! காஎன்று உனையடைந்தேன் நீஈதல்
இத்தரையில் யாவை எனக்கு? 18

ஐயன் தன்நினை வாற்றலே வியந்தது

யாவுள்ளும் தானுகி யாவும் அறிந்துணர்ந்தே,
ஆவுள்எனைத் தேவும் அடங்குதல்போல் — தேவா!
ஜகத்து,உள் நிறைந்தமையால், சாற்றுநினை வாற்றல்
மிகப்பெற்ருய் மேலோய் மிளிர்ந்து. 19

உருஅழி தன்மை உறின், அருள் எளிதெனும் ஒருநெறி அடியேற் குறுமோ என்றது

மிளிர்உருவம் நீத்துஅருவம் மேவும்ஒளி கூடின்
எளிதாகும் பேரருள்என்று எல்லா – அளியினரும்
கூறுநெறி கூடக் குளிர்கச்சிச் சங்கர!எவ்
வாறுஎனக் காகும்? அருள்! வா 20

---

18. பரிவுருவே! உத்தமனே! அடைந்தேன் எனக்கு நீ ஈவன யாவை என்பதாம்.

19. தேவா! மேலோய்! அனைத்துத் தேவதைகளும் பசுவினுள் அடங்குதல் போல், இந்த ஜகம் உன் உள்ளத்தே நிறைந்தமையால், நினைவாற்றல் மிகப் பெற்றுள்ளாய் என்பதாம். ஜகத்துள் நீநிறைந்ததால் என்பதும் ஆம்.

20. உருவஞானம் போய், அருவஞானம் வந்தால் அருள் எளிதாகும்; இஃது அனைத்துச் சமயத்தினரும் கூறும் நெறியாம்; அந்நெறி எவ்வாறு எனக்குக் கிட்டும் என்பதாம்.

அன்னையே ஏகம்என் றறிவிக் கும்குரு
பொன்னடி பிறவி போக்கும் என்றது

ஆகுலம் தீர்த்தருளும் அன்னைகா மாட்சியே
ஏகம் எனஉணரும் இன்னருளைத் – தாகம்
உறுவோர்க் குணர்த்தும் உலககுரு பாதம்
மறுபிறவி தீர்க்கும் மருந்து. 21

எனக்குஆ சான்பேர் இனிக்கும் என்றது

மருந்தாய் மயற்பிணியை மாற்றும்; குறிஞ்சிப்
பெருந்தேனின் இன்பம் பெருக்கும்; – வருந்துகின்ற
துன்பத்துள் துன்பம் துடைக்கும், குரவன்பேர்
இன்பத்துள் இன்பம் எனக்கு. 22

பேர்சொலல் பிறவிப் பயனும் என்றது

இன்பம் அடியாருக்கு கீயும் பெயர்எனவே
உம்பரெலாம் ஓதி உருகுகின்ற – நன்பெயராம்
சங்கரா என்றொருகால் சாற்றின் இனியுடம்போ
டிங்கென்ன வேலை எனக்கு? 23

---

21. காமாட்சியே ஏக பரம்பொருள் என உணர்கின்ற இனிய அருளினைப் பக்குவம் உடையார்க்கு உணர்த்தும் சங்கரர் தாள், மேல் வரும் பிறவியைத் தீர்க்கும் மருந்தாகும் என்பதாம்.

22. குரவன் பேர் பிணியை மாற்றும்; இன்பம் பெருக்கும்; ஆதலால் அதுவே எனக்கு இன்பத்துள் இன்பம் என்பதாம்.

23. இன்பம் ஈயும் என்று தேவர்கள் கூறி உருகும் பெயராகிய சங்கரா என்றொருகால் சொன்னாலும் பிறவிப்பயன் முற்றும் என்பதாம்.

உலகம் குரவனை உன்னுக என்றது

எனக்கே பிரான் ; எங்கள் ஈசன் ; உலகில்
தனக்கேதான் ஒப்பாம் தலைவன் ; – மனக்கினியன் ;
சன்மப் பெரும்பகைவன் ; சங்கரா சாரியனை
உன்னிப் பொலிக உலகு. 24

தாதா எனிற்பயன் சாரும் என்றது

உலருக்கு ஒருகுரவ! ஒண்காஞ்சி பீடத்து
இலகிய ஞானத்து இரவி! – கலையுதவும்
தா தா! எனக்குநலம் தாதா எனில்திரும்
பாதா பிறவிப் பயன்? 25

சற்குரு அன்பே தனிவாழ் வென்றது

பயன்எண்ணீர்! எண்ணில் படுபிழையே எண்ணி
நயனிலவே செய்யுஞ்ஞா லத்தீர்! – வியன்அருள்கூர்
காஞ்சிப் பதியானைக் கண்டு கசிந்துருகி
வாஞ்சித் திடுவதே வாழ்வு. 26

அவன்அல் லாதுஇறை அயல்இலை என்றது

வாழ்விற் புணையாய் மறுமைக் குறுதுணையாய்த்
தாழ்விற் படாதுஅணைக்கும் தந்தையாய்க் – கேழில்

---

24. பிரான் ; ஈசன் ; தலைவன் ; இனியவன் ; பகைவன் – ஆகிய சங்கரரை உன்னி இவ்வுலகம் விளங்குக என்பதாம்.

25. குரவ! இரவி! தாதா! என்றால் பிறவிப்பயன் மீளாதோ என்பதாம்.

26. ஞாலத்தீர்! காஞ்சிப் பதியானை வாஞ்சித்திடுவதே வாழ்வாகும் என்பதாம்.

மனிதஉருத் தாங்கி வருகுரவன் அன்றி
இனிஒருநல் தெய்வம்இங் கேது? 27

பூரணம் சிவம்எனும் ஆர்யனைத் தெழுகெனல்

ஏதொன்றும் தொந்தமுளது; ஏதொன்றும் பூரணத்தது
ஏதொன்றும் ஏத்தும் இயல்பினது; – தாதொன்று
'கொன்றையனே அஃதெ'ன்று கூறுகின்ற சங்கரனை
என்றும் வணங்கி இரு. 28

கதிர்உரு வானவன் கதிநமக் கென்றது

இருக்கை புலித்தோல்; இருகையில் செங்கோல்
உரத்தினில் அக்கம் ஒளிரத் – திருத்தகு
சூர்யர்ஒரு கோடிஎனத் தோன்றிஎமை யாட்கொண்ட
ஆர்யன் அவனே அரண். 29

ஆசான் உள்ளத்து ஆசிகொள் கென்றது

அரண்வேறில்லைநெஞ்சே! அங்காஞ்சி எம்மான்
சரணார விந்தம் தலைக்கொள் – கருணைநெடு
வெள்ளத்து அழுத்தும் விமலசங்க ராசார்யன்
உள்ளத்தின் ஆசியிலே ஓங்கு. 30

---

27. புனையாய், துணையாய், தந்தையாய் உருத்தாங்கி வரும் ஆசாரியனை அல்லாது வேறு தெய்வம் இல்லை என்பதாம்.

28. தொந்தமுளது; பூரணத்தது; இயல்பினது; கொன்றையணிந்த சிவனே எனும் ஆசாரியனை வணங்கு என்பதாம்.

29. புலித்தோல், செங்கோல், அக்கம் விளங்கத் தோன்றிய ஆசாரியன் நமக்குத் தஞ்சமென்பதாம்.

30. நெஞ்சே! கச்சிஎம்மான் பாதம் தலையில் சூடு; அவன் உன்னைக் கருணை வெள்ளத்து ஆழ்த்துவான்; அவன் ஆசியினால் நீ வாழ்வில் உயர்வாய் என்பதாம்.

—o—

சந்திரசேகரர் திருநீறுவிடுதூது

முன்னுரை

தலைவன் பவனிவரக் கண்டு காதலுற்ற தலைவி அவன் மாலை பெற்று வரும்படி அன்னம், கிளி முதலியவற்றைத் தூது விடுவதாகப் பாடுவது தூது என்னும் பிரபந்தம். இது சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்தது.

" அஞ்சிறைய மடநாராய்! அளிபத்தாய் நீயும்உன்
அஞ்சிறைய சேவலுமாய் ஆவாளன்று எனக்கருளி
வெஞ்சிறைப்புள் உயர்த்தார்க்குஎன்விடுதூதாய்ச்சென்றக்கால்
வன்சிறையில் அவன்வைக்கில் வைப்புண்டால் என்செயுமே! "

என்னும் பெரியார் வாக்கு இதற்குத் தக்க எடுத்துக்காட்டு.

இலக்கண மரபுப்படி அன்னம், கிளி முதலியவற்றைத் தூது விடுதலேயன்றிப் பிற்காலத்தில் புதியது புகுதலாகப் பணம், தமிழ், புகையிலை, தந்தி முதலிய பொருள்களையும் தூதுவிட்டதாகப் பல பிரபந்தங்கள் தோன்றியுள்ளன. இந்தத் திருநீறுவிடு தூதும் அவ்வகையில் அமைந்துள்ளது.

தூதுவிடும் பொருளின் சிறப்பு, தலைவன் பெருமை, தசாங்கம், உலாச்சிறப்பு, தலைவி காதலுற்றமை, மற்றவற்றைத் தூதாக்காமைக்குக் காரணம், தூது செல்லற்குரிய வழி, திருவோலக்கச் சிறப்பு, தூது செல்லும் முறை முதலியவற்றைச் சுவைபடக் கூறுவது தூதுப் பிரபந்தமாகும்.

தெய்வக்காஞ்சி முனிவர் பற்றியதாகலின் உலகியற் காதலை விரிக்காமல் தெய்விகக் காதலைக் காட்ட முனைந்துள்ளேன்.

என்னையும் தம் திருவருளுக்காட்படுத்தி, என் பாவினை ஏற்றருளும் ஆசாரியசுவாமிகளின் பெருங்கருணையை வியந்து பணிகின்றேன்.

மதுரை,
18—5—73

சொ. சொ. மீ. சுந்தரம்

ஆசிரியரைப் பற்றி......

சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் 3-8-1942ஆம் ஆண்டு தேவகோட்டையில் பிறந்தவர். சொர்ணலிங்கம் செட்டியார் – மீனுட்சி ஆச்சி இவர்களின் திருமகனுகிய சுந்தரம், காரைக்குடி அழகப்பா கல்லூரியிலும், சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்று வணிக முதுகலை (எம். காம்.) பட்டம் பெற்றுள்ளார்.

வானெலியிலும், பல கவியரங்குகளிலும் பங்குகொண்டு வருகின்ருர். மதுரைக்கோயிலில், வாரந்தோறும் திருமந்திரச் சொற்பொழிவு நடத்தி வருகின்ருர்.

திருப்பனந்தாள் பாவலர் மன்றத்தினரால் சொல்லோவியர் என்ற பட்டமளித்துப் பாராட்டப்பெற்றவர் இவர்.

சந்திரசேகரர் திருநீறுவிடுதூது

சொல்லோவியர், சொ. சொ. மீ. சுந்தரம்

காப்பு

சங்கரனைய் வந்து தனியறத்தைக் காப்பவற்குத்
துங்கமுறும் வெண்ணீற்றுத் தூதுரைக்க - ஐங்கரனைய்
நெஞ்சமலர் மீதுறையும் நீள்சிலம்பை வாழ்களிற்றின்
கஞ்சமலர்ப் பாதமே காப்பு.

மதுரைத் திருநீற்று விநாயகர்

நீறணிவி நாயகனே! நீஅணியும் நீறுதனைக்
கூறுகிற தூதாய்க் குறிக்கின்றேன் - ஆறணியும்
சங்கரனைய் வாழுகிற தண்ணளியோன் தூதுக்கு
மங்கலமாய்ச் சொல்எடுத்து வை.

நூல்

திருநீற்றின் சிறப்பு

சீர்வளரும் காழித் திருஞான சம்பந்தர்
பார்வளரப் பாண்டிப் பழம்பதியாம் - ஊர்வளரச்
செம்மை வளரத் திருவளர நாவளர
இம்மை மறுமை இவைவளர - மும்மையிலும்
சைவம் வளரத் தமிழ்வளரப் பாடிவைத்த
தெய்வப் பொருளே! திருநீறே! - வையத்தில்

உள்ளப் பிணியும் உடற்பிணியும் மாற்றுதற்கு
வெள்ளை நிறம்பெற்ற வேதியனே ! – தள்ளும்
அவச்சின்னம் ஆகும் அவையெல்லாம் மாற்றிச்
சிவச்சின்னம் ஆக்கும் திருவே ! – பவப்பிணிக்கு

நல்ல மருந்தான நாயகமே! ஆன்றோர்கள்
இல்லம் துறந்தே, இனிஉலகில் – அல்லல்அறப்
பொன்னைத் துறந்து, புகழைத் துறந்தாலும்
உன்னைத் துறக்கமனம் ஒப்புவரோ? – மன்னுதவத்து
என்புருகி வாழ்த்தி எழில்முனிவர் போற்றிசையும்
தென்பழனி ஆண்டவனைச் சேர்ந்தவனே – பொன்னுலக
நான்முகனும் தேட நயந்ததிரு மால்தேட
வான்ஒளியாய் நீண்ட வளப்பொருளின் – மேனியெலாம்
தொட்டுத் தழுவிச் சுகம்கண் டிருக்கின்ற
கட்டிக் கரும்பே! என் கண்மணியே! – பெட்டகத்துச்

செல்வத்துள் எல்லாம் சிறப்பாய் இருப்பதனால்
நல்ல விபூதிஎனும் நாயகமே ! – சொல்லுகின்ற
குன்றனைய குற்றம் குணமாக வே,மாற்றி
என்றைக்கும் காக்கும் இரட்சையே ! – தொன்றுதொட்டு
வைப்பாகிப் பாவத்தின் வன்மையைநீ றாக்குவதால்
செப்பும் தமிழ்சேர் திருநீறே – இப்புவியில்
பொங்கிவரும் அஞ்ஞானப் பொய்ம்மையினை நீக்குவதால்
தங்கும் புகழ்சேர்ந்த சாரமே! – மங்காது
சீர்பெற்ற ஞானச் செழுஞ்சுடரை வீசுவதால்
பார்போற்றும் இன்பப் பரிதியே! – பார்வதியாம்

மங்கையுடன் எம்பெருமான் வாழ்ந்து தனித்திருக்கும்
அங்கும் தனிச்சாட்சி ஆனவனே! – பொங்கொளிவெண்
ணீறென்று சற்றே நினைத்தாலும், அத்தகையோர்
ஆறனைய பாவம் அகற்றிடுவாய்! – "நீறுபொலி
தோற்றம் நினைப்பித்தாய்! சொல்லரிய மெய்யடியார்
நீற்றழகைக் கண்டேன் நினைந்து" என்று – போற்றி,உவர்
வண்ணனைக் கண்டு வளர்சேர மாமன்னன்
எண்ணித் தொழவைத்த ஏற்றத்தாய். – "நண்ணிச்
சிவாயநம என்று திருநீற்றை ஏற்றால்
அபாயம்ஒரு நாளும் அணுகா – உபாயம்இதே"

என்றுரைத்துச் சைவரெலாம் இட்டவுடன் ஆங்கவர்க்கே
குன்றனைய குற்றம் குறைப்பவனே! – சென்றுசமண்
ஆலயிலே மெய்அயரும் அப்பருக்கே அன்றுதனிச்
சூலயினை மாற்றும் சுடர்மருந்தே! – காலமெலாம்
நம்பி இருந்த நலம்சேர் திலகவதி
தம்பிக்கு அளித்த தனித்துணையே! – வெம்புமத
வெங்கரியின் சீற்றம் விளங்கெரியின் வெப்பமெலாம்
பொங்காமல் மாற்றுகின்ற புண்ணியனே! – இங்குலகில்
எப்பொருளைத் தீயில் எரித்தாலும் உன்வடிவம்
அப்பொழுதே ஆகிவிடும்; ஆனாலும் – செப்பரியாய்!

உன்னைத் தழலிலிட்டால் உற்றநிறம் மாறாமல்
மின்னுவாய்! ஈது வியப்பன்றோ – மன்னுலகில்
எப்பொருளும் மாறும்; இறைநிலைமை மாறாதுஎன்று
அப்பொருளைக் காட்டும் அருளுடையாய்! - கைப்பொருளாய்த்

தென்பாண்டி மண்ணில் திருஞான சம்பந்தன்
தன்பதிகம் பாடத் தழைத்தவனே! – நன்புகழ்சேர்

மந்திரமாய் நின்று மருந்தாய் உயிர்தந்து
சுந்தரமாய்த் தோன்றுகின்ற சொக்கழகே – சந்ததமும்

உன்னையே போற்றி உயரக்கூன் பாண்டியர்க்கு
மன்னுநெடு மாறன்எனும் மாண்பளித்தாய் – பொன்னனைய

மங்கைக் கரசி வளவர்கோன் பாவைக்கு
மங்கலநாண் காத்தஅருள் வாரிதியே! – பொங்கும்அன்பாய்

மெய்ப்பொருளார் வஞ்சகனை மேலாம் நமர்என்று
செப்பவழி செய்த திருநீறே! – கைப்பிடியில்

ஏற்ற பகைவனையும் ஏனாதி நாதர்தாம்
போற்ற வழிசெய்த புண்ணியமே! – சாற்றரிய

பிள்ளைக் கறியைப் பெருமானுக் கன்றருளும்
வள்ளல் சிறுதொண்டர் வாய்மலர்ந்து, – "கள்ளமிலா

நீறிடுவார் கண்டேநான் நீறிடுவேன்" என்றுமொழி
கூற வழிசெய்த கொற்றவனே! – மாறில்லா

மும்மையால் ஆண்டிருந்த மூர்த்தியார் நெற்றியிலே
இம்மைப் பயனாய் இருந்தவனே! – செம்மையுறு

பூம்பாவை என்று புனைகுடத்தில் வைத்திருந்த
சாம்பலையும் பெண்ணாக்கித் தந்தவனே! – தேம்பிஅழும்

வாணிகப்பெண் துன்பம் மருகலிலே மாற்றிஅவள்
காணும் தனிவடிவாய்க் காட்சிதந்தாய்! – வேணிகங்கை

ஆறணிவார் பாதம் அடைந்தமணி வாசகனர்
நீறணியார்க்கு அஞ்சிடும்என் நெஞ்சுஎன்று – கூறவைத்தாய்!
அன்பு வடிவாய், அறத்தின் தனிவடிவாய்
இன்ப வடிவாய் இலங்கிடுவாய்! – உன்பால்நான்

தலைவியின் ஏக்கம்

ஒருதவி கேட்பேன் உவந்ததனைச் செய்வாயா?
சீருடைய வள்ளல் திகழ்காஞ்சி – யூரினிலே
என்நெஞ்சும் என்வளையும் என்உயிரும் தான்கொண்டு
பொன்ஆர்ந்த மேனிப் பொலிவோடு – தன்ஆணை
பாரெல்லாம் செல்லப் பணிந்தவர்கள் மிக்குயர
ஊரெல்லாம் போற்ற உறைகின்ருன் — கார்அனைய
காமாட்சி அன்னை கழலிணைக்கே ஆளாகி
மாமாட்சி எய்தி வளர்கின்ருன்; – நாமத்தால்
சங்கரனே என்றும் தவப்பயனே என்றும்அவன்
செங்கமலப் பாதத்தைத் தேடுகின்றேன்; – பொங்கொளிசேர்
அந்தப் பெருமான் அருட்காத லால்உலகில்
இந்தத் தனிப்பேதை ஏங்குகின்றேன்; – சொந்தமுடன்
அன்றுஒருநாள் என்னுடைய அன்பன்உலாச் செல்லுகையில்
சென்றுஎதிரே கண்டேன்; சிவமானேன்; – குன்றனைய
மாயப் பிறவி வலியெல்லாம் மாற்றுகின்ற
தாய்ஒக்கும் அன்பின் தவம்கண்டேன் – தீயவரை
மாற்றுதற்கே வந்த வளக்காஞ்சி மாமுனிவன்
ஆற்றலுக்கே பெண்பேதை ஆளானேன்; – சாற்றரிய
'மேன'வில் நின்று வெளிப்புறமாய்ப் பார்த்ததுமே
நானன பேதம் நழுவினேன் – தேனகச்

தலைவன் செய்த அருள்

சொல்லாத சொல்லையெலாம் தூயகடைக் கண்ணாலே
கல்லான நெஞ்சுருகக் கற்பித்தான் ; – மல்லுலக
மையலிலே நெஞ்சம் வருத்தமுற்று நிற்காமல்
கையால் உயர்ஞானக் கண் திறந்தான் ; – பொய்யாத
கல்ஆலை விட்டுக் கமழ்காஞ்சி வந்தபிரான்
தொல்லை வினையின் தொடக்கறுத்தான் ; – எல்லாமே
ஈசன் திருவடிவம் என்றதனித் தத்துவத்தை
நேசமுடன் நெஞ்சில் நினைப்பித்தான் ; – ஆசையுடன்
மெய்என்று பொய்யை விரும்பாத மேல்நிலையில்
ஐயன்எனை ஏற்றி அருள்செய்தான் ; – வையகத்தில்
ஆறுசமயம் அதன்உட் பொருள் ஒன்றே
வேறில்லை என்று விளக்கினான்; – மாறில்லாத்
தெய்வத்தைச் சேர்வதுவே செப்பரிய மானிடராய்
மெய்பெற்ற பேற்றின் விளைவென்றான் ; – பொய்யாத
தத்துவத்தைத் தாண்டிச் சகத்தில்இரண் டற்றநிலை
அத்துவிதம் என்றே அறிவித்தான் ; – சித்தமலம்
மூன்றும் அகற்றிஎன் தன் மூவாசை வேர்அறுத்துத்
தோன்றாத் துணையாய்ச் சுடர்விட்டான் ; – ஈன்றவள்போல்
அன்று கருணை அவன்ஆகச் செய்தபிரான்
இன்று மறந்திருத்தல் எப்படியோ ? – இன்றவன்பால்
தூது விடுத்துச் சுகம்கான மேதினியில்
ஏதும் துணையின்றி ஏங்குகிறேன் – தூதாக

கிளி முதலியன தூதாக்காமைக்குக் காரணம்

ஆசைக் கிளியை அனுப்பினால் ஆயிரமாய்ப்
பூசையுள்ள சந்நிதிக்கண் போகாதே – நேசமுடன்
பேதைப் புறாவைப் பெரியவர்பாற் செல்கஎனில்
தூதுண்டுஎன் வாழ்வைத் துவைத்திடுமே! – ஆதரவாய்
நெஞ்சந் தனைஅழைத்து நீதூது செல்கஎனில்,
அஞ்சுபுலன் வென்றான் அவன்முன்பு – நெஞ்சம்
இறந்துவிடும்; எம்பெருமான் ஏற்றத்தால் என்சொல்
மறந்துவிடும்; தானும் மறையும்! – அறம்தழுவித்

தாமரைகள் தூதென்றால் சங்கரனும் சூரியனைத்
தாம்மருவி மீளத் தயங்குமே! – ஓம்எழுத்துப்
போன்ற மயிலைப் புனைதூ தனுப்பினால்
சான்றோர்கள் வேதத் தனியிசையும் – மூன்றுதமிழ்
ஓசை யழகும் உயர்ந்துள்ள சந்நிதியில்
பேசுதற்கு நாணிப் பெயருமே – தேசுநிறை
அன்னத்தைத் தூதாய் அனுப்பினால் அவ்வன்னம் [போல்
பொன்அனையான் சந்நிதியில் பொய்யுரைக்கும் – முன்னைப்
மேகத்தைத் தூதாய் விடுத்திடலாம் ஆனாலோ,
தாகமுடன் வந்து தனைச்சார்ந்தோர் – போகமுறப்

பெய்யும் கருணைப் பெருமுகிலின் சந்நிதியில்
கைகட்டி வெட்கிக் கரைந்திடுமே! – வையத்தில்
தென்றலைத் தூதாய்ச் செலுத்திடலாம் என்றாலோ
மன்றமெலாம் வீசி வழிமறக்கும்! – அன்றிஅது
காமனது தேர்ப்படைகாண்! காஞ்சிப் பெரியவனின்
நாமத்தைச் சொன்னால் நலிந்திடுமே! – பாமணக்கும்

செந்தமிழே தூதானால் சீரார் திருக்காஞ்சி
எந்தை பெருமான் இணையடியில் – வந்தமர்ந்து
சேவை புரிந்துதவித் தெய்வநிலை நாடல்அன்றிப்
பாவி மனத்தைப் பகர்ந்திடுமோ ? – பூவுலகில்

எம்மான் திருமுன் எழில்மானைத் தூதுவிட்டால்,
அம்மான் மயங்கி அரற்றிடுமே ! – செம்மேனிச்
சொக்கலிங்கப் பெம்மானைச் சுந்தரனைத் தூதுவிட்டால்,
இக்கலியில் மற்றதுவும் ஏற்குமோ ? – தக்கோன்
அவனுக்குத் தூதாய் அவனேபோ வானோ?
சிவனுக்குத் தூது சிவனோ? – புவனியெலாம்
நாடும் பணத்தை நலமாகத் தூதுவிட்டால்
தேடுமவன் சந்நிதிக்கண் செல்லாதே ! – வாடுகின்றேன்
யாரும் துணையில்லை என்றாலும், வெண்ணீறே !
சேரும் துணைஉன்னைச் சேருகின்றேன் – பாரினிலே

மாதருக்காம் துன்பத்தை மாற்றிடும்நீ இன்றுஇந்தப்
பேதைபடும் துன்பத்தைப் பேசாயோ? – மேதினியில்
காரணமாய் நின்றிந்தக் காசினியைக் காப்பாற்றும்
நாரணனும் தூது நடந்தானே ! – பூரணமாய்த்
தேசமெலாம் போற்றத் திருவாரூர் வீதியிலே
ஈசனும்ஓர் தூதுக் கிசைந்தானே ! – மாசில்லாப்
பேதை மனத்தைப் பெரியவர்பால் சொல்லுதற்கு
ஆதரவாய் நீயிருந்தால் ஆகாதோ ? – சோதனையாய்
ஐந்து புலனால் அடிபட் டிருக்கும்உயிர்ப்
பந்துபடும் பாட்டைப் பகராயோ? – நொந்தமனம்

காதல் பெருகிவரக் காஞ்சி வளர்ஞானச்
சோதியினை நாடுவதைச் சொல்லாயோ? – பாதகத்தை

நீக்கிஉல கத்தனையும் நேராய்ஆட் கொண்டுகலி
போக்கும்உனை அன்றிப் பகல்உளதோ? – நோக்கமுறும்

சீரார் குருவாய்த் திகைப்பகற்றி வாழ்கின்ற
பேரார்ந்த காஞ்சிப் பெருமுனிவன் – சீரெல்லாம்

எப்படிநான் சொல்வேன்? இறைவன் சிறப்புஎன்ன,
கைப்பிடிக்குள் நிற்கக் கடுகளவா? – இப்புவியில்

தசாங்கம்

ஆட்டமிடும் ஐம்புலனுக்கு அங்குசம்போல் ஆன்மீக
நாட்டமுறும் அஞ்செழுத்து நாமத்தான்; – ஆட்டுவிக்கும்

பாரில் ஒருநாள்தான் பார்த்தவரை எப்பொழுதும்
நேரில் நிறுத்தும் நினைவுடையான்; – சீருடனே

தானந்தம் இல்லாத் தனிப்பெருமை பெற்றமையால்
ஆனந்தம் ஊறிவரும் ஆறுடையான்; – மோனம்சேர்

முல்லை முறுவல் முகம்கண்டோர் வீற்றிருக்கும்
நல்ல சிவானந்த நாடுடையான்; – சொல்லிடையே

கள்ளமின்றி நீயே கடவுள்எனும் மெய்யன்பர்
உள்ளக் கமலம்எனும் ஊருடையான்; – தெள்ளுதமிழ்

பாடாத நாவைப் படைக்காதார் பாடிவரும்
வாடாத பக்திப்பா மாலையினன்; – ஓடாமல்

ஏறுபுகழ் மெய்த்தொண்டர் எங்கே நினைத்தாலும்,
மாறாது செல்கருணை வாசியினன்; – கூறவொணாது

ஆட்டும் புலன்பொறிகள் அத்தனையும் தன்திறனால்
வாட்டுகிற ஞான மதகளிற்றான்; – வீட்டரசில்

நெஞ்சழுத்தி நிற்பவரை நேர்வழியில் ஆட்கொள்ளும்
அஞ்செழுத்துப் பேர்முரசம் ஆர்த்தபிரான்; – செஞ்சொல்லில்

பண்பேசி நிற்கும் பதமெல்லாம் தந்திடவே
கண்பேசும் அன்புக் கனிமொழியான்; – விண்பேசச்

சென்றடியார் பால்அணுகும் தீமைகளை மாற்றிஅவர்க்கு
அன்றே பதம்கொடுக்கும் ஆணையினன்; – என்றைக்கும்

இத்தரணி மீதில் இரண்டற்ற மேல்நிலையாம்
அத்துவிதம் காட்டும்அருள் ஆட்சியினன்; – சித்தமெனும்

கோயிலுக்குத் தெய்வமெனக் கும்பிடுவார் நெஞ்சமலர்
வாயிலுக்குத் தாழும் மணிமுடியான்; – தாயனைய

தெய்வம் மனிதஉருச் சேர்ந்தநிலை காட்டுதற்கு
வையகத்தில் வந்த மலரடியான்; – கையெடுத்துக்

கும்பிடுவார் நெஞ்சக் குறைமாற்றி ஆட்கொண்டு
தன்பதவி நல்கும் தளிர்க்கரத்தான்; – செம்பதுமத்

தேவன் படைத்த செகமெல்லாம் தன்னுடைய
காவல் எனவந்த கண்ணபிரான்; – தாவுகிற

நெஞ்சக் குரங்கின் நிலைமாற்றித் தன்னடிக்கீழ்த்
தஞ்சம் அளிக்கும் தகவுடையான்; – செஞ்சரணப்

பாத மலர்காட்டிப் பணிவார்க்கு மெய்ஞ்ஞானப்
போதம் அளிக்கும் புகழுடையான்; – சாதனையாய்

மூவுலகும் வாழ்வதற்கே மூன்று கவளத்தில்
ஆவி யடக்கும் அருந்தவத்தான்; – மேவுகிற

பொன்னும் உடம்பில், புகழுடைய வெண்ணீறே!
உன்னை அணியும் உயர்வுடையான்; – தன்னடியில்
தங்கிடுவார்க் கென்றும் தனிச்சுகத்தை ஈவதனால்
சங்கரனும் நாமம் தரித்தபிரான்; – பொங்கிவரு

கங்கைப் பெருக்கைக் கருணைப் பெருக்காலே
மங்கலமாய் வெல்லும் மனமுடையான்; – செங்கமலத்

தேவி மகிழ்ந்து திருமுகத்தில் வீற்றிருக்கப்
பாவிகளைக் கைதூக்கும் பண்புடையான்; – நாவுடையார்

ஞானிஎனத் தன்புகழை நாளெல்லாம் சொன்னாலும்
மோனத்தில் நிற்கும் முழுமையான்; – வானத்துத்

தேவர்க் கரியான்; திகழ்காஞ்சி மாநகரான்;
மேவும் அருளின் விளக்கொளியான்; – பாவிஎனைக்

தலைவியின் காதல்நிலை

கண்காட்டி நோக்கிக் கழல்காட்டி ஆட்கொண்டு
விண்காட்ட இன்னம் விழையாமல் – பெண்வாட்டம்

அத்தனையும் கேட்டும் அறியாதான் போல்இருந்தால்,
இத்தரையில் வேறுதுணை யாருள்ளார்? – தத்துவம்சேர்

கும்பிட்ட தெய்வம் கொடுக்கும்எனும் அந்தஒரு
நம்பிக்கை யாலே நலிகின்றேன்; – எம்பெருமான்

தேசுடைய சந்நிதியில் தேவரெலாம் போய்மிதிக்கும்
தூசாக வைத்தாலும் சோர்வடையேன்; – வீசுகிற

தென்றல்அவன் மேற்பட்டு சிற்றடியேன் மேற்பட்டால்,
மன்றலைப் போல மகிழ்ந்திடுவேன்; – என்றென்றும்

மாறாக் கருணையினன் வாயசைத்தால், என்நெஞ்சில்
ஆறாத இன்பம் அடைந்திடுவேன்; – நீறணியும்

தீர்த்தன் கடைக்கண் திருப்பார்வை யால்என்னைப்
பார்த்தால் பழையவினைப் பற்றறுப்பேன்; – ஏத்தரிய

விண்மாரி வென்று விளங்கும் கருணையன்என்
கண்மாரி காக்கக் கருதானோ? – மண்மாறிப்

பாதாளம் சேர்ந்தாலும் பற்றியவர் துன்பகற்றும்
வேதாஎன் துன்பம் விலக்கானோ? – ஆதரவாய்

வையம் பிடிக்கும் மலர்ப்பதத்தான் என்னுடைய
கையைப் பிடிக்கக் கருதானோ? – தெய்வமெலாம்

தன்பூசை செய்யத், தவம்கிடக்கும் எம்பெருமான்
என்பூசை ஏற்றற்கு இசையானோ? – மன்புவியில்

பூமாலை ஏற்றுப் பொலியும் பெருமான்,என்
பாமாலை கண்எடுத்துப் பாரானோ? – கோமாதைக்

காலையிலே போற்றும் கருணையினான், என்நெஞ்சம்
மாலையிலே வட்டமுற வைப்பானோ? – சீலம்

நினைப்பித்த தெய்வம்,இன்று நேரிழையாள் நெஞ்சம்
தனைப்பித்தம் ஆக்கத் தகுமோ? – எனைப்பித்தம்

ஆக்கிவைத்த செம்மல் அவன்அடியை என்முடியில்
தூக்கிவைத்தால் துன்பச் சுமைஅகலும் – நோக்கரிய

கண்பார்வை பட்டால், கலிப்பார்வை நீங்கிவிடும்
தண்பார்வை பட்டால், தணல்குளிரும் – பெண்பாவை

நெஞ்சத்து வெப்பம், நிறைகாஞ்சி நின்மலனின்
செஞ்சரணம் பட்டால் சிதைந்துவிடும்; – கொஞ்சிமகிழ்

சீருலகம் பேசுகிற சிற்றின்பம் நாடவில்லை;
பேரின்பம் வேட்டுப் பிதற்றுகின்றேன் – பாரில்

பணச்செல்வம் வேண்டேன்; பதச்செல்வம் வேண்டிக்
குணக்குன்றே உன்பால் குழைந்தேன்; – மணக்கின்ற

வெண்ணீறே! உன்னை விமலன் திருக்கரத்தால்
கண்ணார ஏற்கக் கருதுகின்றேன்; – பெண்ணாவாள்

நெஞ்சக் கனவுக்கு நீயன்றோ சாட்சி! அவன்
தஞ்சம் அடைந்தவரைத் தள்ளுவனோ? – செஞ்சரணம்

காட்டிஎனை ஆண்டதையும், காஞ்சிஅருட் சோதிகரம்
நீட்டிஉரை யாடல் நிகழ்த்தியதும் – காட்டரியான்

மாட்சியுறும் நெற்றியிலே வாழ்ந்திருந்த இத்தனைக்கும்
காட்சிஎனக் கண்டதுநீ தான்ஐயா ! – மீட்சிஉன்னால்

செல்லற்குரிய வழி

அன்றிஇலை என்றே அரற்றுகின்றேன் ; நீதூதாய்ச்
சென்று மனத்தைத் தெரிவிப்பாய் ! – தென்றலொடு

செந்தமிழும் வீசும் திருவால வாய்ப்பெருமான்
சந்தமுறும் கோயில் தனிலிருந்து – சொந்தமெனக்கு

ஆகும் தவமுனிவன் அம்காஞ்சி மாநகர்க்குப்
போகும் வழியைப் புகலுகிறேன் – ஏகம்எனச்

சொல்லும் சிவத்தைத் தொடரும்உனக்கு இவ்வழியைச்
சொல்லிடஇப் பேதை தொடாங்குவதா ? – நல்லவர்கள்

எந்தவழிச் சென்றாலும் எம்மானைக் கண்டிடலாம்
அந்தவழி நீயும் அறிந்ததுவே ! – சிந்தனையால்

என்நெஞ்சம் சாந்தியுற ஏதோ உரைக்கின்றேன்
பல்நலமார் காஞ்சிப் பதிநாடும் – என்உயிரே !

அங்கயற்கண் அம்மையுடன் ஆல்வாய் அப்பன்உறை
செங்கமலக் கூடல் திறம்காண்பாய் ! – அங்குஅகன்று

நன்றுடையான் தியதிலான் நாடும் சிராப்பள்ளிக்
குன்றுடையான் பாதத்தைக் கும்பிடுவாய் ! – சென்றினிமேல்

இஞ்சிசூழ் தஞ்சை எழுந்த பெருவுடையார்
கஞ்சமலர்ப் பாதத்தைக் கைதொழுவாய் ! – பஞ்சநதத்து

அப்பனுடன் வாழும் அறம்வளர்த்த நாயகியின்
செப்பரிய பாதமலர் சிந்திப்பாய் – ஒப்பில்லா

எந்தை விநாயகனார் ஏற்ற வலஞ்சுழியைச்
சிந்தனையிற் கண்டு சிறப்புறுவாய் ! தந்தைக்கு

முன்னைக் குருவாய் முருகன்உறை சாமிமலை
தன்னை யடைந்து தமிழுரைப்பாய் ! – என்ஐயன்

வள்ளல்எனும் சங்கரனார் வாழ்சாமி நாதன்எனப்
பிள்ளைத் திருநாமம் பெற்றமையால் – கள்ளமிலா

நெஞ்சத்தார் போற்றும் நிறைசாமி நாதனையே
தஞ்சம் அடைந்தநிலை சாற்றிடுவாய் – நெஞ்சில்

மடம்நீக்கக் கும்பேசன் வாழ்ந்திருக்கும் மேன்மைக்
குடமூக்கை நெஞ்சிற் குறிப்பாய் ! – இடம்கண்டு

மாண்புடைய காஞ்சி மடத்தைஅவண் கட்டிவைத்தோர்
காண்பரிய பண்புக்குக் கைகுவிப்பாய் ! – வீண்புவியில்

மாய-வரம் ஈயாமல், வண்பதத்துக்கு ஆளாக்கும்
மாயவரம் போற்றி மகிழ்ந்திடுவாய் ! – தூயவனாய்

எல்லையிலாப் பேரருளால் எம்பெருமான் ஆடுகிற
தில்லையினை நேரில் தெரிசிப்பாய் ! – சொல்லரிய

சந்தனமாம் காஞ்சிவள்ளல் தானே பிறப்பெடுத்து
வந்த விழுப்புரத்தை வாழ்த்திடுவாய் ! – சிந்தனையில்

ஆதரிப்போர் நெஞ்சென்னும் ஆலயத்துள் நின்றபிரான்
பாதிரிப்பேர் நற்புலியூர் பார்த்திடுவாய் ! – காதலினால்

இத்தனையும் தாண்டியபின் என்மனம்போல் வேகமுடன்
தத்துவனார் காஞ்சியினைச் சார்ந்திடுவாய் ! – வித்தகமாய்ப்

தூது சொல்லும் முறை

பொன்னாய் ஒளிரும் புதுப்பெரி யார்அடிக்கே
என்வணக்கந் தன்னை எடுத்துரைப்பாய் ! – மன்னுபுகழ்

வேதாந்தம் கற்றவரும் விண்ணுலகத் தேவர்களும்
போதந் தனையடைந்த புண்ணியரும் – ஆதரித்துக்

காப்பாற்ற வேண்டும்எனும் காசினியின் மாந்தரும்தம்
மூப்பாற்ற வேண்டி முதியோரும் – பாப்புனைந்து

பார்த்தவுடன் நீட்டுதற்குப் பாவலரும் வந்துநின்று
காத்திருக்கும் எம்மான் கழலிணையைப் – பார்த்திடுவாய்!

வெண்ணீறே! உன்னை விரும்பி எடுத்தணிவார்;
கண்ணார நெற்றியிலே காட்டிடுவார்! – பெண்ஆவாள்

என்நிலையைச் சொல்வாய்! எழில்கொட்டும் எம்பெருமான்
தன்அடிக்கே நெஞ்சம் சரண்என்பாய் – பொன்னுலகில்

பேசாப் பெரியவர்பால் பெண்பேதை கொண்டுள்ள
ஆசைப் பெருக்கை அறிவிப்பாய் – நேசத்தால்

ஆறாய்ப் பெருகிவரும் அன்பாலே இவ்வுடலம்
நீறாகி நிற்கும் நிலைசொல்வாய் – "பேறாக

வேறொன்றும் வேண்டாள்; வியன்பெருமைக் கையால்வெண்
ணீறொன்றே வேண்டும்" என்றுஎன் நெஞ்சத்தைக் –
கூறிடுவாய்!

தென்மதுரை நற்பசுவைச் சீர்காஞ்சி மாபதிபால்
இன்பமுற மீண்டும் இணைத்திடுவாய்! – பொன்னுலகில்

அன்றுமது ரைக்காஞ்சி ஆனதுபோல், ஒன்றாகி
இன்றுமது ரைக்காஞ்சி என்றாகச் – சென்றிடுவாய்!

காலடியில் தோன்றிக் கருணைதர வந்தபிரான்
சீலமுடன் செய்த செயலைப்போல், – கோலமுறும்

ஆடகப் பொன்னாலே அகிலாண்ட நாயகிக்குத்
தாடங்கம் சூட்டும் தளிர்க்கரத்தால் – நீடுபுகழ்த்

தத்துவத்து ஞானிஎனத் தாளடியில் சான்றோர்கள்
வைத்தருளும் மல்லிகைப்பூ மாலையினை – வித்தகமாய்த்

தேசுபெறத் தூக்கித் திருமார்பில் சூட்டிநிதம்
ஆசி வழங்கும் அருட்கரத்தால், – நேசமுடன்

நல்வியாச பூசையினை நாளும் நடத்திவரச்
செல்வமகள் தங்கும் திருக்கரத்தால், – அல்லல்அற

வெண்ணீறே! உன்னை விரைந்தளிக்க வேண்டுமெனக்
கண்ணீரால் கேட்கும் கதையுரைப்பாய்! – எண்ணரிய

பாவை இரண்டும் பரவவிழாக் காண்பவன்மேல்
பாவையுளம் ஈடுபட்ட பாங்குரைப்பாய் – பூவுலகில்

எப்பாடு பட்டாலும் எந்நிலையில் நின்றாலும்
அப்பா! உன் தாளுக்கு அடைக்கலமாய்ச் – செப்பரிய

ஞானத் திருவடிவாம் நாயகனே உன்னுடைய
மோனத் தவத்து முறுவலினால் – தான்அகன்ற

பேதை மதுரைப் பெரும்பதியில் வாழ்பவனை
நீ,தயவாய் ஆண்டு நிறைவித்து – மாதுமனக்

குற்றங்கள் நீக்கிக் குணம்கொண்டு கோதாட்டிப்
பெற்ற தவத்தின் பெரும்பயனை – முற்றுவித்துக்,

காண்பரிய மேன்மைக் கழலிணையில் சேர்த்துஅவனை
ஆண்டருளி இன்பத்து அழுத்திவிட – வேண்டும்எனக்

கள்ளமிலா வெண்ணீறே! காஞ்சியிலே தூதுரைத்து
வள்ளலிடம் மாலைபெற்று வா!

வெண்பா

சங்கரன் மேனி தழுவும் திருநீறே!
மங்கைக் கரசிக்கோர் வாழ்வானாய்! – பொங்கும்
அருமாலைக் கொண்டேற்கு அணிக்கச்சி யான்பால்
மருமாலை நீவாங்கி வா!

ஸ்ரீ சந்திர சேகரேந்திரர் உலா

முன்னுரை

தமிழ் மொழிக்குரிய சிற்றிலக்கியங்களுள் உலா ஒன்று. தலைவன் உலா வருங்கால் பருவமகளிர் கண்டு காதலுறுவ தாகப் பாடப்பெறுவது.

பெருங்கதை, சிந்தாமணி, இராமாயணம் முதலிய நூல்களில் தலைவன் உலா வருவதாகவும், மகளிர் கண்டு மயலுறுவதாகவும் சில பகுதிகள் உண்டு. இப்பகுதிகளே விரிவடைந்து தனி நூலாக மலர்ந்தது எனலாம்.

சேரமான் பெருமாள் நாயனார் பாடிய ஆதியுலா காலத்தால் முந்தியது. அதில் உலாவுக்குரிய இலக்கணங்கள் அனைத்தும் செவ்விதின் அமைந்துள்ளன. ஒட்டக்கூத்தர் பாடிய மூவருலாவும் பழமையானதே. இந்நூல்களை அடி யொற்றி நூற்றுக்கணக்கான உலா நூல்கள் தமிழில் எழுந்து உள்ளன.

தலைவன் பெருமை, தசாங்கம், திருமஞ்சனம், அணி புனைதல், உலாப் புறப்பாடு, உடன் வருவோர் ஆகிய பகுதிகள் விரிவாகக் கூறப்பெற்ற பின், பேதை முதல் ஒவ்வொரு பருவ மகளிரும் அவ்வுலாக் கண்டு அடையும் நிலைகளைச் சுவைபடக் கூறுவது இவ்வுலாவின் அமைப்பாகும்.

பெண்களின் ஏழு பருவங்களையும் நுணுக்கமாக வேறு படுத்திக் கூறுவது அரிய செயல். வல்லாரே இதைச் செவ்விதின் செய்ய முடியும்.

ஆசாரிய சுவாமிகள்பால் கொண்ட அன்புப் பெருக்கினால் இப்பணி தலைமேற் கொண்டேன். இப்பணியில் ஈடுபடுத்தி ஆட்கொண்ட அண்ணல் அருட்பெருங்கருணையை வியந்து வாழ்த்துகிறேன்.

மதுரை,
18—5—73.

வி. துரைசாமி

ஆசிரியரைப் பற்றி . . .

வித்துவான் திரு வி. துரைசாமி, M. A., அவர்கள் 1923-ஆம் ஆண்டு திருச்சி மாவட்டம் சோபனபுரத்தில் பிறந்தவர். ஸ்ரீ சேஷாசல சுவாமிகளிடமும் திருவையாற்றுத் தமிழ்க் கல்லூரியிலும் பயின்றவர். திருவரங்கம், சேலம், திருப்பாண்டிக் கொடுமுடி, திருச்சி முதலிய ஊர்களின் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். தற்போது மதுரையில் உள்ள மதுரைக் கல்லூரியில் தமிழ்த் துணைப் பேராசிரியராகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறார்.

1943-ஆம் ஆண்டு முதலாகவே கலைமகள் இதழில் இவர் கவிதைகள் வெளிவருகின்றன. வானொலியில் இவரியற்றிய பல கவிதை நாடகங்கள் ஒலிபரப்பப் பெற்றுள்ளன. தமிழகத்திலுள்ள மாத, வார, நாள் இதழ்கள் பலவற்றில் இவர் கவிதைகள் வெளிவருகின்றன.

தில்லி சாகித்ய அகாதமியார் இவர் கவிதைகளை இரு முறை தேர்ந்தெடுத்து இந்தி ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர்.

முதற்காதல், அமுதகலசம் ஆகிய இரு கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். இவர் பிற படைப்புக்கள் கண்ணகி விருத்தம், சம்பந்தர் வெண்பா, முருகன் ஆறுபடை வீட்டு வெண்பா மாலை, ஸ்ரீ சந்திர சேகரேந்திரர் நெஞ்சுவிடு தூது, ஸ்ரீ சோமசுந்தர தேசிகர் மும்மணிக்கோவை முதலியன.

ஸ்ரீ சந்திர சேகரேந்திரர் உலா

வித்துவான் வி. துரைசாமி, எம்.ஏ.

காப்பு

பேரருள்கூர் காஞ்சிப் பெரியவர்மேற் பாடும்உலாச்
சீருடைய தாகிச் சிறக்கவே — தார்உகளும்
அஞ்சுகரத் தானைமுகன் அன்பர்உளம் ஆலயங்கொள்
கஞ்சமலர்த் தாளிணையே காப்பு.

அவையடக்கம்

ஈயுங் கசடும் இயைந்ததெனத் தேன்எடுக்க
ஆயும் மனிதர் அகல்வரோ? — பாயும்அன்பிற்
சொற்குப்பைக் குள்ளும்ஒரு சொல்நயம்காண் பார்பெரியோர்
எற்கதுவே போதும் இனி.

நூல்

இறைவன் பெருமை

நீருண்ட மேகவண்ண நின்மலனும்[1] நான்மறையின்
பேருண்ட சீர்த்திப் பிரமனுமே — ஏருண்ட

சேவடியுஞ் செஞ்சடையும் சென்றடைந்து காண்பம்என
ஆவலொடு பன்றியாய் அன்னமாய் — மேவியுமே

ஒண்ணாத சீர்த்தி உருவாய் அருவமாய்
நண்ணாதார் வாழ்வில் நமனாகிப் — பண்ணார்ந்த

பாடற் சுவையாய்ப் பனிமலரின் நன்மணமாய்
ஆடற் கலைக்கோர் அரசாகி — வேடற்கு

நாளாறில் முத்திதனை நல்கிச் சிலந்தியையும்
ஆளாக்கி இவ்வுலகை ஆளவைத்தோன் — தூளாக்கி 5

---

1. நின்மலன் – திருமால்.

முப்புரங்கள் மாய்த்த முழுமுதலாய்ப் பாண்டியன்மெய்
வெப்புரமும் புன்சமய விருப்பும் — செப்புதமிழ்ப்

பாவால் தணித்த பரம்பொருளாய்க் காமன்எய்த
பூவால் அவன்உடலைப் போக்குவித்து — நாவால்

துதித்தரற்றும் தேவி துயர்களைந்து வெற்பில்
உதித்த இறைவிதனை உள்ளம் — பதித்தே

மணம்புரிந்து பல்லுலகின் மன்னுயிர்கள் வாழும்
வணம்புரிந்து தேவர் மகிழக் — கணம்பலவும்

பாடிப் பரவப் பராபரமாய்க் காஞ்சிநகர்
நாடி அமர்ந்ததெய்வ நாயகன்தான் — சேடியரோ(டு)

அன்றுகம்பை மாநதியில் ஆரா தனைபுரிந்த
துன்றுகுழல் அன்னை துணுக்குறவே — சென்றுவெள்ளம்

பாய்ந்துவரச் செய்துஅந்தப் பாவை அணைப்பினிலே
தோய்ந்துகொங்கை யோடு தொடித்தழும்பும் —
வாய்ந்தின்பம்

துய்த்தமர்ந்த பாதிமதி துன்னுசடைத் தூயவன்
மெய்த்தலத்தில் பாதி மிளிர்கின்ற — பொய்த்தஇடை

ஆதி சங்கரர்

அண்டர்தொழும் காமாட்சி அன்னைக் குயர்பீடம்
பண்டமைத்த ஆதி பரமகுரு — கொண்டல்என

ஆதி முதலின் அருட்பெருக்கை மண்ணுலக
வீதி தொறுமிறைத்த வீறுடையான் — வாதினரும்

காலடியி லேபணியக் கண்ணுதலின் ஓரமிசம்
காலடியில் வந்த கருணையுரு — பாலடிசில்

கற்கண்டு தேன்இவைகள் கைப்படையப் பற்பலவாம்
சொற்கொண்ட நூல்கடந்த சொக்கழகன் — தெற்கிருந்து

வானூர் இமய வரைகானும் வாசமிகு
தேனூர் கமலத் திருவடியால் — ஆனூத

புத்தமுத மாகப் புவியோர் புகழ்சமய
அத்துவிதம் தந்த அருமறையோன் — மெத்தப்

பிணியுடலின் கட்டறுக்கப் பெம்மான்மேல் சுப்ர
மணிய புசங்கம் வனைந்து — தணியாத

மூட மதியைஅன்று முன்நிறுத்திக் கோவிந்தப்
பாடலினூல் ஞானம் பதிவித்தோன் — சீடரொடு

வேதாந்தப் பாதை விரித்துயிர்கள் வீடுபெற
நாதாந்தப் பேரொளியை நாடினேன் — ஆதார

பத்தியொடு ஞான பரமாசார் யப்புனித
சத்தி மிகும்ஆதி சங்கரன்றூன் — இத்தருணம்

சேமம் தரவே செகத்குருவாய்ச் சீர்க்கச்சி
காமகோ டிப்பீடக் காவலராய் — நாமமதும்

சந்த்ரசேக ரேந்த்ர சரஸ்வதியாய் இப்புவியில்
வந்தமர்ந்த ஞான வரோதயராம் — முந்தையோர்

ஆற்றும் தவத்தால் அவதரித்துஇம் மண்ணனைத்தும்
போற்றும் திறத்துமுனி புங்கவனூர் — ஊற்றும்

கருணைப் பெருக்கினூல் காசினியை நீராட்
டருணவொளி காலுமுகத் தையர் — மரணபயம்

காஞ்சியின் பெருமை

தீர்த்துமுத்தி நல்கும் திருப்பதிகள் ஏழினுள்ளே
சீர்த்ததிருக் கச்சிச் செழும்பதியாய் — வார்த்தைமனம்

சற்றும் அணுகவொணுச் சங்கரனே கம்பன்எனும்
கற்றைச் சடைக்கடவுள் காமாட்சி — யுற்றொருபால்

பாகம்கொண் டாளப் பரிவால் வணங்குபவர்
சோகம் கெடுக்கும் சுவர்க்கமாய்ச் — சேகரித்த

பாவப் பயிரின் பசுமையிலே காஞ்சியாய்
ஈவதறி யாதோர் இதயத்தும் — சீவர்களுக்

குற்றநோய் நோலா வுளத்தோர்தம் வாழ்வினிலும்
கற்றவரைத் தூற்றுகின்ற கன்மனத்தும் — சொற்றமறை

நத்தம்போல் கேடும் உளதாம்சாக் காடென்னும்
வித்தகத்தும் காஞ்சியாய் வீறுபெற்று — மெத்தத்

திருவெஃகா யோகியர்தம் சித்தத்தில் தேர்ந்த
திருவெஃகா வாகித் தினமும் — மருவுகின்ற

அம்முதலை வாய்விடா அத்திகிரி யாகியன்பர்
விம்முதலை நீங்கா வியன்பதியாய் — வம்மின்என

ஆழ்வார் அழைக்க அதிவேக மாய்எழுந்து
சூழ்நாகப் பாயல் சுருட்டியே — வீழ்நறவத்

தண்ணந் துழாயசையத் தாமரையாள் மார்பிலங்க
மண்ணில் அடிபெயர்த்து மால்நடந்த — விண்ணகராய்

வாக்குத் தவறிவந்த வன்றொண்டர் பார்வையற்ற
ஏக்கம் தவிர்த்தொருகண் ஈந்தன்று — போக்கிய

இன்னருள்ஏ கம்பமாய் எந்தாய் மருங்கசைத்த
பொன்னிழையாம் காஞ்சியாய்ப் பூத்திருக்கும் — நன்னகரில்

மூர்த்திச் சிறப்பு

எட்டான சித்திரையை ஏலாதென் றேவிழுங்கி
விட்டார்வை காசியார் வெம்பிறவிக் — கட்டினுக்கே

ஆனியார் மன்றிலே ஆடியா னைப்பரவு
மோனியார் காஞ்சி முனிவரர் — ஊனுருகப்

பாடும்எமக்(கு) ஆவணியார் பண்டுபக வத்பாதர்
ஏடுபுரட் டாதியார் எம்மம்மை — வீடுதரும்

பேரருளை யன்றிப் பிறிதுபொரு ளைப்பசியார்
ஆரணத்து ஆகமத்துஇங் கார்த்திகையார் — ஆரமொடு

மாட்சி தருருத் திரகண்டி மார்கழியார்
ஆட்சிசெயும் வெவ்வினைகள் அற்றுவிழக் — காட்சியினால்

பண்டுதரி சித்தவரைப் பாசத்தி லேதையார்
அண்டரெலாம் தந்திருக்கு மாசியார் — கண்டகரின்

வெவ்விருப் பங்குனியார் வெந்தழிய வேநகைத்தார்
திவ்விய ஞானத் திருவுடையார் — கவ்வும்

பிறப்பென்னும் பேதைமை நீங்கப் பெரிதும்
சிறப்பென்னும் செம்பொருள் தந்தார் — துறப்பிற்

புதல்மறைந்து வேட்டுவன் புள்சிமிழ்த் தன்ன
அதம்புரி வாரை அடர்த்தார் — நிதநிதமும்

பாதம் படியவந்த பாமரரின் பால்மகிழ
ஏதம் துடைத்தருளும் ஈசனார் — மேதகவே

அஞ்சு புலன்க ளடங்க அனுப்பிவைத்த
நெஞ்சுவிடு தூதுகொண்ட நின்மலனார் — விஞ்சுமருட்

பாவை யிரண்டினையும் பாரில் இணைத்துலகோர்
நாவை யிசைக்கவைத்த நற்றவத்தோர் — மேவுமுயர்

சிற்பக் கலையின் சிறப்பினையும் வேதவிதி
விற்பனர்தாம் கண்ட வியன்கலையாம் — பொற்புமிகும்

ஆகமமும் மக்கள் அறிய அவைகூட்டிச்
சேகரவே ஆய்விக்கும் சிந்தையினார் — தோகையோர்

பங்கன் திருவாய் மலர்ந்த பழமறைகள்
பங்கப் படுமியல்பைப் பார்த்துருகி — எங்கணுமே

வேதகலைக் கூடம் விளங்கப் புரிவித்தும்
போதமுறக் கற்ற புலவோர்க்குத் — தீதகலப்

பல்லா யிரங்கள் பரிசளித்தும் ஊக்குவிக்கும்
சொல்லால் அளக்கவொணாச் சோதியார் — கொல்லா

விரதியரும் தாம்வியக்கும் விண்ணோர் புகழ
நிரதிசய வின்பம் நிகழ — விரதமென

ஈரிரண்டு மாதம் இருக்கும் தவம்உடையார்
வாரிமொண்டு கொண்டவருள் வாக்கினார் — மாரியெனக்

கண்கள் இரண்டும் கதித்த அருட்பெருக்கால்
மண்களி கூர மழைபொழியப் — பண்கனியும்

நால்வேதப் பாடலொடு நற்றமிழ்வே தப்பாடல்
கால்வா யெனப்பாயக் காமாட்சி — சேல்போலும்

தெய்வவிழிப் பார்வை திருமேனி யிற்றிகழ
உய்வகையை ஓர்ந்துரைக்கும் ஒப்பிலார் — மெய்வகையால்

திருமஞ்சனம் ஆடல்

திக்கனைத்தும் போற்றுதிருக் கச்சித் திருமடத்தில்
பக்கமெலாம் வேதமொடு பைந்தமிழும் — மிக்கொலிக்கப்

பெண்ணாசை யாலன்று பெற்ற கொடுஞ்சாபக்
கண்ணா யிரத்தோன் கரம்பிடித்த — பண்ணார்ந்த

வச்சிரம் ஏய்ப்ப வயிரக்கால் தூணமைத்
துச்சியெலாம் சோழன் உவந்தமைத்த — நச்சரவத்

தாடற் பிரானுக் கணிசெய் விதானம்போல்
ஆடகப் பொன்வேய்ந் தணிசெய்து — கூடமெலாம்

முத்துச் சரங்கள் முழுநிலாக் கான்றிடவும்
கொத்தாய் மணிகள் குயிற்றியிட்ட — வித்தகத்து

வண்ணச் சுவர்கள் வயங்குமணி மண்டபத்துக்
கண்ணகன் ஞாலம் களிகூர — நண்ணியே

மையத்தி லிட்ட மணிச்செம்பொற் பீடத்தில்
ஐயர் அமர்ந்திருக்க வாங்கொருசார் — வையத்துக்

கந்திருவ ரென்னும் கலைஞர் கவின்பெறவே
சுந்தர நாத சுரம்இசைக்க — அந்திநிற

அண்ணல் சடையை அகலா தமர்ந்திருக்கும்
பெண்ணல்லாள் தானே பெரிதுவந்து — மண்ணுள்ளோர்

பார்த்து மகிழப் பசுபதியின் பொன்மேனி
வார்த்து மகிழ்ந்த வகையென்னத் — தீர்த்தமதை

முப்புரிநூன் மார்பர் முறையால் அபிடேகம்
செப்பரிதாம் வண்ணம் சிறப்பிக்க — ஒப்பரிதாம்

அலங்காரம்

செக்கர் நெடுவானைக் கீறிச் சிறிதெடுத்துச்
சொக்கர்அன்று கொண்ட சுடர்உருவின் — பக்கமெலாம்

சுற்றிப் புனைந்ததெனச் சுத்தத் துவராடை
யுற்றிடையில் மேலும் ஒளிசெய்ய — முற்றுணரும்

அண்டர் பிரான தருள்முகந்து கொண்ட,க
மண்டல மோர்கரத்து மாட்சிபெற — மண்டும்

அகந்தை முதலா அனைத்தும் சிதைய
வுகந்ததொரு தண்டம் ஒருகைத் — திகழ்ந்திட

வான வெளியில் வறிதே திரிந்திளைத்துப்
போனமின்னற் கீற்றெல்லாம் போந்திங்கு — மோனமுனி

ஆகத் தலமாம் அரியா சனம்அமரும்
மோகத்தில் வந்து முகிழ்த்ததெனச் — சோகத்தின்

வீறு தணித்துமுத்தி வேண்டுவார்க் கீந்தருளும்
நீறு குழைத்தணிந்து நேயமுடன் — மாறிலா

அன்பால் அடியார் அடியிணையைப் பூசைசெய்ய
இன்பால் மகிழ்ந்தருளி ஈந்துதவி — முன்பால்

திருவீதிக் கெழுந்தருளல்

மறையொலிக்க நற்றமிழாம் மாவேதம் பின்பால்
முறையொலிக்கப் பேரி முழங்கக் — குறைவில்லாத்

துந்துபி, எக் காளம் தொனிப்ப அலையலையாய்
வந்துதொழு வார்முழங்க வாயில்தொறும் — சிந்தைகளி

கூர்ந்தெடுத்த பூரண கும்பக் குடங்களொடு
நேர்ந்தெதிர்ந்த மக்கள் நெருங்கவே — தேர்ந்தமைத்த

வண்ணமணிக் கோபுர வாயில் பலகடந்து
விண்ணளவு மாடநிறை வீதியிலே — பெண்அணங்கார்

கையின் வழிநயனம் சென்றிடவே கண்வழியே
மைய லுடைய மனம்செல்ல — ஐயர்வரும்

அவ்வழியி லாட அணிகுழலின் வண்டுகள்தாம்
செவ்வழியைப் பாடிச் சிறகசைத்துச் — சிவ்வெனவே

பாய்ந்து சுழலப் பரமனார் செஞ்சடையில்
வேய்ந்தபிறை முற்றி வியன்குடையாய்ப் — பாய்ந்ததெனத்

தண்ணிலவு வெண்குடையும் தாழத் தனக்கடங்கும்
வெண்ணிலவுக் கித்தனையோ வீறென்று — நண்ணியே

செஞ்சுட ரோனும் செழுங்குடையாய் வந்தங்கு
விஞ்சி யொளிர்தன் வெயிலையே — வஞ்சமின்றித்

தானே மறைக்கும் தகைமைபோல் செம்பட்டி
லான குடையு மணிசெய்ய — வானிற்

குளிர்தா ரகையனைத்தும் கூட்டிக் குயிற்றி
ஒளிர மயனார் உகுற்றி — நளிர்கடல்சூழ்

மண்ணுக் கனுப்பி மகிழ்ந்ததெனப் பேரொளிகால்
வெண்முத்தா லான வியன்சிவிகை — நண்ணியே

உடன் வருவோர்

தூய வலம்புரியின் தோற்றத்து வெண்முடியார்
காயமெலாம் என்பியங்கும் காட்சியார் — வாயுதிரும்

சொற்கள் அனைத்தும் சுருதியாய்க் கண்ணிரண்டும்
நற்கருணை யூறு நதிகளாய் — வற்கலையைக்

கொண்டணிந்த மேனியார் குற்றமிலாக் கற்றோரும்
பண்டறியாக் கேள்வி பலவுடையார் — உண்டிபல

காலம் வெறுத்துக் கடுஞ்சினமும் காமமும்
ஓலமிட்டே யோட வொறுத்தவர் — சாலவே

மானுரிவை போர்த்து மதமா தொலைச்சிய
மோன முனிவரர்தாம் முன்செல்ல — ஆனதவத்

புதுப்பெரியவர்களின் சிறப்பு

தீங்கனலாய்ப் புன்முறுவல் தித்திக்க மெய்யடியார்
ஓங்குபுன லென்ன வுளம்பொங்க — மாங்குயிலின்

நாதம்போல் நாவில் நவிற்றுமொழி கேட்பவர்தாம்
ஏதம்போம் போதமெழும் என்றிசைக்க — வேதம்போம்

வாயார் துதிக்க, வடிவேல் முருகனெனச்
சேயார் சயேந்த்ரச் செழுமுனிவர் — வேயார்

தடந்தோளி கூடற் றடாதகைதன் பொற்கை
யிடந்தோர்ந் தமைந்தே இனிதாய் — நடம்புரியும்

கோலக் கிளியென்னக் கொள்ளையெழில் கூர்ந்தருகே
ஆலவட்டம் வீச, வரும்பவிழ்ந்து — பாலனைய

வெண்மலரால் ஆன வியன்சிவிகை வீற்றிருந்து
கண்மலரால் மெய்யருளைக் காட்டியே — விண்மலர்ந்த

ஞான தினகரராய் ஞாலம் களிசிறக்கத்
தீனரிதம் கூரத் திகழ்ந்துவரத் — தேனருவி

இந்திராதி தேவர்கள்

யென்ன மதம்பொழியு மீரிருகோட் டோர்மலையில்
தன்னிகரில் இந்திரனும் தான்செல்ல — அன்னவன்பின்

பன்னிருவ ரோடு பதினொருவர் பாண்மிழற்று
நன்னயஞ்சேர் கந்திருவர் நாடிவரத் — துன்னியே

அங்கி குபேரன் அனிலன் நிருதிமுதல்
இங்கிவர்தாம் அன்பால் இசைந்துவரப் — பொங்குமிசைக்

கிம்புரி நோக்கிக் கிளர்நரம்பைச் சோதித்துத்
தும்புருயாழ் மீட்டித் தொடர்ந்துவர — எம்பெருமான்

காதில் அமர்ந்து கனமிசைக்கும் கந்திருவர்
மாதரொடு பாடி மகிழ்ந்துவரச் — சோதிமிகும்

வட்டவிழி நீள்புருவ வானகத்து நங்கையர்தாம்
அட்டமங்க லங்களொடும் ஆடிவரச் — சிட்டரெலாம்

ஆர்க்கும் கடல்போல் அரகரவென் றார்ப்பரிக்கப்
பார்க்கும் இடமனைத்தும் பத்திவெள்ளம் — தூர்க்கவே

நால்வர்

தேடரிய நாதனைத் தேனொழுகப் பால்வாயால்
தோடுடைய னென்றெடுத்துத் தூயதமிழ்ப் — பாடலினால்

காட்டிப் பரசமயக் காட்டை அழித்தெலும்பைக்
கூட்டிப்பெண் ணாக்கும் குழந்தையும் — வாட்டம்அற

ஐந்தெழுத்துப் பாசுரத்தால் ஆழியிலே கன்மிதப்பிற்
சிந்தை முழுதும் சிவமாகி — வந்து

திருப்பா திரிப்புலியூர்த் தேவாதி தேவன்
திருப்பாதம் பாடும் தெளிவால் — விருப்போடு

மண்பா தலம்புகினும் மால்கடல்தான் மூடிடினும்
விண்பா லிருசுடர் வீழினும் — நண்பாலே

நெஞ்சமே சற்று நிலமீ தெதற்குநீ
அஞ்சலெனப் பாடும் அருளரசும் — விஞ்சக்

கராவிழுங்கு பாலகனைக் கண்ணுதலைப் பாடித்
தராதலத்தில் தந்து தகவாய்ச் — சுராசுரர்கள்

துண்ணெனவே பெம்மானைத் தூதாய்ப் பரவையிடம்
மண்ணில் நடக்கவைத்த மாண்பினரும் — கண்ணருவி

பெய்யத் திருவா சகமழையைப் பெய்துயிர்கள்
உய்யத் திருமன் றுடையானே — வையத்து

வந்தெழுதும் பேறுடைய வாதவூ ரெங்கோனும்
சிந்தை மகிழ்ந்தாசி செப்பவே — முந்தொருபால்

ஆழ்வார்கள்

நால்வேதத் துட்பொருளை நாவாரத் தேனுக்கிப்
பால்வாயிற் பெய்த பராங்குசனும் — கால்வாய்போல்

கோவ லிடைகழியிற் கோவிந்த னைத்தரிசித்
தாவலினு லந்தாதி யன்றெடுத்து — நாவிலே

ஞானத் திருவிளக்கு நாரணற் கேற்றிய
மோன முனிவரெனு மூவரும் — வானவரும்

தேடி யறியவொணுத் தென்னரங்க நாயகற்குச்
சூடிக் கொடுத்த சுடர்க்கொடியும் — கூடிநின்று

பட்டர்பிரான் முன்னை பாகவதர் எல்லாரும்
இட்டமுடன் பல்லாண்டு இசைக்கவே — மட்டில்லா

திருச்சின்னம்

அஞ்ஞானம் தீய்க்கு மனலா யருள்கொழிக்கும்
மெய்ஞ்ஞான வாரிதியாய் மேவுகின்ற — விஞ்ஞானப்

புத்தம் புதுக்கலையின் பூரணமும் ஆதிமுதல்
அத்தன் அருளியநல் லாரணமும் — ஒத்தியலும்

பாங்குரைத்துப் பூவுலகில் பத்திப் பயிர்தழைக்கத்
தீங்ககலச் செய்யும் தினகரர்தாம் — ஈங்குவந்தார்

மூன்று கவடாய் முளைத்தெழுந்த சோதியின்
ஆன்றதிறம் கூறு மவர்வந்தார் — கான்றவருட்

கண்ணொளியால் இவ்வுலகைக் காக்கும் திருக்கச்சி
நண்ணு முனிவர்நமை நாடிவந்தார் — பண்ணிய

பாவ விருட்குப் பகைவர் பவனிவந்தார்
தேவர்வந்தா ரென்று திருச்சின்னம் — யாவருக்கும்

இன்னமுதம் போல வெடுத்தியம்ப எம்பிரான்
துன்னு சிவிகை துலங்கிவர — மன்னிய

குழாங்கள்

மீதலத்து மங்கையரும் மேதினிக்குக் கீழிருக்கும்
பாதலத்து வாழ்நாகப் பாவையரும் — பூதலத்து

மின்னாரும் போந்து மிடைந்தெண் டிசைதூர்ப்ப
என்னா யகரி னெதிர்நின்றே — பொன்னார்ந்த

சோதி முனிவரரைச் சொக்கரென்றும் காஞ்சியில்வாழ்
ஆதிப் பிரானென்றும் ஆகநிறை — பூதியணி

தில்லைத் திருக்கூத்த னென்றும் திகைத்தறிவு
வல்லையே போயொளிப்ப வான்சிறைகள் — பல்கியொளிர்

தோகைமயிற் கூட்டமெலாம் தொக்கதென எண்ணிலவர்
ஓகைமிக நாணம் ஒளிக்கவே — மோகமதால்

காமன் வளர்த்தகுழல் காடு சரிந்துவிழச்
சோமவட்டம் முத்தரும்பிச் சோரவே — தோமறுசீர்ப்

பொற்றொடிகள் தாம்நெகிழப் பொன்மே கலைசரிய
இற்றதிடை என்றுசிலம் பேங்கவே — செற்றமதால்

பாலனுயிர் பற்றவன்று பாச மெறிந்துநின்ற
காலனுயிர் போகக் கடிதுதைத்த — ஓல

மறைக்கெட்டாச் சேவடியும் மான்மழுத்தீ யேந்தும்
நறைக்கமல நற்கரமும் நாதன் — கறைக்களமும்

செக்கர்வான் என்னும் செழுஞ்சடையும் அச்சடையில்
தொக்ககொன்றை யோடுமதித் துண்டமும் — திக்கனைத்தும்

பேரொளிகால் மேனி பிறங்கும் திருநீற்றுச்
சீரொளியும் கண்டு செறிந்தேங்கும் — ஓரொருவர்

ஐயர் திருவடியி லார்ந்தவிழி அங்கிருக்கக்
கையிற் பதித்தவிழி கையினிலும் — துய்யவரின்

தோளில் மிடைந்தவிழி தோளினிலும் சார்ந்திருக்க
வேளின் மலர்க்கணையால் வெய்துயிர்த்தே — ஆளுடைய

குழாங்களின் கூற்று

கம்பரென்று பேர்கொண்டீர் காரிகையார் உள்ளமதைக்
கம்பஞ்செய் தீரன்னை காமாட்சி — கம்பையில்செய்

பூசைக்கு வெள்ளம் புரளவிட்ட புண்ணியர்எம்
ஆசைவெள்ள மும்புரள ஆக்கினீர் — பாசமிலா

ஏகாம் பரரானீ ரின்றும்மைக் காணும்எமக்
கேகாம் பரமு மிழப்பித்தீர் — நாகா

பரணரே கற்பென்னும் பாவையரின் ஏகா
பரணம் கவர்வதென்ன பண்போ — அரணம்என

மாறொருத்தி தன்னை மறைத்தீர் சடையிமய
மாறொருத்திக் குப்பாக மானிரே! — கானகத்து

மாதவத்தோர் கன்னியரை மையலுறச் செய்யவந்து
கோதில் வளைபறித்துக் கொண்டீரே — சாதனையாய்ப்

பெற்ற வளையனைத்தும் கூடற் பெருநகரில்
விற்றசெயல் செய்தவர்நீர் வேந்தரோ — மற்றொருகால்

மாதொருத்தி வேண்டிடவும் மாம்பழத்தைத் தந்தினிய
காதலனைப் போக்கியந்தக் காரிகையைச் — சூதுடனே

பேயாக்கி விட்ட பெருந்தகையீர் நுஞ்செயல்கள்
வாயால் உரைக்கும் வகையுண்டோ — நேயமுடன்

நல்லார்கள் என்றழைக்கும் நாரியர்யாம் உங்களுக்குப்
பொல்லார்க ளாகியே போனோமோ? — வில்லாளி

ஓரம்பு போக்க உருவம் பொடித்தீரே
சேரப்போர் கோடி செலுத்துமவன் — தீரமெலாம்

கண்டும்கா ணாத கருத்தென்ன வென்றினைந்த
ஒண்டொடியார்க் குள்ளே யொருபேதை — வண்டுகள்தாம்

பேதை

மொய்த்தறியா மெல்லரும்பு முன்ன மதன்கணையால்
எய்த்தறியாப் பாவை இடைநுடங்கக் — கைத்தலத்தால்

வன்னத் திருத்தேர் இழுப்பதன்றி வாட்டுமதன்
மன்னத்தேர் காணா மடக்கிள்ளை — துன்னிய

பாலொடு நீரைப் பகுத்தறியா மெல்லன்னம்
மாலொடுகூ வாத மடக்குயில் — சூலுடைவான்

ஆர்ப்பறியாப் பேதைமயில் ஆடவரைத் தன்பாலே
ஈர்த்தறி யாத இருவிழியாள் — கூர்த்தமதி
வல்லோர் அடக்கம்போல் வான்கவியி னுட்பொருள்போல்
வில்லோர்தம் தூணி விழுங்கிநிற்கும் — சொல்லார்ந்த
அம்புபோல் வாயில் அரும்பும் கரிக்கன்றின்
கொம்புபோல் நீர்க்குள் கொழுமுகைபோல் —
செம்பொருள்சேர்
ஒண்டொகைக் சொற்றொடரி னுள்ளே யுருபுகள்போல்
மண்டியெழக் காத்திருக்கும் மார்பகத்தாள் —
விண்டசுவைப்
பாவிலே சீர்தளைகள் பாவா தனபோலச்
சீவிமுடி யாத செழுங்குழலாள் — ஆவிபோம்
முன்னிழந்து பின்னெழுந்த மூர்க்கன் முடித்தலைபோல்
முன்விழுந்து பின்விளைத்த மூரலாள் — தன்னிழந்து
கச்சி முனிவரர்முன் கண்ணீ ரரும்பநின்று
நச்சியே மெய்யன்பர் நாக்குழற — இச்சையொடு
பாவால் பரவும் துதிபோல் பலர்உவப்ப
நாவால் குதலை நவிற்றுவாள் — ஓவாது
கிள்ளையுடன் கொஞ்சியந்தக் கிள்ளைமொழி யைப்பாவைப்
பிள்ளை யுடனே பிதற்றுவாள் — கள்ளமின்றிச்
சின்னஞ் சிறுகரத்தாற் சிற்றில் இழைத்துப்பின்
வன்னச் சிறுசோறு வட்டித்துத் — துன்னும்
சிறுமியருக் கிட்டுச் சிறிதுண் பதனால்
பெறும்இன்பம் ஒன்றே பெரிதாய் — உறும்இவளை
நற்றா யொடுசெவிலி நண்ணி எடுத்தணைத்து
வற்றா வுவகை வழியவே — கற்றாவின்

உள்ளம்போற் பேரன் புகள வுலாவருமெம்
வள்ளல் தவத்து வரோதயரைப் — பள்ளம்போம்
நீர்போற்பே ரன்பு நிமிரத் தரிசித்துப்
பார்மேல் விழுந்து பணியவே — ஏர்மேவு

காஞ்சி முனிவரரைக் கண்டிவரார் என்றந்த
வாஞ்சைமிகு பேதையும் வாய்திறப்பத் — தீஞ்சுவைசேர்
வேதக் கனியின் விழுச்சுவையாய் நற்றமிழின்
மேதக்க வின்பமாய் மேவியே — நோதக்க
வெவ்வினைக்கு மாமருந்தாய் விண்ணோர் தலைவியாம்
நவ்விவிழிக் காமாட்சி நாயகியார் — செவ்விமிகு
ஞானப் புதல்வரையஞ் ஞானவிருள் போக்கிடுமெய்ஞ்
ஞான வொளியைஇந்த ஞாலமெலாம் — ஊனமொழித்
தின்பம் புணர்ப்பவரை யேதிலருக் கின்னமுதை
அன்பு பெருகவிவ ராரென்றாய் — என்புருக

மண்ணனைத்தும் சிற்றிலாய் மாட்சி பெறவமைத்துக்
கண்ணனைய வேதக் கனல்மூட்டி — உண்ணவென்
றத்துவித மென்னு மருங்கல மேற்றியதில்
முத்துத் தமிழ்தந்த முன்னோரின் — தித்திக்கும்
நாலா யிரத்தோடு நாயன்மார் தந்தவற்றைப்
பாலாகப் பெய்தமைத்த பக்குவத்தை — நோலாத
பல்லோர்க்கும் ஈந்துவக்கும் பாலர்காண்! மேருவெனும்
வில்லோர்க் கினிய விகிர்தர்காண்! — சொல்லார்ந்த
மூலப் பொருளில் முளைத்த முனிவர்காண்!
கோலச் சிறுகிளியே கும்பிடெனச் — சாலவே

செய்ய கரத்தொளிரு செம்பெனக்குச் சோறமைக்க
மெய்யாக வாங்கிநீர் மேவுகென்றாள் — உய்யவந்து

கும்பத்திற் றோன்று குறுமுனிதன் கையமர்ந்து
பம்புபுனற் காவிரியைப் பாலித்த — செம்பதுவும்
பண்டு சுவர்க்கப் பதியொன் றிணைப்படைக்க
மண்டுசின மாமுனிகை மன்னிய — திண்டிறல்சேர்
மூரிக் கரகமும்போல் முக்கண்ணான் பேரருளை
வாரிக் கொழிக்குமது வாய்க்குமோ? — வேரிமலர்க்
கொம்பே நினதாசை கூடாது வேறொருபாற்
செம்பே பெறுகஎன்று செப்புகையில் — தம்பிரான்
மன்னி வருஞ்சிவிகை மற்றோர் தெருவினிலே
துன்னி வரவாங்கோர் தோகையாள் — கன்னியவள்

பெதும்பை

பேதைப் பருவம் பெயர்ந்தும் பெயராமல்
பாதிப் பெதும்பைப் பருவத்தாள் — போதைமிகு
சித்தத்திற் காதற் செடிவளர வித்திட்டு
நத்தி வளர்க்கு நலத்தினாள் — பத்திமையால்
எங்கோ னருள்கூட எத்தொழிலும் கூடுதல்போல்
கொங்கலரக் கூட்டும் குழலினாள் — பொங்குதமிழ்
வல்லா ரெதிர்ப்படவும் வாய்குழறி யேநடுங்கும்
கல்லார் மருட்சிநிகர் கண்ணிணையாள் — பொல்லாத
வேடர்வலைப் பட்டபுறா மெல்லவெட்டிப் பார்ப்பதெனக்
கோடுயர்ந்து தோன்றவெழுங் கொங்கையாள் — பீடுபெறும்
விண்ணளவு மாளிகையின் மேனிலத்துத் தன்னனைய
பெண்ணனங்கார் தம்மைப் பெரிதழைத்துப் — பண்ணமைந்த
ஆலவாய் அன்னை அருங்கரத்துப் பைங்கிளியைப்
போலப் பசுங்கழங்கும் பொன்மன்றில் — சீலநட

மாடுபிரான் கையமர்ந்த அங்கிநிறச் செங்கழங்கும்
நீடுதுயில் கொண்ட நெடுமாலின் — கூடுமெழில்
நீலக் கழங்கும் நிமலனார் மெய்யகலாக்
கோலப் பொடிநிறத்துக் கோக்கழங்கும் — பாலன்ன

வெண்கழங்கும் செஞ்சடையார் மேனிநிற மாணிக்கத்
திண்கழங்கும் வைரத் திருக்கழங்கும் — கண்கவரும்
பூவிற் றுளிக்கும் புதுத்தே விறத்தொளிரும்
தாவில்கோ மேகத்துத் தண்கழங்கும் — மேவவே
ஒன்றெடுத்துக் கச்சி யுறுமுனிவர் தங்கருணை
நன்றெடுத்துப் பாடி நயந்திரண்டைத் — துன்றுகரத்
தேந்தி யிருமுனிவர் இங்கிதத்தைப் பாடியே
காந்தளிலே மூன்று கழங்கெடுத்துத் — தீந்தமிழால்
முப்புரத்தைச் சுட்ட முதல்வன் புகழ்பாடிச்
செப்புமொரு நான்கெடுத்துச் செந்தேனில் — ஒப்பிலா

நற்றமிழை நல்குமுயர் நால்வர் நயம்பாடிப்
பொற்றொடியார் போற்றப் புரிகுழலாள் — குற்றமறும்
ஐந்தெடுத்துத் தீவண்ண னைந்தொழிலைப் பாடியபின்
பைங்கரத்தி லாறெடுத்துப் பாதிமதி — பொங்குசடை
அண்ணல் குமரன் அறுமுகவன் சீர்பாடி
யெண்ணியே யேழெடுத் தெம்மன்னை — கண்ணிய
ஏழுருவ மாதர் இசைபாடி எங்கள்பிரான்
வீழருவி யென்ன விழியருவி — தாழுகின்ற
காமகோ டிப்பீடக் காவலரின் கண்ணொளியின்
தீமை அகற்றும் திறம்பாடும் — காமினியைக்

கண்டுமகிழ் தாயர் கடிதணைத்துக் கண்ணெச்சில்
விண்டொழியப் போக்கியே வீதிவழிக் — கொண்டணைந்தே

உத்தமனார் வெண்சிவிகை யூரு முனிவரரை
நத்தி அடிபணிய நண்ணுதலும் — பத்தியுடன்

வீழ்ந்து பணிந்து விகிர்தனார் மெல்லடியி
லாழ்ந்த மனத்தோ டசைவறவும் — சூழ்ந்தவனை

சின்னஞ் சிறுமியிவள் சீவபோ தம்மகன்று
தன்னை மறக்கும் தகையென்னே — யென்னவே

ஐயரிவர் மோன அருந்தவத்தோ ராயிருக்கக்
கையிலொரு கோல்பிடித்த காரணமேன் — மையலறச்

சொல்லுவீ ரென்றிசைப்பச் சொன்னமே பல்லுயிர்கள்
தொல்லுலக வாழ்வில் துயர்முதலா — அல்லல்களைந்

தன்புப் பயிர்தழைக்க அப்பயிரை மாய்க்கவரும்
துன்பப் பறவை துரத்தவே — இன்பமுடன்

ஏந்தியகோல் ஏழுலகும் ஏத்துங்கோல் ஈசனருள்
மாந்தியகோல் செங்கோல் வணங்குங்கோல் — ஆய்ந்தறிக

என்றந்தத் தாயும் எடுத்துரைக்க எங்கள்பிரான்
நன்றும் முறுவல் நகைகாட்டிப் — பொன்றாத

சோதிச் சுடரிழையாள் சொக்கி மையலுறும்
வீதி கடந்தப்பால் வீதியொன்றை — ஆதிமுனி

மங்கை

பொங்கருளாம் வெள்ளம் புகுந்தாட மற்றொருத்தி
மங்கை யெனும்பருவ மாட்சியாள் — தங்கிய

மாரவே ளுக்கும் மதனகலை யத்தனையும்
தீர உரைக்கும் திறத்தினாள் — சேரவே

பண்டொருகால் ஈசன் பரிந்துண்ட காளவிடம்
விண்டமைத்துக் கொண்ட விழியினாள் — கொண்ட

கரத்தமரும் பந்தென்னக் கஞ்சமுகை யென்ன
வரத்தின் முனிவரையும் வாட்டும் — தரத்தேந்து
கொங்கையாள் காந்தட் கொழுமலரை வென்றுவிட்ட
செங்கையாள் இல்லையெனும் சிற்றிடையாள் – தங்கநிறப்

பூமலர்ந்து பின்னர்ப் புதுக்காயாய் முற்றியபின்
நாமலரத் தித்திக்கு நற்கனியா — யாமாறு
பேதை மலர்ந்து பெதும்பையாய்ப் பின்னரந்தக்
கோதைமங்கை யாகிக் குலவுவாள் — போதைமிகத்
தென்னிலங்கை வேந்தன் திருவைக் கவர்ந்திடுநாள்
அன்னையுளம் போலும் அளகத்தாள் — தன்னையே
நேரொருவ னோக்க நிலனோக்கி நோக்காக்கால்
ஓரக்கண் ணோக்கிநகும் ஒண்டொடியாள் — சாரவே
குன்றிரண்டின் மேலே குதிக்கும் அருவியென
நின்றிலங்கு முத்துவட நேரிழையாள் — துன்றிய

ஆடகப் பொன்னோ டணிமணிக ளிட்டிழைத்த
நாடக மன்று நனிபொலிய — ஏடவிழும்
பைங்கூந்தல் மங்கைப் பருவத்து வல்லியர்கள்
அங்கா தரவோ டருகிருக்க — மங்காத
புத்திரப்பேற் றுக்காப் புரிந்த மகத்தீயில்
அத்தினத்திற் றோன்று மரும்பூதம் — வைத்திடுபொற்
றட்டி லிருந்த தகைசால்வெண் பிண்டமெனக்
கட்டிமுத்தின் அம்மானைக் காய்மூன்றைச் — சுட்டியே
மன்னுமிரு கைக்கொண்டு மாங்குயிலும் நாணமுற
இன்னிசையைப் பாடி யெடுத்தாடத் — துன்னிய

மாதரசி யார்தாம் மகிழ்ச்சியொடு நோக்கியே
ஆதரவு கூறும் அமயத்தே — நாதரவர்

செவ்வானின் சோதி செறிந்து திரண்டதென
ஓவ்வா ததுவு முவமையென — அவ்வாத

ஊரருக் குக்குருந்த முற்றமர்ந்த மூர்த்தியென
ஓரருக்க னன்றி யொருகோடிப் — பேரருக்கர்

கூடிவந்த தென்னக் குளிர்சிவிகை யூர்ந்தங்கு
நாடியே நாயகமாய் நண்ணுதலும் — ஆடிய

அம்மானை சோரவே யம்மான் கரத்தேந்தி
யம்மானை காணநின் றாடியே — அம்மானைச்

செஞ்சடையில் வைத்த சிவனென்றே பாவித்துக்
கஞ்ச மலராங் கரங்கூப்பி — நெஞ்சிலே

பேரன்பு பொங்கப் பெருமழைக்கண் ணீர்வாரக்
காரன்ன கூந்தல் கலையவே — சீரன்னம்

நீர்பிரிக்கும் தன்மைபோல் நெஞ்சிலே வெங்காம
வேர்பிரித்துப் பத்திவெள்ளம் வீழவே — சீர்மிகுத்த

தீயொடுமா னேந்து திருக்கரங்கள் காண்கிலேன்
பேயொடிடு காட்டிடைப் பெரிதுவக்கும் — தூயவரின்

கண்மூன்றில் தீயுமிழும் கண்ணும் களிற்றுரியும்
விண்மூளப் பொங்கும் விடையுடனே — பண்மூளும்

துண்டப் பிறையும் துலங்கரவும் கங்கையும்
கண்டத் தமர்விடமும் காண்கிலேன் — அண்டர்தொழும்

மும்முதற்கும் எட்டா முழுமுதலோ இவ்வடிவம்
எம்முழையீர் நீவிர் இயம்புமென — விம்மும்

பனிமொழியின் மெய்ஞ்ஞானப் பாங்குணர்ந்து காஞ்சி
முனிவர் முறுவல் முகிழ்த்தே — நனிமகிழ்ந்

மடந்தை

தப்பாலோர் விதி யணுகுதலும் ஓர்மடந்தை
எப்பாலும் காணு வெழில்மடந்தை — தப்பாமல்
முன்னிலங்கைப் போர்வந்த மூலபல மென்னவிருள்
மன்னும் கரிய மலர்க்குழலாள் — துன்னும்

கருவண் டிரண்டனைய கண்ணிணையாள் கோலப்
புருவமெனக் கன்னல் பொருந்தும் — திருவினுள்
பாலாழி யென்னப் பரந்த விழியிரண்டில்
காலாந்த காரக் கடுவமைத்தாள் — தோலாத
மாரவே ளெய்யு மலரம் பினுக்குடைத்து
சோரவே நங்கையர்தம் சோர்ந்தழுக — நீரதனைக்
கண்டறியு மாடிக் கதுப்பினுள் தேனொடுகற்
கண்டனைய சொல்லுதிர்க்கும் காரிகையாள் —
திண்டிறல்சேர்
மாரவேள் மாளிகைக்கு வாய்த்தவிரு தூண்களென
ஈரமிகு வாழை யிரண்டென்னச் — சீரார்

குறங்கினுள் இன்பம் குலவப் பதும
நிறங்கிளரும் மெல்லடியாள் நேர்ந்து — திறம்படைத்த
சித்திரச்சா லைக்குள் சிலதியர்தற் சூழவந்து
பத்திதரும் தெய்வப் படங்கள்தமை — நத்தியே
ஒவ்வொன்ருய்க் கண்டுவந்தாள் ஓர்பால் தவமுனியாம்
திவ்விய ஞானத் திருவிளக்கை — அவ்வியமில்
கச்சி முனிவரரைக் காலம் கடந்தவரை
நச்சிடுவார் தீவினைக்கு நன்மருந்தை — இச்சைமிகக்
கண்டுருகிப் பாங்கியிடம் காதல்மிக நேர்ந்துரைப்பாள்
எண்டிசையும் போற்றும் இவருருவை — மண்டிய

தெய்வத் தவக்கனலைத் தீட்டியொரு சித்திரமாய்
உய்வைத் தரநீ உவந்தளிப்பாய் — மெய்வைத்த
ஆவி யெனவே அனுதினமும் அப்பெரியோர்
ஓவியத்தைப் பூசித்து உவந்திருப்பேன் — காவிமலர்க்
கண்ணா யெனமருளும் கண்ணாள் கசிந்துரைப்பாள்
எண்ணா திதனை யெழுதென்றாய் — பெண்ணே
விழியிரண்டைத் தீட்டிடினும் விழருவி யென்னப்
பொழியும் கருணைமதுப் பொங்கும் — வழியதனைத்
தீட்ட இயலுவதோ தெள்ளமுதச் சொற்களையே
காட்டுவதெவ் வாறக் கனிவாயில் — தாட்டுணையை
வித்தகமாய்த் தீட்டிடினும் வீடருளும் விந்தையினை
எத்திறத்திற் றீட்டுகேன் என்றிசைப்ப — அத்தருணம்
வெய்யோ னொளிதான் விகிர்தனார் மேனியைக்கண்
டையோ வெனமறைய ஆங்குவரும் — ஐயரவர்
கோலத் தினைக்கண்டு கும்பிட்டாள் தன்னுடைய
சேலொத்த கண்ணிணைநீர் சிந்தவே — சீலத்தால்
ஆதி முனிவர் அருளும் சிவானந்த
சோதி லகரியொடு சூழ்பவத்தைச் — சேதிக்கும்
போற்றித் திருவகவல் போன்றதுதிப் பாடல்களைச்
சாற்றி யவசமுற்றுச் சாய்ந்திடவும் — ஆற்றியே
பாங்கியர்தாம் மெல்லப் பரிந்தழைத்து மாளிகைக்குள்
தாங்கி யணைத்துய்க்கத் தாங்கண்டு — ஓங்குதவத்
தான்றோர் உவகைமிக அத்திறங்கண் டப்பாலே
ஏன்றதிரு வீதிக் கெழுந்தருள — வான்றருமின்

அரிவை

அத்தனையும் கூட்டி அரிவையென் ஆக்கியபின்
சித்தம் தளர்ந்துவிண்ணிற் செல்லாமல் — மெத்தவே

ஆடகப் பொற்குன் றகலா திரண்டமைத்துப்
பாடகஞ்சேர் பாதமாய்ப் பங்கயத்தை — நாடியமைத்(து)
அண்ணல் இராகவனார் அம்பும் அறுமுகவன்
திண்ணியகை வேலும் திரண்டமையக் — கண்ணிணையை

ஆக்கி அயனார் அமைத்த அரிவையவள்
தேக்கிய தேனின் தெளிவன்ன — வாக்கினாள்
செங்கதிரோன் றன்னைச் செருவில் எதிர்ந்தாலும்
பொங்கி மறைக்கும் புரிகுழலாள் — வெங்கதிரின்
செவ்வட்டங் கீழ்வானிற் சேர்ந்ததெனக் குங்குமத்தின்
அவ்வட்டம் ஆர்ந்த அணிநுதலாள் — நவ்வி
விழியாள் ஒருத்தி விறலி அணுக
அழையா வவளை யகத்துள் — தழைகின்ற
ஆர்வத்தால் முத்தாரம் ஆடைபல நல்கியபின்
போர்வைத்த கண்ணாள் புகலுவாள் — சீர்வைத்த

மாமுனிவர்க் குள்ளருளின் மாட்சி மிகுத்திருக்கும்
கோமுனியை யாழொடுபண் கூட்டியே — சேமமுற
இன்னிசையால் என்றன் இருசெவிக்கும் தேனாகப்
பன்னுகநீ யென்றலுமப் பாவைதான் — துன்னிய
விண்ணுலக மேனகைகண் விச்சில் மயங்கியொரு
பெண்ணணங்கைப் பெற்ற பெருமுனியும் — கண்ணிய
சூதுடனே வந்த சுடர்க்கொடியென் றெண்ணும்
மாதுடனே கூடி மனமகிழ்ந்து — தீதுமிக
வல்லசுரர் தம்குலத்தை ஈந்த வரமுனியும்
அல்லல் தருசினத்துக் காளாகும் — தொல்லைத்

துருவா சருமத் துரியனுக்காப் பண்டு
தருவேங் கடத்துத் தனியே — அருமகமொன்

ளுக்கியே யைவ ரழிய முயன்றிட்ட
வாக்கி லுயர்ந்த வரமுனியும் — நோக்கிடில்நம்

சந்த்ரசேக ரேந்த்ரருக்குச் சற்றும் இணையாகார்
எந்த விதமென் றியம்பக்கேள் — அந்திபகல்

அத்தனையும் கண்கள் அருவியாய்ப் பேரருளை
எத்திசையும் வாரி இறைக்குமே — சித்தமெலாம்

சீவர்களுக் குற்ற சிறுமை தவிர்ப்பதுவும்
பாவர்களும் வந்து பணியுங்கால் — ஆவலொடு

நல்லுரைகள் கூறி நலிவகற்று விப்பதுவும்
சொல்லால் பிறரைச் சுடும்சாப — மில்லாமல்

காத்தருளிச் செய்வதுவும் காணின் முனிவரர்க்குள்
ஏத்துமிவர்க் கீடும் எடுப்புமுண்டோ — கோத்தமுத்து

மூரலாய் என்றிசைப்ப முன்னோர் சிவிகைவரும்
ஆரவா ரம்கேட் டரிவைதான் — பேரவா

மீதூர வாயில்வந்து மிக்கூரும் பத்தியெனும்
ஆதார முந்த அடிபணிந்தே — மாதவத்தீர்

தொண்டு கிழமாய்ப்பின் தோன்றலாய்ப் பாலனைப்
பண்டொருகாற் கூடற் பதியிலே — ஒண்டொடியாள்

இல்லம் புகுந்தீர் எளியேன் இதயமெனும்
இல்லம் புகுந்ததுபோ லெம்முடைய — இல்லத்துப்

பாதம் பெயர்த்துவந்து பாவையென்றன் புன்பிறப்பாம்
ஏதம் தவிர்ப்ப திழிவாமோ? — போதமெய்ஞ்

ஞான குருவே! நலிவகற்றும் நாயகமே!
ஏனங்கா ணுத விணையடியோய் — மோனதவத்

தண்ணலே யென்றென் றரற்று மரிவைதனக்
குண்ணெகிழ்ந்து மாமுனிவர் உய்தியளித் — தெண்ணரிய

வீதி கடந்துசெல்ல வேளூர் தெருவினிலே
ஆதிப் பிரானின் அருள்மூழ்கு — சோதிமிகும்

தெரிவை

தேமொழியாள் ஆங்கோர் தெரிவை குழற்காட்டைக்
காமன் அரண்மனையாக் கட்டினாள் — தாமரையின்

முற்றிய மெல்லரும்பும் மோகனப்பொற் செப்பிரண்டும்
சிற்றிடையைக் கொல்லச் செறிந்துருண்டு — சொற்றகலை

வல்ல அறிஞரையும் வாட்டும் கனதனத்து
மெல்லியலாள் தாமரையின் மெல்லடியாள் — அல்லியெனக்

கானம் இசையாக் கருவண் டிரண்டென்ன
வானத் தையுமளக்கும் வாள்விழியாள் — போனகமாய்

மண்ணனைத்தும் வாரியுண்ட மாயனார் ஊழிநாள்
கண்ணயரும் ஆலிலையின் காட்சியெனப் - பண்ணமைந்த

நல்வயிறு வாய்த்த நலமுடையாள் வீற்றிருக்கச்
செல்வி குறவர்குலச் சேயிழையாள் — பல்விதமாம்

நற்பவள முத்திழைத்த நல்லணிகள் பூண்டுகுறி
சொற்பவள வாயிற் சுகந்தருவாள் — தற்பரனின்

வித்தகத்தைப் பாடியந்த வீதி வருமவளை
நத்தி அழைத்து நவமணிகள் — பத்தியாய்

ஆக்குமணி மேடை அமரச்செய் தாங்கவளை
நோக்கித் தெரிவை நுவலுவாள் — பாக்கியமாய்

வந்தடையும் பேற்றிற்கு வாய்ப்புண்டோ சொல்லென்ன
விந்தைக் குறத்தி விளம்புவாள் — சுந்தரியே

ஆண்டிலொன்று கூறென்ன வாறென்றாள் நற்கருணை
தூண்டு முனிவரருள் தோன்றுமென்றாள் — வேண்டிய

திங்களிலே யொன்று தெரிந்துரைக்க வென்றலுமே
பொங்கியமூன் றென்றாள் புரிகுழலாள் — தங்கிய

பாச மறுப்பாய்நீ என்று பரிந்துரைத்துத்
தேசுடைய ராசியொன்று தேர்ந்துரைக்க — ஆசிலாய்

என்னக் குறத்தி யியம்பத் தெரிவையும்
அன்ன திரண்டென் றடுத்துரைப்ப — அன்னமே

மால்விடையோன் பேரருளும் மன்னுமுனக் கென்றிசைப்பச்
சேல்விழியாட் கேற்ற சிறப்பியற்றும் — பால்மொழியாள்

வேதமிசைப் பாரொலியும் வெண்சங்கின் பேரொலியும
நாதசுர வாச்சியங்கள் நல்கிசையும் — ஆதரவாய்க்

கேட்ப வெழுந்து கிளர்மறுகு வந்தருளி
வேட்பவர்க்கு நல்கு விநோதரை — ஆட்படுத்தும்

ஞானச் சலதியென ஞாலம் புரப்பவரைத்
தீனர்க் கெளிவந்த திவ்வியரை — வானவரும்

கண்டு வணங்குமுயர் காஞ்சி முனிவரரைப்
பண்டறியா அன்பால் படிமேல்வீழ்ந் — தொண்டொடியாள்

கண்ணிணைகள் நீர்வாரக் கைகள் சிரங்குவியப்
பண்ணனைய சொல்லால் பரவினாள் — நண்ணிய

அத்தெரிவை பண்பை அறிந்துமகிழ்ந் தம்முனிவர்
அத்தெருவை விட்டங் கயல்தெருவை — நத்திவரப்

பேரிளம்பெண்

பேரிமணிச் சின்னம் பெரிதொலிப்ப ஆங்கொருத்தி
பேரிளம்பெண் ணானவெழிற் பேரிளம்பெண் — நாரியவள்

எள்ளுடனே வெள்ளரிசி யேய்ந்ததெனக் கூட்டிய
கள்ளவிழும் பூவார் கனங்குழலாள் — தெள்ளிய

வண்மை அறிவுடைமை வாய்மை குலவுமுயர்
பெண்மை நலம்வாய்ந்த பேரிளம்பெண் — தண்மை

மதிவென்ற நன்னுதலாள் மாலின் மருட்சி
பதியும் இருவிழியாள் பண்டு — மதியாத

மாற்றார் மதிலிடித்து மண்ணில் வலியிழந்
தாற்றாது சாயு மருங்கரிபோல் — போற்றியே

பாதம் பணிபவரின் பாதம் பணிகின்ற
கோதி லவரின் குணமேபோல் — ஏதமிகத்

தேய்ந்து தமைவணங்கும் சிற்றிடையைத் தாம்வணங்கச்
சாய்ந்த தனத்துமயிற் சாயலாள் — தோய்ந்த

சுரதக் கலையதனைச் சுட்டெரித்து நூலோர்
விரத மனத்தும் விரவும் — உரமுடையாள்

இல்லத்துப் பூங்காவி லிட்ட சிலாதலத்து
மெல்லியலா ரோடு மிகமகிழ்ந்து — சொல்லிய

வேதப் பொருளை விரித்துரைக்கும் ஆன்றோர்கள்
பாதம் படிந்து பணிவன்பின் — காதலால்

மூலநடு வீறுகடந் தப்பாலோர் மும்மைத்தாம்
காலம் கணக்கிறந்த காரணனைச் — சூலம்

கரகம் திகிரிசங்கம் கையில் கரந்திங்
கரவணையும் வெற்பு மலரும் — விரவாது

சாணென் னளவில் அணுவைச் சதம்பிரித்த
கோணில் நிமிர்மேருக் குன்றத்தில் — தூணில்

துரும்பில் நிலைத்திருக்கும் தூய பிரமப்
பரம்பொருளைப் பாசம் அறுக்கும் — அரம்போலும்

விண்ணிறைந்து மண்ணிறைந்து வெய்ய சுடரிரண்டாய்க்
கண்ணிறைந்து காற்றாய்க் கனலாகி — உண்ணிறைந்த

ஆவிமுத லத்தனையு மாகி யருள்கொழிக்கும்
பாவியல்சேர் பண்ணவனைப் பாடியே — மேவுகையில்

நால்வரிசைப் பாடலொடு நாலா யிரப்பாடல்
கால்வாய்போல் பாயக் கசிந்துருகிப் — பால்வாயால்

வேத மிசைக்கும் விழுமியோர் முன்னடக்க
நாத சுரமிசைப்பார் நாடிவர — ஆதரவாய்

அன்பிலே தோய்வார் அரகரவென் றோலமிட
மன்பதை யெல்லா மகிழவே — இன்பிலே

கொஞ்சு முழவொலியும் கோல முரசொலியும்
விஞ்சியெழக் கேட்டு விழைவுற்று — வஞ்சியவள்

வாசல்வழி நாடுதலும் வண்ணச் சிவிகையிலே
ஈசனையே கண்டாள் இருநிலத்தில் நேசமுற

வீழ்ந்து பணிந்தாள் விழிநீர் பெருகவன்பில்
ஆழ்ந்துகரம் கூப்பி அரற்றுவாள் — போழ்ந்தமதித்

துண்டமொடு பாய்புலியின் தோலை மறைத்துக்கை
மண்டுமழு மானு மறைத்தீரே — அண்டர்தொழும்

பச்சைக் கொடியையிடப் பாக மறைத்திடவும்
இச்சையுமக் கெவ்வா றெழுந்ததோ — கச்சிப்

பதியமர்ந்த ஏகாம் பரரே பரிவால்
நதியிலன்னை மெல்லணைப்பை நாடிச் — சதிபுரிந்து

சங்கு வளைத்தழும்பு கொண்டிருக்கும் சங்கரரே
அங்கொருத்திக் கன்னையென வானீரே! — சங்கையற

மாமனாய் வந்து வழக்குரைத்து வென்றீரே!
கோமகனாய் வந்தன்று கூடலிலே — சேமமுற

மீனாட்சி அம்மையொடு மேவியநீர் இன்றிங்கு
காணாட்சி செய்கோலம் காட்டுவதோ — வானாட்சி

செய்யுமிந்தி ராதியரும் சேரவொணாப் பொற்பாதம்
உய்ய அடியேற் குதவுவீர் — மெய்யான 350

பேறிதுவே யென்றந்தப் பேரிளம்பெண் ணாள்புகல
ஊறிவரும் அன்பிற் குவந்தருளி — மாறிலாச்

சித்தம் இளகும் செழுங்கச்சி மாமுனியாம்
உத்தமனார் போந்தார் உலா. 352

வெண்பா

பள்ளமடை கண்டுபுனல் பாய்வதுபோல் பாருலகோர்
உள்ளமெலாம் பேரின்ப ஊற்றெழவே — கள்ளமிலாத்
தெள்ளியார் போற்றும் செயசந்த்ர சேகரராம்
ஒள்ளியார் போந்தார் உலா.

தள்ளரிய அன்பு தகைப்பரிதாய்ப் பொங்கிமனப்
பள்ளமதிற் பாயப் பழஅடியார் — உள்ளமலர்
விள்ளக் கசிந்துருகி விம்ம உலககுரு
உள்ளிப் புகுந்தார் உலா.

ஜகத்குரு திருமடல்

முன்னுரை

காதல் இருவர் கருத்தொன்றினும், உறவினர் ஒப்பாமையால் காதல் தடையுறின், வேறுவழியின்றித் தலைவன் மடல் ஊரத் துணிவன் என்பது இலக்கிய மரபு. மடல் என்பது பனங்கருக்கால் செய்த வண்டியும் குதிரையுமாம். மடல் ஏறும் முறையாவது, திகம்பரனாய், நீறுபூசி, தலைவியின் படம் எழுதி அதன்மேல் தன் பேர் ஊரும், தலைவியின் பேர் ஊரும் தீட்டி, அதைக் கையில் ஏந்தி, வெண்பூளை, எருக்கு எலும்பு இவற்றாலாகிய மாலையணிந்து பனையால் ஆகிய ஊர்தியில் ஏறுவதாம்.

மடல் ஏறுவது ஆடவர்க்கே உரியது. "கடலன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப் பெண்ணிற் பெருந்தக்கது இல்" என்று வள்ளுவம் பேசுகின்றது. ஆயினும் மடல் ஊரக் கருதிச் சொல்லுதல் மட்டும் மகளிர்க்கும் உரியது என்பது சான்றோர்க்கு உடன்பாடே எனக் கொள்ளக் கிடக்கின்றது. இந்நூலும் தலைவி மடல் ஊர்வேன் எனக் கூறியதாகவே அமைந்துள்ளது.

திருமங்கை மன்னரே முதன்முதலில் மடல் என்னும் பிரபந்த வகையைத் தொடங்கி வைத்தவர். அவர் இரு திருமடல்களைப் பாடி உள்ளார். வருண குலாதித்தன் மடல் என்றும் ஒன்றுண்டு. இவை தவிரத் தமிழில் வேறு மடல்கள் வழக்கில் இருப்பனவாக அறியக் கூடவில்லை.

கோவை நூல்களில் மடல் ஊர்தல் என்னும் ஒரு துறை உண்டு. அஃது ஆடவன் மடலூர்வதைக் குறிப்பதே. பெண் மடல் ஊர்வென் என்று கூறியதாகச் சில தனிப்பாடல்கள்

கிடைக்கின்றன. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில் நாங்கூர்த் திருப்பாடலில் இப்பொருள் அமைந்த பாடல் ஒன்றுள்ளது.

> ''என்நிலைமை எல்லாம் அறிவித்தால் எம்பெருமான்
> தன்அருளும் ஆகமும் தாரானேல் — பின்னைப்போய்
> ஒண்துறைநீர் வேலி உலகறிய ஊர்வென்நான்
> வண்டறைபூம் பெண்ணை மடல்''

என்ற பாடல் இத்துறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இது திருமங்கை மன்னனின் பெரிய திருமடலின் இறுதியில் கம்பர் பாடியதாக உள்ள பாடல்.

ஆசாரிய சுவாமிகள்மேல் அருட் காதல் கொண்ட தலைவி, பேரின்ப வாழ்வை விரும்பி, பிச்சியாய் நகரின் நடுவே மன்னியபூம் பெண்ணை மடல் ஊர்வன் என்று கூறுவதாக ஜகத்குரு திருமடல் நிறைவுறுகின்றது. மரபையொட்டி ஒரே எதுகை, நூல் முழுவதும் வந்துள்ளது.

ஆசாரிய சுவாமிகளைப் பாடி என் நாவினைத் தூய்மை செய்யும் பேற்றினை நல்கிய திருவருளை வழுத்துகின்றேன்.

கு. க. நரசிம்மன்

ஆசிரியரைப் பற்றி . . .

திரு. கு. க. நரசிம்மன் (சக்தி சரணன்) அவர்கள் 18—7—1922-இல் பிறந்தவர். தந்தையார் கஸ்தூரி ரங்காசாரியார்; தாயார் அரங்கநாயகி.

கும்பகோணத்தில் பிறந்த திரு. நரசிம்மன் திருவையாற்றுத் தமிழ்க் கல்லூரியிற் பயின்றவர். உயர்நிலைப் பள்ளியில் திரு. சதாசிவப் பண்டாரத்தாரை ஆசிரியராகப் பெற்ற இவர், மரபுவழிக் கவிதை பாடுவதில் வல்லவர்.

சந்திரிகை, பனி முத்தம் முதலிய பல நூல்களைப் படைத்த திரு. நரசிம்மன், ஹம்ஸ சந்தேசம், பஜகோவிந்தம், ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம் முதலிய வடமொழி நூல்களை நயம்பெறத் தமிழிற் பெயர்த்துள்ளார்.

ஜகத்குரு திருமடல்

கு. க. நரசிம்மன் (சக்தி சரணன்)

உன்னும் ஒருமொழியாம் ஓம்என்ற சொற்குள்ளே
மன்னி இருக்கும் மறைப்பொருளின் மாட்சியினைப்
பன்னி உரைக்கின்ற பாடல் பலவற்றை
இன்னிசையால் பாடும் இயல்பை விடுத்தவராய்
என் அருமைத் தோழிகளே! என்னை வதைப்பானேன்?

புன்னெறியில் என்னைப் புகுத்த விரும்புவதேன்?
கன்னி மனத்தைக் கலக்குகின்ற பாடல்கள்,
தின்னும் மனத்துக்குத் தீனிதரும் பாழ்மொழிகள்,
இன்னவற்றைப் பாடுகின்ற எண்ணம் பிறந்ததேன்?
முன்னம் உலகின் முதல்வன் அடிபணிந்தே

அன்னம் முதலான ஆரா தனம்செய்தே
இன் அமுதம் என்ன எடுத்துண்ணும் தன்மைபோய்
என்ன எனஅறியா எப்பொருளே ஆனாலும்
உன்னும் பொழுதெல்லாம் உன்என்று சொல்கின்றீர்!
தன்னை மறந்தே தலைவணங்கத் தக்கனவாய்

வன்னக் கலையின் மலர்ச்சி பொருந்தினவாய்
இன் அருளைச் சிந்தும் இறையவரின் ஓவியங்கள்
என்ன விதத்தில் மறைந்தனவோ? யானறியேன்!
புன்னெறியைக் காட்டும் புகைப்படங்கள் தம்மைநீர்
"இன்னவைபார்!" என்றே எனக்குத் தருகின்றீர்!

துன்னும் துயர்வகலத் தோத்தரித்து எம்பெருமான்
பொன்அடியில் அர்ச்சித்த பூச்சூடும் தன்மைபோய்
என்னை மயக்க எருக்கம்பூச் சூட்டுகின்றீர்!
சொன்னால் விரோதம்எனச் சொல்லா திருந்தேன்நான்
இன்னும் இவைநடக்கச் சற்றும் இசைகில்லேன்.

அன்னையோ ஏதும் அறியா மயக்குடையாள்;
பொன்னை நினைப்பாள்; பொருளே பொருளென்பாள்;
மின்னும் மணிகள் மினுக்கை விரும்பிடுவாள்;
தென்னந்தோப்பு என்பாள்; செறிந்துளமாந் தோப்பு என்பாள்;
கன்னல் கவிவாழைத் தோட்டங்கள் காண்என்பாள்;

என்ன பசுமந்தை என்றே வியப்புறுவாள்;
இன்னவகைச் செல்வம் இருப்போனுக் கல்லாமல்
என்னருமைப் பெண்ணமுதை யான்தாரேன் என்றிடுவாள்;
அன்னைதான் வாழ்வின் அகத்துறுப்பை எண்ணாமல்
முன்னர்ப் புறத்துறுப்பை முற்றும் அளக்கின்றாள்;

சின்ன வயதில் நிகழ்ந்தஒரு செய்திஇது.
பொன்னி அமுதப் புனல்பாய் திருக்குடந்தை
நன்னகரின் கண்ணேஇஞ் ஞாலத்தார் நன்கறிய
மன்னும் புகழார் மடத்தெருவில் ஓரிரவில்
அன்னைதான் என்னை அழைத்துக் கொடுசென்றாள்

கன்னியர்தம் கையால் வரைகோலக் காட்சிகளும்
கன்னலும் தாற்றுக் கதலிகளும் மாவிலையும்
தென்னங் குருத்தாலே செய்திட்ட தோரணமும்
மின்னுகிற குத்து விளக்கின் மினுக்கொளியும்
இன்னெழிலைக் கூட்ட இலங்கும் பெருந்தெருவில்

பன்னற் கரிய பவனி வரும்வழியில்
என்னே! பகலோ இரவோ எனமயங்க
மின்னுமோர் ஆயிரம் வாயு விளக்கொளியில்
என்ன பெருங்கூட்டம்! ஜேஜே எனும்கூட்டம்!
இன்னதன் மேல்உழுந்தை இட்டால் இடம்உண்டோ?

தென்னை மரத்தளவு சென்று வெடிக்கின்ற
வன்னம் சொலிக்கின்ற வாண வரிசைகள்,
கன்னி மடவார்கள், காளை இளைஞர்கள்,
துன்னும் திலக நுதல்ஆர் சுமங்கலிகள்,
முன்னுற்று வேதம் முழங்கும் மறையவர்கள்,

உன்னுமுயர் தேவாரம் ஓதும் இசைவாணர்,
இன்னவர்கள் எல்லாரும் ஏத்திஜய கோஷம்இடக்,
கின்னரர்கள் என்றைக்கும் கேட்டிருக்க மாட்டாத
துன்னும்இசை நாத சுரத்தின் இனியஒலி
மன்னியோர் தங்கள் மனத்தை நெகிழ்விக்கக்

கன்ன மதத்துக் கஜேந்திரன் முன்செல்லச்
சின்னத்து ஒலியும் முரசொலியும் சேர்ந்தார்க்க
வன்ன மலரார் வனப்புற்ற பல்லக்குஎன்
முன்னர் வரக்கண்டேன்; இன்ப முழுக்குற்றேன்;
என்அன்னை தோள்பற்றி ஏறிட்டு நோக்கினேன்;

அன்ன அழகார்ந்த பல்லக் கதனிடையே
சொன்னலத்திற் கெட்டாத சோதியைக் கண்ணுற்றேன்.
பொன்னை உருக்கிப் பொலியும் வடிவாக்கி,
மின்னல் ஒளிச்சிதறல் மேவும் படிசெய்து,
வன்ன வனச மலர்ச்சி அதில்ஏற்றிக்

கன்னலுறு சாற்றின் களிப்பை நிறைவித்துப்,
புன்னகை பூத்த கலைவாணி போற்றிசெய
அன்னப்புள் ஊரும் அயன்படைத்த நல்உருவை
முன்னுற்றுக் கண்டேன் ; முதிரமுதைக் கண்ணுற்றேன் ;
என் இமைகள் மூடாமல், ஏக்குற்று நோக்கினேன் ;

“அன்னை ! அமரர் இவர் ஆர் ?” என்று அயர்வுற்றேன்.
என்னை அணைத்தபடி ஏறிட்டு நோக்கியே,
“உன்னையும் என்னையும் உற்ற உலகினையும்
இன்னருளால் காக்க எழுந்த குருநாதன்
தன்னை அறியாயோ ? முன்னே தலைவணங்காய் !”

என்ன அவள்உரைக்க யானும் அதுசெய்தேன்.
அன்னநாள் தொட்டுஇவ் அடிமை மனத்திடையே
பொன்னடியை வைத்துநான் பூசை புரியலுற்றேன்.
இன்ன விதத்தினிலே ஆண்டுசில ஏகியபின்,
மன்னுலக மாயை வசமாய்ச் சுழன்றிட்டேன்.

முன்னவர்கள் எல்லாம் முழுமூடர் இந்நாளில்
மன்னுகிற விஞ்ஞான மாட்சி மிகப்பெரிதாம்
அன்னதனைக் கற்ற அறிவாலே ஆராய்ந்தால்,
சொல்நலமே கொண்ட சுருதிமுதல் சாத்திரங்கள்
என்ன பயனும்இலாக் குப்பை எனநினைத்தேன்.

நல்நடையைப் போற்றாத நாத்திகத்தில் போய்வீழ்ந்தேன்.
என்உடைமை என்றிட்டேன் ; யானென்று இறுமாந்தேன்.
சின்னத் தனத்தாலே சீரழிந்தேன் ; சில்லாண்டே !
என்னை மணம்கொள்ள ஏற்ற வரன்தேடிப்
பல்நகரும் சுற்றியே பார்த்தார்என் சுற்றத்தார்.

இன்ன நிலையில் பருவத்து எழில்ஊறப்
பொன்னின் வடித்த சிலையின் பொலிவுற்றேன்.
கன்னியான் கல்வியால் கர்வம் மிகக்கொண்டேன்.
என்னை நிகர்வார் இலைஎன்று இறுமாந்தேன்.
"இன்னவள்ஓர் வாயாடிப் பெண்ணை எவரேற்பார்?

கன்னி இவள்கரத்தைக் காஞ்சி முனியல்லால்,
அன்னியர்கள் யாரும் அடைதற் கியலாதே!"
என்னஎன் ஊரார் இரகசியமாய்ப் பேசுவதும்
உன்னிப்பாய்க் கேட்டேன்என் உள்ளே கிளுகிளுத்தேன்.
முன்னம்நான் கற்ற முதிர்வுற்ற நாத்திகம்தான்

மன்னி வளர்ந்திருக்கும் மாட்சிமிகு மேனாட்டில் —
உன்னரிய விஞ்ஞானம் ஓங்கி ஒளிர்நாட்டில் —
பன்னரிய மாகொடுமைப் போர்எழுந்து பார்முழுதும்
அன்னதனால் நாசம் அடைந்தழிய ஐயகோ!
தன்நிகரில் கீழ்நாடு அணுகுண்டால் தாழ்வடையக்

கன்னிஎன் நெஞ்சழிந்து கையற்று வாடினேன்.
இன்னதுவா நாமெல்லாம் ஏத்துகிற நாகரிகம்?
மின்னும் மதியுலகை மேவிட்டால் என்னபயன்?
அன்னதற்கும் அப்பால் அடைந்தாலும் என்னபயன்?
முன்னர் நரர்ஊனை மொய்த்துண்டு உயிர்வாழ்ந்த

நல்நெறியோடு ஆடை நலன்அறியா நாகர்கள்
என்னும் இனத்தாரால் இவ்வளவு தீங்குண்டோ?
தொல்நெறிகள் எல்லாம் தொலைப்போம் எனப்புகுந்து
தன்இச்சைக் கேற்றபடி தான்திரியும் இப்பியாய்
மன்னும் விலங்குநெறி மண்எங்கும் வேர்விட்டுச்

சின்னத் தனம்செய்து சீரழித்தல் கண்ணுற்றேன்.
என்அறிவைப் பாழ்செய்த இப்புதுமை எண்ணமெலாம்
சன்னல் வழியாகச் சாக்கடையில் வீசிவிட்டேன்.
புன்னகை பூத்தேன்; புதுமை நெறிவிட்டேன்.
என்நெறிதான் ஏதென்றே எண்ணத் தலைப்பட்டேன்.

அன்ன பொழுதினிலே ஆங்கோர் புதுச்செய்தி
அன்னியர்கள் சில்லோர்தாம் ஆன்ம நெறிநாடி
என்னிதய நாயகரை எண்ணி அடைந்தனராம்.
பொன்னிகரும் அன்னார் புனித மொழிகளினால்
தன்னிகர் இல்லாத தர்மநெறி கற்றவராய்

மன்னும் அமைதி மனத்தவராய்ச் சென்றனராம்.
இன்னதொரு செய்தியினால் இன்புற்றேன் அன்னவர்சொல்
என்னஎனக் கேட்டறியும் ஆர்வத்தால் ஏக்குற்றேன்.
பின்ஒருநாள் இச்சிறிய பேதை நினைத்தபடி
அன்னார் அருளின் அமுத உரைதொகுத்த

நன்னூல் தனைப்பெற்றேன் நான்செய்த பாக்கியத்தால்.
மின்னி அலையெழுந்து வேத இசைபாடும்
சென்னை நகரில் மயிலைத் திருப்பதியில்,
மன்னும் அடியார் பெருங்கூட்ட மத்தியிலே,
தொன்னெறிகள் காட்டும் சுருதிக் கடலுக்குள்

இன்னமுதம் ஆக இறைவன்உள அற்புதமும்
முன்னை முனிவர் மொழிந்த நெறிமுறையுள்
பின்னிக் கிடக்கின்ற விஞ்ஞானப் பெற்றிகளும்
மன்னும் உலகெங்கும் மாண்பார் சனாதனமே
துன்னும் உருமாறித் தோன்றும் அதிசயமும்

இன்னும் புராணம் இதிகாசம் தம்முள்ளே
மின்னி ஒளிரும் அறங்களது மேட்டிமையும்
பின்னும் இவைபோற் பிறபலவாம் செய்தியெல்லாம்
என்னை நிகர்த்தே இருக்கும் எளியவரும்
உன்னி உணர்வுற்றே உய்யும் படியாகக்

கன்னங் கறுத்தபுயல் பெய்கின்ற காட்சிஎன
மன்னும்உயர் காஞ்சிநகர் மாமுனிவர் தண்ணருளால்
சொன்னஉரை அத்தனையும் துய்க்கச் சுவைநல்கும்
அன்னநூல் கற்றேன்; அமுதுண்டேன்; வாழ்வுற்றேன்;
என்னுயிரின் நாயகரை எண்ணிமிக ஏக்குற்றேன்.

முன்னம்அவர் நாமம் மொழியுங்கள் தோழிகளே!
அன்னவரின் செம்பொன் அடிபோற்றிப் பாடுங்கள்!
பொன்னடியின் மண்எடுத்துப் பொட்டெனக்கு வையுங்கள்!
துன்னும் அருட்செல்வர் அட்சதையைத் தூவுங்கள்!
என்னுயிரைக் காக்கின்ற எண்ணம்உமக் குண்டானால்,

இன்னவற்றைச் செய்யுங்கள்! இப்போதே செய்யுங்கள்!
பன்னும்மறை நான்கும் புரக்கும் பவித்திரரை,
உன்னும் உபநிடதத்து உண்மைக்குக் காவலரை,
அன்னைபோல் பேரருளால் ஆறங்கம் காப்பவரை
பின்னுற்ற ஆகமங்கள் பேணிப் புரப்பவரை,

முன்னைக் கலைகள் முயன்றுஓம்பும் உத்தமரை,
பன்னலமும் வாய்ந்ததிருப் பாவை இசையமுதம்
மன்னும் படிச்செய்த மாட்சி மிகுந்தவரை,
இன்னிசையால் வெல்லும் இயல்பார் தமிழ்மறைகள்
முன்னைப் பெருமை முழுதும்உறச் செய்தவரை,

என்னுயிரின் இன்னமுதை யான்காண ஏங்குகின்றேன்.
இன்னும் பொறுப்பதோ? என்நாணும் போயொழிக!
முன்னர் உமையே முயன்று தவம்செய்து,
பொன்னிகரும் மேனியன்பின் போன கதைஅறிவீர்!
உன்னி மடல்எழுதி உற்ற உருக்குமணி

கன்னிகர்தோள் காளைபின் சென்ற கதையுணர்வீர்!
புன்னகை பூத்துப் புனம்காத்த வள்ளியும்தான்
மின்னுநெடு வேலனுடன் மேவும் கதைசொல்வீர்!
பொன்அவிர் மேனிச் சுபத்திரையாம் பூங்கொடிதான்
வின்னெடுந் தோளான் விசயன்பின் சென்றாளால்;

கன்னி மதிலாரும் கச்சிப் பதிபுகுவேன்.
என்னிதயக் கோவில் இடம்கொண்ட நாயகரின்
தன்னிகரில் பாதமலர் சூடித் தளிர்த்திடுவேன்.
அன்னவர்தாம் நானாக நானவராய் ஆகின்ற
மன்னும்அருட் பேரின்ப வாழ்வை விழைந்திடுவேன்.

அன்னை மொழிதடுத்தே ஆகாதென் றிட்டாலும்,
உன்னிஅவர் தம்முடைய ஊரெழுதிச் சீரெழுதித்
தன்னிகரில் சால்புடைய சந்திர சேகரராம்
பொன்னன்ன பேரெழுதிப் பூச்சூடிப் பிச்சியாய்
என்னைஅவர் நோக்காரேல் என்செய்வேன்!
என்செய்வேன்!

நன்னகரின் உள்ளே நடுவிடத்தில் ஊர்வன்நான்
மன்னியபூம் பெண்ணை மடல்.

வெண்பா

ஆவிக் கொருதுணைவன் ஆம்அவனே என்றுமனம்
பாவித் தவன்அருளே பற்றினேன்; — தேவர்களும்
சென்றறிய மாட்டாத சீர்க்குரவன் ஆளானேல்
மன்றறிய ஊர்வன் மடல்.

ஜகத்குரு சங்கரர் கலம்பகம்

முன்னுரை

கம்பன் புகழ் வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க!

தமிழ் மொழியில் உள்ள 96 வகைப் பிரபந்தங்களுள் கலம்பகம் ஒன்று. இது பலவகைப் பாக்களாலும், பாவினங்களாலும், சந்தப் பாக்களாலும் பாடப்படும். இதில், புயவகுப்பு, அம்மானை, ஊசல், மறம் முதலிய பலவகைப் பட்ட வுறுப்புக்கள் விரவிக்கிடக்கும், கலம்பகம் அந்தாதித் தொடையாற் பாடப்படும்.

தமிழ்ப் புலவர்கட்குக் கலம்பகத்தில் மிக்க ஈடுபாடு உண்டு. ஆகையினுல்தான் தொண்டரடிப் பொடியாழ்வார் "களிவண்டு மிழற்றிய கலம்பகம்" என்று நயம்படப் பகர்கின்ருர்.

அடியேன், காரைக்குடி - கம்பன் அடிப்பொடியின் புருஷகாரங்கொண்டு 1969 மே மாதம் திருத்தணிகையில் ஜகத் குருவின் திருவடியைக் குடும்பத்துடன் சேவித்தேன். அப்போது என் உள்ளத்தே சொல்லைக்கடந்த உணர்வு பெற்றேன். அவ்வுணர்வு படிப்படியாக வளர்ந்து இந்தக் கலம்பகமாக வுருப்பெற்றது.

என் குலத்தவர் யாரோ ஒருவர் புரிந்த தவம் அடியேன் கலம்பகம் புனையக் காரணம் ஆயிற்று; அடியேன் தகுதியன்று. எனக்கு இந்த நல்வாய்ப்பை வழங்கிய பேராசிரியர் திரு. இரா. இராதாகிருஷ்ணன் M. A. அவர்கட்கு மனம்கனிந்த நன்றி.

கம்பநிலையம்
வேலூர். (சேலம்)
17—7—74

S. K. இராமராசன்
'கம்பராமன்'

ஆசிரியரைப் பற்றி . . .

திரு. கம்பராமன் (எஸ். கே. இராமராசன்) அவர்கள் நாமக்கல்லேச் சார்ந்த வரகூரில் பிறந்தவர். தந்தையார் பெயர் திரு. ந. கிருஷ்ணசாமி ரெட்டியார். தாயார் பெயர் திருமதி பாப்பம்மாள். திரு. ந. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவராயிருந்தவர்.

திரு. கம்பராமன் அவர்கள் தமிழ்நாடெங்கணும் இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றி வருகின்ருர். கவியரங்குகளில் தலேமை ஏற்றும் பங்குகொண்டும் தமிழுக்கு அருஞ்சேவை செய்துவருகிருர்.

தலேசிறந்த நினேவாற்றல் உடையவர் இவர். தமிழ் இலக்கியங்களில் பல்லாயிரம் பாடல்களே வேண்டும்போது கூறி, விளக்கும் பேராற்றல் பெற்றவர்.

கம்பனிடம் தனித்த ஈடுபாடுகொண்டு 'கம்பராமன்' என்றே பெயர் புனேந்துகொண்டு விளங்குபவர்.

அரசினர் வழங்கும் நல்லாசிரியர் என்னும் சிறப்பு விருது பெற்ற தகுதியாளர். சேலம் மாவட்டம் வேலூர் கண்டர் உயர்நிலேப் பள்ளியில் தலேமைத் தமிழாசிரியராகத் தற்போது பணியாற்றி வருகிருர்.

விரைந்து கவிபாடும் ஆற்றல் பெற்றுள்ள திரு. கம்பராமன் அவர்கள் மேகநாதம், குமாரசம்பவம், வரதோதயம், நாககுமார காவியம், பிரம்மேந்திர கீதம், சத்திர விநாயகர் சந்நிதி முறை முதலிய பல நூல்களே இயற்றியுள்ளார்.

ஜகத்குரு சங்கரர் கலம்பகம்

எஸ். கே. இராமராசன் (கம்பராமன்)

காப்பு

சித்தர்கள் பணியத் திருவருள் வழங்கும்
சத்திர விநாயகர் தாண்மலர் சரணே.

திவ்வியம் பழுத்த காஞ்சிமா நகரில்
திகழ்தரு முனிவரன் பதத்தில்
செவ்விமிக் கோங்கும் கலம்பகம் புனையத்
திருவளர் கருணைநோக் களிக்கும்
கவ்வையில் சான்றோர் போற்றிடும் கொங்கிற்
கவின்வளர் கின்றவே லூரிற்
றெவ்வரும் பணியக் காவிரி வடபாற்
சிவந்தரு சத்திரக் களிறே.

நூல்

கலிப்பா

திப்பியமார் இமயத்தைச் செவ்விமிகு மணிமுடியா
ஒப்பரிய முக்கடலை ஒளிவளரும் பூந்துகிலாக்
கொண்டநவ பாரதத்தின் கோதற்ற இதயமென
மண்டலமே புகழ்காஞ்சி மாநகரின் உயிராய
கொற்றமுறு கலைக்காம கோடியெனும் பீடத்தில்
கற்றவர்கள் வியந்தேத்தக் கதிர்வளரத் தவம்வளர
மங்கலங்கொள் மறைவளர மாசறுசெங் கோலேந்திச்
செங்கதிர்போல் ஒளிவீசித் திகழ்கின்ற தவவேந்தே!

— இது தரவு

வெண்மைவளர் கயிலாய வெற்புவிடுத் திவணுற்ருய்
வெண்மையுள முடையோம்யாம் மெய்ம்மையினை
உணர்தற்கோ ?
நஞ்சுண்டு பழகினை நீ நாவிலத்தில் அவதரித்து
நஞ்சனையேம் தமையாண்டு நன்னெறியைக் காட்டுதற்கோ ?
பிறைமதியை விடுத்திந்தப் பேருலகில் அவதரித்தாய்
குறைமதியேம் மயல்போக்கிக் குவலயத்தைக் காப்பதற்கோ?
என்பணியை [1] விடுத்துற்ருய் எம்பெருமான் ! உலகத்தே
என்பணிகொள் [2] எனுமடியார் இடர்மலையைத் தகர்த்தற்கோ?
தழல்வடிவை மறைத்திங்குத் தமிழ்வடிவாய்ப் போந்திட்டாய்
கழலடையும் மெய்யடியார் கண்மலர்கள் உருகுதற்கோ ?
ஆலடியிற் கைகாட்டி யருமறைகள் போற்றிசெயக்
காலடியில் அமுதளித்தாய் ! கடலுலகம் செழிப்பதற்கோ?
மயேந்திரத்தைத் [3] தொலைத்தபிரான் [4] மகிழ்வுறுசெங்
கோலேந்தச்
சயேந்திரராய் வந்ததுநற் றவக்கனலை வளர்ப்பதற்கோ ?

– இவை தாழிசை

மலரடி பணிபவர் மனமுறு துயர்கெட
இலகிய கருணையோ டியல்திரு விழியினை.
மறைகளு முனிவரு மனதினும் நினைவுறு
நிறைவினை யெளிமையி னிகழ்திரு மொழியினை.
உலகுறு மனைவரு முவகையில் நிலைபெற
நலமுற அருளிய நயமுறு நெறியினை.
உயரிய மதிகதி ரொளியினும் அகல்வுறு
துயர்தரு யிருள்கெடு சுடர்வளர் அறிவினை.

– இவை அராகம்

1. என்பு + அணி = என்பணி; 2. என் + பணி = என்பணி.
3. மயேந்திரம் — மகேந்திரம் (சூரபதுமன் ஊர்)
4. தொலைத்தபிரான் — முருகன்.

மன்னுலகில் வேதமெனும் மாண்பயிர்கள் செழிப்பதற்கே
தன்னமுதத் தமிழ்நாட்டில் தவமுனியாய் அவதரித்தாய்!

பாவைவிளக் கினையேற்றிப் பரவியவெவ் விருள்நீக்கிப்
பூவுலகை விளக்குதற்கே புகழ்வடிவாய் அவதரித்தாய்!

செவ்விமிகும் இந்துமதம் சிறப்புற்று நிலைப்பதற்கே
வெவ்வினையைப் போக்குதவ வேந்தாக அவதரித்தாய்!

மாந்தருளத் திடர்நீங்கி மாண்பெய்தி வளர்தற்கே
சாந்தமுறு சிவச்சுடராய்த் தகவுடனே அவதரித்தாய்!

– இவை தாழிசை

சத்தியத்தைக் காப்போய் நீ!
தன்மத்தை வளர்ப்போய் நீ!
நித்தியத்தில் திளைப்போய் நீ!
நெறிகட்குத் தலைவன் நீ!

மதியும் நீ!	நதியும் நீ!
விதியும் நீ!	புனலும் நீ!
மணியும் நீ!	நாளும் நீ!
ஒளியும் நீ!	கோளும் நீ!

– இவை அம்போதரங்கம்

எனவாங்கு – தனிச்சொல்

வண்டமிழ் ஒளிபெறு தொண்டை நாட்டில்
மண்டிய வளமுடன் வயங்கும் காஞ்சியில்
கோதறு காம கோடிபீ டத்திற்
சோதியை வளர்க்கும் தூயநன் முனிவ!

நற்றவக் கனலை நயமுறப் பெருக்கும்
முற்றிய சந்திர சேகர மூர்த்தி!
மதியினை மயக்கும் மாயையை வென்று
துதியொடு புனைதரு தூயபொற் கழலோய்!
அஞ்சக் கரத்தின ரருணவி பொழியும்
விஞ்சுசீர்க் குடந்தை விரும்பும் குருபர!
சிவமலா திலையெனத் தேர்ந்து தேர்ந்து
நவநவ மாக நவில்மலர் வாயோய்!
வளமெலாம் நல்கும் மாசயேந் திரராம்
இளவர சுடன்பொலி யெழிற்கற் பகமே!
வாழிநின் நாமம்! வாழிநின் பொன்னடி!
வாழிநின் கருணை! வாழிநின் கொற்றம்!
என்றுநன் கேத்த எழில்வரம்
நன்றிலி தருள்க! நற்குணக் குன்றே!

— இது சுரிதகம்

2

நன்மனமே கேட்டி நவில்வேன் நினக்கொன்று
தன்ம நெறியிற் றளராதே—சின்மயனும்
கச்சித் திருமுனிவன் கான்மலரை எப்போதும்
இச்சித் திருநீ இசைந்து. 3

இசைவளர் வேதங்கள் நாளும் சிறப்ப இடரகல
வசையறும் இந்து மதச்சிறப் போங்கி வளம்பெருகத்
திசைபுகழ் கச்சிப் பதியினில் மேவும் ஜெகத்குருவின்
அசைவறு பொன்னடி போற்றி வணங்குத லானந்தமே. 4

ஆனந்த மயமான தனிவாழ்வு
பெறவேண்டின் அடியேன் கூறும்
ஞானங்கொள் திருமொழியைத் தலைக்கொண்மின்!
உலகத்தீர்! நல்லோர் போற்றும்

மோனங்கொள் பேராளன்; திருக்காஞ்சி
நகர்மேவும் முனிவர் கோமான்
தேனந்து பாதத்தில் வண்டாகிப்
பேரன்பிற் றிகழு வீரே! 5

பல்லாண்டு

வீரமொடு புலன்வென்று விளங்குதவ ஞானிக்கு
வாரமொடு வேதத்தை வளர்க்கின்ற முனிவற்குச்
சீரமைந்த கச்சியினிற் செங்கோல்கொள் பகவற்குப்
பாரமைந்த சிவத்துக்குப் பல்லாண்டு கூறுதுமே. 6

கூற்றினை வெல்வர்; சிவத்தினைக் கண்டு குணம்பெறுவர்;
தேற்றுவர் சிந்தையை; அச்சமில் லாமற் றிரிந்திடுவர்;
சாற்றிடும் முக்குணச் சூழலைத் தாண்டிச் சதானந்தமாய்
ஏற்றம துற்ற ஜகத்குரு பாதத் திசைந்தவரே! 7

தவத்தைச் செய்திலேன்; மெய்ம்மையைக் கண்டிலேன்;
தகுதி பெற்றிட நெஞ்சைத் திருத்திலேன்;
அவத்தைப் பொய்ம்மையி னுளுந் திளைக்குவேன்;
அடிய னேற்கருள் நல்குவ துன்பரம்;
திவத்தைப்* பாரிற் கொணர்ந்தருள் மூர்த்தியே!
சின்ம யானந்த மாய்ப்பொலி மூர்த்தியே!
சிவத்திற் களித்திடும் அற்புத மூர்த்தியே!
திருந்து சந்திர சேகர மூர்த்தியே! 8

மூரிமத களிறுரித்துப் புரத்தை வென்று
மூவாத காலற்கும் முடிவு காட்டி
சீரியவான் கயிலையிலே வீற்றி ருக்கும்
சிவச்சுடரே அஞ்ஞான இருளை நீக்கப்

---

* திவம் – பரமபதம்.

பாரினிலே கருணையினால் அவத ரித்துப்
    பத்தரெல்லாம் வியந்தேத்தக் காஞ்சி யின்கண்
ஆரியனாத் திகழ்கின்றான் பின்னே வாமல்
    அவனடியே தஞ்சமென்று பற்று வீரே! 9

திருவடிச் சிறப்பு

பற்றிடும் தொண்டர்க் கமுதாய் இனிப்பன; பாவலர்கள்
சொற்றநன் மாலைகள் ஏற்றுக் களிப்பன; சூழ்பவர்தம்
குற்றம் தவிர்த்துத் திருவரு ளீவன; கோதகன்ற
நற்றவன் எங்கள் ஜகத்குரு பாத நளினங்களே! 10

நள்ளிருட் போதிற் சிறையினிற் பிறந்து
    நவையறு பசுக்களை மேய்த்துத்
தெள்ளிய கீதை விரித்தவன் என்கோ?
    செவ்விய ஆலநன் னிழலில்
ஒள்ளிய பொருளைக் கரத்தினாற் சுருக்கி
    யுவப்பொடு தெரித்தவன் என்கோ?
துள்ளிய மதனை யெரித்துநல் வாகை
    சூடிய ஜகத்குரு தனையே! 11

தன்னை யறிந்தா லுலகத்திற்
    சாரும் துன்பம் இல்லையென
முன்னை வேதம் நான்கினையும்
    முறையாய்த் தொகுத்துப் பகர்ந்திட்டான்
அன்னை அனையான் குடந்தையினும்
    அருளார் காஞ்சி நகரத்தும்
பன்னும் ஞானச் செங்கோலைப்
    பதுமக் கரங்கொள் குருபரனே. 12

குருபரனே! தெய்வக் கொழுஞ்சுடரே! ஞானம்
தருபரனே! மோனத் தவனே! — அருபரனே!
காஞ்சித் தவமுனியே! காதலால் நின்பதமே
வாஞ்சித் தவர்பெற்றார் வாழ்வு. 13

திருப்பள்ளி எழுச்சி

வாழிய வாழிய என்றுனைப் பாட
வந்தன நான்மறை; வந்தனன் கதிரோன்;
சூழிருள் நீங்கிய தெம்முளத் தறிவைத்
தூண்டிடும் சோதிநீ என்பதை அறிந்தோம்
ஆழியில் வந்தநஞ் சுண்டநல் லமுதே!
அற்புதக் காலடி வந்தசெந் தேனே!
ஏழிசை வளர்தமிழ்க் கச்சியின் கரும்பே!
எம்பெருமான்! பள்ளி எழுந்தரு ளாயே! 14

'அருளினால் முன்னம் முப்புரப் பகையை
யழித்தனை' என்றுரை செய்வர்;
மருளினால் அடியேன் வினவுவேன்; சினவேல்;
மற்றது மெய்ம்மையே என்னில்
இருளினால் வருந்தும் எம்முளத் துள்ளே
இசைந்தமும் மலத்தினை எரித்துத்
தெருளுறச் செய்வாய்; காஞ்சியம் பதிவாழ்
சின்மய ஞானதே சிகனே! 15

ஞானம் வளர நான்மறை யொளிர
மோனம் சிறப்ப முதுநெறி தளிர்ப்ப
மலரினைக் கடலினை மலையினை விடுத்து
இலவுல குற்ற நின்மல! நிராமய!

குறைவிலாக் காம கோடிபீ டத்து
முறையினைக் காக்கும் முனிவரர் பெரும!
கயேந்திர னெனப்பொலி கண்ணியர் புண்ணியர்
சயேந்திரர்க் கருளும் சற்குண மூர்த்தி!
நந்தலில் லாச்சிவ நன்மது நுகர்ந்து
சந்தமார் சந்திர சேகர சரஸ்வதி!
அடியேன்
அத்தியா ரோபத் தமைந்தவெந் துயரைச்
சத்தியா ரபவா தத்தால் தடைசெயேன்!
வாசனை வடிவாய் வயங்கும் மலத்தால்
விசிநன் கலைக்கும் விட்சே பத்தால்
அனைத்தையும் மறைக்கும் ஆவர ணத்தால்
நினைத்திட ஒண்ணு நெடுந்துய ருற்றேன்
கருணையார் நோக்கைக் கனிவுடன் உதவி
பருணவி சுரந்தெனை யாண்டருள் வாயே! 16

---

16 ஆரோபம் – அபவாதம்; மலம் – விட்சேபம்;

ஆரோபம்: உள்பொருளாகிய கயிற்றில் இல்பொருளாகிய பாம்பு தோன்றுகின்றது. அதுபோல் உள் பொருளாகிய பிரமத்தில் இல்பொருளைக் காண்பது. இல்பொருள்–உலகம்.

அபவாதம்: இல்பொருளை நீக்கி உள்பொருளைக் காண்பது. உலகம் இல்லை; பிரமமே உள்ளது எனத் திடமாக அறிவது.

"அத்தியாரோபம் என்றும், அபவாதம் என்றும் செப்பும் உத்தியால் பந்தம் விடு' என்று கைவல்யம் பேசும். இதன் விரிவை பஞ்சதசியிலும், விசாரசாகரத்திலும், கைவல்யத்திலும் காணலாம்.

ஆண்டவன் நமது நெஞ்சுளே யிருந்தும்
அன்பொடு தன்னுருக் காட்டான்;
வேண்டியும் மறைவான்; நற்குரு பரனே
மேன்மையி லெளியருங் காணத்
தூண்டுநல் லருளாற் காஞ்சியம் பதியிற்
றுலங்குநற் காட்சியி கின்றுன்;
நீண்டநன் மனமே! எவனரு ளுடையான்;
நீயுணர்ந் தவனருள் நாடே! 17

நாடு கின்றனை நாடொறும் போகமே;
நன்னெ றிக்கண் புகுகென ஓதிலோ
வாடு கின்றனை; நின்னைத் திருத்திடும்
மார்க்கம் ஒன்றும் அறிந்திலேன் ஐயகோ!
ஓடு கின்றன நாள்களும் நன்மையும்;
ஒன்று கூறுவேன்; கேட்டியென் நெஞ்சமே!
பாடு கின்ற புகழ்பெறு காஞ்சிவாழ்
பரம ஞானிக் கடைக்கல மாதியே. 18

ஆதி யாகி யந்த மாகி யருவ மாகி யுருவமாய்ச்
சோதி யாகி நின்ற ஒன்று தூய காஞ்சி நகரிலே
பேதி யாத காம கோடி பீட மேவி யுலகெலாம்
நீதி யான நெறியி லேக நிகரில் ஞான மருளுமால். 19

அருளொன் றிலரே எனினும், சிறிதும்
அறிவொன் றிலரே எனினும், உணரும்
தெருளொன் றிலரே எனினும், புவியிற்
சிறுபுன் பொருள்பெற் றவர்பா லணுகி
மருளொன் றியவெண் பனுவல் புனையும்
மடவீர்! மடவீர்! வளமெய் திடுவீர்!
இருள்வென் றிடுவீர்! உலகா ரியனை
எழில்கொள் கவியாற் பரவும்! பரவும்! 20

பரவு நான்மறை யோர்புறம் ஏத்திடப்
பணிந்து வானவர் ஓர்புறம் போற்றிடக்
கரவில் தொண்டர்கள் ஓர்புறம் கூத்திடக்
கயிலை மால்வரை மேவிய சோதியை
உரவு நீர்நிலத் தோங்கும் உயிர்க்கெலாம்
ஒப்பி லாநெறி காட்டிடும் காஞ்சியில்
வரவும் போக்குமில் லாதபொற் பீடத்தில்
வயங்கக் கண்டென துள்ளம் வளர்ந்ததே! 21

திருப்பாவை

வள்ளலாம் கண்ணன் வடிவாய மார்கழியில்
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கும்முன்
புள்ளினங்கள் பண்ணுற் புவியை நிரப்பும்முன்
மெள்ள எழுந்து விரைந்து புனல்மூழ்கிக்
கள்ளவிழும் பூப்புனைந்து கண்கட்கு மையெழுதித்
தெள்ளிய ஞான ஜெகத்குருவின் பேர்பாடிப்
பிள்ளைகாள்! கச்சியொளிர் பீடத்தின் சீர்பாடி
ஒள்ளிய நோன்பை யுவந்திடுவோம் எம்பாவாய்! 22

திருக்கண் சிறப்பு

பாவியரும் வந்து பணிந்தா லுளமிரங்கி
கூவியரு ளாலே குறைதீர்க்கும் — பூவினிலே
எச்சித் தருக்கும் இனியதனி வாழ்வருளும்
கச்சித் தவமுனிவன் கண். 23

கண்ணன் திருவடி நல்கிடு மின்பம்
கயிலைக் கோன்பத மீந்திடு மின்பம்
அண்ணல் வேள்கழல் அருள்செயு மின்பம்
ஐங்கரன் சேவடி தந்திடு மின்பம்

திண்ணம் பெறுவீர்! பெறுவீர்! உலகீர்!
ஜெயசங் கரனைச் சிவசங் கரனை
வண்ணந் திகழ்கச் சியிலே காண்மின்!
வளவாழ் வுறுவீர்! பணிமின் தினமே!

கமலப்பத வகுப்பு

தினமடி வணங்கும் அடியவர் புனைந்த
செழுமலர் சுமந்து — கனிவுற் றெளிர்ந்தன;
திசைதொறு நிரம்பி யிடர்நனி வழங்கு
சிறுவினை துரந்து — கதிரிற் சிறந்தன;
மனமருவு கின்ற விருண்மல மகன்ற
மதிதொறு மிருந்து — நிலவைப் பொழிந்தன;
மருவுதுய ரென்ற வெயிலினில் நடந்து
வருபவர்கள் தங்க — நிழலைப் பொழிந்தன;
சினமத மகன்ற பனவனிடர்[1] பொன்ற
சிறுமறலி மங்க — அழலைச் சொரிந்தன;
சிலைவடி வகன்று சிலைவடி வடைந்த
தெரிவை[2] யுணர் வொன்ற — அருளைப் புரிந்தன:
கன[3] முலவு கின்ற பொழில்வள மலிந்து
கலைநனி நிரம்பும் — எழில்மிக்க காஞ்சியில்
கலியுலகை வென்று மலையென நிமிர்ந்து
கவின்சங் கரன்பொற் — கமலப் பதங்களே. 24

---

1. சினம் மதம் அகன்ற பனவன் — மார்க்கண்டேயன்.
2. சிலைவடி வகன்று சிலைவடி வடைந்த தெரிவை — விக்ரகம் போன்ற வடிவம் நீங்கிக் கல் வடிவடைந்த அகலிகை.
3. கனம் — மேகம்.

புன்னகைச் சிறப்பு

பத்தர்கள் நெஞ்சத் திருளினை யோட்டிடும்; பாசமகல்
சித்தர்கள் ஞானத் தழுக்கைக் களைந்திடும்; தேசுபொலி
சுத்தர்கள் ஐயத்தைப் போக்கிடும்; போதச் சுகவடிவாய்ப்
புத்தர்கள் ஏத்திடும் காஞ்சித் தவமுனி புன்னகையே[1]. 26

புன்னகையைக் காட்டியென துள்ளம் என்னும்
பொன்வண்டை நின்வசமே வைத்துக் கொண்டாய்!
மன்னியநின் திருவடித்தா மரையின் மேவும்
மதுவன்றிப் பிறிதெதையும் அஃதுண் ணாது;
நன்னயமார் மதுவிரதம்[2] கெடாமற் காத்து
நலமருள்க! கலைக்காம கோடி பீடத்
தென்னரசே! அருள்மேனி சார்த்திக் கொண்ட
எம்மானே! பரானந்தத் திருக்கும் ஐயா! 27

மடக்கு

ஐயன் மேவுவ தற்புதக் காஞ்சியே;
அமலன் சிந்தையவ் வன்னைக்குக் காஞ்சியே!
மெய்யன் நாடொறும் பேசுதல் வேதமே;
விரும்பிக் கேட்டிடில் நீங்குவ வேதமே!
துய்யன் காலா லுதைத்தது கூற்றையே;
தொண்டர் தோய்வ தவனருட் கூற்றையே!
வையம் போற்ற லவனருட் சோதியே;
வாழ்க நெஞ்சம் அவன்பரி சோதியே! 28

---

1. புத்தர்கள் – அறிஞர்கள்; 2. மதுவிரதம் – தேனைத்தவிர வேறு எதையும் உண்ணாநோன்பு; வண்டுக்கு இப்பெயர் உண்டு.

மடக்கு: காஞ்சி – நகர்; ஆபரணம். வேதம்; நீக்குவ + ஏதமே (குற்றம்) கூற்றையே; அருட்கு + ஊற்றையே. அருள் + சோதி; பரிசு + ஓதி.

அம்மானை

சோதிவளர் காஞ்சிநகர்த் தூய தவமுனிவன்
நீதிவளர் நற்கயிலை நின்மலன்கா ணம்மானை ;
நீதிவளர் நற்கயிலை நின்மலனே யாமாயின்
கோதிலெழில் மாசடையேன் கொள்ளவிலை யம்மானை ?
குன்றனையான் மாசடையாக் கொள்கையா னம்மானை. 29

அம்மையருட் பேராற்றை மெல்ல வாங்கி
அகிலத்துக் களிக்கின்ற ஞான மூர்த்தி ;
வெம்மைமிகு மாயையினைப் பேய்த்தே ராக்கி
வினைப்பகைவெல் ஜகத்குருவின் புகழைப் பாடி
இம்மையினில் மறுமைநலம் யாவும் எய்தி
இனிமையாய் வாழாமற் காட்டிற் கேகி
விம்முவதென் ? சான்றோரே ! பாலால் நோய்கள்
விலகுமெனில், வேம்பருந்தல் புலமைத் தாமோ ? 30

புலவராற்றுப் படை

புலமைச் செல்வப் புத்தமு தருந்தி
மலர்தலை உலகில் மன்னுநற் புலவ !
கலைமக ளருளைக் கைவரப் பெற்றனை ;
அலைமகள் கருணை அளித்திலள் அந்தோ !
வாடினை ; வருந்தினை ; மயங்கினை ; தியங்கினை ;
ஓடினை யாண்டும் ; உற்றிலை அமைதி !
செலவெனும் மங்கையின் சீரிய மேனி
வரவெனும் பட்டால் வயங்கா மையினல்
வெளிவர நாணி வெய்துயிர்த் துள்ளே
இதயத் தறையி லிருந்துனை வாட்ட

சிதம்சிதம் கலுழ்ந்தனை! நேயக் கலேஞ!
ஆசையாம் தோழி யவனைத் தூண்ட
நேசம் மறந்தது நின்மனம் அயரேல்!
நன்றே நினைகுவன்; நன்றே பகர்குவன்;
இன்றே உயர்குவை, இடர்களைச் சொல்லுவை!
சான்றவர் பல்கும் தனிப்பெருங் காஞ்சியில்
ஈன்ற தாயினும் இன்னருள் பொழிவோன்;
சங்கர மரபின் தனிப்பெரும் விளக்கம்
ஐங்கோல் வென்றொரு செங்கோல் கொண்டவன்;
ஆரிய மறையை யன்புறக் காக்கும்
சீரிய சந்திர சேகர முனிவன்;
நாவலந் தீவை நயந்தயாத் திரையாற்
பாவன மாக்கிய பண்டித சிகாமணி;
வேத வாய்மையின் விளக்கம் போலும்
பேதமில் காம கோடிபீ டத்தில்
அருளர சாட்சிசெய் அற்புத மூர்த்தி;
இருளினை யகற்றும் எம்மான் பெம்மான்
சிறப்புடன் மேவும் செம்பொற் கோயிலைத்
திறப்படச் நாடித் தெளிவுடன் சென்று
மோனமா தவனை முறைமையிற் கண்டு
வானவர் பணியும் மலர்க்கழல் வணங்கித்
திருமுன் நின்று "சீரிய தேசிக!
அருமறைப் பொருளே! அடியே னுள்ளக்
கலியிருள் நீக்கும் கதிர்வளர் தீபமே!
சலியா வுள்ளத் தனிப்பெருந் தலைவ!
முதலைவாய்க் களிற்றை முராரிகாத் ததுபோல்
சிதலைவாய்ப் பட்டுத் தியங்கிய தமிழைத்.

தகவுறக் காத்த தமிழ்த்தாத் தாவும்,
புகழ்வளர் காசி பொலிவுமிக் கோங்க
நற்கலைக் கோயிலைப் பொற்புற அமைத்த
சிற்குணச் செல்வன்; சீரிய குன்றனான்
மாளவி யாவும், மாண்புறும் உலக
கோளமே போற்றும் கோதிலாத் தெய்வம்
ஏந்திய புகழ்கொள் காந்தியெம் மானும்
சாந்தமே வடிவாய்த் தழைரா ஜாஜியும்
மங்கலக் கம்பன் மாண்புகழ் வளர்க்கும்
எங்க ணேசனும் எங்க ணேசனும்,
சிதைவறு காதலாற் சிரத்திற் கொள்ளும்
பதமலர்த் தாளோய்! பார்வளர் சிவமே!"
என்றுநீ பொருண்மொழி இயம்பும் அளவையில்
உன்றுய ரனைத்தையும் ஒழித்தருள் வழங்குவன்;
திப்பிய வேதமும், சீரிய நலமருள்
முப்பெரு நூலும், மூவிரு சமயமும்
பற்பல் லாண்டு பொற்புறப் புரிந்த
நற்றவத் துதித்த ஞான சேகரன்;
தோமறு கணபதி தூய தம்பியாம்
சாமி நாதனே ஜகத்குரு வாகச்
சந்தமார் கயிலைச் சாரலை விடுத்து
வந்தன னென்று வழங்கப் பொலிவோன்
வன்னமார் ஜயேந்திர வள்ளலுக் குலவா
நன்னயச் செங்கோல் நல்கிய குருபரன்;
உளமுறு துயரெலாம் ஓட
வளமருள் ஞான மலைகிழ வோனே! 31

மல்லலார் காஞ்சி காமகோ டிக்கண்
வளரிள ஞாயிறே! வேதத்
தொல்லறப் பொருளை யுலகினி லுன்போற்
றுகளற வுணர்ந்தவ ருளரோ?
வல்லமை சான்ற மடங்கற்பாற் சுவையை
வயங்குவெங் குருளையே யன்றி
மெல்லிய, சிறிய, நடுக்குறு மிளமான்
மேவிநன் குணருமோ பொலிந்தே? 32

பொல்லா யாக்கைக் குள்ளிருந்து புலம்பேல் வாழி
மடநெஞ்சே!
எல்லா நலனும் பெற்றிடலாம், என்றும் இன்பிற்
றிளைத்திடலாம்;
வல்லான் காஞ்சி ஜகத்குருவின் வளமார் அருளாம்
பெருநெருப்பில்
ஔல்லா வினையாம் தூசுகளைக் கொட்டி யெரித்துக்
களிப்பாயே. 33

கோற்சிறப்பு

களிக்கின்ற மன்மதன் கொற்றத்தை வெல்லும்; கனிவுடனே
ஒளிக்கொண்ட ஞானத்தையன்புடன் நல்கும்; உயர்மறையிற்
றுளிக்கின்ற தேனின் சுவைப்பொருள் காட்டிடும்;
சோதியினைத்
தெளிக்கின்ற பெம்மான் ஜகத்குரு தாங்கும் திருத்தண்டமே.
34

மறம்

தண்டொன்றைக் கரத்தேந்தும் புனித மூர்த்தி
ஜகத்குருவின் திருவடியிற் காதல் கொண்ட
வண்டொன்று குழற்செல்வி ஞானப் பொன்னை
மணம்புரிய விரும்புகின்ற மன்னர் தூத!
கண்டுண்மை பகர்பவராங் கில்லை போலும்;
காதலன்றன் திருமுகத்தை நீகொ ணர்ந்தாய்;
விண்டுரைப்பேன்; தப்பாது; யாங்கள் அந்த
வேந்தன்றன் மணிமுடியைக் கவர்வோம் இன்றே! 35

கவலையில் மாழ்கிக் கலங்கும் நெஞ்சே!
நவையறு வாய்மை நவிலுவன் கேட்டி!
கற்ற கலைகள் களையுமோ துயர்களை?
பெற்ற செல்வம் பெயர்க்குமோ தீமையை?
ஆதலின் நினக்கொன் றறைகுவன் மறவேல்;
வேதனை நீங்கி விளங்குவை; உயர்குவை!
விண்புகழ் ஞான வேத சிகாமணி
வண்புகழ்ச் சந்திர சேகர வள்ளல்;
கந்தனே ஜயேந்திரக் கன்றுருக் கொள்ளச்
சந்தமார் கஜேந்திரன் தான்எனப் பொலிவோன்;
"நிட்கா மியமே நீக்கும் மலத்தை;
விட்சே பத்தை விலக்கும் உபாசனை;
வானவர் காண வளம்பல பெருக்கும்;
ஞான ஒளியால் நழுவும்ஆ வரணம்

மாயை பெற்ற மனத்தினை வெல்லலே
மாயிரும் புவியின் வல்லமை" * என்றவன்
அருள்விளக் காலே அனைத்தையும் காட்டும்
தெருள்வளர் முனிவன்; சிற்பரன்; அற்புதன்
பரத்தினை வழங்கும் பதமல ரிரண்டையும்
சிரத்திற் றாங்கச் சிவபிரான் நின்னைக்
கரத்திற் றாங்கிக் கனிந்து
சீர்பெற அருளுவன் செம்மை வளருமே! 36

---

* ஆன்மாவில் உள்ள முக்குற்றங்கள் மலம், விட்சேபம், ஆவரணம் என்பன.

மலம் : முற்பிறப்பில் செய்த வினைகள் (மலரில் வாசனைபோல்) மனத்தில் நினைவு வடிவாக இருப்பது. சைவசித்தாந்தம் பேசும் மாயை போன்றது இது.

விட்சேபம் : ஆத்ம சொருபத்தில் நிலைநிற்காதபடி அலையச் செய்யும் பண்புடையது. மயக்கும் செயல் இதற்குரியது. சைவ சித்தாந்தம் பேசும் மாயை போன்றது இது.

ஆவரணம் : ஆன்மாவைத் தெரிந்துகொள்ள முடியாதபடி மறைப்பது. இது சைவசித்தாந்தம் பேசும் ஆணவம் போன்றது. ஆவரணம் – ஆணவம் சொல் ஒற்றுமையை ஆராய வேண்டும், ஆவரணம் என்ற சொல் ஆணவம் என்று ஆயிற்று? உலகில் வழங்கும் ஆணவம் வேறு; சாத்திரம் பேசும் ஆணவம் வேறு; இதை உளங்கொண்டு ஆராய்க.

மலக்குற்றம் நிட்காமியத்தால் போகும்; விட்சேபம் உபாசனையால் போகும்; ஆவரணம் ஞானத்தால் போகும்.

சித்து

செஞ்சடையை மறைத்திங்கே யவத ரித்த
ஜெகத்குருவின் பதம்போற்றும் சித்த ரேம்யாம்;
வஞ்சமிலா எம்மாற்றல் பெரிய திந்த
வரையையெலாம் கனகமதாய்ச் செய்ய வல்லோம்;
கஞ்சத்திற் பொன்தோன்றச் செய்வோம்; உங்கள்
கண்முன்னே நாகத்தில் வெள்ளி யோடு
தஞ்சமென ஒளிர்பொன்னை யுதிக்கச் செய்வோம்;
சக்தியெலாம் பச்சிலையே நல்கு மப்பா! 37

ஊசல்

நல்லியல்சேர் உலகத்தைப் பலகை யாக்கி
நலிவற்ற மாயையினைப் பாச மாக்கி
மல்லலுறு சத்தியினில் அதனைப் பூட்டி
மறுவற்ற நால்வேதம் வடந்தொட் டாட்டத்
தொல்லுணர்வுச் சங்கரரே! ஆடிர் ஊசல்!
தூய்மைவளர் குருபரரே! ஆடிர் ஊசல்!
வல்லமைசேர் முனிவரரே! ஆடிர் ஊசல்!
வாய்மைவளர் புங்கவரே! ஆடிர் ஊசல்! 38

சித்து: கனகமாய் – கல் + நகமாய்; கல் – மலை. கஞ்சத்தில் பொன் தோன்றச் செய்வோம். (1) வெண்கலத்தில் பொன் தோன்றச் செய்வோம்; (2) தாமரையில் இலக்குமி தோன்றச் செய்வோம். நாகத்தில் வெள்ளியொடு......பொன்னை யுதிக்கச் செய்வோம்.

1. துத்த நாகத்தில் வெள்ளியையும் பொன்னையும் தோன்றச் செய்வோம்.
2. ஆகாயத்தில் சுக்கிரனையும் (வெள்ளி) குருவையும் (பொன்) தோன்றச் செய்வோம்.

தவம்

காசி முனையினில் நின்று பலப்பல
யோகம் புரிந்திடுவீர்! — அருள்
உத்தமன் கீதையிற் செப்பிய சொற்களின்
ஒட்பம் மறந்ததுமேன்?
தேசு நிறைந்தவன்; அற்புத சந்திர
சேகர மாமுனிவன் — தவச்
செய்ய மலர்க்கழல் பேணி வணங்கித்
திடம்வளர் நெஞ்சுடனே
பாசம் அகற்றிக் கடமைகள் செய்து
பரபரப் பற்றொளியாய் — உயர்
பாரினில் வாழுமின்; தீவினை யின்திரள்
பற்றி வருத்திடுமோ?
நேசம் வளர்ந்திட வுள்ளப் புலத்தினை
நித்தம் திருத்திடுமின் — இந்த
நீணில மீதினிற் சத்திய லோகம்
நிலைத்து வளர்ந்திடுமே! 39

நிலையா வாழ்விற் பேரின்ப நெறியைக் காண வேண்டுமெனில்,
புலையா முளத்திற் சிவசக்தி புகுந்து வளர வேண்டுமெனில்,
கலைசேர் பிறையைத் துறந்துசிவக் கலைசேர் காஞ்சி நகர்மேவி
உலையாத் தவம்செய் பெருமுனிவன் ஒளிசேர் வண்ணம்
நினைவீரே! 40

திக்குவிஜயம்

வண்ணமார் புனிதப் பாரத நாட்டை
மலரடித் துகளினால் மீளப்
புண்ணிய நாடாய்ச் செய்தனை; யாண்டும்
பொலிவுறு தீர்த்தங்க ளாடி

வின்னள வவற்றை யுயர்த்தினை ; எங்கும்
மேவிய தலங்களைப் பணிந்து
திண்ணிய புகழைப் புதுக்கினை ; காஞ்சித்
தேசிகா ! நின்னையா ரறிவார். 41

அறிவினி லறிவினை யறிபவர் தாமும் அறிந்தறி யாதசிவச்
செறிவுறு சந்திர சேகர சரஸ்வதி திருவருள் மல்கிடுமூர் ;
பொறிவரி வண்டின முளரி யிருந்து புராரி முராரியினை
மறுவறு மிசையொடு மறையின் வழுத்திடு காஞ்சி
வளம்பதியே ! 42

புயவகுப்பு

வளமுறு மருமறை பகர்தரு முயரிய
வாய்மை எனுஞ்சிவ — மாலைக் குவந்தன ;
அளவறு மடியவர் மகிழ்வொடு பணிபொழு(து)
ஆசி வழங்கிடச் — சாலக் கவிந்தன ;
உளமுறு கலைமகள் செவிலி எனத்தகும்
ஒருவர் புனைந்திடு — பாவிற் சிறந்தன ;
களவறு மனமதில் வளர்தரு பெரியவர்
காஞ்சியின் முனிவரர் — கோலப் புயங்களே ! 43

கோலக் கயிலை வரைநீத்துக் குளிர்பாற் கடலின்
துயிலொழித்து
ஞாலத் துயிர்கள் சிறப்பெய்த நம்பன் காஞ்சி நன்னகரில்
சாலப் புனித முனியாகித் தகவார் கருணை புரிகின்ருன் ;
காலத் தடைந்து பயன்பெறுமின் ! கனிந்து வாரும்
செகத்தீரே ! 44

செகமெலாம் வளரச் சிவபூ ரணத்தைத்
தகவுற வருளும் தத்துவா தீதம்;
உலகியல் தன்னி லுழலுமென் னுளத்திலும்
நிலவொளி வீசும் நின்மல சுகோதயம்;
மெய்யடி யவருள வியன்புலத் திடையே
பொய்யற விரவிப் பொலியருள் வெள்ளம்;
வித்திலா வித்தின் வேரினைக் கண்டு
முத்தியி லுலாவி முயங்கும் சின்மயம்;
நாண்மல ரனைய நற்குண தாசன்,
கேண்மைசால் இராதா கிருட்டிணன், புலவராம்
சோலையிற் புகுந்து துகளறக் கொணர்ந்த
மாலைகள் சூடும் மங்கள மூர்த்தி;
கொற்றமார் காம கோடி பீட
நற்றவன் சந்திர சேகர முனியின்
தாண்மலர் தஞ்சமென் றெய்தி
வீண்மயக் கற்று விளங்குக நெஞ்சே! 45

நெஞ்சமா ரிருளை யகற்றிடும் தீபம்;
நிகரிலாச் செம்மையின் ஆணி;
வஞ்சகப் பிறவிக் கொருசிவ மருந்து;
மனத்தினைத் திறந்திடும் நற்கோல்;
விஞ்சுநான் மறையிற் பழுத்தநல் லமுதம்;
விரிபுகழ்க் காஞ்சிமா நகரில்
தஞ்சமென் றடைந்தோர் துயர்களைத் துடைக்கும்
சங்கர முனிவரன் மொழியே! 46

வரமுறு கங்கை நதியினை மறைத்து
மணிமிடற் றுறுகறை மறைத்துக்
கரமுறு மழுமான் மறைத்துமுக் கண்ணைக்
கனிவொடு மறைத்துவந் தாலும்;
உரமுறு காஞ்சி நகர்திகழ் முனியே!
ஒப்பிலா நீசிவம் என்று
திரமுற அறிந்தோம்; கொண்டலால் முற்றும்
செஞ்சுடர் மறைந்திட லுண்டோ? 47.

மறைபரவு சிவச்சுடரும் முருக வேளும்
மாமலையும் அதிற்பெருகு கங்கை யாறும்
கறைபடியா நல்லருளும் தூய அன்பும்
கலைவளர்க்கும் இந்துமதத் திரண்டு கண்ணும்
நிறைவுடைய மூலவரும் புனித ஞான
நிலவருளும் உற்சவரும் போலத், துன்பச்
சிறைதகர்க்கும் இளவரசொ டொளிரும் ஞானத்
சிவவேந்தைக் கற்பகத்தைப் பணிந்து வாழ்வாம். 48

வாழிய என்றுன் பாத மலரிணைத் தலைமேற் கொண்டேன்;
வாழிய என்றுன் சீரை வாய்மையிற் சேர்த்து வைத்தேன்;
வாழிய என்றுன் பொற்பை மனத்திடை நிறுத்தி யுய்ந்தேன்;
வாழிய காம கோடி வள்ளலே! ஞானத் தேவே! 49

ஞானம் நல்கினை; வேதம் வளர்த்தனை;
நவையி லாறங்கச் செவ்வியைக் காத்தனை;
மோனம் போற்றினை; அன்பிற் கிளைத்திடும்
முறைகொள் வேள்விக்கு நன்னிழல் நல்கினை;

வானம் தந்திடும் பாவை விழாக்களால்
வாய்மை பேணினை; தூய்மையைக் காத்தனை;
ஊனம் போக்கினை; காஞ்சி நகர்க்கணே
ஒளிரும் சந்திர சேகர வள்ளலே!

வாழ்த்து

வளமெலாம் நிரம்பி வனப்புறு காஞ்சியில்
அளவிலாக் கருணையொ டமர்தவக் குன்றே!
குறைவிலாக் காம கோடிபீ டத்தில்
நிறைவினை வழங்கும் நின்மல மூர்த்தி!
சீரிய சந்திர சேகர நாயக!
பேரியல் மறவாப் பெருந்தகாய்! என்றும்
வாழிநின் நெறிகள்! வாழிநின் பீடம்!
வாழிநின் கொற்றம்! வாழிநின் சுற்றம்!
வாழிநின் கேள்வி! வாழிநின் வேள்வி!
வாழிநின் ஜயேந்திர வள்ளல் வாழி!
வாழிநின் செம்மை வளர்திப் பியமே!

வையம் வாழ்க!

கச்சிக் கோவை

முன்னுரை

தமிழுக்கே உரிய அகப்பொருள் துறைகளை நிரல்படக் கோப்பது கோவை. இது அகப்பொருட்கோவை எனப்படும். நானூற்றுக்கு மேலான துறைகள் அகப்பொருளில் உள்ளன கவிஞர்கள் தம் கற்பனை அமுதைக் குழைத்துச் சுவை விருந்து படைக்க ஏற்றன இத்துறைகள்.

அகப்பொருள் துறைகளைக் கொண்ட பாடல்கள் தமிழில் மிகப்பல. சங்க நூல்களில் பல இத்துறைகளைக் கூறுவனவே. திருக்குறள் காமத்துப் பால், இத்துறைகள் சிலவற்றின் விரிவே. ஆயினும் சங்கநூல்கள் அகத்துறைகளை நிரல் படுத்திக் கூறவில்லை.

அகத்துறைகளைக் கோவைப்படுத்தி எழுந்த முதல் நூல் திருச்சிற்றம்பலக் கோவையார். நம்பியகப் பொருள் என்ற இலக்கண நூல் எழுந்த பிறகு, அதை அடியொற்றி நூற்றுக் கணக்கில் கோவைகள் எழுந்துள்ளன.

கோவை பாடுதல் அருமை. கற்பனை வளமும், இலக்கியப் பெரும்புலமையும் பெற்றவரே இதைச் செய்தல் இயலும். இதனால்தான் "யாவையும் பாடிக் கோவை பாடுக" எனும் தொடர் தோன்றியது போலும்!

கண்கண்ட தெய்வமாக நம் கண் எதிரே உலாவிக் கடவுள் நெறியை விளக்கிக் காசினியை உய்வித்து வருபவர் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள். ஞானச் சுடரால் உலகினர் அக இருளை நீக்கி அருளும் அப்பெருமான் மீது, கோவை பாடும் பேறு கிட்டியது முன்னைத்தவமே ஆகும்.

காஞ்சிப் பெருமான் திருவருட் பெருமை எங்கே? எளியேன் சிற்றறிவு எங்கே? அவர்தம் புகழ்பாட என்னால் இயலுமா? இவற்றை என் மனம் நினைக்கவே இல்லை. ஆணை கிடைத்தவுடன் உள்ளம் கிளர்ந்தது; கோவை மலர்ந்தது.

என்னைக் கருவியாகக் கொண்டு, அப்பெருமான் தம்மைத் தாமே பாடிக்கொண்டார் போலும்!

கோவை நூல் அகப்பொருளைச் சார்ந்ததாயினும், உள்ளுறை பொருளாகப் பேரின்பமே வெளியிடுவது என்பர் சான்றோர். ஆழ்வார், நாயன்மார் பாடல்களில் வரும் அகப்பொருள் துறைகளுக்கு எல்லாம் பேரின்பப் பொருளையே உட்குறிப்பாக விளக்கியுள்ளனர் முன்னோர். திருக்கோவையாருக்குப் பேரின்ப பரமான உரை ஒன்று உண்டு. அவ்வாறே இக்கோவைக்கும் சுவாபதேசப் பொருள் காணல் இயலும்.

அகப்பொருள் துறைகள் நானூற்றுக்கும் மேலாக உள்ளன. பெரும்பாலான கோவைகள் நானூற்றுக்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்டன. விரிவஞ்சிச் சில துறைகள் மட்டும் தொகுக்கப்பெற்று, நூறு பாடல்களால் இந்நூல் ஆக்கப்பெற்றுள்ளது.

முன்னையோர் கண்ட முறையின் வண்ணம் செய்யப் பெற்ற நூலாதலால், இதன் நடை சற்று மிடுக்கானதே. ஆங்காங்கே சில செஞ்சொற்களும் விரவியுள்ளன. ஆயினும் முன், பின் தொடர்களினுல் எளிமையில் பொருள் விளக்குவனவே அவை.

துறைகட்குரிய விளக்கமும், அருஞ்சொற்பொருளும்' வேண்டியவிடத்துச் சிறு குறிப்புரையும் வரையப்பெற்றுள்ளன. பொருளினைத் தெளிவாக்கச் சில இடங்களில் சந்தி பிரிக்கப் பட்டுள்ளது.

காஞ்சிப் பெருமான் திருவருள் வெளியீடு ஆகையினுல், இந்நூலில் ஆங்காங்குச் சில நயங்கள் புலப்படாமற் போகா. குறைகள் இருப்பின், அடியேனது தகுதிக் குறையே எனக் கருதி அருள்க.

கோவிலூர் அஞ்சல், திண்டுக்கல் வழி, 18—5—'73	அரங்க சீனிவாசன்

ஆசிரியரைப் பற்றி . . . . .

கவிஞர் அரங்க சீனிவாசன் 29—9—1920-இல் பருமிய நாட்டில் பிறந்தவர். திரு. கு. பக்கிரிசாமிப் பிள்ளை (பரிபூரணானந்த சுவாமிகள்) என்னும் நல்லாசிரியரிடம் பல ஆண்டுகள் முறையாகத் தமிழ்ப் பாடம் கேட்டவர். மிக இளமையிலிருந்தே கவிபாடும் ஆற்றல் பெற்றவர். யமகம், திரிபு, சிலேடை, சித்திரம் முதலிய மிறைக்கவிகளும் எளிதில் பாட வல்லவர். புதுமைக் கவிகளும் படைத்து வருபவர்.

தமிழகத்தில் பல கவி அரங்குகளைத் தலைமை தாங்கியும், பங்குகொண்டும் சிறப்பிப்பவர்.

அனைத்திந்தியத் தமிழ்ப்பெரு மன்றத்தினரால் அருட்கவி என்னும் பட்டம் வழங்கப் பெற்றவர்.

தாகூர் அஞ்சலி, பொன்மலைச் சந்நிதி முறை, அரங்கச் சிலேடை வெண்பா, கருமாரி அந்தாதி, வள்ளல் சண்முகனார், சிந்தனைச் செல்வர் பிள்ளைத் தமிழ், கோமதி நான்மணிமாலை முதலிய பலநூல்கள் இதுகாறும் வெளிவந்தவை. பத்மகிரி நாதர் தென்றல் விடு தூது முதலிய பல நூல்களுக்கு உரை கண்டுள்ளார். அண்மையில் வங்காள நாட்டு விடுதலைப் போராட்ட வெற்றி குறித்து இவர் பாடியுள்ள வங்கத்துப் பரணி என்னும் அரிய நூல் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக வந்துளது.

இவர்தம் உருவும், உணர்வும் ஒக்கப் பொருந்திய செம்பாகமான கவிகள் கற்றோர் இதயத்தைக் களி கொள்ளச் செய்வன.

கச்சிக் கோவை

அருட்கவி அரங்க சீனிவாசன்

காப்பு

காவை நிகர்கை இராதா கிருட்டிணன் கட்டளையால்
கோவை அலங்கல்ஒன்று உன்கழல் சாத்தக்
கொடுத்துவைத்தேன்
சாவை விலக்கும் தனிமருந் தானதண் அம்தமிழால்
நாவை அசைத்தருள் சந்திர சேகர நற்குருவே!

காட்சி

விழிஎன நீலமும் கார்க்குழல் என்னமென் சைவலமும்
மொழிஎனத் தேனும் முகமெனக் கஞ்சமும் முன்னர்உந்திச்
சுழிஎன நீர்ச்சுழி யும்கொண்டுஓர் பூந்தடம் தோன்றியதால்
வழிஎனக்கு ஆகிய சங்கரர் காஞ்சி வரையிடத்தே. 1

காவை – கற்பகச் சோலையை; நிகர் கை – ஒப்பான கையை யுடைய; கொடுத்து வைத்தேன் – புண்ணியம் செய்தேன்; அலங்கல் – மாலை.

1. தனியிடத்து ஒரு தலைவன் தலைவியை முதன்முதலில் கண்டு கூறியது. பெண்ணுருவினைக் கண்டு பூந்தடம் என்கின்றான். இப் பாடலில் மங்கை ஒருத்தி, பூம்பொய்கையாக உருவகம் செய்யப் பெற்றுள்ளாள்.

நீலம் – குவளை மலர்; குழல் – கூந்தல்; சைவலம் – நீர்ப்பாசி; கஞ்சம் – தாமரை மலர்; உந்திச்சுழி – கொப்பூழ்; தடம் – பொய்கை; வழி – முக்தி நெறி; வரை – மலை.

ஐயம்

ஆழிஅம் கண்ணன்கொல் ஆயிரம் கண்ணன்கொல்
அம்புயமாம்
பாழிஅம் கண்ணன்கொல் பைஒளிர் வெம்பணி நாயகன்கொல்
ஊழிஅங் கண்ண உலையாமை நல்கும் உலககுரு
வாழிஅம் கண்அருள் போல்பவர் வாழ்பதி ஆள்பவனே? 2

துணிவு

மாநிலம் செய்த தவப்பய னுல்எம்மை வாழவைப்பான்
மேல்நிலம் நீங்கிய சங்கரர் மால்வரை மெல்லியற்குத்
தேன் இலங்கு ஆரமும் வாடுறும்; செவ்வரிக் கண் இமைக்கும்;
கால்நிலம் தோயும். இவட்குஇடம் வேறில்லை; காசினியே. 3

---

2. மிக்க அழகியாகத் தோன்றுவதால், இவள் இவ்வுலக மங்கையாக இருத்தல் இயலாது எனத் தலைவன் ஐயுற்றுக் கூறியது.

உலக குருவின் கண்ணருள் மங்கைக்கு உவமை. இம்மங்கை திருமால் உலகினளோ? நான்முகன் நாட்டினளோ? இந்திரன் ஊரினளோ? நாகர் பதியினளோ? என ஐயுற்றது.

ஆழி அம் கண்ணன் – சக்கரப் படையையுடைய நாரணன். ஆயிரம் கண்ணன் – இந்திரன். அம்புயமாம் பாழி அம்கண்ணன்– தாமரை மலர்க்கோயிலாகிய அழகிய இடத்தையுடைய நான்முகன்.

பை – பாம்பின் படம்; பணி நாயகன் – பாம்பரசன்; ஊழி அங்கு அண்ண – பிரளயம் நெருங்கினும்; ஊழியம் கண்ண – தொண்டு செய்ய நினைத்தால்; கொல் – ஐயப்பொருளில் வந்தன; உலையாமை – அழியாமை; வீடுபேறு.

3. வேற்றுலக மங்கையாயின் மாலை வாடாது; கண்கள் இமையா; கால்கள் நிலத்தில் படா; இவளிடம் மாலை வாடுதல் முதலிய குறிகள் தோன்றுதலால், ' இவள் மண்ணுலக மங்கையே' எனத் தலைவன் ஐயம் தெளிந்து துணிவுற்றது.

வாழவைப்பான் – வாழ்விக்கும் பொருட்டு; மேல்நிலம் நீங்கிய – விண்ணுலகை விட்டு மண்ணுலகிற்கு வந்த – அவதரித்த. தேன் இலங்கு ஆரம் – தேன் விளங்கும் பூமாலை.

குறிப்பறிதல்

திண்பார்-வை யாதுஅடி யாரைஅவ் வீட்டினில்
சேர்த்தி,என்தன்
ஒண்பாவைப் பூண்டருள் சந்திர சேகரர் ஒண்பொழில்வாய்க்
கண்பார்வை என்மிசை நாட்டினள்; சென்னி கவிழ்ந்தனள் இப்
பெண்பாவை. ஆதலி னால்இனிப் பாலிப்பள் பேரருளே. 4

இரந்து பின்நிற்றற்கு எண்ணல்

வஞ்சப் பிறவி மயக்கற வீட்டின்பம் வாய்த்திடவே
தஞ்சத் தினை உல காரியன் பாற்பெறத் தாழ்குநர்போல்
கஞ்சத் திருஅனை யாட்குஇதம் கூறிக் கரம்குவித்து
நெஞ்சத் திடம்பெற வேட்டனை ! வாழி ! என் நெஞ்சகமே ! 5

இரந்து பின்னிலை நிற்றல்

பாவால் அலங்கல் தொடைபல சூட்டிவண் பாவலர்கள்
நாவால் வழுத்திய சந்திர சேகரர் நல்வரைவாய்ப்
பூவால் உருவம்இல் லான்செய்த புண்ணின்கண்
நின்கண் என்னும்
ஏவால் இடர்செய்கு வாய்அணங் கே!உய்வது எங்ஙனமே?
6

---

4. நோக்குவதும், தலைகவிழ்வதும் தன்னை விரும்புதற்குரிய அடையாளங்கள் எனத் தலைவன் தலைவியின் குறிப்பறிந்து கூறியது.

பார், வையாது – அடியாரைப் பிரபஞ்சத் துயரில் வைக்காமல். ஒண்பாவை – ஒளிபொருந்திய கவிதையை.

5. தலைவியிடம் தன் குறையைக் கூறி, அவனை யாசித்து நிற்றற்கு எண்ணித் தலைவன் கூறியது.

உலகாரியன் – ஜகத்குரு; தாழ்குநர் – வணங்குபவர்; நெஞ்சத்து இடம் – தலைவியின் நெஞ்சத்திலே இடம்; வேட்டனை – விரும்பினாய்.

6. இரந்து நின்ற தலைவன், தலைவிக்கு வழிபாடு செய்ய முயன்று கூறியது.

உருவம் இல்லான் – மன்மதன்; ஏவால் – அம்பினால்; உய்வது – உயிர் தரிப்பது.

முன்னிலையாக்கல்

உரைமேம் படும்உல காரிய னும்சுடர் ஓங்குகச்சி
வரைமேல் அணங்கனை யீர்!ஆயத் தாருடன் வாவியில்நீர்த்
திரைமேல் எழுப்படிந்து ஆடாமல் நிற்பதுஎன்? சீறடிகள்
தரைமேல் படப்பெறு மோ? தலை மேற்படத் தக்கனவே. 7

இடையூறு கிளத்தல் (நாணிக் கண்புதைத்தல்)

செம்பே றியகளிம் பாம்எனும் ஆணவம் சிந்திடவே
'நம்பேறு' எனவரும் சங்கரர் காஞ்சி நகரனையாய்!
வம்பே புதைக்கும் தனம்வெளி யிட்டுவன் கூர்மையங்கண்
அம்பே புதைக்கக்கைக் காவலர் வைத்தது அதிசயமே! 8

---

7. தலைவியை (முன்னிலையாக்கி) விளித்து உரையாடத் தொடங்கியது.

ஆயத்தார் – தோழியர்; வாவி - பொய்கை; திரை – அலை; சீறடி – சிறிய அடி.

8. தலைவன் சொல்லிச் செய்த வழிபாட்டினல் நாணமுற்ற தலைவி, மாதவிக்கொடிப் பந்தரில் மறைந்து தன் கண்களைக் கையால் புதைத்தாள். அப்போது உண்டாய துன்பத்தைத் தலைவன் கூறியது.

வம்பே புதைக்கும் தனம் - கச்சு மறைக்கும் கொங்கை; புதைக்கும் தனம் வம்பே வெளியிட்டு - காக்கத்தக்க செல்வத்தை வீணே வெளிப்படுத்தி.

வன் கூர் மை அம் கண் – வலிய கூரிய மையுண்ட அழகிய கண்கள்; வன் கூர்மை அங்கு அண் அம்பு - வலிய கூர்மை அவ்விடத்துச் சாரும் அம்பு.

கைக் கா அலர் – கையாகிய (சோலை) மலர். கைக் காவலர்– கைவசமுள்ள காவலர்.

கச்சினல் மூடத்தக்க கொங்கைகளை வெளிப்படுத்தி, வலிய கூரிய மையுண்ட கண்களை (அம்புகளை) மூடுவதற்குக் கைகளாகிய (சோலை) மலர்களை வைத்தது அதிசயம் என்க.

புதைத்து வைக்கத்தக்க செல்வத்தைப் பயனில்லாமல் வெளியே போட்டு, வலிய கூர்மை பொருந்திய அம்புகளைப் புதைத்து வைப்பதற்குக் கைக்காவலரை வைத்தது அதிசயம் என்பது தொனிப்பொருள்.

முறுவற் குறிப்பு உணர்தல்

மாணிலன் ஆக்கும்என் ஐம்பொறி என்வசம் ஆகிஉய்யச்
சேணில வாதவன் போல்வந்த காஞ்சிஎம் தெய்வவெற்பில்
நீணில வாய்வரும் நேரிழை மாதர் நெடுமுறுவல்
வாள்நில வால்அடி யேன்மனக் கஞ்சம் மலர்ந்ததுவே. 9

புகழ்தல்

தேன்கொண்ட சொல்உல காரியன் காஞ்சிச் சிலம்பகத்தே
மான்கொண்ட கண்ணியைக் கூடுமுன் னேஉவ மானம்என்று
யான்கொண்ட மையலி னல்உரைத் தேன்பிழை என்றுணர்ந்தேன்.
வான்கொண்டல் காள்! இவள் கூந்தலின் உண்டோ மணம்உமக்கே? 10

---

9. தலைவியின் குறுநகை கண்டு, தன்னை அவள் விரும்புதற்கு அஃது அறிகுறி என்று கருதித் தலைவன் கூறியது.

மான் இலன் – மாண்பு இல்லாதவன்; சேணிலவாதவன் – சேண் நில ஆதவன்; சேண் நிலவு ஆதவன்; சேணில் அவ் ஆதவன் — என்றவாறு பிரிக்கலாம்.

நீணிலவாய் – நீள் நிலத்தின் வாய்; நிலவால் கஞ்சம் மலராது; ஆதலால் வியப்பு எய்தினன் தலைவன்.

10. தலைவியின் இசைவு பெற்றுக் கலந்த தலைவன் அவளைப் புகழ்ந்து கூறியது.

சிலம்பு - மலை; கொண்டல்காள் – மேகங்களே!

கூந்தலுக்கு மேகத்தை உவமையாகக் கண்டான் தலைவன். பின்னர் அது பிழை என்று கண்டான். கூந்தலுக்கு மணம் உண்டு. மேகத்திற்கு மணம் இல்லை என்றுணர்ந்தான்.

பிரியேன் என்றல்

காஞ்சித் திருப்பதிச் சந்திர சேகரர் கால்மலரை
வாஞ்சித்து அமுதம் ததும்பிடும் தண்ணருள் வாரிதியில்
நீஞ்சித் திளைப்பார், விடயமுட் காட்டை நெருங்குவரோ?
பூஞ்சித் திரவிழி! நிற்பிரி யேன்உயிர் போயினுமே! 11

பாங்கன், தலைவனை உற்றது வினுதல்

சோராது வள்ளுவன் முப்பால் நெறியில் தொடரும்நண்பா
பேரா தரிக்கும் அடியவர் அன்பொடு பேணுகின்ற
சீரார் திருப்பதக் காஞ்சிஎம் மான்விழிச் செந்தண்மையைச்
சேரா தவர்போல் கலங்கியது ஏன்உன் தன் சிந்தனையே? 12

தலைவன் உற்றது உரைத்தல்

ஆராத காதல் அடியவர் நெஞ்செனும் ஆலயத்துள்
வாராது வந்து வரம்தரும் சங்கரர் வண்சிலம்பில்,
நேரான என்மனப் போதகம் செல்லும் நெறியினில்ஓர்
ஆரா அமுதனை யாள்அங் குசத்துக்கு அடங்கியதே! 13

---

11. எதிர்பாராது கூடிய தலைவன், தன்னைப் பிரிந்து போய் விடுவானோ என்று நினைந்த தலைவியைத் தேற்றிக் கூறியது.

நீஞ்சி – நீந்தி ; விடயமுள்காடு – புலனுகர்ச்சியாகிய முள் நிறைந்த காடு ; நிற்பிரியேன் – உன்னைப் பிரியமாட்டேன்.

12. தலைவியைக் கலந்துவந்த தலைவனின் வேறுபாட்டைக் கண்ட பாங்கன், தலைவனிடம் உசாவியது.

பேணுகின்ற – விரும்புகின்ற ; செந்தண்மை – செம்மையான அருள்.

13. தலைவன் வாட்டத்தைக் கண்ட பாங்கன், "உற்றது யாது?" என வினவினனுக்குத் தலைவன் கூறியது.

என் மனத்தின் அறிவு அமுதனையாளின் அழகிய நகிலுக்கு அடங்கியது. மனமாகிய யானை அங்குசத்துக்கு அடங்கியது என்பது தொனிப்பொருள்.

மனப் போதகம் – மனமாகிய யானை ; மனத்தின் அறிவு அங்குசம் – யானையை அடக்கும் கருவி (தோட்டி) ; அழகியநகில்.

பாங்கன் தலைவனைப் பழித்தல்

அதிமான் கலைபயின்று ஐந்தன் புலத்தை அடக்கும்நண்பா!
மதிமா தரைப்பணிக்கு ஒல்கிய தென்ன மயங்கினையேல்,
துதிமா தவர்க்குத் துணைஉல காரியன் தூஅருளை
விதிமாய வல்வினை மேலிடும் என்பது விந்தைஅன்றே! 14

கிழவோன்; வேட்கை தாங்கற்கு அருமை சாற்றல்

அல்லிற்கு இருள்குழல் ஆயிழை யோடுஉடன் ஆடி, உர
வல்லிற்கு அறிவினைத் தோற்றேற்கு உறுதி வழங்கல்இன்றிக்
கல்விக் கடல்கச்சித் தெய்வத்தை நச்சாக் கயவரைப்போல்
சொல்லிற் சுடமுனைந் தாய்! நண்ப னே! இஃதென்
தொல்வினையே. 15

---

14. 'தலைவியைக் கண்டமையால் இவ் வாட்டம் நேர்ந்தது' என்ற தலைவனுக்குப் பாங்கன் கூறியது.

மதி மா தரைப் பணிக்கு ஒல்கியது என்ன – விண்மதி பெரிய, பூமியிலுள்ள பாம்புக்கு வாடியது போல.

மா – பெரிய; தரை - பூமி; பணி – பாம்பு; மதி – சந்திரன்.

மதி மாது அரைப் பணிக்கு ஒல்கியது என்ன – உன் அறிவு, ஒரு மாதின் கடிதடமாகிய படத்திற்கு வாடியது என்று.

மதி – அறிவு; அரைப் பணி – கடிதடமாகிய படம்.

'ஜகத்குருவின் அருளை, விதியாகிய மாய வல்வினை மேலிடுதல் இல்லை; அவ்வாறே உன் அறிவை வேறொன்றும் மயக்குதல் இல்லை; உன் அறிவு மயங்கினால், தூ அருளை வினை மேலிடுதல் வியப்பன்று' எனப் பாங்கன் உரைத்தான்.

15. பாங்கன் சொல்லைக் கேட்டுத் தலைவன் வருந்திக் கூறியது.

அல்லிற்கு – இருளைக் காட்டிலும்; அல்லின் என ஐந்தனுருபு வரவேண்டிய விடத்து நான்கனுருபு வந்தது வேற்றுமை மயக்கம்.

உடன் ஆடி – கலவி செய்து; உரவல்லிற்கு – மார்பின்கண் உள்ள சூதாடு கருவி போன்ற நகில்களுக்கு; தோற்றேற்கு – தோற்றுவிட்ட எனக்கு; உறுதி – ஆறுதல்; நச்சா – விரும்பாத; உரம் – மார்பு.

ஆயிழையோடு உடன் ஆடிய சூதாட்டத்திற்கு (அறிவினை)த் தோற்றுவிட்ட எனக்கு என்பது தொனிப் பொருள்.

உரம் - வலிமை; வல் – சூதாடு கருவி.

தலைவன், இவ்விடத்து இவ்வியற்று எனல்

திருக்குந் தியசங் கரர்அடிச் சேர்ந்தவர் செல்வமெனப்
பெருக்கும் நகிலும் சிறுக்கும் இடையும் பிரசம்பொங்கி
இருக்கும் இதழும் இறுக்கும் குழலும் இதயந்தன்னை
உருக்கும் மொழியும் உடையாட்கு இடம்கச்சி
ஒண்பொழிலே 16

பாங்கன், தலைவியை வியத்தல்

மெய்வாய்மை யாளர் விரும்புஉல காரியன் மெல்லடியில்
உய்வான் புகுந்துஅரு ளாரமு துண்ட ஒருநண்பற்கே
நைவாய் இரங்கவல் நோய்அளித் தாளும் நயந்துஇரங்கி
ஐவாயி லுக்கும் மருந்தாகு வாளும்இவ் ஆரணங்கே! 17

---

16. "நீ கண்ட நங்கையின் இயல்பும் இடமும் யாவை?" என்ற பாங்கனுக்குத் தலைவன் கூறியது.

திருக்குஉந்திய அடி - மாறுபாட்டை ஓட்டிய திருவடி; திருகுந்தியஅடி எனப் பிரித்து, திருமகள் வீற்றிருக்கின்ற திருவடி என்றும் பொருள் கொள்ளலாம்.

திருக்கு – மாறுபாடு; உந்திய - ஓட்டிய; குந்திய – வீற்றிருக்கின்ற; பெருக்கும் – சிறுக்கும் முரண்தொடை.

17. தலைவன் சொன்ன இடத்துச் சென்ற பாங்கன், தலைவியைக் கண்டு தன்னுட் கூறியது.

உய்வான் – உய்யும் பொருட்டு; நைவுஆய் – நலிவாகி; இரங்க – வருந்தும்படி; ஐவாயிலுக்கும் – ஐந்து பொறிகளுக்கும்.

"கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள"

என்னும் குறளைக் கருதுக.

இகழ்ந்ததற்கு இரங்கல்

காலால் நடந்தே தலந்தோறும் சென்று கருணையினல்
மேலாம் அருள்விதை தூவிடும் சங்கரர் வெற்பணங்கின்
சேலார் விழிஅம்பு பாய்ந்திடு மேல், திருச் சேர்ந்தநெஞ்சின்
மாலா னவன்நெடு மாலாவன் வேறுஎன் வழுத்துவதே? 18

கலவியின் மகிழ்தல்

பாவே றியபுகழ்ச் சங்கர சோதி பனிவரைஇக்
காவே தடம்பொய்கை; நீயேஇப் பொய்கையில்
கஞ்சமென்பூ;
பூவே தரும்மது நீதரும் இன்பம்; புகுந்துஅளைந்து
நாவே இனிக்கஉண் ணும்தும்பி நானே. நறுநுதலே! 19

---

18. தலைவியைக் கண்ட பாங்கன் அவள் எழிலை வியந்து தலைவனைத் தான் இகழ்ந்தமைக்கு இரங்கிக் கூறியது.

திரு சேர்ந்த நெஞ்சின் – திருமகள் சேர்ந்த மார்பையுடைய; மாலானவன் – திருமால்; நெடுமால் ஆவன் – நீண்ட மயல் உடையவன் ஆவான்.

"மாலானவனே (திருமாலே) மால் (மையல்) ஆவான் என்றால் என் நண்பன் மயங்கியது வியப்பன்று" எனப் பாங்கன் கருதினன் என்க.

திருமகளைப் பிரியாதிருக்கும் திருமாலே இவளைக் கண்டால் மயலாவான் என்று தலைவியின் அழகை வியந்தது.

19. தலைவி பொழிற்கண் இருப்பதை அறிந்த தலைவன், அங்குச் சென்று முயங்கிக் கூறியது.

கா – பொய்கை; தலைவி – பூ; இன்பம் – மது; தலைவன் – தும்பி. இவை உருவகங்கள்.

புகழ்தல்

'அதுஅன்று அதுஅன்று' எனமறை கூறும் அரும்பொருளை
'இது'என் றிடும்உல காரியன் வெற்பில்இவ்
ஏந்திழைசொல்
'மது'என் றதுபிழை; எண்ணிடின் இன்பம்
மதுத்தருமோ?
'விது'என் றதுபிழை. வெங்கறை ஏதுஇவள்
மென்முகத்தே? 20

ஐயம் உற்று ஓர்தல்

நாமே வியபுகழ் சேர்உல காரியன் ஞானநெறி
தாம்மே வியதவத் தால்ஒளி வாய்த்தெனத் தையலுக்குப்
பூமேனி வாடினும், பொற்பணைத் தோள்களும் பொன்முகமும்
தேமே வியநுத லும்கவின் பெற்ற திறம்வியப்பே! 21

---

20. தலைவியை முயங்கிய தலைவன் அவளைப் புகழ்ந்து கூறியது. "மதுவானது எண்ணினால் இன்பம் தாராது; ஆதலால் இவள் சொல்லை மது என்றது தவறு. இவள் முகத்திற் கறை இல்லை; ஆதலால் அம்முகத்தைக் களங்கமுடைய சந்திரன் என்றது தவறு" என்றான்.

நேதி நேதி என்பது வேதம். அதன்பொருள் அதுவன்று அதுவன்று என்பதாம்.

விது - சந்திரன்; கறை - களங்கம்.

21. தலைவனைக் கூடிவந்த தலைவியின் வடிவில் வேறுபாடு கண்ட தோழி, "அதற்கு உரிய காரணம் யாதோ?" என ஐயுற்று ஆராய்ந்தது

வாய்த்தென – கிட்டினாற்போல; கவின் – அழகு; தேமேவிய நுதல் – இனிமை பொருந்திய நெற்றி; பணைத்தோள் – மூங்கிலை ஒத்த தோள்.

ஐயம் தீர்தல் ('மதி தொழுக' எனல்)

வேதம் மணக்கும் திருவாய்நம் சங்கர மெய்க்குருவின்
சீதம் மணக்கும் திருமுகம் போலத் திகழ்தரலால்,
போதம் மணக்கும் அவர்புகழ் போல்ஒளி பொங்குதலால்—
காதம் மணக்கும் குழலாய்! – தொழத்தகும் காண்மதியே! 22

சுனை நயப்பு உரைத்தல்

ஏகம் பரம்; புவி மாயையின் தோற்றம் எனஅறிவுத்
தாகந் தனைஎழுப் பும்உல காரியன் தண்ணருளால்,
யோகம் தரும்ஒளி தந்திடு மாயின் உடன்எனையும் —
பாகம் தரும்மொழி யாய்! — அழைத்து ஏகுஅப்
பனிச்சுனைக்கே! 23

---

22. தலைவனுடன் இவளுக்குக் கலவியுண்டு என ஐயுற்ற பாங்கி, தன் தெளிவை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டுத் தலைவியை ஆராய்ந்தது.

மதியைக் காட்டி, 'இது தொழத்தகும் காண்' என்றாள் தலைவி; தலைவனைக் கூடிய துண்மையாயின் மதியைத் தொழ மாட்டாள். ஏனெனில் கற்புடைய மங்கை 'தெய்வம் தொழாள்; கொழுநனைத் தொழுதெழுவாள்' அன்றோ? தலைவி மதியைத் தொழுதால், தலைவனைக் கூடவில்லை என்பது தெளிவாகும் என்பது தோழியின் கருத்து.

வேதம் மணக்கும் – வேத மணம் வீசும்; சீதம் மணக்கும் – குளிர்ச்சி பொருந்திய; காதம் மணக்கும் – காததூரம் மணம் வீசுகின்ற.

23. 'உன் வடிவில் தோன்றும் வேறுபாட்டுக்குக் காரணம் யாது?' என வினவிய தோழிக்குத் தலைவி, 'நான் சுனை மூழ்கினேன்; அதனால் இது நேர்ந்தது' என்றாள். அது கேட்ட தோழி ஏளனமாக, "பாகம் தரும் மொழியாய்! யோகத்தாலேயே இத்தகைய ஒளி கிட்டும். நீ ஆடிய சுனை அத்தகைய ஒளியைத் தருமாயின், நானும் அதைப் பெற விழைகிறேன். என்னையும் அழைத்துச் செல்!' என்றாள்.

யோகம் தரும் ஒளி (யோக சாதனையால் வரும் ஒளி) என்பதில் கலவியால் வரும் அழகு என வேறு பொருளும் தொனிப்பது நயம்.

ஏகம் பரம் – ஒன்றே கடவுள்; யோகம் – யோகசாதனை, கலவி; பாகம் – பாகு.

கலை விருதல்

மலையார் விளக்கெனும் சந்திர சேகரர் வாய்மொழியால்
நிலையாது இருள்வினை ஓடுவது ஒப்ப நெடுங்குழலீர்!
கலையானது ஒன்று கடுகியது. யானும் 'கலை கலை' என்று
அலையாது பின்தொடர்ந் தேன். கண்ட துண்டோ
அரும்புனத்தே? 24

மொழி விருதல்

சித்தினை நோக்கி அசித்தினை நீக்கிநம் சென்மவினைக்
கொத்தினைப் போக்கிய சங்கரர் காஞ்சிஅம் குன்றில்,
அன்பு
வித்தினை என்மனத் தோட்டு வைத்தனை மென்சொல்அமிழ்
துத்தினை வார்க்கிலை யேல், அணங் கே! உயிர் தத்திடுமே!
25

---

24. தலைவியும் பாங்கியும் உள்ள இடத்துத் தலைவன் வந்து, "ஒருமான் ஓடி வந்தது. நானும் பின் தொடர்ந்து வந்தேன். அம் மான் இங்கு வரக்கண்டதுண்டோ?" என்றது.

கலை – மான்; ஆடை; கலை என்னும் ஏவல்.

கலை கலை என்று – மான் மான் என்று கூறிக்கொண்டு; மான் வருகிறது புதரில் மறையாமல் கலையுங்கள் கலையுங்கள் என்று கூறிக்கொண்டு; உன் ஆடையைக் கலைப்பாயாக என்று கூறிக்கொண்டு.

25. "மான் வந்ததோ?" என்று வினவியதற்கு அப்பெண்டிர் எதிர்மொழி கொடாதிருக்கக்கண்ட தலைவன், எதிர்மொழி கூறும்படி வேண்டியது.

'என் மனத்தே (அன்பு) விதையை ஊன்றிவிட்டு, (சொல்லாகிய) நீர் வார்க்காவிட்டால் அந்த விதை வாடியழியும் என்பது கருத்து.

வினைக்கொத்து – வினைக்கூட்டம்; வித்தினை – விதையை; அமிழ்தம் – தண்ணீர்; தத்திடும் – அழியும்.

பாங்கி எதிர்மொழி கொடுத்தல்

தொடுக்கும் கலைப்புகழ் சூடிய சங்கர சோதிவெற்பில்,
உடுக்கும் கலையும், இதணத்து இருந்துபுள் ஓப்புதற்கே
எடுக்கும் கலையும் அறிவம்அல் லால்இனி இப்புனத்தே
அடுக்கும் கலைஅறி யப்பொழு துண்டோ அரிவையர்க்கே? 26

இறைவனை நகுதல்

பிழைப்படை யாப்பெரும் பேரருள் கொண்டு பிரமன் இப்பார்
உழைப்படை யாது, எம்மை ஆட்கொண்ட சங்கரர் ஓங்கலின்வாய்த்,
தழைப்படை யால்இவர் மான்எய் திடத்தகுந் தார்எனில், வேள்
கழைப்படை யால்கடற் பாரினை வெல்லும் கதைபொய் அன்றே! 27

---

26. உடுக்கும் – கலையும் எடுக்கும் க(ல்)லையும் அறிவோம். நீ சொன்ன கலையை (மானை) அறியோம் என்று பாங்கி கூறியது.

'அடுக்கும் கலையறியப்பொழுது உண்டோ அரிவையர்க்கு' என்பதில், 'பெண்களாகிய எமக்குக் கலைகளை ஆராய நேரம் ஏது?' என்பது தொனிப் பொருள்.

உடுக்கும் கலை – ஆடை; இதணம் – பரண்; புள் ஓப்புதற்கு – பறவைகளை வெருட்டுவதற்காக; எடுக்கும் கலையும் – கையில் எடுக்கின்ற கல்லையும், அடுக்கும் கலை – மான்; கல்வி.

27. மான் வந்ததோ எனக் கேட்ட தலைவன் கையில் வில்லோ வேலோ அம்போ இல்லை; இலைக்கொத்து மட்டும் இருந்தது. மான் வேட்டை ஆடுபவர் வில் இல்லாமல் வருவரோ? இதைக் கண்ட பாங்கி, தலைவன் மான் தேடுவது போல, தலைவியைத் தேடியே வந்துள்ளான் எனத் தெளிந்தாள். அதனால் தலைவனை நகையாடினள்.

'இவர் இலையினாலேயே மான் வேட்டையாட வல்லவர் ஆயின், மன்மதன் கரும்பு வில்லால் உலகத்தை வெல்வான் என்பது பொய்யன்று; உண்மையே என்றாள்.

பிழைப்பு அடையா – குற்றம் அடையாத; இப்பாருழை – இவ்வுலகின்கண்; ஓங்கலின்வாய் – மலையிடத்தே; தழைப் படை – இலைக்கொத்தாகிய ஆயுதம்; கழைப்படை – கரும்பாகிய வில்.

தலைவன், உட்கோள் சாற்றல்

சாவாத விண்ணமு தோ? கற்ப கத்தரு வோ? வலவன்
ஏவாத ஊர்திகொ லோ? அணங் கீர்! இனி ஈகுவெனுல்;
தாவாத சீர்க்கச்சிச் சந்திர சேகரன் தாள்மலரில்
ஓவாத அன்பினர்க்கு ஆகாதது ஏது? இச்சை ஓதுகவே!
28

தலைவன், தலைவியை உயர்த்தல்

சிப்பியில் வெள்ளியைப் போல்மாயத் தோற்றம்
செகம்எனவே
செப்பி,எம் மால்தெறும் சங்கரர் கண்ட திருநெறியை
ஒப்பிய அன்பர்க்கு மேல்எனக் கீழ்என ஒன்றில்லையே!
திப்பிய மாம்,அங் கணவண்ட லும்கங்கை சேர்ந்திடினே! 29

---

28. 'சங்கரர் தாளில் அன்புடையார்க்கு ஆகாதது ஏதும் இல்லை. ஆகையால், நீர் எது கேட்பினும் என்னுல் தர இயலும்' என்று அவர்கள் அன்பினைப் பெற முயன்று, தலைவன் கூறியது.

தலைவன் அப்பெண்களின் உட்கோளை (விரும்பியதை) வினவியது.

அணங்கீர்! – மங்கைமீர்!

29. பாங்கி, தலைவனிடம் 'ஐயா தாங்கள் உயர்குடியினர். நாங்கள் குறக்குடியோம். எங்களை ஏற்கத் தங்கள் குடிப்பிறப்பு தடையாகாதா?' என்றுள். அதற்குத் தலைவன் விடையிறுத்தது.

இறுதியடி வேற்றுப்பொருள் வைப்பு அணி.

எம் மால் தெறும் – எங்கள் மயக்கத்தைக் கெடுக்கின்ற; திப்பியமாம் – தூய்மையாகும்; அங்கண வண்டல் – சாக்கடைச் சேறு.

ஆற்ரு நெஞ்சிநெடு அவன் புலத்தல்

கண்ணுய் உலகுக்கு ஒளிதரும் சங்கரர் காஞ்சிவெற்பில்,
பண்ஆய் தரும்குயிற் காகளக் கிள்ளேப் பரிஉடையான்
என்ணு யிரமலர் வாளியி ஞல்இங்கு இயற்றுகின்ற
புண்,ஆ யிழைகட்டி ஞல்அன்றி ஆறுங்கொல் புந்தியிலே? 30

---

30. தன் வேண்டுகோளேப் பாங்கி மறுத்தமையால், தலேவன் இரங்கிக் கூறியது.

'மன்மதன் மலர் வாளியினுல் இயற்றிய மனப்புண் இந்த நங்கை அணேப்பினுல் அல்லாது ஆருது' என்க.

பண் ஆய்தரும் – இசையை ஆராய்கின்ற; குயிற் காகளக் கிள்ளேப் பரியுடையான் – குயிலாகிய காகளச் சின்னமும் கிளியாகிய குதிரையும் உடைய மன்மதன்; கிள்ளே – கிளி; பரி – குதிரை; வாளி – அம்பு; கட்டு – அணேப்பு; கட்டுதல்; ஆயிழை – பெண்; ஆய்ந்து எடுத்த துணி; இழை – நூல்; ஆகுபெயராய்த் துணியை உணர்த்தியது.

புண்ணுக்கு இழை (துணி) கட்டுவது இயல்பு. புண்ணுக்கு ஆய்ந்த இழையைக் கட்டாமல் ஆருது என்பது தொனிப் பொருள்.

பாங்கி தலைமகள் அவயவத்து அருமை சாற்றல்

கெடலும் படலும்இல் லாஞானச் சங்கரர் கேண்மைஉற்றாய்!
மடலும் விழைந்தனை! மங்கைக்குக் கோவை வரைந்துமுடித்
திடலும்வல் லாய்எனின், நன்னூல் இடைஇயல்
தேர்வதுஎங்ஙன்?
உடலும் பரணியைத் தீட்டினும் தீட்ட ஒணாதுஉரையே! 31

---

31. பாங்கி மறுத்தமையால் ஆற்றாமை கொண்ட தலைமகன் 'மடல் ஏறுவேன்' என்றான். அதுகேட்ட பாங்கி 'மடல் ஏறுதல் வேண்டினால் இவள் ஓவியம் தீட்டவேண்டுமே! உன்னால் இயலுமா? இவள் எழுத ஒண்ணா அழகியன்றோ'? ஒருகால் இவள் அவயவங்களை எழுதி அவள் கோவை இதழ்களை எழுதவல்லவன் ஆயினும், நூல் போன்ற அவள் இடையை எழுதுவது எப்படி? அவள் உடல் மேலுள்ள அணிகலன்களை எழுதினாலும், அவள் உரையை (சொல்லை) எழுதுவது இயலாதே'' என்று கூறியது.

கெடலும் படலும் இல்லா ஞானம் – கூம்பலும் மலர்தலும் இல்லாத அறிவு; கேண்மை – உறவு; மடல் – மடல் ஏறுதல்; மடல் என்னும் பிரபந்தம்; கோவை – கோவைபோன்ற வாய்; ஒருவகைப் பிரபந்தம்; நன்னூல் இடைஇயல் – நல்ல நூல் போன்ற இடையின் அழகு; நன்னூல் இலக்கணத்திடையுள்ள இயல்; இயல் – நன்னூலிலுள்ள அதிகாரப் பகுப்பு; இலக்கணம்; தேர்வது எங்ஙன்? - அறிவது எப்படி? எழுத முடியாது என்பது குறிப்பு; உடலும் பரணி - போர் செய்கின்ற பரணி என்னும் பிரபந்தம்; உடல் உம்பர் அணி – உடல்மேலுள்ள அணிகலன்கள்; உம்பர் – மேல்; தீட்டினும் – எழுதினாலும்; உரை – சொல்; நூலுக்கு உரை.

மடல் கோவை நன்னூல் பரணி என்பன இலக்கியங்கள். "மடல் எழுத விரும்புகின்றாய். கோவை எழுதவும் வல்லாய். எனினும் அவற்றை எழுத நன்னூல் இலக்கணத்திடையேயுள்ள இயல்களை அறிய வேண்டுமே! அவற்றை அறிவது எப்படி? பரணியை எழுதினாலும் அதற்கு உரை எழுத இயலாதே" என்பது தொனிப் பொருள்.

தலைமகன், தன்னைத்தானே புகழ்தல்

குருவாய்ப் புவிவரும் சந்திர சேகரர் கூரருளால்
திருவாய் மொழிச்செழுந் தேன்சுவை காட்டலும்
சேயிழைபால்
உருவாய்ஓர் தாளின் இருமுகை ஏந்தல்உண் டாயின்இடை
அருவாயது அன்றுஅத னால்அது தீட்டலும் ஆம்எனக்கே!
32

---

32. 'அவயவம் எழுத இயலாது' என்ற பாங்கிக்குத் தலைவன் என்னால் இயலும் என்றது.

'சங்கரர் அருளால் மொழியும் தீட்டுவேன். இடையையும் தீட்டுவேன். இடையைத் தீட்டுவது எங்ஙனம் என்னில், வயிற்றின் நடுவே உள்ள தாமரைத் தண்டுபோன்ற மயிரொழுங் கானது, இரு நகில்களைத் தாங்கியுள்ளதன்றோ? அப்படி நகிற் சுமையைத் தாங்குவதற்கு நடுவிலே ஏதாவது இருக்கத்தானே வேண்டும்? இடைக்கு உருவம் இல்லாவிடில் நகிற்சுமை நிற்பது எப்படி? ஆதலால் இடைக்கு உருவம் உண்டு என்பது தெளிவுதானே! உருவமுள்ளதை எழுத என்னால் இயலும்' என்றான் என்க.

திருவாய்மொழித் தேன்சுவை – அழகிய வாய்ச்சொல்லின் தேனின் சுவையை; காட்டலும் – ஓவியத்தில் எழுதுதலும்; உருவாய் – அழகுபொருந்திய; ஓர் தாளின் – ஒரு தண்டிலே; இரு முகை – இரண்டு மொட்டுக்கள்; அருவாயது அன்று – உருவம் இல்லாதது அன்று.

ஓர்தாள் – மயிரொழுங்குக்கு உவமை; இருமுகை – இரு நகிலுக்கு உவமை.

இறைவி கையுறை ஏற்றமை பாங்கி இறைவற்கு உரைத்தல்

சுடர்மணி யாய்வரும் சங்கரர்க்கு அன்ப! நின்
தூத்தழை, கண்
இடமணி நீரினில் ஆட்டினள்; முத்தத் திணைஅணிந்து
வடமணி யானையில் ஏற்றினள்; தன்னூர் வலம்வரவே
படமணித் தேரிலும் தாங்கினள் மென்சொல் பசுங்கிளியே! 33

---

33. தலைவன் தந்த கையுறை (பரிசு) ஆகிய தழையுடையைப் பாங்கி, தலைவிக்குத் தந்தாள். தலைவி அப்பரிசை உவந்து ஏற்றாள். தலைவி ஏற்றமையைப் பாங்கி தலைவனுக்குக் கூறியது.

'நீ தந்த தழையை வாங்கித் தன் கண்ணீரிலே நனைத்து, அதற்கு முத்தமிட்டு, தன் வடம் அணிந்த யானைபோன்ற நகில்களிலே ஏற்றி, தன் துடைகளிலே சூழும்படி, தன் பாம்பின் படம்போன்ற அழகிய கடிதடத்தில் ஏந்தினாள்' என்றாள்.

கண் இட மணி நீரினில் ஆட்டி – கண்ணிடத்துள்ள தெளிந்த கண்ணீரால் நனைத்து; முத்தினை அணிந்து – முத்தமிட்டு; வடம் அணி யானையில் ஏற்றி – வடம் அணிந்த யானை மத்தகம் போன்ற நகில்களிலே ஏற்றி; தன் ஊர் வலம் வர – தன் துடைகளைச் சூழும்படி; ஊர் – துடை. ஊரு என்பதன் திரிபு.

உன் தழையுடையைத் தன் கண்ணீரினால் கழுவி, முத்து மாலை சூட்டி, யானைமேல் ஏற்றி ஊர்வலம் வரத் தேரிலே தாங்கினாள் என்பது தொனிப்பொருள்.

குறியிடத்து உய்த்து நீங்கல்

நயமேம் படுபுகழ்ச் சங்கரர் காஞ்சி நளிர்சிலம்பில்
கயமே வலரைக்கொண்டு உன்நெடுங் கார்க்குழற்
காட்டினிலே
வயமே வியசிறை வைக்குவென். யாழின் மலிதரும்இன்
பயமே வியமொழி! காவல ரைக்கைக்கொள்
பைம்புனத்தே! 34

புணர்ச்சி மகிழ்தல்

சேரத் தவம்செய் தவர்க்குஅருள் சங்கரர் திண்சிலம்பில்
ஊரத் தவம்செய் ததுமார்பின் மார்பு; இதழ் ஊறுசெந்தேன்
ஆரத் தவம்செய் ததுவாய்; அணங்கின் வடிவழகை
வாரத் தவம்செய் ததுவிழி. யார்இணை மற்றுஎனக்கே? 35

---

34. தலைவன் குறிப்பிட்ட இடத்துத் தலைவியை நிறுத்திப் பாங்கி அப்பாற் செல்லுகையிற் கூறியது.

கயம் மேவு அலரைக்கொண்டு - பொய்கையிலுள்ள மலர்களைக் கொண்டுவந்து; கயம் - பொய்கை; குழற் காட்டினிற் சிறை வைக்குவென் - உன் கூந்தலிலே சூட்டுவேன். கா அலரைக் கைக்கொள் - அதுகாறும் நீ இக்காவில் உள்ள மலர்களைப் பறித்துக் கொண்டிரு.

'கீழான பகைவரைப் பிடித்துக் குழற் காட்டிற் சிறை வைப்பேன். நீ காவலர்களைக் கைவசப்படுத்தி வைத்திரு!' என்பது தொனிப்பொருள்.

கயமேவலர் - கீழ்மையுடைய பகைவர்; கயம் - கீழ்மை; மேவலர் - பகைவர்; காவலரைக் கைக்கொள் - காவலர்களைக் கைவசப்படுத்து.

35. பாங்கியால் தனித்து விடப்பட்ட தலைவியைக் கண்டு தலைவன் முயங்கிக் கூறியது.

மார்பின் மார்பு ஊர - தலைவியின் நகில்களில் என் மார்பு தவழ; ஆர - அருந்த; வார - அள்ளிக்கொள்ள.

புகழ்தல்

பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ச் சொரியப் பரிந்துஉலகில்
மேய்ப்பான் எனவரும் சந்திர சேகரர் வெற்பகத்தே
கோப்பாம் இவள்முகக் காந்திக்குத் தோற்ற குளிர்மதியம்
மீப்பால் அகம்கறுத்து ஆகம் பசந்து மெலிகின்றதே! 36

விருந்து இறை விரும்பல் (1)

ஒன்றக் குறுஞ்சிரிப் பால்என்னை ஆள்உல காரியன்தன்
குன்றக் குறுஞ்சரி யீர்! வள்ளி ஈந்த கொழுந்தினையும்
அன்றுஅக் குறிஞ்சிப் பெருந்தேனும் உண்ட அவாவின் அன்றோ
மன்றக் குறிஞ்சிக்கு உரியவன் ஆனான் மயிலவனே! 37

---

36. இயல்பாகவே களங்கமுற்று உடல் பசந்து தேயும் மதியை, இவள்முகக் காந்திக்குத் தோற்றமையால் அவ்வாறு ஆனமையாகக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி.

கோப்பு – அலங்காரம்; காந்தி – ஒளி; மீப்பால் – ஆகாயத்தின்கண்; அகம் கறுத்து – நடுவில் களங்கமுற்று; மனம் வெகுண்டு; ஆகம் பசந்து – உடல் பசந்து; மெலிகின்றது– தேய்கின்றது.

பார்ப்பான் பசு ஐந்து – ஐம்பொறிகள்; பாலாய்ச்சொரிய – பேரின்பம் தர; மேய்ப்பான் – அடக்குபவன்.

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு அஞ்சுஉண்டு
மேய்ப்பாரும் இன்றாய் வெறியாய்த் திரிந்திடும்
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கிடிற்
பார்ப்பான் பசுஅஞ்சும் பாலாய்ச் சொரியுமே!"

என்ற திருமூலர் திருவாக்கைக் கருதியது முதல் இரண்டடிகள்.

37. 'விருந்து உண்டு இரவு தங்கிச் செல்க!' என்ற பாங்கிக்கு உடன்பட்டுத் தலைவன் கூறியது.

ஒன்ற – தன்னிடம் பொருந்த; குறுஞ்சரியீர் – குறுகிய வளையலை அணிந்தவரே! குறிஞ்சிப் பெருந்தேன் – குறிஞ்சி மலரில் வண்டு திரட்டிய தேன்; மன்றக் குறிஞ்சிக்கு உரியவன் – மன்றங்களையுடைய குறிஞ்சி நிலத்துக்குத் தலைவன்.

முருகன் இயல்பாகவே குறிஞ்சித் தலைவனாயிருக்க, வள்ளி யிட்ட விருந்துண்டமையாலே, குறிஞ்சித் தலைவன் ஆனான் என்றது தற்குறிப்பேற்ற அணி.

விருந்து இறை விரும்பல் (2)

நான்அவன் ஆக அருள்உல காசான் நகமடவீர் !
கானவன் எச்சிற் கறிசுவைத் தான்சிவன் ; கார்க்கடல்வாழ்
வானவன் அந்தச் சவரிஎச் சிற்கனி மாந்தினன் ; வேள்
ஆனவன் வள்ளி தரும்தேனும் மாவும் அவாவினனே ! 38

கிழத்தி, மாலையம் போது கண்டு இரங்கல்

தெவ்வந்து இறைஞ்சினும் சித்தம் இரங்கித் திருவருளின்
பவ்வம் திளைக்கப் பரிவுசெய் சங்கரர் பைங்கிரிவாய்,
எவ்வம் திணிமதன் பூச்சரம் ஆழ்த்தும் இடர்க்கடலுள்
செவ்வந்தி மாலையும் கூற்றம தாகச் செறிந்ததுவே ! 39

---

38. கானவன் – கண்ணப்பன்; வானவன் – திருமால்; மாந்தினன் – உண்டான்; வேள் – முருகன்; அவாவினன் – விரும்பினன்; நகம் – மலை.

39. தலைவன் வரப்பெருமையால் தலைவி, செவ்வந்தி மாலைப் போது கண்டு இரங்கிக் கூறியது.

தெவ் – பகைவர்; பவ்வம் – கடல்; எவ்வம் திணிமதன் – துயரத்தை ஊட்டுகின்ற மன்மதன்; பூச்சரம் – பூவாகிய அம்பு.

பூச்சரமே இடர்க் கடலுள் ஆழ்த்தும்போது செவ்வந்தி மாலையும் சேர்ந்தால் மீள்தல் அரிது என்பது வேறு பொருள்.

பூச்சரம் – சில பூக்களால் ஆனது; மாலை – பல பூச்சரங்களால் ஆனது.

நீங்கற்கு அருமை தலைவி, நினைந்து இரங்கல்

சொல்மான், அயன்நெடு நாஅமர்ந் தாள்; பரந்
தோய்கருணை
என்மான், உலக குருஎங்கள் சங்கரர் இன்கண்உற்றாள்;
பொன், மால் நிறம்புகுந் தாள், நல் இமயப் பொருப்புதவும்
நன்மான் சிவன்இடம் கொண்டாள்; பிரிவின்
நலிவுஅஞ்சியே! 40

பாங்கி, இற்செறிப்பு உணர்த்தல்

எனைமுழு தாண்டவர்; சங்கரர் தம்தாள் இறைஞ்சுபவர்
வினைமுழு தும்கொய் வதுபோல் — சுவைமது வேட்டுவண்டு
நனைமுழு கும்தொடை யாய்! — கணிப் போது நவிலஎமர்
தினைமுழு தும்கொய் தனர்; காவல் யாம்இனித்
தீர்ந்தனமே! 41

---

40. தலைவனைப் பிரிதற்கு அருமையை நினைந்து தலைவி இரங்கிக் கூறியது.

'கலைமகள், கருணை மகள், திருமகள், மலைமகள் ஆகியோர் தயக்குரியாரின் நா, கண், மார்பு, இடம் ஆகிய இடங்களைச் சேர்ந்தது பிரிவுக்கு அஞ்சியே. ஆதலால் பிரிவது என்னல் இயலாது' என்றாள். தற்குறிப்பேற்ற அணி.

சொல்மான் – கலைமகள்; பரம்தோய் – பரப்பிரம்மத்திலே பொருந்திய; கருணை என்மான் – அருள் என்னும் மங்கை. இன்கண் உற்றாள் – இனிய கண்ணிலே பொருந்தினாள்; பொன் – திருமகள்; மால் நிறம் – திருமாலின் மார்பு; பொருப்பு உதவும் நல்மான் – உமாதேவி; இடம் கொண்டாள் – இடப் பாகத்தைக் கொண்டாள்.

41. பகற்குறியில் வந்து தலைவியைக் கலந்து மகிழ்ந்த தலைவனுக்கு 'இனிப் பகலில் வருதல் இயலாது' எனப் பாங்கி கூறியது.

நனை – மலர்மொட்டு; தொடையாய் – மாலையை உடையவனே! கணிப்போது நவில – தினை விளைந்த பருவத்தை வேங்கைமலர் அறிவித்தமையால்; கணி – வேங்கைமரம்; போது – மலர்.

'யாம் தினைக்காவல் தீர்ந்தனம். ஆதலால் இனி வீட்டிற் செறிக்கப்படுவோம். நீ இப்புனத்து வந்தால் எம்மைக் காண இயலாது' என்று பாங்கி கூறியது.

இறைவனைப் பாங்கி, குறிவரல் விலக்கல்

ஒருகால் வெருவ, இருகால் தரும்உல கார்யன்வெற்பில்
குருகுஆல வெந்தினை கொய்துஅரி கால்குலுங் கும்புனத்தே
கருகுஆல வாள்விழிக் காரிகைப் பூங்கொடி காரணமா,
இருகால் வருந்தவந் தீர்! பல கால்உமக்கு என்சொல்வதே! 42

குறுந்தொடி வாழும் ஊர்நோக்கி மதிமயங்கல்

அங்காம கோடியம் பீடத் தலைவர் அடிமலரில்
இங்கார்வம் இல்லவர் வீட்டினைச் சேர்தர எண்ணுதல்போல்,
சிங்கார வல்லிதன் ஊர்புக எண்ணும் சிறுமனமே!
கங்காளன் அங்கம்இல் லான்என நம்மையும்
காய்ந்திலனே! 43

---

42. தலைவியைக் காண வரும் தலைவனிடம் ஊர் அலர்க்கு அஞ்சிய பாங்கி, 'வாரற்க' என்றது.

ஒருகால் வெருவ – ஒப்பற்ற காலன் அஞ்சும்படி; இருகால் – இரண்டு திருவடிகள்; குருகு ஆல – பறவைகள் ஆரவாரம் செய்ய; அரிகால் – அரிந்த தினைத்தாள்; கருகு ஆல வாள்விழி– கருதுகின்ற நஞ்சையுடைய வாள்விழி; பலகால – பலமுறை; கால் – காலன்; வாள் – ஒளி; ஒருகால் – இருகால், இருகால்– பலகால் முரண்தொடைகள்.

43. தினைப்புனம் சேர்ந்த தலைவன், அங்குத் தலைவியைக் காணுமையால் வருந்தி, ஊரின்கண் அவளைச் சென்று காண விழைந்து கூறியது.

வீடு – முத்தி; கங்காளன் – சிவன்; அங்கம் இல்லான் – உடம்பு இல்லாத மன்மதன்; காய்ந்திலன் – எரித்தான் இல்லையே.

சிவன் எரித்தமையால் மன்மதன் அங்கம் இல்லாதவன் ஆயினன். அதனால் அவனை யாரும் கண்ணுற்் காண இயலாது. அதைப்போல் நம்மையும் சிவன் எரித்து அங்கம் இல்லாதவனுகச் செய்திருந்தால், பிறர் கண்ணிற் படாதவாறு தலைவியின் ஊர்க்குச் செல்வது எளிதாகுமே என்று கருதிக் கூறினன்.

இறையோன், இருட்குறி வேண்டல்

நல்நீர்மை யால்உல காரியன் "ஒன்றுநல் தெய்வம்; இதை
உன்னீர்" எனும்நெறி ஏற்கிலர் மாயையுள் ஊன்றுதல்போல்,
முந்நீர் முழுகிப், பல் மீன்வரச் செய்தனன் மூரிவெய்யோன்
இன்னீர் அமுதனை யீர்! விருந் தாய்எனை எய்துவித்தே. 44

---

44. தலைமகளைக் காண அவள் வாழும் ஊர் புக்க தலைவன், இரவின்கண் தலைவியைக் கூடியிருக்க உதவுமாறு பாங்கியிடம் வேண்டியது.

உன்னீர் – நினைத்துப் பாருங்கள்; நல்நீர்மை – நல்லொழுக்கம்; ஊன்றுதல் - ஆழ்தல்; முந்நீர் – கடல்; பல்மீன் – பலவாகிய தாரகைகள்; மூரி வெய்யோன் - வலிய சூரியன்.

விருந்தாய் என்னை உம்பால் எய்துவித்து, வெய்யோன் முந்நீர் முழுகி, விருந்திடுவதற்காகப் பல மீன்களை வரச் செய்தனன் என்பது ஒருநயம்.

வெய்யோன் நீர்மூழ்கிப் பல மீன் வரச்செய்தான் எனலால் இரவு வந்தது என்பதும், விருந்தாய் எனை எய்துவித்து எனலால் இரவில் தலைவியுடன் கூடியிருக்கும் விருப்பமும் குறிப்பால் தலைவன் உணர்த்தினன்.

விருந்தாய், எனை உம்பால் எய்துவித்து வெய்யோன் முந்நீர் முழுகிப் பல்மீன் வரச்செய்தான் என்று கூட்டுக.

ஏற்கிலர் மாயையுள் ஊன்றுதல், வெய்யோன் முந்நீர் முழுகுவதற்கு உவமை.

இறையோன், நெறியினது எளிமை கூறல் (1)

மாதங்கத் திக்கு புகழ்கச்சி அம்பதி வாழும்வள்ளல்
மாதங்கத் திற்கு நிகர்மேனிச் சங்கரர் வண்சிலம்பின்
மாதங்கத் திற்குத் தளர்வதல் லால், நெறி மன்னும்ஒரு
மாதங்கத் திற்குத் தளர்பவன் நானோ? மடவரலே! 45

இறையோன், நெறியினது எளிமை கூறல் (2)

வந்திக்கும் காஞ்சி உலகா ரியன்திரு வாரிசத்தாள்
சிந்திக்கும் மெய்யடி யார்அடி யாரையும் தீவினைகள்
பந்திக்கும் என்பது கற்பனை யேஎனில், பாழ்ங்கடத்தே
சந்திக்கும் சிங்கமும் கைம்மாவும் என்னைஎன்
சாதிக்குமே! 46

---

45. இரவுக்குறி வேண்டிய தலைவனுக்கு, அவன் வரும் வழியின் கொடுமையைக் கூறிப் பாங்கி விலக்கினாள். அதற்குத் தலைவன் வழியில் தனக்கு ஏதும் இடையூறு வாராது எனக் கூறியது.

மா தங்க – திருமகள் தங்குவதால்; திக்குபுகழ் – எண் திசையும் புகழ்கின்ற; மா தங்கத்திற்கு நிகர்மேனி – பெருமை யுடைய தங்கத்திற்கு ஒப்பான திருமேனியைக் கொண்ட; மாது அங்கத்திற்கு – தலைவியின் கலவிக்கு; மாதங்கத்திற்கு – யானைக்கு.

"மாது அங்கத்திற்குத் தளர்வது அல்லால் மாதங்கத்திற்கு (யானைக்கு)த் தளர்வேனோ?" என்றான்.

46. பந்திக்கும் – வருத்தும்; கற்பனையே – பொய்யேயாம்; கைம்மா – யானை; என் சாதிக்கும் – என்ன செய்யும்?

புலர்ந்தபின் வறுங்களம் தலைவிகண்டு இரங்கல்

வேலைஇட்டு ஆர்கலி சுட்டவர் போல்வினை வேலைவற்றக்
காலைஇட் டார் திருச் சங்கரர்க்கு அன்பாய்க்
கருத்தில்முப்பால்
நூலைஇட் டார்அன்பர் நள்ளிருள் வந்து நுடங்கும்மண
மாலைஇட் டார்என வோதளிர்த் தாய்மலர் மாதவியே! 47

---

47. இரவுக் குறியிடத்துத் தலைவன் வந்தான். தாய் துயிலாமையால் இடையூறுற்ற தலைவி அங்கு வந்திலள். அதனல் வருந்திய தலைவன், தான் தலைவிக்காகக் கொணர்ந்த மாலையை அங்கிருந்த மாதவிக் கொடியிலே வைத்துவிட்டுச் சென்ருன். மறுநாட் காலையிலே அவ்விடம் சென்ற தலைவி, தலைவன் இல்லாத அந்த வெற்றிடம் கண்டு புலம்பியது.

வேலையிட்டு ஆர்கலி சுட்டவர் - முருகன்; ஆர்கலி - கடல்; வினை வேலை வற்றக் காலையிட்டார் - வினையாகிய கடல் வற்றும்படி திருவடிகளை (என் தலைமேல்) வைத்தவர்; மாதவி - மல்லிகைக்கொடி.

'ஏ! மாதவியே! நீ தளிர்க்கக் காரணம் யாது? என் தலைவர் இரவில் வந்து என்னைக் காணுமையால், எனக்காகத் தாம் கொணர்ந்த மணமாலையை உனக்குச் சூட்டினர் என்பதற்காகவோ நீ தளிர்த்தாய்' என்ருள்.

இயல்பாகவே காலையில் தளிர்த்துத் தோன்றும் மாதவியை, மணமாலை யிட்டமையால் தளிர்த்ததாகக் கூறியது தற்குறிப்பேற்றம்.

மணமாலை - திருமணமாலை; மணமுடைய மாலை.

நாய் துஞ்சாமை

நாரில் திகழும் அரவம் எனும்சக மாயையைத்தம்
பேரில் துரத்தும்நம் சங்கரர் கச்சிப் பெருஞ்சிலம்பில்,
காரில் பொலிநின் குழல்நேர் இராவில்ஓர் கைக்கரியை
ஊரில் புகுத விடாபுலை நாய்ஒருங்கு ஊளையிட்டே! 48

ஊர் துஞ்சாமை

ஊத்தைச் சடமயல் போய்க்கெடப் பாவலர் ஒண்தமிழ்ப்பா
ஏத்தைப் பெறும்சங் கரர்வெற்பில் இவ்வூ ரினர்விழித்தே
'தாத்தைத் திதி' எனும் ஆட்டம்கண் டார்தமிழ் மூன்றில்ஒன்றாய்க்
கூத்தைப் படைத்தார் படைத்தார் எமக்கோர் கொடுமையையே! 49

---

48. இரவுக்குறியில் தலைவன் வருதற்குத் தடையாக நாய்கள் குரைக்கின்றன. அதைக் கண்ட தலைவி வருந்திக் கூறியது.

பேரில் துரத்தும் – திருநாமத்தால் விரட்டுகின்ற; ஓர் கைக்கரியை – ஒப்பற்ற யானைபோன்ற தலைவரை.

புலைநாய் ஒருங்கு ஊளையிட்டு, ஓர் கைக்கரியை ஊரில் புகுத வொட்டா என்று கூட்டுக.

49. தலைவன் வருதற்குத் தடையாக ஊரினர் துயிலாமை கண்டு தலைவி வருந்திக் கூறியது.

'முத்தமிழிலே ஒன்றாக நாடகத்தைப் படைத்தவர்கள், எமக்கு ஒரு கொடுமையையே படைத்துவிட்டார்கள். நாடகம் நடப்பதால் அன்றோ ஊரினர் துயின்றார் இலர். ஊர் துயிலாமையால் தலைவரைக் கூடமுடியவில்லையே' என்று இரங்குகின்றாள்.

ஏத்து – வணக்கம்.

நிலவு வெளிப்படுதல்

ஞாலத்தி லேவரும் பல்வகைத் துன்பமும் நாசமுறக்
காலத்தி லேஉத வும்சங் கரர்வெற்பில் கங்குலிலே
சீலத்தி லேஉயர்ந் தார்வரல் எங்ஙனம்? திங்களின்வெள்
ஆலத்தி லேகடல் ஞாலம் அனைத்தும் அமிழ்கின்றதே! 50

கோழி குரல் காட்டல்

காணி துறக்கம் எனத்தரும் சங்கரர் காஞ்சிவெற்பில்
வேணி இரவியை 'வா'என்று இரவை வியன்சிறகால்
சேணில் விரட்டுதற் கோவளர்த் தேன்செழுஞ் சேவலை? யான்
பேணி வளர்த்தமை யாற்பில வாயைப் பிளந்திலெனே! 51

---

50. தலைவன் வருதற்குத் தடையான நிலவைக்கண்டு வருந்தித் தலைவி கூறியது.

ஞாலம் அனைத்தும் வெள்ளை நஞ்சிலே அமிழ்வதால் தலைவர் வரல் எங்ஙனம் என்று கூட்டுக.

நிலவொளியை வெள்ளை நஞ்சு என்றது உருவகம்.

51. தலைவன் வருவான் என்று காத்திருந்தாள். நாய் துஞ்சாமை முதலிய இடையூறுகளால் தலைவன் வந்திலன். அப்போது பொழுது விடிவதற்கு அறிகுறியாகக் கோழி குரல் காட்டியது. அக்குரல் கேட்டு வருந்திக் கூறியது.

துறக்கம் காணி என – வீட்டின்பத்தை உரிமையாக; வேணியிரவி – வானத்துக் கதிரவன்; சேணில் – தொலைவில்; பேணி – விரும்பி.

இரவியை வா என்று கூவி, இரவைச் சேணில் விரட்டுதற்காகவா இச்சேவலை வளர்த்தேன். பேணி வளர்த்து விட்டேனே! இல்லையேல், அது செய்யும் கொடுமைக்காக அதன் வாயைப் பிளந்துவிடமாட்டேனு என்கிருள் தலைவி.

இரவி வருவதும் இரவு கழிவதும் இயல்பாயிருக்க, கோழி கூவுவதாலும், சிறகை அடிப்பதாலுமே அவை நிகழ்வதாகக் கூறியது தற்குறிப் பேற்ற அணியின் பாற்படும்.

இறைவி, இயற்பட மொழிதல் (1)

திரையாழ நீர்ப்புவிக்கு ஓர்கலம் ஆய செகற்குருவின்
உரைஆழம் கண்டுநெஞ்சு ஊன்றும் அவர்உரை
பொய்த்தனரேல்
சுரைஆழ அம்மி மிதப்ப, வரைஎனத் தோன்றிடும்கை
வரைஆழ ஓர்முயற் கேடிலை யாம்அவர் வெஞ்சுனையே! 52

இறைவி, இயற்பட மொழிதல் (2)

கதியிற் சுழல்உயிர் காத்தற்கு எழுசங் கரர்நறுந்தாள்
விதியிற் பணியும் அவர்வாயில் பொய்ம்மை விளையும்எனில்,
மதியிற் கனலும் சுடரில் இருளும் மருவிப்,பொன்னி
நதியிற் குவளை கரிந்திடும் கண்டாய் நறுநுதலே! 53

---

52. 'தலைவர் நமக்குக் கூறிய உறுதிமொழியை மறந்து விட்டமையால், அவர் வரவில்லை' என்று பாங்கி, தலைவனைப் பழித்துக் கூறினள். அது பொருத தலைவி, 'அவர் வாக்குத் தவறமாட்டார்' என்று கூறியது.

'அவர் உரை பொய்த்தனரேல், அவர் நாட்டுச் சுனையில் சுரை ஆழும்; அம்மி மிதக்கும். யானை நீந்தும்; முயல் நிற்கும். அவ்வாறு மாறுபாடு இதுகாறும் நேர்ந்தனவாக யாம் கேள்வி யுறுமையால், அவர் பொய்த்தார் அல்லர்' என்றாள்.

53. அவர் அவ்வாறு உரை பொய்த்தால், திங்களில் தீத் தோன்றும்; கதிரில் இருள் தோன்றும்; நதி நீரில் குவளை கரியும். அவ்வாறு இதுகாறும் நேராமையால் அவர் பொய்த்திலர் என்று தலைவி கூறியது.

கதியில் – நாற்கதிகளில்; விதியின் – முறைப்படி.

கனவு நலிவு உரைத்தல்

பொருந்தா விழிஇமை சற்றே பொருந்தும் பொழுதினிலே,
இருந்தா ரவர்வந்துஎன் தோள்மேலர் ஆவர் இமைவிரிந்தால்
கருந்தார்க் குழலி! என் நெஞ்சத்தர் ஆவர்நம் கச்சிஎம்மான்
திருந்துஆ ரமுதச்சொல் அன்பர்தம் நெஞ்சில்
செறிவதுஒத்தே! 54

கவின் அழிவு உரைத்தல்

மஞ்சக வார்பொழில் கச்சியில் சங்கரர் மாண்கழற்கே
நெஞ்சகம் தன்னை நிவேதனம் ஆக்க நினைகிலரை
வஞ்சக மாயை மறைப்பது போல வளர்பசலை, —
நஞ்சக வாள்விழி யாய்! உடல் மூடி நலிகின்றதே! 55

'துயர், உறுபாங்கி நீ சொல்' எனச், சொல்லல்

கயல்ஆர் நெடும்பணைக் கச்சியிற் சங்கரர் காமர்வெற்பில்
புயல்ஆர் குழலி! உன் நெஞ்சில்எப் போதும்
பொருந்தினர்க்குஉன்
மயல்ஆர் துயரம் அயலார் வகுத்திட வேண்டுவதோ?
அயல்ஆ னவர்தமக்கு அன்றோ ஒருவர் அறிவிப்பதே? 6

---

54. கனவின்கண் தலைவனைக்கண்ட தலைவி கூறியது.

இருந்தாரவர் - பெரிய மாலையணிந்த தலைவர்; கருந்தார்க் குழலி - தோழியே; செறிவது - பதிவது.

சொல் நெஞ்சிற் செறிவது உவமை. நெஞ்சத்தர் ஆவது உவமேயம.

55 தலைவி, தலைவன் பிரிவால் தன் உடலிற் பசலை பரந்த தன்மையைப் பாங்கிக்குக் கூறியது.

மஞ்சு அக வார்பொழில் – உள்ளே மேகங்கள் பொருந்திய நீண்ட சோலை.

56. தலைவனுக்குத் தன் துயரைக் கூறும்படி வேண்டிய தலைவிக்குப் பாங்கி கூறியது.

பணை – பண்ணை; வயல்.

அலர் பார்த்து உற்ற அச்சக் கிளவி (1)

மெய்அல ரும்புகழ்ச் சங்கர ஆசான் வியன்சிலம்பில்
தையல் அரும்படை யாம்மத வேளும்அத் தையலரும்
கையல ரும்திரு வாயல ரும்கடி தேதொடுக்க
உய்யல் அருந்துயர்க்கு ஆவியும் ஒன்ருய் உளைகின்றதே! 57

அலர் பார்த்து உற்ற அச்சக் கிளவி (2)

தெரியாத வாய்மை தெளிவிக்கும் சங்கரர் திண்சிலம்பில்
தரியா தது; மணம் சாரா தது; வண்டு தான்விரும்பி
வரியா தது; வெடி யாதது; வாய்முகி ழாதது; தான்
விரியாதது; ஓர்அலர் ஊரவர் வாயில் விரிந்ததுவே! 58

---

57. ஊரினர் வம்புச்சொல் எழுந்ததால் வருந்திய தலைவி கூறியது.

மெய்அலரும் – வாய்மை விரிந்த; தையல் அரும் படை – பெண்களாகிய அரிய சேனை; கைஅலர் – கையிலுள்ள மலர் அம்பு; வாய் அலர் – வாயினுற் கூறும் பழிச்சொல்; உய்யல் அருந்துயர் – உயிர் பிழைத்தற்கு அரிய துயர்; வேள் – மன்மதன்.

வேள் கையலரும், தையலர் வாயலரும் தொடுக்க என நிரல்நிரையாகப் பொருள் கொள்க.

58. அலர் பழிச்சொல்; மலர்.

மலரினின்றும் அலரை (பழிச்சொல்லை) விலக்கத், தரியாதது முதல் விரியாதது வரை அடைமொழிகள் கொடுக்கப்பட்டன. இது வெளிப்படை.

காமம் மிக்க கழிபடர் கிளவி

நயப்பட்ட நூல்பல நாப்பட்ட சங்கரர் நற்சிலம்பில்
வயப்பட்ட மால்கரி அன்னவற் கேமயல் உற்றதுகொல்
கயப்பட்ட கஞ்சம்? மதிக்குலை வாகிக்கல் ணீர்உகுத்துப்
பயப்பட்டு அலைப்பட்டு அளிப்பட்டுப் பங்கமும் பட்டதுவே!
59

---

59. தலைவன் பிரிவால் நேர்ந்த துயரினல் வருந்திய தலைவி கூறியது.

தாமரை மலரைக் கண்டு தலைவி 'இம்மலரும் என்போல் தலைவன்பால் மயல் உற்றதுவோ?' என்ருள்.

மதிக்குலைவாகி, கண்ணீர் உகுத்து, பயப்பட்டு, அலைப்பட்டு, அளிப்பட்டு, பங்கமும் பட்டுத் தலைவி வருந்தியது போலவே, தாமரை மலரும் மதிக்கு உலைவாகி, கள்நீர் உகுத்து, பயப்பட்டு, அலைப்பட்டு, அளிப்பட்டு, பங்கமும்பட்டு இருப்பதால் தலைவி இவ்வாறு கூறினுள்.

இது தாமரைக்கும் தலைவிக்கும் சிலேடை. தாமரைக்குப் பொருள் கொள்கையில், மதிக்கு உலைவுஆகி - சந்திரனுக்குத் தளர்ந்து; கள்நீர் உகுத்து - கள்ளாகிய நீரைச் சொரிந்து; பயப்பட்டு – தண்ணீரில் பொருந்தி; அலைப்பட்டு – அலையைத் தழுவி; அளிப்பட்டு - வண்டுகள் சூழப்பட்டு; பங்கமும் பட்டு – சேற்றிலே அழுந்தி எனவும், தலைவிக்குப் பொருள் கொள்கையில், மதிகுலைவுஆகி – அறிவுகுலைந்து; கண்ணீர் உகுத்து – கண்ணீரைச் சொரிந்து; பயப்பட்டு - அச்சமுற்று; அலைப்பட்டு - அன்னையால் அலைக்கப்பட்டு; அளிப்பட்டு – இரங்கத்தக்க நிலையுற்று; பங்கமும்பட்டு - பங்கம் (சிறுமை) அடைந்து எனவும் கொள்க.

தாமரை சந்திரனைக்கண்டு குவியும் இயல்பினது ஆதலால், மதிக்கு உலைவாகியது. வயம் – வெற்றி; கயம் – பொய்கை; கஞ்சம் – தாமரை மலர்; பயம் – நீர்; அச்சம்; அளி – வண்டு; இரக்கம்; பங்கம் – சேறு; சிறுமை.

ஏறு தழுவுதல்

உள்ளினர்க்கு ஆதரம் வைத்திடும் சங்கரர் ஓங்கலின்வாய்
வெள்ளிவெற் பாம்என வெம்பிய ஐம்புல வேட்கைஎனத்
தள்ளிநிற் பாரையும் சீறுவல் ஏறு தழுவுதற்கே
துள்ளிநிற் பார்பலர்; கண்டாய்! என் கொங்கைத்
துணைவிழைந்தே. 60

வெறி விலக்குதல்

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டுஇரண்டு
என்பதற்ற
ஒருமை நெறிகண்ட சங்கரர் வெற்பின் ஒருதலைவர்,
அருமை யலையளித் தார்எனும் மெய்ம்மை அறியகிலார்;
பெருமை குலைக்கத் துணிந்தார். தவிர்ப்பவர்ப் பெற்றிலமே!
61

---

60. தலைவன் திருமணத்திற்கு முயலத் தாழ்த்தமையால், 'ஏறு தழுவியவனுக்கே இவள்' என்று உற்ரூர் அறிவித்தனர். இதையறிந்த தலைவி, வருந்திப் பாங்கியிடம் கூறியது.

உள்ளினர்க்கு – நினைத்தவர்க்கு; ஆதரம் - அன்பு; ஓங்கல் – மலை; கொங்கைத்துணை – இரு நகில்கள்.

61. தலைவிக்கு நேர்ந்த நோய், தலைவன் தாழ்த்தமையால் ஆனது என அறியாத அன்னையர், வேலனை அழைத்து, ஆடு வெட்டி, மருள் ஆட்ட முனைந்தனர். அதையறிந்த தலைவி, வருந்திப் பாங்கியிடம் கூறியது.

பெருமை – பெரிய ஆட்டுக் கடாவை; குலைக்க – கொல்ல; தவிர்ப்பவர் – தலைவன்.

நம் (கற்பின்) பெருமையைக் குலைக்கத் துணிந்தார் என்பது தொனிப்பொருள்.

பிற விலக்குவித்தல்

எண்விலை யாக்கொண்டு அருள்தரும் சங்கரர் இன்சிலம்பில்
திண்விலை ஏந்திய அன்பர்நம் வேட்ட திறம்அறியார்;
விண்விலை யாற்பெற எண்ணுநர் போல விழைந்துபிறர்
பெண்விலை யாகப் பொருள்கொண்டு வந்தனர்
பெய்வளையே! 62

அலர் அறிவுறுத்தல்

உலர்சூட்டு இளந்தசை கண்ணப்பர் பால்உவந்து
உண்டவர்போல்
கலர்சூட் டியவசைக் கும்கனி யும்சங் கரர்சிலம்பில்
மலர்சூட்டு இளமயி லோன்நிகர் நீஇவள் மைக்குழலில்
அலர்சூட் டியகண்டு அலர்சூட் டியதுஇவ் அணிநகரே! 63

---

62. தலைவன் தாழ்த்தமையால், வேறு பலர் பெண்ணுக்குரிய விலையாகப் பரிசப் பொருள் கொண்டுவந்து பெண் பேச வந்தனர். இதையறிந்த தலைவி வருந்தி, தலைவர் இன்னும் தாழ்த்தால், விபரீதம் நேருமே என அஞ்சிப் பாங்கியிடம் கூறியது.

என் விலையா – மனத்தையே விலையாக; விலை ஏந்திய – வில்லை ஏந்திய; நம் வேட்ட – நம்மை வரித்துக்கொண்ட; விண் – விடுபேறு.

விலையினால் வீட்டின்பம் பெறமுடியாததுபோல், விலைதந்து என்னைப் பிறரால் பெற இயலாது என்பது குறிப்பு.

63. பாங்கி, தலைவனை நேர்ப்பட்டு ஊரில் எழுந்த அலரினை அவனுக்குக் கூறியது.

உலர் சூட்டு இளந்தசை – உலர்தசை, சூட்டுத்தசை, இளந்தசை எனத் தனித்தனிக் கூட்டுக. கலர் – கீழ்மக்கள், மலர்சூட்டு இளமயிலோன் – விரிந்த உச்சிக் கொண்டையுடைய இளமயிலை வாகனமாகக் கொண்ட முருகன்.

அலர்சூட்டிய கண்டு – சூட்டிய அலர் கண்டு என்று மாற்றுக. அலர் – மலர், பழிச்சொல்.

வெறி அச்சுறுத்தல்

கருப்படர் தீரக் கருணைசெய் சங்கரர் கச்சிஅன்னுள்
உருப்படர் நோய்மருந் தால்தவி ராமை உணர்ந்து,விந்தப்
பொருப்படர் தோள்அண்ண லே! வடி வேலற்குப் பூசனையிட்டு
ஒருப்பட ஆரணங் காட்டத் தொடங்கினர் உற்றவரே! 64

வரையும் நாள் உணர்த்தல்

பண்டுஆ ரணம்முழங் கும்கச்சி எங்கள் பரமகுரு
வண்தா மரைமுகச் சோதியின் விம்பத்து வட்டமென
விண்தா னவன்தனை ஊர்கோள் வளைந்தது; வேங்கையுமே
தண்டா தணிமலர் பூத்தது 'வேட்கும் தருணம்' என்றே 65

---

64. பாங்கி, தலைவனிடம் அன்னையர் வெறியாட்டு அயரத் தொடங்கினமை கூறியது.

கருப்படர் – பிறவித்துன்பம்; உருபடர் – மேனியில் பரவிய; விந்தப்பொருப்பு அடர்தோள் – விந்த மலையை வென்ற தோள்; ஒருபட – ஆடு மடிய; ஆரணங்கு ஆட்ட – வெறியாடுதலைச் செய்ய.

ஒருப்பட ஆரணம் காட்ட – சம்மதித்து வேத நெறியைக் காட்டத் தொடங்கினர். அதாவது வெறியாட இசைந்து அவ்வாறு அணங்காடுவது வேத நெறிக்கு உரியது என்று காட்டத் தொடங்கினர் என்பது தொனிப்பொருள்.

65. மணம் செய்துகொள்ளும் பருவம் வந்துவிட்டது என்பதைப் பாங்கி, தலைவனுக்கு உணர்த்தியது.

தானவன் – சந்திரன்; வேட்கும் தருணம் – திருமணத்திற்கு உரிய பருவம்; தண்தாதுஅணிமலர் – குளிர்ந்த மகரந்தத்தை அணிந்த மலர்; தண்டாது அணிமலர் என்றும் பிரிக்கலாம். நீங்காது அழகிய மலர்களை (பூத்தது) என்பது பொருள்.

சந்திரனை ஊர் கோள் வளைவதும், வேங்கை மலர் பூப்பதும் திருமணம் செய்யும் பருவம் என்று கோடல் பண்டையோர் இயல்பு.

பகல் வருவானை இரவு வருக என்றல்

இன்புற ஆட்கொள்ளும் சங்கரர் இன்னருள் ஏற்றவெற்பா!
புன்புறச் சிட்டுத் துணையுடன் வைகிப் புணர்இறப்பும்
அன்புறப் பேடையை அம்சிற காலணைத் துத்தழுவி
மென்புறவு ஆர்தரு மாடமும் நோக்கினள்
வெய்துயிர்த்தே! 66

இரவு வருவானைப் பகல் வருக என்றல்

பரவிஅன் பாகும் பழஅடி யார்பரி பாகமுற
விரவிஅங்கு ஆட்கொண்ட சந்திர சேகரர் வெற்பில்,எழு
புரவியந் தேருடை யாய்! ஒளி பொங்கிய விற்கரத்தாய்!
இரவிஅன் னாய்! இர வோன்ஆதல் எய்யா இளிவரவே! 67

---

66. தலைவன் பகற்குறியில் வந்து தலைவியைக் காணத் தொடங்கினன். அவ்வாறு பகலில் வருவானை இரவில் வருக என்று பாங்கி, குறிப்பால் உணர்த்தியது.

இறப்பு – வீட்டு இறவாரம் (தாழ்வாரம்); மென்புறவு – மென்மைத் தன்மையுள்ள புரு.

வீட்டு இறப்பிலே சிட்டும், மாடத்திலே புருவும் இரவிலே இன்பம் துய்ப்பன. ஆதலால், அவை போலத் தானும் இரவில் தலைவனுடன் கூட விரும்பியதால், தலைவி வீட்டு இறப்பினையும் மாடத்தையும் நோக்கினள். ஆதலால், நீ இரவில் வருக என்பது குறிப்பு.

67. தலைவன் இரவுக்குறியில் வரத் தொடங்கினன். அவ்வாறு இரவில் வருவானை மீண்டும் பகலில் வருக என்று பாங்கி குறிப்பால் கூறியது.

பரிபாகம் – வீடு அடைவதற்குரிய பக்குவம்; எழுபுரவி – எழுகின்ற புரவி; ஏழு புரவிகள்; இரவோன் – இரவில் வருகின்றவன்; இரவில் வரும் சந்திரன்; யாசகன்; விற்கரம் வில்லையுடைய கை; ஒளியுடைய கிரணம்.

எழு புரவியும் தேரும் ஒளி பொங்கிய விற்கரமும் உடைமையால் நீ சூரியனை ஒப்பாய்! அத்தகைய நீ இரவோன் (சந்திரன்) ஆதல் தகுதியன்று என்றாள்.

சூரியனை ஒத்த நீ இரவோன் ஆவது (யாசிப்பவன் ஆவது) இளிவரவு என்பதாம். இரவில் வாரற்க என்பது குறிப்பு.

காவல் மிகவு உரைத்தல்

தாளும் அடர்ந்துசெஞ் சாலிபைந் தோகை தழைக்கக்கண்டும்
நீளும்முள் வேலி தடைந்திட லால்நெடுங் கோட்டெருமை
மீளும் மருதப் பணைக்கச்சிச் சங்கரர் வெற்பில்எமை
ஆளும் பொருட்டுஇனி வாரற்க எங்கள் அரும்பதிக்கே! *68*

காமம் மிகவு உரைத்தல்

களியார் உலகம் கடைத்தேற வந்து கமலமுகத்து
ஒளியால் இருள்தெறும் சங்கரர் வெற்ப! உறுவிரக
வளியால் அலைப்புண்ட காமவல் லிக்கொரு வண்தருவாய்
அளியால் தழுவுகி லாய்எனில் வாடி அலமருமே! *69*

---

68. தலைவனிடம் பாங்கி, தலைவிக்கு உள்ள காவல் மிகுதியைக் கூறியது.

தாள் – நெல்தாள்; சாலி – நெற் பயிர்; தோகை – நெல் இலை; தடைந்திடலால் – தடையாக உள்ளமையால்.

'நெல்தாள் அடர்ந்து தோகை தழைத்து இருப்பினும், எருமை அதை உண்ண முடியாமல் முள்வேலி தடையாக உள்ளது போல, தலைவியை நீ அடைவதற்குத் தடையாகக் காவல் உள்ளது என்பது உள்ளுறை உவமம்.

திருமணம் செய்துகொள்க என்பது குறிப்பு.

69. தலைவியினுடைய காமமிகுதியைத் தலைவனிடம் பாங்கி கூறியது.

களி – மயக்கம்; தெறும் – கெடுக்கின்ற; விரகவளி – காமம் என்னும் சூறைக்காற்று; காமவல்லி – ஒருவகைக்கொடி; தருவாய் – மரமாகி; அளியால் – இரக்கத்தால்.

தலைவி விரகத்தால் அலைப்புண்டாள். நீ தழுவாவிடின் வாடியலமருவாள். ஆதலால் விரைந்து வரைந்து கொள்க என்பது குறிப்பு.

கொடி படர மரம் வேண்டும். காமவல்லிக் கொடியாகிய தலைவியைக் கற்பக மரமாகி நீ தழுவுதல் வேண்டும் என்றாள்.

தன் பதிக்கு அகற்சி தலைவன் சாற்றல்

மாதா எனஅருள் சங்கரர் கச்சி மடவரலே!
ஓதாது உணர்கம்பன் பாவில்ஓர் ஐயம்இங்கு உற்றமையால்
ராதா கிருட்டினன் பாற்சென்று உசாவி எழிற்கயத்தே
தாதார் அரவிந்தம் மூடித் திறக்குமுன் சார்குவெனே! 70

சென்றோன் நீடக், காமம் மிக்க கழிபடர் கிளவி

மஞ்சு, க வான்உறை சங்கரர் கச்சி வளச்சிலம்பில்
நெஞ்சுக வாமல் பிரிந்துசென் றார்க்குஉம் நெடும்பிரிவால்
கிஞ்சுக வாய்ச்சி படுந்துயர் சற்றோ? கிளர்இரவுஒன்று
அஞ்சுக மோஎன அஞ்சுகம் என்றுரை அஞ்சுகமே! 71

---

70. திருமணத்திற்கு முன் ஒருமுறை ஊர் சென்று திரும்புவேன் என்று தலைவன் கூறியது.

அரவிந்தம் மூடித் திறக்குமுன் – விடியுமுன். தாமரைமலர் இரவில் குவிந்து காலையில் மலர்வதால் அவ்வாறு கூறினன்.

அரவிந்தம் – தாமரை; உசாவி – கேட்டறிந்து.

71. ஒருவழிப் பிரிந்து சென்றவன் வரவு நீட்டிக்கத் தலைவி வருந்திக் கிளியைத் தூது விட்டது.

மஞ்சு கவான் உறை – மேகங்கள் சாரலிலே தங்குகின்ற; கவான் – மலைச்சாரல்; உறை சிலம்பில் என்று கூட்டுக. நெஞ்சு உகவாமல் – தலைவியை மனத்தால் விரும்பாமல்; கிஞ்சுக வாய்ச்சி – தலைவியாகிய யான்; அஞ்சுஉகமோ – ஐந்து யுக காலமோ; அஞ்சுகம் – அஞ்சுகின்றோம்; அம் சுகமே – அழகிய கிளியே.

அஞ்சுகம் என்று இறுதியடியில் மும்முறை வந்தது மடக்கு என்னும் சொல்லணி.

தலைவன் வந்தமை, பாங்கி உணர்த்தல்

சாரும் புகழ்க்கச்சிச் சங்கரர் மெய்ந்நெறி சார்கிலர்போல்
சோரும் துயர்ஒழி! தூமொழி! வெற்பன் துரகநெடுந்
தேரும் புகுந்தது; திண்மத வேள்கைச் செழுங்கணையால்
ஈரும்வன் போரும்க ணீரும்மெய்ப் பீரும் இனிக்கெடுமே. 72

ஆற்றுவித்திருந்த அருமை சாற்றல்

விழிகாட்டி எம்மைப் புரந்தருள் சங்கரர் மெய்ம்மணக்கும்
மொழிகாட்டி ஞான முறைகாட்டிக் கம்பன் மொழிநறவின்
பிழிகாட்டி நீதந்த பூந்தழை காட்டிப் பிறங்கும்நின்ஊர்
வழிகாட்டி மென்கொம்புள் தேறலைக் காட்டினென்
மன்னவனே! 73

---

72. தலைவன் நீட்டித்தலால், வருந்திய தலைவிக்கு அவன் வந்துவிட்டான் எனப் பாங்கி கூறியது.

இறுதியடி முற்று எதுகை.

73. திரும்பி வந்த தலைவனிடம் பாங்கி, தலைவியின் துயரத்தையும் தான் அவளை ஆற்றியிருந்த அருமைப் பாட்டையும் கூறியது.

கம்பன் மொழி நறவின்பிழி – கம்பன் மொழியாகிய தேனின் பிழிவு; மென்கொம்பு – தலைவி; உள்தேறலைக் காட்டினென் – மனம் தேறும்படி செய்தேன்.

கொம்புள் தேறலைக் காட்டினென் – மரக் கிளையினுள் தேனைக் காட்டினேன் என்பது வேறொரு பொருள்.

கொம்பு – கிளை; தேறல் – தேன்.

பொருட்பிரிவு உணர்த்து ஏந்திழைக்கு என்றல்

பண்ணைப் பழங்கச்சிச் சங்கரர் வாய்மையில் பற்றில்லையேல்
விண்ணைப் பெறமுடி யாதது போற்பொருள் வெற்பில்லையேல்
பெண்ணைப் பெறமுடி யாதுஎன்பர் நும்மோர். பிரிந்தஇமை
கண்ணைப் பொருமுன் பொருள்கொண்டு மீளுவல்
காரிகையே! 74

பருவம் கண்டு பெருமகள் புலம்பல்

வெம்புகண் அம்புக, வேள்சிலை அம்புக, விண்முகிலின்
அம்புகக், கொன்றையும் கொங்கையும் செம்பொன்
அரும்ப மயில்
கும்புஉகந்து ஆலும் பருவம்எய் தாதுகொல்? கூரருளால்
நம்புக லாகிய சங்கரர்க்கு அன்பர்செல் நாட்டகத்தே! 75

---

74. திருமணத்திற்காகப் பொருள் கொண்டு விரைந்து வருவேன் என்று தலைவன் கூறியது.

விண் – வீட்டின்பம்; பொருள் வெற்பு – மலைபோன்ற செல்வம்; நும்மோர் – நும் உறவினர்; பிரிந்த இமை கண்ணைப் பொருமுன் – இமைப்பளவில்.

75. கார்ப்பருவம் வந்தும் தலைவன் வாராமை கண்ட தலைவி, இக்கார்ப் பருவம் அவர் நாட்டில் இல்லையோ? இருந்தால், சொன்ன உறுதி நினைத்து வந்துவிடுவாரே! என்று இரங்கிக் கூறியது.

கண் அம்பு – கண்ணீர்; சிலை அம்பு – வில்லின் கணை; முகிலின் அம்பு – மழைத்துளி; உக – சொரிய; கொன்றை பொன் அரும்ப – கொன்றைகள் பொன் போன்ற மலர் அரும்ப; கொங்கை பொன் அரும்ப – நகில்களிற் பொன்போன்ற பசலை படர; மயிற்கும்பு – மயில் கூட்டம்; உகந்து ஆலும் – விரும்பிக் குரல் எழுப்புகின்ற; நம்புகல் – நமக்கெல்லாம் புகலிடம்.

அவன், அவண் புலம்பல்

கூட லுருது குலேத்திடும் கண்ணீர் கொடிதுஎனும்கொல்?
நீட லுருதுவந் தாரிலே என்னும்கொல்? நிணிலத்தே
தேட லுருது வரும்தெய்வம் சங்கரர் திண்சிலம்பில்
வாட லுருதுஉளம் தேற்றுவர் யாவர்கொல் மாதினுக்கே?
76

பாகனெடு சொல்லல்

என்னும் மனத்துஉல காரியன் பெய்அருள் என்னமுந்நீர்
உண்ணும் எழிலி உறைபெய்யக் கச்சி உயர்வரையை
நண்ணும் முனேவல வா! அல வாமை நறுநுதலி
கண்ணும் மனமும் அழல்அறத் தேரைக் கடவுகவே! 77

---

76. சென்ற இடத்துத் தலைவன் தலைவியை நினைந்து இரங்கிக் கூறியது.

தலைவி, தலைவன் விரைந்து வருவானே வாரானே என்று அறியக் கூடல் இழைப்பாள். அவள் எழுதும் கூடலைக் கண்ணீர் அழிக்கும். அதனல் கண்ணீரைக் கொடியது என்பாள்.

கூடல் என்பது தரையில் வட்டமாகக் கோடு இடுவது. வட்டத்தின் இரு நுனிகளும் தானுக இணைந்தால் தலைவன் விரைந்து வருவான் என்பது தலைவியின் நம்பிக்கை.

77. வினைமுற்றி மீளும் தலைவன் பாகனெடு கூறியது.

முந்நீர் – கடல்; எழிலி – மேகம்; உறை – மழைத்துளி; வலவன் – பாகன்; அலவாமை – வருந்தாமல்.

வலவா! எழிலி நண்ணுமுன் நறுநுதலி அலவாமை அழல் அறத் தேரைக் கடவுக என்று கூட்டுக.

கண் அழல் அற – கண்ணனது அழுகை தவிர; மனம் அழல் அற – மனமானது விரகத் தீ தவிர; அழல் – அழுகை; நெருப்பு.

வலம்புரி வாழ்த்தல்

கரவை ஒழித்துஎன்னை ஆட்கொண்ட சங்கரர் கச்சியிலே
இரவை ஒளிசெய்யும் கோவிலின் சங்கம் எனஒளிர்க!
பரவை எனும்துயர் மூழ்கிடு வேற்குப்பற் றும்புணையின்
வரவை அறிவித்து வாழ்வித் தனைவெள் வலம்புரியே! 78

காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்கு உரைத்தல்

மருந்துஅன வாய்மைஎம் சங்கரர் தண்ணளி வாய்ந்தஅன்பர்
முருந்துஅன வாள்நகை யாய்மணி மாமை முகிழ்க்கும்உன் தன்
பெருந்தன மாமலை யும்சிறிது என்னப் பெருங்கரிமேல்
கருந்தன மாமலை கொண்டுநம் வாசல் கவிழ்த்தனரே! 79

---

78. தலைவனைப் பிரிந்துறையும் தலைவி, தலைவன் தேர் வருகையை அவன் ஊதும் சங்கொலியால் அறிந்து அந்தச் சங்கை வாழ்த்தியது.

கரவு – வஞ்சனை; பரவை – கடல்; பற்றும்புணை – பிடிக்கின்ற தெப்பம்; தலைவன்.

வலம்புரியே! கோவிலின் சங்கம் என ஒளிர்க என்று கூட்டுக.

79. மீண்ட தலைவன் தலைவிக்குப் பரிசமாகப் பொருள் விடுத்தான். அச் செய்தியைப் பாங்கி, தலைவிக்கு அறிவித்தது.

முருந்து – மயில் இறகின் அடிப்பாகம்; பல்லுக்கு உவமை; வாள்நகை – ஒளியுடைய பற்கள்; மணி மாமை – மணி நிறமாகிய பசலை; முகிழ்க்கும் – அரும்புகின்ற; கருந்தன மாமலை – பெரிய பொருளாகிய மலை; வாசல் கவிழ்த்தனர் – நம் வாசலில் உனக்கு முலை விலையாகக் கொட்டினர்.

தலைவி, மணம் பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல்

போகத் திருக்குப் புறம்கண்ட சங்கரர் பூண்அருளால்
யோகத்து இருக்கும் அவர்போல் மணம்குறித்து ஓரைந்தும்ஒன்
ருகத் திருக்கும் கரமும் குவிய அமலன்இடப்
பாகத் திருக்கு மரிக்குளம் வைத்தனள் பைந்தொடியே. *80*

தலைவி, இல்வயின் செறித்தமை இயம்பல்

வஞ்ச மனத்தான் படிற்றெழுக் கத்தை மறைப்பதுபோல்
தஞ்சம் நமக்கருள் சங்கரர் வாய்மையைச் சார்ந்தஅன்பர்
நெஞ்சம் மருவச் செறிப்பது போல்நெடிது ஊர்அலரால்
கஞ்ச விழிக்குஇமை ஆகினள் அன்னை இற் கண்எமக்கே! *81*

---

80. தலைவன் பரிசம் அனுப்பியது அறிந்த தலைவி, தன் மணத்தின் பொருட்டு, தெய்வத்தைப் பரவுகின்ருள். இக் காட்சியைப் பாங்கி, தலைவனுக்குக் காட்டிக் கூறியது.

போகத் திருக்கு – உலகபோகமாகிய மாறுபாடு ; திருக்குப் போக என மாற்றி, மாறுபாடு போகும்படி எனவும் பொருள் கொள்ளலாம். ஓரைந்தும் ஒன்ருக – ஐம்புலனும் ஒருமையடைய ; திருக்கு – கண் ; அமலன் இடப்பாகத் திருக்குமரி – பார்வதி ; அமலன் இடப்பாகத்து இருக்கும் அரி எனப்பிரித்துத் திருமால் என்றும் பொருள் கொள்ளலாம். திருமால் சிவன் இடப்பாகத்தில் உள்ளான் என்பதும் மரபு.

இச் செய்யுள் திரிபு என்னும் சொல்லணி அமைந்தது.

81. தலைவியை வீட்டின்கண் செறித்தனர் என்பதைப் பாங்கி, தலைவனுக்குக் கூறியது.

(தலைவியாகிய) கஞ்சவிழிக்கு அன்னை இமை ஆகினள் என்று கூட்டுக. விழிக்கு இமை ஆதல் – கண்ணுக்கு இமை போலத் தலைவிக்கு அன்னை காவலாக அமைதல்.

நெஞ்சம் மருவச் செறிப்பது – மனமானது ஒன்றுபட அடக்குவது. சார்ந்த அன்பர் வாய்மையை நெஞ்சம் மருவச் செறிப்பது என்றும் கூட்டிப் பொருள் கொள்ளலாம்.

களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

செம்புல வாணர் புகழ்உல கார்யனைச் சேர்கிலரை
வெம்புல யானை அடர்த்தெனத் — தன்கொம்பை
வென்றமையால்
வம்புல வும்குழல் மார்பினிற் பாய வருகளிற்றின்
கொம்பு, உல மாரும் புயத்தால் அடர்த்ததுஒர் கோளரியே! 82

செவிலி நற்றாய்க்கு முன்னிலை மொழியால் அறத்தொடு நிற்றல்

இந்நிலம் கைதொழும் சங்கரர் கச்சியில் ஏனற்புனந்
தன்னில்அம் கைவரை தன்னை வினவிய தாரண்ணலும்
மின்னிலங்கு ஆர முலைமலை ஏந்திய மென்கொடியும்
செந்நிலம் பெய்யும் புனல்போற் கலந்தனர் சிந்தனையே! 83

---

82. பாங்கி, செவிலியிடம் தலைவிக்குத் தலைவனிடம் கூட்ட முண்மையைக் குறிப்பால் உணர்த்தியது.

சேர்கிலரைப் புல யானை அடர்த்ததென, வம்பு உலவும் குழல் (தலைவி) மார்பினில் பாய வருகளிறு என்று கூட்டுக.

தலைவி மார்பில் யானை பாய்வதற்குக் காரணம், தன் கொம்புகளைத் தலைவியின் நகில்கள் வென்றமையால் நேர்ந்த பொறாமை என்பது தோன்றத் தன் கொம்பை வென்றமையால் மார்பினில் பாய வருகளிறு எனப்பட்டது.

உலம் ஆரும் – திரட்சி பொருந்திய; கோளரி – சிங்கம்; தலைவன்; தலைவன் யானையை அடர்த்தமையால் சிங்கம் என உருவகம் செய்யப்பட்டான்.

83. பாங்கியால் தலைவியின் நிலையறிந்த செவிலி, பெற்ற தாய்க்கு அச் செய்தியைக் கூறியது.

ஏனல் புனம் – தினைப்புனம்; அம்கைவரை – அழகியயானை.

தினைப்புனத்தே 'என் அம்புக்குத் தப்பிய யானை வந்ததோ?' என வினவி வந்த தலைவனும், மென் கொடியும் சிந்தனை கலந்தனர் என்று கூட்டுக. மலை ஏந்திய மென் கொடி — இல்பொருளுவமை.

பாங்கி, தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்

சாவுஇலை யாக வரம்தரும் சங்கரர் தண்வரைப்பூங்
கோவிலை நீங்கிஎம் குற்றிலை மேவிய கோல்வளைக்குப்
பூவிலை ஆகத் தரினும்ஒப் பார்எமர் போற்றிநின்ஊர்க்
கேவிலை ஏந்தும் புயத்தாய்! உடன்அழைத்து ஏகுகவே! 84

பாங்கி, சுரத்து இயல்பு உரைத்துழித் தலைவி சொல்லல்

நோயிற்கு அருமருந் தாகிய வாய்மையின் நூறுமடங்கு
ஆயிற் கருணைசெய் சங்கரர்க்கு அன்பர் அகல்பிரிவுத்
தீயிற் சுடுமோ? சுடும்அலர் வாரிச் சொரியும்இவ்வூர்
வாயிற் சுடுமோ? சுடுமென நீசொன்ன வன்சுரமே! 85

---

84. தலைவன் கொணர்ந்த பரிசப் பொருளை ஏற்க உறவினர் மறுத்தமை கண்ட பாங்கி, தலைவனிடம் 'நீ தலைவியை ஒருவரும் அறியாது உடன் அழைத்து ஏகுக' என்றது.

சாவு இல்லையாக – மரணம் இல்லையாம் படி; பூங்கோவில் – தாமரையாகிய வீடு; குற்றில் – குறுகிய வீடு; கோல்வளை – தலைவி; பூ – பூமி; எமர் – எம் உறவினர்.

நின் ஊர்க்கு உடன் அழைத்து ஏகுக என்று கூட்டுக. ஏ விலை ஏந்தும் புயத்தாய் – அம்பையும் வில்லையும் ஏந்திய புயத்தையுடையாய். ஆதலால் உனக்கு இவளை அழைத்துச் செல்லுங்கால் இடையூறு நேராது என்பது குறிப்பு. ஏ – அம்பு; நின் ஊர்க்கே விலை ஏந்தும் புயத்தாய் என்றும் பிரிக்கலாம்.

85. பாங்கி, தலைவியிடம் 'தலைவனுடன் நீ செல்லும் பாலைவழி கொடியது' என்றாள். அதுகேட்ட தலைவி 'கொடியது அன்று' என்று மறுத்தது.

வாய்மையினால் கருணை செய் சங்கரர் என்றும் ஆயின் (தாயைக் காட்டிலும்) நூறு மடங்கு கருணை செய் சங்கரர் என்றும் கூட்டுக. சுடும் அலர் – சுடுகின்ற பழிச்சொல்.

பாங்கி, வைகிருள் விடுத்தல்

ஏவல ராய்அன்பர் ஏத்திடும் சங்கரர் இன்னருள்சேர்
பாவலர் நாவலர் பாவலர் போற்பகல் தோன்றுமுன்ஊர்
நாவலர் தன்னை முகிழ்வித்து நானும்நம் அன்னையரை
நோவலர் ஆக்கி விரைந்துனைக் கூடுவென் நுண்ணிடையே! 86

தலைமகன், தலைமகள் அசைவு அறிந்திருத்தல்

குருவடி வாய்வந்து அருள்தரும் சங்கரர் கோகனகத்
திருவடி சேர்கிலர் தீவினை போலத் தெறும்சுரத்தே
மருவடி யார்க்குஅவர் இன்னருள் போற்குளிர் வாய்ந்தஇந்தத்
தருவடி நீழலில் சற்றுஇளைப் பாறுக! தாழ்குழலே! 87

---

86. தலைவனுடன் தலைவியை விடுக்குங்கால் பாங்கி, தலைவியிடம் கூறியது.

பாவலர் நாஅலர் பாஅலர் – பாவலரது நாவிலே அலருகின்ற பாவாகிய மலர்கள். சங்கரர் இன்னருளால் பாவலர் நாவில் பாடல் விரைந்து வருவது, பாங்கி விரைந்து வருதற்கு உவமை.

பகல் தோன்றுமுன் – விடியும் முன்னே; ஊர் நாஅலர் – ஊரார் நாவில் வரும் பழிச்சொல்; முகிழ்வித்து – அடக்கி; நோவலர் ஆக்கி – நோகாதவர் ஆக்கி; துயரம் நீக்கி.

87. சுரத்திடைத் தலைவியை அழைத்துச் செல்லும் தலைவன், 'மர நிழலில் சற்று இளைப்பாறுக' என்றது.

தீவினை சுரத்திற்கும், இன்னருள் நிழலுக்கும் உவமைகள். தருஅடிநீழல் – மரத்தடி நிழல்.

உவந்து அலர் சூட்டி உள்மகிழ்ந்து உரைத்தல்

புண்ணியம் செய்து புவிதீண் டியபொன் அடிவருடித்,
தண்ணிய ஐம்பால் மலர்சூட்டி, என்னுயிர்த் தையல்நுதல்
அண்ணிய வேர்துடைக் கப்பெற்றது எல்லாம்
அகிலம்உய்யப்
பண்ணிய சங்கரர்க் கேநெடிது ஆட்பட்ட பாக்கியமே! 88

கண்டோர், தன் பதி அணிமை சாற்றல்

பெண்மையில் மிக்க பெருந்திரு மாதும் பிறங்குஅயிற்கை
ஒண்மையி லோன்எனும் நீயும்இக் குன்றம்ஒன்
றைக்கடந்தால்
எண்மையில் நம்கண் எதிர்வந்த சங்கரர் இன்னருளால்
அண்மையில் தோன்றிடும் வீடெனக் காண்பீர்
அரும்பதியே! 89

88\. தலைவி, மரநிழலில் இளைப்பாறும்போது தலைவன், தலைவிக்கு அடிவருடல் முதலியன செய்து மகிழ்ந்து தன்னுட் கூறியது.

என் உயிர்த் தையல் அடி என்றும், என்னுயிர்த் தையல் ஐம்பால் என்றும் கூட்டுக. ஐம்பால் – கூந்தல்; அண்ணிய – பொருந்திய; பாக்கியம் – புண்ணியம்.

புவி, புண்ணியம் செய்து தீண்டிய அடி என்று கூட்டுக.

89\. சுரத்திடைச் செல்லும் காதலிருவரைக் கண்டோர், அவர்க்கு ஊர் அண்மையில் உள்ளது என்றது.

மயிலோன் என்பது எதுகை நோக்கி மையிலோன் என நின்றது. எண்மையில் – எளிமையில்; சௌலப்யத்தால்; அண்மையில் – அருகில்; வீடு – முத்தி.

சங்கரர் இன்னருளால் அண்மையில் தோன்றும் வீடு, அண்மையில் தோன்றும் அரும்பதிக்கு உவமை.

செவிலி தெய்வம் வாழ்த்தல்

முன்னையின் மாய முழுவினைத் துன்பம் முழுதுஅகல
என்னை இங்கு ஆட்கொண்ட சங்கரர் பால்அன்பு
இழைக்கிலர்போல்
அன்னையி னிங்கிச் சுரம்போன நங்கை அகம்திரும்பின்
மன்னையில் வேளே! மலர்தூய்ப் பலிஇட்டு
வாழ்த்துவெனே! 90

நிமித்தம் போற்றல்

நோக்கைஎம் பால்வைத்த சங்கரர் வெற்பில்நுன்
கண்மணிபோல்
ஆக்கை இரண்டுஉயிர் ஒன்றெனக் காளையொடு
அன்பின்,உடன்
போக்கை விழைந்த பொலங்கொடி, மீண்டு புகக்கரைவாய்!
காக்கை! உன் பேர்ப்பொருள் காக்கை உலகில்
கடன்நினக்கே! 91

---

90. *தலைவியின் பிரிவு உணர்ந்த செவிலி, அவள் திரும்பி வருதல் வேண்டும் என்று தெய்வத்தை வேண்டியது.*

அன்னையினிங்கி – அன்னையின் (நின்று) நீங்கி. அன்னை இல் நீங்கி என்றும் பிரிக்கலாம்.

அகம் திரும்பின் – வீடு திரும்பினால்; மனம் திரும்பினால்; மன் அயில் வேளே – நிலைபெற்ற வேலையணிந்த முருகனே; அயில் – வேல்; அயில் என்பது எதுகை நோக்கி ஐயில் என வந்தது. தூஉய் – தூவி.

91. *பிரிந்த தன்மகள் மீண்டுவரும்படி கரைவாயாக என்று காக்கையைச் செவிலி வேண்டியது.*

நோக்கை – அருட்பார்வையை; நுன் – உன்னுடைய; காக்கையின் இரு விழிகட்கும் கண்மணி ஒன்று என்பது காதலரின் இரண்டுடற்கும் உயிர் ஒன்று என்பதற்கு உவமை.

பொலங்கொடி – என்மகள்; மீண்டுபுக – திரும்பி வரும்படி; காக்கை – காக்கையே; பேர்ப்பொருள் – காக்கை என்பது காப்பது என்று பொருள்படுவது; காக்கை – அப்பேர்ப் பொருளைக் காப்பது; எம்மைக் காப்பது.

சுரம் தணிவித்தல்

மேலை வினைவழி யேஉயிர் வேட்டு, விடும்இயமன்
ஓலை கிழித்திடும் சங்கரர் இன்னருள் ஒப்பமுந்நீர்
வேலை படிந்தெழும் ஆதவ னே! நங்கை மெல்லடிக்கே
பாலை சுடாதுதண் ணென்று குளிர்ந்திடப் பண்ணுகவே! 92

முக்கோற் பகவரை வினுதல்

நாமே பிரமம்; ஐம் பூதமும் எம்மை நலிவதில்லை;
ஆமே உலகுபொய்த் தோற்றம்என்று ஐந்தன்
அடல்செகுத்தீர்!
தேமே வியமொழிச் சங்கரர் கச்சியில் செம்மலொடுஓர்
பூமேல் வரும்திருப் போல்வாள் சுரத்திடைப்
போயினளே! 93

---

92. தன் மகள் செல்லும் சுரம் குளிரச் செய்வாயாக என்று ஆதவனைச் செவிலி வேண்டியது.

இயமன் விடும் ஓலை என்று மாற்றுக. இன்னருள் ஒப்பப் பாலை குளிர்ந்திடப் பண்ணுக என்றாள்.

93. வழியெதிர்ப்பட்ட முனிவரைச் செவிலி வினவியது.

ஐந்தன் அடல் – ஐம்புலன்களின் ஆற்றல்; செகுத்தீர் – ஒழித்தவர்களே; போயினளே – போனது உண்டோ; ஏகாரம் வினப்பொருளில் வந்தது.

மிக்கோர் ஏதுக் காட்டல் (1)

பார்இன்பம் கூர வரும்திருச் சங்கரர் பாலித்திடும்
பேரின்பம் அன்பருக் கேசொந்தம். கஞ்சம் பெருகியகள்
ஆர்இன்பம் வண்டினுக் கேசொந்தம். ஆதலின்
அன்னை அன்னய்
வார்இன்பந் தார்முலை யாளும் உனக்குஅம் மரபினளே! 94

மிக்கோர் ஏதுக் காட்டல் (2)

பாமரந் தன்னையும் பாமரம் ஆக்கும் பரமர்செந்நெல்
சாமரம் வீசிய கச்சியில் சங்கரர் சீர், அளிகள்
காமரம் பாடும் குழலன்னை யே! தன் கனிஅதனை
மாமரம் தானே புசிப்பதுண் டோ? துயர் மாற்றுகவே! 95

---

94. வினவிய செவிலிக்கு முனிவர் உலகியல்பு கூறியது. சங்கரர் தரும் பேரின்பம் அன்பருக்குச் சொந்தம். கள் ஆர் இன்பம் வண்டுக்குச் சொந்தம். அதுபோல் உன் மகளும் தலைவனுக்குச் சொந்தம் ஆவது இயல்பே. ஆதலால் நீ வருந்த வேண்டியது இன்று என்றனர்.

கள் ஆர் இன்பம் – தேனை அருந்தும் இன்பம்; வார்முலை, இளமுலை, பந்து ஆர் முலை என்று தனித்தனிக் கூட்டுக. பந்து ஆர் முலை – பந்து போன்ற முலை. வார்முலை – கச்சு அணிந்த முலை; அம் மரபினள் – அத்தகைமை யுடையவள்.

95. பாமரம் – பேதை; பா மரம் – பாடலைத் தரும் மரம்; காமரம் - ஒரு பண்; அளி – வண்டு.

அளிகள் சங்கரர் சீரைக் காமரப் பண்ணில் பாடுதற்கு இடமான குழலையுடைய அன்னை என்க.

செவிலி எயிற்றியொடு புலம்பல்

அள்ளி அருங்கயல் பேடைக்கு அருத்தி அனம்கமலப்
பள்ளி திருத்தும் வயற்கச்சிச் சங்கரர் பைஞ்சிலம்பில்
கள்ளி கரிந்த சுரத்திடை மீண்டும், கை வேலன்பின், ஓர்
வள்ளி படர்திருக் காட்சிகண் டாய்கொல்?
மறக்கொடியே! 96

சுவடு கண்டு இரங்கல்

பொன்னடி தீண்டத் தவம்செய்த இந்தப் புவிக்குரவன்
தன்னடி சேர்கிலர் தீவினை போல்தழ லும்சுரத்தே
முன்னடி காளை அடிபோலும் முப்பால் முதலடியே
பின்னடி என்னுயிர்ப் பேதை அடிஅதன் பின்னடியே. 97

---

96. வழியில் எதிர்ப்பட்ட எயினப் பெண் ஒருத்தியிடம் செவிலி வினவியது.

கயல்அள்ளி – என மாற்றுக; பள்ளி திருத்தல் – இன்பம் துய்ப்பதற்காகப் படுக்கையைத் திருத்தல்.

முன்பு முருகன்பின் வள்ளி சென்ற காட்சியை இப்பாலை நிலத்துள்ளார் கண்டிருப்பர். அதே போன்ற காட்சியை மீண்டும் நீ பார்த்தனையோ என்பது செவிலியின் வினா.

அன்னம் பேடைக்குக் கயல் மீனை ஊட்டி, பள்ளி திருத்துவது, அன்பின் மிகுதியைக் காட்டுகிறது. அதைப் போல், தலைவனும் தலைவியிடம் அன்பு செலுத்தல் வேண்டும் என்ற செவிலியின் உள்விருப்பம் குறிப்பால் விளங்குகின்றது. இது இறைச்சிப் பொருளாம்.

97. காதலர் காற் சுவடு கண்டு செவிலி கூறியது.

காளையடி முன்னடி – அது முப்பால் (திருக்குறள்) முதலடி போலும். பின்னடி பேதை அடி – அது முப்பாலின் பின்னடி போலும்.

குறளின் முன்னடி அளவடி; நாற்சீர் உடையது. அதன் பின்னடி சிந்தடி; முச்சீர் உடையது.

தலைவன் அடிச்சுவடு பெரியனவாயும் தலைவியின் அடிச்சுவடு சிறியனவாயும் இருப்பது நோக்கி இவ்வாறு கூறினள்.

கலந்துடன் வருவோர், செவிலியின் புலம்பல் தேற்றல்

மாணுரும் சங்கரர் வாய்மையைக் கண்டவர் மாயைதன்னைக்
காணுமை போல்ஒரு காளையைக் கண்டேன் கனகமணிப்
பூணுள் ஒருத்தி அயல்வரக் கண்டிலென் பூவில்வண்டு
பாணுர் நறுங்குழல் கண்டன ளாம்ஒரு பைங்கொடியே. 98

செவிலி புதல்வியைக் காணுது கவலை கூர்தல்

எல்லிடை மெய்ச்சங் கரர்மகிழ் ராதா கிருட்டினன்வாய்ச்
சொல்லிடைச் சோர்வினைக் காணினும் இந்தச்
சுரத்திடைஎன்
மெல்லிடை நங்கையைக் காண்பரி தாய்விட்ட காரணத்தால்,
இல்லிடைச் சென்றுஅன்னைக்கு ஆறுதல் சொல்லுவது
எங்ஙனமே? 99

---

98. எதிர்ப்பட்ட காதலிருவர்பாற் செவிலி, 'நும்போல் இருவர் இச்சுரத்தே வரக் கண்டீரோ' என வினவினுள்.

'நான் காளையைக் கண்டேன்; பூணுளைக் கண்டிலேன். ஆனுல் இவள் ஒரு பைங்கொடியைக் கண்டாளாம்' என்ருன் எதிர்ப்பட்ட தலைவன்.

ஆடவர் பிற பெண் எதிர்ப்படினும் நோக்காமையும், பெண் பிற ஆடவரை நோக்காமையும் சிறந்த பண்பாடு என்பதைத் தலைவன் கூற்று விளக்குகின்றது.

99. சுரத்திடைக் காதலரைத் தேடிய செவிலி, அவர்களைக் காண இயலாமையால் வருந்திக் கூறியது.

எல் இடை மெய் – சூரியன் போன்ற திருமேனி; இடை – உவமப் பொருளில் வந்தது; இல்லிடை – வீட்டின்கண் உள்ள.

வரைந்துழிக் கண்டோர் சாற்றல்

பத்தித் தடம்படிந் தார்உல காரியன் பார்வையினுல்
முத்தித் திருவை மணம்புரிந் தென்ன, மொய் அன்புடையார்
நத்தித் தவப்பெரும் பேறடைந் தென்ன, நளிர்சிலம்பன்
தித்தித்த சொல்லியை வேட்டல்கண் டோம்இஃதெம்
செய்தவமே! *100*

---

100. தலைவனும் தலைவியும் மீண்டு வந்து, திருமணம் செய்து கொண்டனர். இக் காட்சியைக் கண்ட உறவினர் கூறியது.

* * *

Jemini Printing House,
KUMBAKONAM.
Phone: 835